

பாகம் 4

# இஸ்ரவேல்

## நிறைவேறிய தீர்க்கதரிசனங்கள்



S.D.அம்புரோஸ்

# இஸ்ரவேல்

# பாகம்

# 4

PTD By.

Rev A Krubai Nathen,
FULL GOSPEL PRAYER HOUSE
9th Main, Marriyappana Palyam
4th Cross, Magadi Road
BANGALORE - 560 023

17/1/2010

WORD OF CHRIST
WOC

100/3, Nirmala Apartments,
Medavakkam Tank Road,
Kellys, Chennai - 600 010.
Phone : 26613242, 42640111

இஸ்ரவேல் - 4
இப்பதிப்பு - 2001 - 2000 பிரதிகள்

இப்புத்தகம் என் அருமை மனைவி

பிளாரன்ஸ் (Florence)

ஞாபகார்த்தமாக வெளியிடப்படுகிறது.


ஆக்கியோன் :

எஸ். டி. அம்புரோஸ்,

" எல்ஜீவா", பிளாட் நிர். 2,

4 வது தெரு எக்ஸ்டென்ஷன்,

கிருஷ்ணாபுரம் காலனி,

மதுரை 625 014.

( Formerly of : MUDIS GROUP OFFICE and Correspondent. C.S.I. Higher Secondary School, Karur, and Correspondent, C.S.I. Industrial School, Karur )

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| | முகவுரை | iii |
| | அணிந்துரை | v |
| | ஆதாரம் | vii |
| 1. | அரபியர் யார்? | 1 |
| 2. | அரபிய, இஸ்ரேலிய வம்ச வரலாறு | |
| 3. | பலஸ்தீனியர் யார் ? | 6 |
| 4. | ஹமாஸ் தீவிரவாதிகளைப் பற்றிய தீர்க்கதரிசனம் | 16 |
| 5. | யாசீர் அராபத்தைப் பற்றிய தீர்க்கதரிசனம்19 | |
| 6. | கட்டுப்படுத்த முடியாத யூதர் | 21 |
| 7. | தானியேலின் தீர்க்கதரிசனங்கள் – முகவுரை | 32 |
| 8. | தானியேலின் தீர்க்கதரிசனங்கள் நேபுகாத்நேச்சாரின் கனவும் தானியேலின் தரிசனமும் | 37 |
| 9. | தானியேலின் 70 வாரங்கள் | 59 |
| 10. | வட, தென் திசை ராஜாக்கள் | 67 |
| 11. | 1335 நாட்கள் | 86 |
| 12. | நாட்டுக்கு இஸ்ரவேல் என்ற நாமம் சூட்டப்படும் | 91 |
| 13. | நியாயாதிபதிகளைப் பற்றிய தீர்க்கதரிசனம் | 93 |
| 14. | இஸ்ரவேலின் வறண்ட நிலங்களைப் பற்றிய தீர்க்கதரிசனம் | 95 |
| 15. | யாப்பேத்துக்கு நோவாவின் ஆசீர்வாதம் | 101 |
| 16. | நவீன கண்டுபிடிப்புக்களைப் பற்றி பழங்கால தீர்க்கரின் முன்னறிவிப்பு . | 105 |
| 17. | இராக் நாட்டைப் பற்றிய கர்த்தருடைய முன்னறிவிப்பு | 108 |
| 18. | லவோதிக்கேயா சபையைப் பற்றிய முன்னறிவிப்பு | 130 |
| 19. | யேமன் நாட்டு யூதர் | 133 |
| 20. | இந்தியாவும் இஸ்ரேல் நாடும் | 135 |
| 21. | இந்திய யூதர் | 138 |

# முகவுரை

பரிசுத்த வேதாகமத்தில் 1817 தீர்க்கதரிசனங்கள் 8352 வசனங்களில் கூறப்பட்டிருக்கின்றனவென்று வேத அறிஞர்கள் கணக்கெடுத்திருக்கின்றனர். அவைகளில் சில எப்படி உலக சரித்திரத்தில் நிறைவேறின அல்லது நிறைவேறிக் கொண்டிருக்கின்றன வென்று "இஸ்ரவேல் பாகம் 1, 2, 3" என்ற புத்தகங்களிலும், "இயேசு கிறிஸ்து" என்ற புத்தகத்திலும் பார்த்தோம். இன்னும் ஆயிரம் தீர்க்கதரிசனங்களுக்கு மேலானவைகள் எப்பொழுது, எப்படி நிறைவேறினவென்று நாம் பார்க்க வேண்டியுள்ளது.

இப்பொழுதும் தினசரி நாளிதழ்களில் இஸ்ரவேல் நாட்டையும் ஜனங்களையும் பற்றிய செய்திகள் வராத நாளே இல்லை என்று கூறலாம். தற்சமயம், அதாவது ஜனுவரி 1996, நாளிதழ்களிலும், வார, மாத சஞ்சிகைகளிலும் வரும் செய்திகள் இஸ்ரேல் நாட்டுக்கும் மற்ற அரபு நாடுகளுக்கும் நடக்கும் சமாதான பேச்சு வார்த்தைகளைப் பற்றியதே. இந்த நாடுகளுக்கிடையே வளர்ந்து விட்ட தகராறு களுக்கு அடிப்படைக் காரணம் என்ன என்பதற்கு நாம், முதலாவது அரபியர் யார், பலஸ்தீனியர் யார் என்பதையும், இப்பொழுது நடந்து வரும் சமாதான பேச்சு வார்த்தைகளைப் பற்றியும் பரிசுத்த வேதாக மத்தின் அடிப்படையில் அறிந்து கொள்வது நமக்குப் பிரயோஜனமா யிருக்கும்.

அதோடு கூட தானியேலின் தீர்க்கதரிசன புத்தகத்தில் ஆண்டவர் முன்னறிவித்த தீர்க்கதரிசனங்கள் எவ்வாறு வார்த்தைக்கு வார்த்தை நிறைவேறியிருக்கின்றனவென்றும், நமது இந்தியா தேசத்திற்கு அடைக்கலம் தேடி வந்த யூதருடைய பங்கு என்ன என்பதையும், இன்னும் சில தீர்க்கதரிசன நிறைவேறுதல்களையும் இப்புத்தகத்தில் காண்போம்.

இப்புத்தகம் வேத பண்டிதர்களுக்காக எழுதப்பட்டதல்ல. சாதாரண பொது மக்கள் (Non-scholarly audience) பரிசுத்த வேதாகமத்தில் மறைவாகக் கூறப்பட்டிருக்கும் காரியங்களை விளங்கிக் கொள்ளத்தக்கதாகவும், அதன் மூலமாய்த் தங்கள் விசுவாசம் பலப்படவும், கர்த்தரின் வெளிப்படுத்தலின்படி எளிய முறையில் எடுத்துரைக்கப்பட்டிருக்கிறது.

இப்புத்தகத்தில் தீர்க்கதரிசன வாக்கியங்கள் உள்ளடக்கி

அச்சிடப்பட்டிருப்பதோடு அவைகள் எந்த ஆண்டுகளில் தீர்க்கர்களால் முன்னுரைக்கப்பட்டன என்பதை அடைப்புக் குறிகளுக்குள் பக்கத்திலேயே காட்டப்பட்டிருக்கின்றன. இவ்வாண்டுகள் Crusade Bible Publishers Inc.., என்ற பிரசுர கர்த்தாக்கள் வெளியிட்ட Crusade Analytical Bible லிருந்து எடுக்கப்பட்டவை. ஆனால் சங்கீதங்களின் ஆண்டுகள் மட்டும் தாவீதரசனால் உரைக்கப்பட்டவைகளாதலால் உத்தேசமாக கி.மு. 1000 என்று எல்லா இடங்களிலும் கொடுக்கப்பட்டிருக்கிறது.

இப்புத்தகத்தை எழுத அநேக புத்தகங்களையும், சஞ்சிகைகளிலிருந்தும், நாளிதழ்களிலிருந்தும் சம்மந்தப்பட்ட செய்திகளையும் சேகரித்துக் கொடுத்து உதவிய சங்கை பிலிப் கே. மல்லி (Rev . Philip K.Mulley) ஐயரவர்களுக்கும், பாஸ்டர் எம் தேவராஜ் (Pastor M.Devaraj) அவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தன் பெரும் பொறுப்பின் மத்தியிலும் தன்னுடைய கஷ்டங்களையும் பாராமல் இப்புத்தகத்தின் நகலை வாசித்துத் திருத்தி, தன் அணித்துரையையும் அளித்திருக்கும் சங்கை பிலிப் கே. மல்லி ஐயரவர்களுக்கு என் நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன். இப்புத்தகத்தை வெளியிட பொருளுதவியும், அறிவுரையும், ஆலோசனையும் தந்து புத்தகத்தை அச்சிட்டு உதவிய "இயேசுவின் வார்த்தை" (Word of Christ) ஸ்தாபனத்தார் அவர்களுக்கு என் அன்பார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

இப்புத்தகம் பரிசுத்த வேதாகமத்தை ஊன்றிப் படிக்க நமக்கு உற்சாகத்தைத் உண்டாக்குமென்றும், நம் விசுவாசம் உறுதிப்பட ஏதுவாகும் என்றும், இக்கடைசி காலத்தில் கிறிஸ்துவின் பிள்ளைகளாய் ஜீவித்து அவர் வருகையிலே கறைதிரை முதலானவைகள் ஒன்றுமில்லாமல் பரிசுத்தமும் பிழையற்றதுமான ஜீவியத்தை நடத்தி அவர் முன்பாக நிற்க உதவும் என்று நம்பி இதை நம் அன்பின் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் பொற்பாதங்களில் சமர்ப்பிக்கிறேன்.

எஸ் . டி . அம்புரோஸ்.

மதுரை

ஏப்ரல் 1998.

# அணிந்துரை

திரு. S. D. அம்புரோஸ் அவர்கள் தம்முடைய அயரா முயற்சியினால் வெளிக் கொணர்ந்திருக்கும், இஸ்ரவேல்–பாகம் 4 என்கிற நூலுக்கு இவ்வணிந்துரையை வழங்குவதில் மகிழ்வெய்து கிறேன். கடந்த அநேக ஆண்டுகளாக, மத்தேயு 13 : 52 இல் குறிப்பிடப்படும் வீட்டெஜமானாகிய மனுஷனைப் போன்று, கர்த்தர் தனக்களித்துள்ள தாலந்துகளை எழுத்து மூலம் ஏறெடுக்கும் ஊழியத்தின் மூலம் அன்னார் நிறைவேற்றி வருகிறார்.

இஸ்ரவேல் – பாகம் 4 என்கிற இந்த நூல் ஒரு அருமையான வரலாற்றுப் பின்னணியை பரிசுத்த வேதாகமத்திலுள்ள தீர்க்கதரி சனங்களுக்கு அளிக்கிறது. அநேக சின்னஞ்சிறிய விவரங்கள் உட்பட, இஸ்ரவேல் நாட்டின் வேதாகம முக்கியத்துவத்தை திரு. அம்புரோஸ் அவர்கள், தகுந்த சான்றுகளுடன் நிறுவித்தந் துள்ளார்.

இஸ்ரவேலின் வரலாறு வாயிலாக வருங்காலம் என்னத்தைச் சாதிக்க வேண்டும் என்று கர்த்தர் விரும்புகிறார் என்பதை கிறிஸ் தவ விசுவாசிகள் உணர இந்நூல் துணை செய்ய வேண்டும் என வாஞ்சிக்கிறேன்.

இஸ்ரவேல் தேசம், எருசலேம் நகர் இவைகளின் மையமாகிய ஒலிவ மலை பிளவுபடும் போதும் (சகரியா 14 : 4), ஜீவ தண்ணீர்கள் எருசலேமிலிருந்து பொங்கியெழும் போதும் (சகரியா 14 : 8), இயேசு கிறிஸ்துவே மேசியா என்று இன்றைய இஸ்ரவேல் முழுவதும், பலஸ்தீனம் முழுவதும், ஏன் உலகின் கடைசி பரியந்தமும் யாவரும் அறிக்கை செய்ய சேர்ப்பிக்கப்படப் போகிறோம். அந்த அழைப்புக்கு பாத்திரவான்களாக நம்மைக் காத்துக்கொள்ள இத்தகைய நூல்கள் நம்மை வழி நடத்தும். ஒருவேளை நாம் தவறினோமானால், தேவனுடைய இராஜ்யம் நம்மிடத்திலிருந்து நீக்கப்பட்டு அதற்கேற்ற கனிகளைத் தரும் ஜனங்களுக்குக் கொடுக்கப்படும் (மத்தேயு 21:43). இன்றைய இஸ்ரவேல் தேசம் உட்பட அனைவரும் இதற்குப் பங்காளி களாக எழும்ப, அதற்காக ஜெபிக்கக் கடன்பட்டுள்ளோம். மல்கியா 1:11 இல் முன்னுரைக்கப்பட்ட வண்ணம் எல்லா இடங்களிலும் கர்த்த ருடைய நாமம் உயர்த்தப்பட கிறிஸ்து கிருபை செய்வாராக.

இத்தகைய நூல்கள், தமிழில் மாத்திரமல்லாமல், தென்னகத்தின் பிற மொழிகளிலும் எழும்பினால் எவ்வளவு சிறப்பு என எண்ணிப் பார்க்கிறேன். திரு. அம்புரோஸ் அவர்களின் நூல்கள் அனைத்துமே அதற்கென மொழிபெயர்க்கப்படும் தருணம் ஒன்று வாய்க்க வாழ்த்துகிறேன்.

அட்வெந்து 1997

Rev. பி. கே. மல்லி,

C. S. I., கோத்தகிரி,

நீலகிரி மாவட்டம்.

# ஆதாரம் .

இப்புத்தகத்தை எழுத ஆதாரமாயிருந்த நூல்கள்

1. THE BIBLE
2. SCOTT'S BIBLE AND COMMENTARY - 1844 EDITION.
3. THE INTERNATIONAL STANDARD BIBLE ENCYCLOPAEDIA, Wm.B. Eerdmans Publishing Co., Grand Rapids, Mich. U. S. A.
4. UNGERS BIBLE DICTIONARY, Moody Press, Chicago.
5. HALLEY'S BIBLE HAND BOOK, Zondervan Publishing House, Grand Rapids, Mich. U. S. A.
6. THE STORY OF THE BIBLE by Nelson Beecher Keys.
7. A PICTORIAL HISTORY OF THE JEWISH PEOPLE, Keter Books, Jerusalem.
8. A SHORT HISTORY OF THE JEWISH PEOPLE BC 1600 - AD 1935 by Cecil Roth, Macmillan & Co., Ltd ., London.
9. ISRAEL'S PROPHECY IS BEING FUL - FILLED BEFORE OUR EYES, by Martha Grotholtmann, C.M.S. Press & Institute, Palayamkottai .
10. JESUS, PROPHECY & MIDDLE EAST by Dr. Anis A. Shorrosh
11. TWENTY CENTURIES OF JEWISH LIFE IN THE HOLY LAND, The Forgotten Generations by DanBahat, The Israel Economist, Jerusalem.

12. THE BIBLE AS HISTORY, by Warner Keller.
13. PROPHECY FOR TODAY by J . Dwight Pentecost .
14. THE UNIQUENESS OF ISRAEL by Lance Lambert, Kingsway Publications, Eastbourne, Great Britian.
15. ISRAEL : A SECRET DOCUMENTARY, by Lance Lambert, Tyndale House Publishers Inc ., Wheaton Illinois, U . S . A .
16. WHOSE PROMISED LAND by Colin Chapman, Lion Publishing Corpn. USA.
17. TURBULANCE OVER THE MIDDLE - EAST, by Louis Goldberg, Loizeaux Brothers, Neptune, New Jersey, USA.
18. PROPHECIES OF DANIEL AND REVELATION by Harry C. Goertzen, Sidekich Enterprises Inc. National City, USA.
19. LIVING IN THE PROMISED LAND by Donald Bridge, Kingsway Publications.
20. MARANATHA PROPHETIC ALERT by Don Stanton, Secunderabad .
21. NOW AND THE NEAR FUTURE PROPHECIED by Don E. Stanton, Secunderabad.
22. ISRAEL MY GLORY, The Friends of Israel Gospel Ministry Inc ., Bellmawr, NJ, U. S. A.
23. THE CHOSEN PEOPLE MAGAZINE, USA.
24. THE EVERLASTING NATION, International Board of Jewish Missions, USA.
25. JEWISH VOICE PROPHETIC MAGAZINE, USA.

26. ISRAEL TODAY AND TOMORROW by Ray Brubaker.
27. ISRAEL TODAY by Consulate of Israel, Bombay.
28. A LETTER FROM ISRAEL, Israel Information Centre, Jerusalem .
29. NEWS FROM ISRAEL, Revival Literature Fellowship, Bangalore .
30. ISRAEL'S DESTINY AND THE COMING DELIVERER by Gordon Lindsay.
31. CASTES AND TRIBES OF SOUTHERN INDIA, by Edger Thurston, Vol. II
32. STUDIES OF INDIAN JEWISH IDENTITY by Nathan Katz.
33. SHALOM INDIA - Israel Centre, Bombay.
34. ILLUSTRATED WEEKLY OF INDIA - Annual 1972.
35. THE HINDU - Daily Newspaper.

# 1

## அரபியர் யார் ?

தற்சமயம் மத்திய கிழக்கு நாடுகளில் இருந்து வரும் குழப்பமான சூழ்நிலையின் மத்தியில் இஸ்ரேல் நாடு சுற்றியுள்ள அரபு நாடுகளுடன் சமாதான பேச்சு வார்த்தைகள் நடத்திக் கொண்டிருக்கும் வேளையில் இந்த அரபியர் யார், பலஸ்தீனியர் என்று கூறிக் கொள்பவர்கள் யார், யூதர்கள் யார், என்று நாம் திட்டவட்டமாக அறிந்து கொள்வது மிக மிக அவசியம். இவைகளை அறிந்து கொண்டால் யார் பக்கம் நியாயம் இருக்கிறது என்பதை நாம் உணர்ந்து கொள்ள முடியும்.

ஆகவே, முதலாவது, அரபியர் யார் என்பதை ஆராய்ந்து பார்ப்போம். கீழ்கண்ட நாடுகளில் குடியிருக்கும் முஸ்லிம்கள் தங்களை அரபியர்கள் என்று கூறிக் கொள்கிறார்கள்.

அரேபியா தீபகற்பத்தில் வாழ்பவர்கள்

1 ) இராக்
2 ) சீரியா
3 ) லீபனோன்
4 ) யோர்தான்
5 ) சவுதி அரேபியா
6 ) குவைத்
7 ) கத்தார்
8 ) ஓமன்
9 ) ஐக்கிய அரபு எமிரேட்ஸ்
10) யேமன்
11 ) தென் யேமன் (ஏடன்)
12) பஹரீன்

வட ஆப்பிரிக்காவில் வாழ்பவர்கள்.

13 ) எகிப்து
14 ) லிபியா
15 ) டுனீஷியா
16 ) அல்ஜீரியா
17 ) மொராக்கோ
18 ) மாரிட்டானியா
19 ) சூடான்
20) ஜிபூதி
21 ) சோமாலியா
22) பலஸ்தீனியர் (நாடற்றவர்களென்று கருதப்பட்டு இப்பொழுது ஒருநாட்டுக்காகப் பேச்சு வார்த்தைகள் நடத்துபவர்கள்)

மேலே குறிப்பிட்டிருக்கும் 13 முதல் 19 எண்களில் அடங்கியிருக்கும் ஆப்பிரிக்கா கண்டத்து நாடுகளில் வசிப்பவர்களில் பெரும்பாலோர் நோவாவின் மூத்த மகன் காமின் சந்ததியார்.

ஆப்பிரிக்காவில் ஜிபூதி, வடசோமாலியா நாடுகள் அரேபியாவின் மிக அருகிலிருப்பவையாகையால் இங்கு வசிக்கும் அரபியர் தென் அரேபியாவிலிருந்து குடிபெயர்ந்து வந்தவர்களென்று கருதப்படுகிறது.

அரேபியா தீபகற்பத்திலுள்ள அரபியர்களுடைய பூர்வீகத்தைக் கவனிக்கும் போது அவர்கள் நோவாவின் இரண்டாவது மகன் சேமுடைய வம்சத்தில் வந்தவர்கள் என்று தெரிகிறது.

சேமுடைய கொள்ளுப் பேரன் ஏபேர். ஏபேரிலிருந்து தான் எபிரேயர் என்ற பிரிவினர் தோன்றினர். ஏபேருக்கு இரண்டு குமாரர் இருந்தார்கள். மூத்தவன் பேலேகு, மற்றவன் யொக்தான். – (ஆதியாகமம் 10 : 25). யொக்தானுக்கு 13 குமாரர் பிறந்தனர். இவர்களுடைய சந்ததியார் இராக், லீபனோன், சீரியா, கிழக்கு அரேபிய வளைகுடா நாடுகளில் குடியேறியிருக்க வேண்டும்; ஏனென்றால் அப்பிரதேசங்களில் அநேக அரேபியர் தாங்கள் யொக்தானுடைய சந்ததியார் என்று கூறிக் கொள்கின்றனர்.

ஏபேரின் மூத்த மகனாகிய பேலேகின் சந்ததியில் வந்தவர் ஆபிரகாம். ஆபிரகாமின் மகன் ஈசாக்கு. ஈசாக்குக்கு இரண்டு குமாரர் பிறந்தனர்; மூத்தவன் ஏசா, இளையவன் யாக்கோபு. யாக்கோபுக்கு ஆண்டவர் கொடுத்த மறுபெயர் இஸ்ரவேல் (ஆதி. 32 : 28). ஆகவே யாக்கோபுடைய வம்சாவழியினர் இஸ்ரவேலர் என்று அழைக்கப்பட்டனர்.

ஏசா, தன் சேஷ்ட புத்திர பாகத்தை (முதற்பேரானவனுடைய சுதந்திரத்தை) இழந்து, கானானியப் பெண் ஆதாளையும், ஏவியப் பெண் அகோலிபாமாவையும், இஸ்மவேலின் குமாரத்தியாகிய பஸ்மாத்தையும் விவாகம் பண்ணி, சேயீர் மலைப்பிரதேசத்தில் குடியேறினான் – (ஆதியாகமம் 36 : 2 – 3). இவர்கள் ஏசாவுக்கு ஐந்து ஆண் பிள்ளைகளைப் பெற்றுத்தந்தார்கள். இவர்களின் சந்ததியார் பிற்காலத்தில் அரபிய முஸ்லிம்களானார்கள் . அவர்கள் குடியேறிய பிரதேசம் ஏதோம் நாடு என்று அழைக்கப்பட்டது.

ஆபிரகாம், தன் மனைவி சாராளுடைய அடிமைப் பெண், ஆகார், மூலம் இஸ்மவேலைப் பெற்றாள். இஸ்மவேல் ஒரு எகிப்தியப்

பெண்ணை மணந்தான் (ஆதியாகமம் 21 : 21). இஸ்மவேலுக்கு பன்னிரெண்டு குமாரர் பிறந்தனர் . (ஆதியாகமம் 25:12–18) இவர்களும் பிற்காலத்தில் அரபிய முஸ்லிம்களானார்கள். இவர்கள் ஆவிலா துவக்கி சூர் மட்டும் வாசம் பண்ணினார்கள் (ஆதி. 25 : 18); அதாவது சீனாய் தீபகற்பத்தின் வட பகுதியிலிருந்து அரேபியா நாட்டின் கிழக்குக்கரை வரைக்கும் பரவியிருந்தார்கள். இஸ்மவேலுடைய சந்ததி மிகவும் பெருகப்பண்ணப்படும் என்று கர்த்தருடைய தூதனால் ஆகாருக்கு ஆதியாகமம் 16:12 ஆம் வசனத்திலும், 'அவனைப் பெரிய ஜாதியாக்குவேன்' என்று ஆதியாகமம் 21:18 ஆம் வசனத்திலும்; கர்த்தர் ஆபிரகாமிடம் "இஸ்மவேலை மிகவும் அதிகமாகப் பலுகவும் பெருகவும் பண்ணுவேன்; அவன் பன்னிரெண்டு பிரபுகளைப் பெறுவான், அவனைப் பெரிய ஜாதியாக்குவேன்" என்று ஆதியாகமம் 17:20 ஆம் வசனத்திலும் கூறி இஸ்மவேலின் சந்ததியை மிகவும் ஆசீர்வதித்தார்.

ஆபிரகாம் கேத்தூராள் என்னும் பெண்ணையும் விவாகம் பண்ணியிருந்தான். இவள் ஆபிரகாமுக்கு ஆறு குமாரரைப் பெற்றாள் (ஆதி . 25:1 – 2). ஈசாக்கின் சுதந்திரத்தை நிலை நாட்ட ஆபிரகாம் கேத்தூராளுக்கும் அவள் பிள்ளைகளுக்கும் நன்கொடைகளைக் கொடுத்து கிழக்கு தேசத்திற்கு (தற்காலத்து யோர்தான் – அரேபியா தீபகற்பத்தின் ஒரு பாகம்) அனுப்பிவிட்டான் – (ஆதி. 25:6). இவர்களும் பிற்காலத்தில் அரபிய முஸ்லிம்களானார்கள். ஆக, தற்காலத்தில் அரபியர்கள் என்று சொல்லப்படுவர்கள் : –

1) காமின் சந்ததியாரின் ஒரு பகுதியினர் (ஆதி. 10 : 6 – 14)

2) யொக்தானின் 13 குமாரரின் சந்ததியார் (ஆதி. 10 : 26 – 30)

3) ஆபிரகாமின் சந்ததியாரில் ஏசா மூலம் 5 குமாரரும், அவர்கள் சந்ததியில் 14 பிரபுக்களின் வம்சா வழியினரும் (ஆதி. 36 : 15 – 18) .

4) ஆபிரகாமுக்கு ஆகாரின் மூலம் பிறந்த இஸ்மவேலின் சந்ததியில் 12 பிரபுக்களின் வம்சாவழியினர் (ஆதி. 25 : 13 – 16) .

5) ஆபிரகாமுக்குக் கேத்தூராள் மூலம் பிறந்த ஆறு ஆண் மக்களின் சந்ததியார். (ஆதி 25 : 1 – 4) .

இதற்கு மேலாக ஆபிராகாமுக்கு சாராளின் மூலமாய்ப் பிறந்த ஈசாக்கின் மகன் யாக்கோபுக்கு (இஸ்ரவேலுக்கு) 12 புத்திரர்

அவர்களும் 12 கோத்திரங்களானார்கள். இவர்கள் தான் இஸ்ரவேல் (யூத) ஜாதியார். ஆபிரகாமின் சந்ததி மேற்கூறியபடி இருந்தாலும் ஈசாக்கின் மூலம் தான் அவன் சந்ததி விளங்கும் என்று ஆண்டவர் கூறியிருக்கிறார் (ஆதி. 21 : 12).

இப்படியாக, "திரளான ஜாதிகளுக்குத் தகப்பனாவாய்" என்று ஆண்டவர் ஆபிரகாமுக்குக் கொடுத்த வாக்குத்தத்தம் (ஆதி.17:4) நிறைவேறியிருக்கிறது .

அரேபிய மக்களின் மொத்த ஜனத்தொகை, தோராயமாக 13,50,00,000 (பதின்மூன்று கோடியே ஐம்பது இலட்சம்). அவர்களுடைய நாடுகளின் மொத்தப் பரப்பளவு, தோராயமாக, 30,00,000 (முப்பது இலட்சம்) சதுர மைல்கள். அரபியர் வசிக்கும் நாடுகளெல்லாம் அநேகமாகப் பாலைவனம் நிறைந்த பகுதிகளாக இருந்தாலும் உலக நில எண்ணெயில் மூன்றில் இரண்டு பாகம் அரபு நாடுகளில் இருக்கின்றது. ஆகவே பாலைவனப் பிரதேசங்கள் என்று அந்நாடுகளை வர்ணித்தாலும் மிகுதியான நாடுகள் செல்வம் கொழிக்கும் நாடுகளாகவே இருக்கின்றன.

யூத மக்களின் உலக ஜனத்தொகை, தோராயமாக, 1,38,58,000 (ஒரு கோடியே முப்பத்தெட்டு இலட்சத்து ஐம்பத்தெட்டாயிரம்).

யோசேப்பு மணம் புரிந்தது ஓன் நகரின் ஆசாரியனாகிய போத்திப்பிராவின் குமாரத்தியாகிய ஆஸ்நாத்தை. அவள் மூலமாய் யோசேப்புக்கு மனாசே, எப்பிராயீம் என்ற இரண்டு குமாரர் பிறந்தனர். ஆகவே இவர்களிருவரும் பாதி எகிப்தியரே: (ஆதியாகமம் 41 : 45,50)

மோசேயின் மனைவியாகிய சிப்போராள் மீதியான் தேசத்து ஆசாரியனான ரெகுவேலின் மகள். மீதியானியர் ஆபிரகாமின் மறுமனையாட்டியாகிய கேத்தூராளின் சந்ததியார் – (ஆதியாகமம் 25 : 4)

ஆகவே மனாசே, எப்பிராயீம் கோத்திரங்களிலும், மோசேயின் சந்ததியிலும் எகிப்தியரின் (அரபியரின்) இரத்தம் கலந்திருக்கிறது.

இப்படியாக அரபியர் ஆபிரகாமின் சந்ததியிலும், யொக்தானின் சந்ததியிலும் வந்தவர்களென்றாலும், ஆண்டவரே "என் உடன்படிக்கையை அவனுக்கும் (ஈசாக்கும்) அவனுக்கு பின்வரும்

அவன் சந்ததிக்கும் நித்திய உடன்படிக்கையாக ஸ்தாபிப்பேன்'' (ஆதி. 17:19) என்று கூறிவிட்டார். அதாவது, ஆண்டவர் ஆபிரகாமுக்கு, ''நீ பார்க்கிற இந்த பூமி முழுவதையும் உனக்கும் உன் சந்ததிக்கும் என்றென்றைக்கும் இருக்கும்படி கொடுப்பேன்'' (ஆதி. 13:15), என்றும்; ஈசாக்குக்கும் (ஆதி. 26:3); யாக்கோபுக்கும் (ஆதி. 28:13) இதே வாக்குத்தத்தத்தை உறுதிபடுத்தினார்.

ஆகவே அரபியர் ஆபிரகாமுடைய அல்லது யொக்தானுடைய வித்து தான் என்றாலும் அவர்கள் கானான் நாட்டை சுதந்தரிக்கிறவர்களல்ல, ஆபிரகாமுக்கு சாராளின் மூலமாய்ப் பிறந்த ஈசாக்கும், அவன் மகன் யாக்கோபுக்கு உண்டான சந்ததியாராகிய இஸ்ரவேலர் (யூதர்) தான் கானான் நாட்டின் நிரந்தர சுதந்திரவாதிகள் என்று ஆண்டவர் திட்டவட்டமாகக் கூறியிருக்கிறார்.

# 6

## பலஸ்தீனியர் யார் ?

முந்தின அத்தியாயத்தில் அரபியர் யார் என்ற விபரங்களைப் பார்த்தோம். இந்த அத்தியாயத்தில், இப்பொழுது அதிகமாகப் பேசப் பட்டு வரும் பலஸ்தீனியர் யார் என்பதைக் கொஞ்சம் விபரமாகப் பார்ப் போம்.

பத்திரிகைகளில் அநேகமாகத் தினந்தோறும் பலஸ்தீனிய அரபுக்களைப் பற்றியும், யூதரைப் பற்றியும் செய்திகள் வந்து கொண்டி ருக்கின்றன. இஸ்ரேல் நாடு பலஸ்தீனிய அரபுக்களுடைய நாட்டை ஆக்கிரமித்துப் பிடித்துக் கொண்டதாகவும், சட்ட விரோதமாக யூத குடியிருப்புக்களை பலஸ்தீனியரின் பிரதேசத்தில் அமைத்திருப்பதா கவும், அதன் மூலம் பலஸ்தீனிய அரபுக்களுடைய நாட்டை யூதர்கள் அபகரித்துக் கொண்டதாகவும் பத்திரிகைகளில் ஒரு படம் காட்டப் படுகிறது.

பரிசுத்த வேதாகமத்தைப் பார்த்தால் சர்வ வல்லமையுள்ள ஆண்டவர், ஆபிரகாமுக்கு அநேக குமாரர் இருந்தாலும், (அரபியர் யார் என்ற அத்தியாயத்தில் இது தெளிவாகக் கொடுக்கப்பட்டிருக் கிறது) அவனுக்கு வாக்குதத்தத்தம் பண்ணிய பூமி முழுவதையும் (ஆதியாகமம் 13 :14–17; 15 : 18–21) ஆபிரகாமின் மனைவி சாராளின் மூலம் பிறக்கும் ஈசாக்குக்கும் அவனுடைய சந்ததிக்கும் மட்டும் கொடுப்பேன் என்று வாக்குப்பண்ணினார். (ஆதி. 17:19):– ''அப்பொழுது தேவன் உன் மனைவியாகிய சாராள் நிச்சயமாய் உனக்கு ஒரு குமாரனைப் பெறுவாள், அவனுக்கு ஈசாக்கு என்று பெயரிடுவாயாக; என் உடன்படிக்கையை அவனுக்கும் அவனுக்குப் பின் வரும் அவன் சந்ததிக்கும் நித்திய உடன்படிக்கையாக ஸ்தாபிப் பேன்'' என்றார். ஆகவே கர்த்தர் ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு என்பவர்களின் சந்ததியாருக்குத்தான் கானான் தேசத்தைச் சுதந் திரமாகக் கொடுப்பேன் என்று வாக்குப்பண்ணினார்.

பரிசுத்த வேதாகமத்தை நம்பும் கிறிஸ்தவர்களுக்குச் சரி. மற்றவர்கள் இக்கூற்றை ஏற்றுக் கொள்வார்களா? அப்படியென்றால் நாம் சற்று உலக சரித்திரத்தைக் கவனிப்போம்.

யோசுவாவின் காலத்தில் (கி.மு . 1450 ஆம் ஆண்டு வாக்கில் – அதாவது இன்றிலிருந்து 3450 ஆண்டுகளுக்கு முன்) இஸ்ரவேல்

ஜனங்கள் இப்பொழுதுள்ள இஸ்ரேல், மேற்குக்கரை, காசா பகுதி, யோர்தான் நாட்டின் பெரும் பகுதி முதலிய நிலப்பரப்பில் குடியேறி னார்கள். இதற்கு 2000 ஆண்டுகளுக்குப் பின்தான் (கி.பி. 700 க்குப் பின்னர்) அரபிய முஸ்லிம்கள் என்ற ஒரு இனத்தவரே தோன்றினர். இஸ்ரவேலர் இப்பகுதியில் குடியேறிய பொழுது அல்லது அதற்குக் கொஞ்சம் பின்னர் கப்தோரிலிருந்து (கப்தோர் தற்கால கிரேத்தா தீவு, என்று கருதப்படுகிறது) பெலிஸ்தியர் என்ற ஜாதியார் காசா கரையோரம் வந்து குடியேறினர். நியாயாதிபதிகள், சவுல், தாவீது, சாலொமோன் முதலியவர்களின் காலத்தில் பெலிஸ்தியருக்கும், இஸ்ரவேலருக்கும் ஓயாத சண்டை நடந்து கொண்டிருந்தது. பல தீர்க் கர்கள் மூலமாக ஆண்டவர் முன்னறிவித்தபடி பெலிஸ்தியர் கி.பி.1270 ஆம் ஆண்டிலேயே முழுவதும் அழிந்து போயினர். அதன் பின் ஒரு பெலிஸ்தியன் கூட உலகில் இல்லை என்று கண்டுபிடிக்கப்பட்டிருக் கிறது (இஸ்ரவேல் பாகம் 3, இரண்டாம் பதிப்பு,98 ஆம் பக்கம் பார்க்க)

மகா அலெக்சான்டர் கானான் நாட்டைப் படையெடுத்து ஜெயித்தபொழுது அப்பிரதேசத்திற்கு பெலிஸ்தரின் பெயரில் பிலிஸ் தியா (Philistia) என்று மறு பெயரிட்டான். ரோமர் இப்பகுதியைப் பிடித்து அரசாண்ட காலத்தில் இதற்கு பலஸ்தீனா (Palestine) என்று பெயரிட்டனர்; ஏனென்றால் யூதர் ரோமருடைய ஆட்சியை எதிர்த்துக் கொண்டிருந்தபடியால் யூதர்களுக்கு எதிரிகளான பெலிஸ் தரின் பெயரில் பலஸ்தீனா என்று பெயரிட்டனர். முஸ்லீம் அரபுக்கள் இப்பகுதியை ஜெயித்தபொழுதே, அதாவது கி.பி. 6 அல்லது 7 ஆம் நூற்றான்டிலேயே பலஸ்தீனியர் அல்லது பெலிஸ்தர் என்ற ஜாதியார் அப்பிரதேசத்தில் இல்லை.

இன்றைக்கு 50 அல்லது 60 ஆண்டுகளுக்கு முன்னர் பலஸ்தி னியர் என்றால் அவ்வார்த்தை யூதரைக் குறிப்பதாயிருந்தது. இப் பொழுது உள்ள "எருசலேம் போஸ்ட்" (The Jerusalem Post) என்ற யூத தினசரி இதழ் 60 ஆண்டுகளுக்கு முன்னர் "பாலஸ்தீனா போஸ்ட்" (The Palastine Post) என்ற பெயரில் வெளி வந்து கொண்டிருந்தது . யூத மருத்துவமனைகள், இதர அலுவலகங்கள், தொழில் கூடங்களெல்லாம் 'பலஸ்தீன்' என்ற பெயரில் தான் இயங்கி வந்தன. இஸ்ரேல் என்ற நாடு பிரகடனப்படுத்தப்பட்டபின் (அதாவது 1948 ஆம் ஆண்டுக்குப்) பின் யூதர் பலஸ்தீனா என்ற பெயரை விட்டு விட்டு 'இஸ்ரேலிய' அல்லது 'யூத' என்ற பெயர்களை வைக்கத் தொடங்கினார்கள் .

1880 / 1882 ஆம் ஆண்டு முதலே இரஷ்யாவிலிருந்து யூதர்கள் வந்து கோலன் பகுதியில் நிலங்களை விலைக்கு வாங்கிக் குடியேறி நிலங்களை வளப்படுத்தத்துவங்கியது முதல் நாடோடிகளாயிருந்த அரபிய முஸ்லிம்களும் வந்து குடியேறத் துவங்கினர். யூதர்கள் சாதா ரண ஏழை அரபு முஸ்லிம் விவசாயிகளிடமிருந்து நிலங்களை ஏமாற்றி விலைக்கு வாங்கவில்லை. 400 ஆண்டுகளுக்கு மேலாக இப்பிரதேசத்தை அரசாண்ட ஒட்டமான் துருக்கிய நிலச்சுவான்தாரர் கள் தாங்கள் விவசாயம் செய்யாமல் தரிசாய்ப்போட்டு வைத்திருந்த நிலங்களிலிருந்து சில பகுதிகளை வாங்கினார்களென்று தெரிகிறது.

ஜெர்மெனிய எழுத்தாளரான மார்த்தா க்ரோதோல்டு மான் என்பவர், "நமது கண்களுக்கு முன்னே இஸ்ரவேலின் தீர்க்கதரிசனங் கள் நிறைவேறுகின்றன" (Israel's Prophecy is being fulfilled before our eyes ) என்ற புத்தகத்தில், டாக்டர் ஆல்டர்ஸ்டீன் என்பவர் 20 ஆம் நூற்றாண்டில் பலஸ்தீனாவில் நிலப் பதிவாளராகப் பணிபுரிந்ததாகவும், அச்சமயம் அரபியருக்கும் யூதருக்கும் இடையில் அநேக நிலக் கிரையப் பத்திரங்களைத் தாம் பதிவு பண்ணியதாகவும், இதில் ஒரு விசேஷம் என்னவென்றால், தங்களுக்கு ஒரு பிரயோஜன மும் இல்லை என்று கருதித் தாங்கள் அநேக ஆண்டுகள் தரிசாய்ப் போட்டு வைத்திருந்த நிலங்களை யூதர்களுக்குப் பதிவு பண்ணி கொடுக்கத் தரகர்கள் மூலம் தம்மை அதிகத் தொந்தரவு பண்ணியதா கவும், அதில் அதிகமான அரபியர் வேறு இடங்களிலோ அல்லது நாடு களிலோ குடியிருந்தவர்கள் என்றும் (Absentee Land Lords), பத்திரம் முடிந்தவுடன் பணத்தைப் பெற்றுக்கொண்டு அதிக மன திருப்தியோடு சந்தோஷமாய்ப் போயினர் என்றும் கூறியிருக்கிறார். ஆகவே யூதர்கள் அரபியருடைய நிலங்களை ஏமாற்றிப் பெற்றுக் கொண்டனர் என்று சொல்வதற்கே இடமில்லை .

1944 ஆம் ஆண்டு அமெரிக்க விவசாய இலாக்கா விடுத் திருக்கும் ஒரு அறிக்கையின்படி, மணற்பாங்கான பாலை நிலங்களுக் கும், சதுப்பு நிலங்களுக்கும் யூதர் ஏக்கர் ஒன்றுக்கு 1, 100 அமெரிக்க டாலர் வீதம் விலை கொடுத்து வாங்கியிருக்கின்றனர்; அதே சமயம் அமெரிக்காவில் நல்ல பயிரிடக்கூடிய, செழிப்பான, கரிசல் மண் நிலங் கள் ஏக்கர் ஒன்றுக்கு 110 அமெரிக்க டாலர் வீதம் விற்பனையாக்கிக் கொண்டிருந்தது; ஆகவே யூதர் அமெரிக்க நிலங்களை விட பத்து மடங்கு அதிக விலை கொடுத்து பாழான நிலங்களை வாங்கினர் என்று அவ்வறிக்கை கூறுகிறது.

ஆபிரகாமே தன் மனைவி சாராளை அடக்கம் பண்ண கி.மு.1860 ஆம் ஆண்டே எப்பெரோன் என்பவனிடம் மக்பேலா குகையையும் அதைச் சுற்றியிருந்த நிலத்தையும் 400 சேக்கல் வெள்ளிக்கு விலைக்கு வாங்கி (ஆதி. 23:1–20) அதில் சாராளை அடக்கம் பண்ணினான் என்று பார்க்கிறோம். ஆகவே ஆபிகாமிலிருந்து இது வரை யூதர் மற்ற ஜனங்களை ஏமாற்றியோ அல்லது அபகரித்தோ நிலங்களைக் கையகப்படுத்திக்கொள்ளவில்லை. சர்வதேச நியமங்களின்படி காரியங்களைச் செய்திருக்கிறார்கள்.

1947 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபை பலஸ்தீனாவை யூதருக்கும் அரபியருக்கும் தனித்தனியாகப் பிரிப்பதற்கு முன் யூதர்கள் 4,62,500 ஏக்கர் நிலத்திற்குச் சொந்தக்காரராயிருந்தனர். அதாவது காலாகாலமாய் பலஸ்தீனாவிலேயே குடியிருந்தவர்களைத் தவிர்த்து –

| | |
|---|---|
| அதில் பிரிட்டன் ஆதிக்கத்திலிருந்த காலத்தில் அவர்கள் யூதருக்குக் குடியேறக் கொடுத்தது | 45,000 ஏக்கர் |
| பல கிறிஸ்தவ ஆலயங்களுக்குச் சொந்த–மாயிருந்த நிலங்களை யூதர் விலைக்கு வாங்–கியது | 30,000 ஏக்கர் |
| துருக்கிய/அரபிய நிலச்சுவான்தார்களிட–மிருந்து விலைக்கு வாங்கியது | 3,87,500 ஏக்கர் |
| ஆக மொத்தம் | 4,62,500 ஏக்கர் |

அல்லது (722.66 சதுர மைல்கள்) (1871.68 சதுர கிலோ மீட்டர்கள்)

**ஆதாரம் :** (The Land System in Palestine by Abraham Granott) (The Return - Vol. XVII No. 3,1994)

இந்த நிலங்களை விலைக்கு வாங்க யூத கோடீஸ்வரர்களான ராத்சைல்ட் குடும்பத்தினர் தங்கள் செல்வத்தின் ஒரு பகுதியை யூத தேசீய நிதிக்குக் கொடுத்து உதவினர்.

1921 ஆம் ஆண்டு இப்பகுதியில் வசித்த அரபு பிரமுகர்களின் குடும்பங்கள் பல அப்பொழுது பிரிட்டிஷ் வெளிநாட்டு காரியதரிசியாக இருந்த வின்ஸ்டன் சர்ச்சில்லுக்கு (British Colonial Secretary, Winston Churchill) பலஸ்தீனாவைப் பிரிக்கக் கூடாது; அது மத்திய கிழக்கு அரபு நாடுகளின் ஒரு பகுதி தான் என்று கூறியுள்ளனர்.

இக்கூற்றின்படி இப்பகுதியில் வாழ்ந்து கொண்டிருந்த அரபியர் தாங்கள் இப்பகுதியில் வாழ்ந்து கொண்டிருந்த யூதரோடு ஒருமித்து வாழ்கிறவர்கள்தான் என்பதை தாங்களே ஒப்புக் கொண்டிருக் கின்றனர் .

ஒட்டமான் பேரரசை மேற்கத்திய ஏகாதிபத்தியங்கள் துண்டா டினபோது ''பாலஸ்தீனா'' என்ற பதம் அதிகமாகப் புழங்கத் தொடங் கியது. அந்நாளைய சீரியாவின் தென் பகுதியை , சீயோனிய இயக் கத்தார் ''பாலஸ்தீனம்'' என்ற பெயரில் யூதர்களுக்குரிய காமன் வெல்த் பிரதேசமாக மாற்ற வேண்டும் என்று கோரினபோது (Foreign Relations of the United States - Document of Paris Peace Conference 1919: Vol.12.pp.780-81) அப்பெயர் முக்கியத்துவம் அடைந்தது. அப்பிரதேசத்தில் கி.பி. ஏழாம் நூற்றாண்டு முதலே வாழ்ந்து கொண்டிருந்த மக்களின் சந்ததியாரே இன்றைய பலஸ்தீனியர் என்று கூறிக் கொள்பவர்கள். அவர்கள் அரபு இனத்தைச் சார்ந்தவர்கள் தான்; அவர்களிடையே லட்சக்கணக்கான கிறிஸ்தவர்களும் உண்டு.

1937 ஆம் ஆண்டு அரபு – யூத ஒப்பந்தம் செய்து கொள்ள பிரிட்டிஷ் அரசாங்கம் பீல் கமிஷன் என்ற ஒரு குழுவை இந்நாட்டுக்கு அனுப்பியிருந்தது. அந்தக் குழுவிடம் அப்பொழுதிருந்த ஆனிபே அப்துல் ஹாஜ் (Auni Bey Abdul Hadj) என்ற அரபு தலைவர்: ''பாலஸ்தீன் என்று ஒரு நாடே கிடையாது. பலஸ்தீன் என்ற பெயர் சீயோனிய சங்கத்தார் உருவாக்கியது. வேதாகமத்தில் பலஸ்தீனா என்ற பெயரே கிடையாது. எங்களுடைய நாடு நூற்றாண்டுகள் கால மாக சீரியாவின் ஒரு பகுதியாக இருந்தது'' என்ற வாக்குமூலம் கொடுத்தார் .

"There is no such country as Palestine. 'Palestine' is a term the zionists invented! There is no Palestine in the Bible! Our country was for centuries part of Syria! ( Source : The Jerusalem Post, Nov. 2, 1991 - The Return Vol. XVII No.3 for 1994 )

செய்தித்தாள்கள், அரபு–இஸ்ரேலிய முரண்பாடு 1967 ஆம் ஆண்டு இஸ்ரேல் சில பகுதிகளில் ஜெயமடைந்ததிலிருந்துதான் ஆரம்பமாகிற விதமாக எடுத்துக் காட்டுகின்றன. ஆனால் இதன் துவக்கம் பிரிட்டிஷ்காரர் இப்பகுதியைப் பிடித்து ஆளத் துவங்கிய திலிருந்து ஆரம்பமானது என்று கூறலாம் .

சரித்திரத்தை ஆராய்வோமென்றால் கி.பி. 70 ஆம் ஆண்டில் ரோமர் எருசலேமைப் பிடித்துத் தீக்கிரையாக்கி, 10,00,000 யூதரைக் கொன்று, கணக்கற்றவர்களைப் பல நாடுகளில் அடிமைகளாக விற்று, கூடுமானவரை அப்பிரதேசத்தில் யூதர் இல்லாதவாறு ஒழித்துக்கட்டினர், என்றாலும் ஆண்டவர் முன்னுரைத்தபடி:-

**ஏசாயா 17 : 6 (கி . மு . 741)**

"ஆனாலும் ஒலிவ மரத்தைக் குலுக்கும்போது நுனிக் கொம்பிலே இரண்டு மூன்று காய்களும், காய்க்கிற அதின் கிளைகளிலே நாலைந்து காய்களும் மீதியாயிருப்பது போல, அதிலே பின்பறிப்புக்குக் கொஞ்சம் மீதியாய் இருக்குமென்று தேவனாகிய கர்த்தர் சொல்லுகிறார்" என்ற வாக்குத்தத்தப்படி எருசலேம் நகரிலும், கானான் தேசம் முழுமையிலும் பற்பல சிற்றூர்களிலும் குறைந்த எண்ணிக்கையில் யூதர்கள் நாட்டிலே எளிமையான வாழ்க்கையை நடத்திக் கொண்டு தான் இருந்திருக்கின்றனர். ஆண்டவருடைய சித்தப்படி புற ஜாதியாரின் காலம் நிறைவேறத் துவங்கியபொழுது யூதர்கள் பல நாடுகளிலுமிருந்து வந்து நிலங்களைப் பண்படுத்திக் குடியேறினர். நிரந்தர யூதக் குடியேற்றங்கள் உண்டானதைக் கண்ட நாடோடி அரபுக் கூட்டங்களும் யூதர்களுக்குச் சமீபத்திலேயே நிரந்தரக் குடிகளாயினர். ஆகவே யூதரும் அரபியர்களும் மத வேறுபாடில்லாமல் அநேக ஆண்டுகள் ஜீவித்து வந்தனர் .

கி.பி. 1917 ஆம் ஆண்டு வரை அப்பகுதியை ஒட்டமான் துருக்கி முஸ்லிம்கள் ஆண்டு வந்தனர். கி.பி. 1917 ஆம் ஆண்டு பிரிட்டிஷ் அரசாங்கம் ஒட்டமானியரை ஜெயித்து கானான் நாட்டைத் தங்கள் ஆதிக்கத்துக்குள் கொண்டு வந்தனர். முதலாம் உலக மகா யுத்தத்தில் யூதர் தங்களுக்குச் செய்த உதவியினிமித்தம், யூதருக்குச் சலுகையை, கானான் நாட்டில் யூதர் வந்து குடியேறிக் கொள்ள பிரிட்டிஷ் அரசாங்கத்துக்கு ஒரு தடையுமில்லை என்ற "பால்போர்" பிரகடனத்தை வெளியிட்டனர். அதன் பின் யூதக் குடியேற்றம் அப்பகுதியில் சிறிது சிறிதாக அதிகரித்தது.

கி.பி. 1920 ஆம் ஆண்டு இத்தாலி நாட்டில் சான் ரீமோ (San Remo) என்ற நகரில் முதலாம் உலக மகா யுத்தத்தில் ஜெயமடைந்த கூட்டு நாடுகளின் கூட்டத்திலும், உலக நாடுகளின் கூட்டமைப்பிலும் (The League of Nations) பால்போர் பிரகடனத்தை அப்படியே ஏற்றுக்கொண்டு தீர்மானம் நிறைவேற்றினர்.

கி.பி. 1922 ஆம் ஆண்டு அரபியர் யூதக் குடியேற்றத்தை எதிர்த்தபடியால் அவர்களை சமாதானம் பண்ணும் பொருட்டு, யோர்தான் நதிக்குக் கிழக்கே, ரூபன், காத், மனாசே கோத்திரத் தாருக்கு மோசே பகிர்ந்து கொடுத்த பாகத்தையும் இன்னும் அரேபியா நாட்டின் வட பகுதி கொஞ்சத்தையும் சேர்த்து டிரான்ஸ் ஜோர்டான் என்ற 97,740 சதுர கிலோமீட்டர் அடங்கிய பகுதியை அரபுக்களுக்கென்று பிரித்துக் கொடுத்து, அப்பகுதிக்கு அப்துல்லா என்ற நாடோடிகளின் தலைவனை இராஜாவாக்கி, அப்பகுதியில் யூதர்கள் போய்க் குடியேறக்கூடாது என்றும் ஆணை பிறப்பித்தது. இந்த ஒழுங்குப்படி யோர்தான் நதிக்கு மேற்கேயும் மத்தியதரைத் கடலுக்குக் கிழக்கேயும் உள்ள 21,540 சதுர கிலோ மீட்டர் பகுதி யூதருக்கு என்று முடிவு செய்யப்பட்டது; ஆனால் அங்கே வசித்து வந்த அரபியருக்கும் சம உரிமை கொடுக்கப்பட்டு, ஆங்கிலம், அரபு, எபிரேய மொழிகள் அப்பிரதேச இராஜீய மொழிகளாகவும் பிரகடனப்படுத்தப்பட்டது. இப்பகுதியில் அரபியர் புதிதாய் வந்து குடியேறக் கூடாது என்று தடை விதிக்காதது அரபியருக்குக் கொடுக்கப்பட்ட பெரிய சலுகை .

1922 ஆம் ஆண்டுக்கும் 1947 ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட ஆண்டுகளில் இப்பகுதியில் அரபிய குடியேற்றம் எப்படி இருந்திருக் கிறது என்று பார்த்தால், யூதர் மிகுதியாயிருந்த நகரங்களில் அரபிய குடியேற்றம் அதிகமாகவும், அரபியர் மிகுதியாயிருந்த நகரங்களில் அரபிய குடியேற்றம் குறைந்தும் காணப்பட்டது .

உதாரணமாக :

யூதர் அதிகமாக இருந்த

ஹெய்பா நகரில் அரபிய குடியேற்றம் 290 சத விகிதம் கூடியது.

எருசலேம் நகரில் அரபிய குடியேற்றம் 131 சத விகிதம் கூடியது.

யோப்பா நகரில் அரபிய குடியேற்றம் 158 சத விகிதம் கூடியது.

இதற்கு மாறாக அரபியர் அதிகமாக வாழ்ந்த நகரங்களில்:

நெபுலஸ் நகரில் அரபிய குடியேற்றம் 42 சத விகிதம் தான் அதிகரித்தது

பெத்லஹேம் நகரில் அரபிய குடியேற்றம் 37 சத விகிதம் தான் அதிகரித்தது.

இப்படி வரிசையாக அடுக்கிக் கொண்டே போகலாம். இதற்குக்

காரணம் யூதர் அதிகமாக வசித்த நகரங்களில்/பகுதிகளில் அபிவிருத்தித் திட்டங்கள் அதிகம் நடந்து கொண்டிருந்தபடியால் வேலை வாய்ப்பு அதிகம்; அதே சமயத்தில் யூத பகுதியில் சம்பள விகிதம் அதிகமாகையால் அரபியர் யூத நகரங்களில் வந்து குடியேறி தங்கள் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக் கொண்டனர் .

**(ஆதாரம் : தி ரிட்டர்ன் – வால்யூம் 17, நிர்.3 . 1994, பக்கம் 3)**
The Return - Volume **17**, No.**3**, **1994**–Page **3)**

இக்காலக்கட்டத்தில் (கி.பி. 1922–1947) பல நாடுகளிலும் யூதருக்கு நேரிட்ட தொந்தரவுகளினாலும், ஜெர்மெனியில் ஹிட்லரால் 60,00,000 யூதர் கொலை செய்யப்பட்டபடியாலும், உலகம் முழுவதிலுமிருந்த நாடுகளிலிருந்த யூதர் ஏராளமாக வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட நாட்டில் வந்து குடியேறினர். இதைப் பொறுக்காத சுற்றியுள்ள நாடுகளிலிருந்த அரபியர், பலஸ்தீனா நாட்டிலிருந்த அரபியரைக் கலவரம் செய்யத் தூண்டிவிட்டனர். ஆகையால் அரபியருக்கும் யூதருக்கும் கலவரம் அதிகமாகிக் கொண்டே போயிற்று. பிரிட்டிஷ் அரசாங்கமும் இதைத் தடுக்க எவ்வளவோ முயன்றும் ஒரு பலனுமில்லை. ஆகவே இப்பகுதியை அரபியருக்கும், யூதருக்கும் பிரித்துக் கொடுத்து விடுவது என்று தீர்மானித்து இந்த சச்சரவை ஐக்கிய நாடுகள் சபைக்குக் கொண்டு போனது. ஐக்கிய நாடுகள் சபை இப்பிரச்சனையைத் தீர்க்க ஒரு தனிக் குழு நியமித்தது. இக்குழு ஆராய்ந்து பார்த்து யோர்தான் நதிக்கு மேற்கே உள்ள பாகத்தை ஆறு பகுதிகளாகப் பிரித்து, மூன்று பகுதிகள் யூதருக்கும், மற்ற மூன்று பகுதிகள் அரபிய முஸ்லிம்களுக்கும் என்ற சிபார்சை ஐக்கிய நாடுகள் சபைக்கு அனுப்பியது. அதன் பின் இருதரத்தாருக்கும் கலவரம் அதிகரித்தது. இந்தப் பிரிவை அரபுக்கள் ஒத்துக் கொள்ளவில்லை என்றாலும் 29–1–1947 ஆம் தேதி இப்பகுதியை யூதருக்கு 14,400 சதுர கிலோமீட்டர் பரப்பளவுள்ள பகுதியென்றும், அரபியருக்கு 7,140 சதுர கிலோமீட்டர் பரப்பளவுள்ள பகுதி என்றும், எருசலேம் நகரம் சர்வதேச அமைப்பின் கண்காணிப்பில் இருக்கும் என்றும் தீர்மானித்தது. இதற்கிடையில் பிரிட்டன் 1948 மே 14 ஆம் தேதி அந்நாட்டை விட்டு வெளியேறத் திட்டமிட்டுவிட்டபடியால் யூதர்கள் 1948 மே 14 ஆம் தேதி மாலையே ஐ. நா. சபை தங்களுக்குப் பிரித்துக் கொடுத்த பாகத்தை இஸ்ரேல் என்ற நாடாகப் பிரகடனப்படுத்தி விட்டனர்.

ஆனால் அரபுக்கள் தங்களுக்குப் பிரித்துக் கொடுத்த பாகத்தில் ஒரு அரசு அமைக்கவில்லை. அதற்கு மாறாக சுற்றியுள்ள ஐந்து

அரபு நாடுகள் (லிபனோன், சீரியா, யோர்தான், அரேபியா, எகிப்து) தாங்கள் யூதர் மேல் யுத்தம் தொடுத்து யூதரை முழுவதும் சங்காரம் செய்யப்போவதாகவும், அப்பொழுது யூதர் யார், அரபியர் யார் என்று அடையாளம் காண்பது கஷ்டமான காரியமாதலால் எல்லா அரபியரும் அப்பிரதேசத்தை விட்டு வெளியேறிவிட வேண்டும் என்றும், சில நாட்களுக்குள் தங்களுடைய சேனைகள் அப்பிரதேசத்திலுள்ள யூதரையெல்லாம் சங்காரம் பண்ணித்தீர்த்த பின்னர், அல்லது எல்லா யூதரும் மேற்கு சமுத்திரத்தில் ஓடி விழுந்து மாண்டு போன பின், அவரவர் தங்கள் தங்கள் வீடுகளுக்குத் திரும்பி, தங்களுக்கு வேண்டிய அளவு, யூதருடைய நிலங்களைக் கையகப்படுத்திக் கொள்ளலாம் என்று கூறி அரபியரை அப்பிரதேசத்திலிருந்து வெளியேறக் கட்டாயப்படுத்தினர். தங்கள் வீடுகளை விட்டு வெளியேற வேண்டாம் என்று யூதர் எவ்வளவோ பரிந்து கேட்டும் அதற்குச் செவி சாய்க்காமல் அரபியர் தங்கள் வீடு வாசல்களை விட்டு அந்நாட்டை விட்டு வெளியேறினர்.

1948 ஆம் ஆண்டு மே 15 ஆம் தேதி காலை ஐந்து அரபிய நாடுகளின் படைகளும் இஸ்ரேல் நாட்டின் மேல் யுத்தம் தொடுத்தனர். ஆனால் ஆச்சரியமான பிரகாரம், கர்த்தருடைய நடத்துதலினால் யூதர் ஜெயமடைந்தனர். ஐந்து நாட்டுப் படைகளும் பின் வாங்கின; உடனே யூதர்கள் அவர்கள் பிடித்த பிரதேசத்தின் எல்லைகளை மூடிவிட்டனர். தங்கள் வீடு வாசல்களை விட்டு வெளியேறிய அரபுக்கள் திரும்பி வரமுடியாமல் அகதிகளானார்கள். அவர்களை வெளியேற வைத்த நாடுகள் அவர்களைக் குடியமர்த்த ஒரு நடவடிக்கையும் எடுக்காமல் அவர்களை வீடற்ற, நிலமற்ற, நாடற்ற அகதிகளாக, ஜீவனத்திற்கு வழியில்லாதவர்களாக, திக்கற்றவர்களாக விட்டுவிட்டனர். அவர்களுடைய நிலையை அறிந்த ஐக்கிய நாடுகளின் அகதிகள் உதவிக்குழு அவர்களைப் போஷித்துக் காப்பாற்றி வருகிறது. இதற்கிடையில் அகதிகளாக்கப்பட்ட அரபுக்கள் பல குழுக்களாக அமைந்து தாங்கள் இழந்த வீடு வாசல்களைப் பெற முயற்சித்தனர். அல்பத்தா, ஹமாஸ் முதலிய குழுக்கள் தீவிரவாத இயக்கத்தை ஆரம்பித்தன. அல்பத்தா குழுவின் தலைவனாக யாசிர் அராபத் என்பவர் இன்னும் சில அகதிக் குழுக்களையும் சேர்த்து, பலஸ்தீனிய விடுதலை இயக்கம் என்ற ஒரு அமைப்பை உருவாக்கி, ஐக்கிய நாடுகள் சபையில் ஒரு அங்கத்தினராகவும் ஆகிக்கொண்டு, தங்களுக்கு 1947 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபை பிரித்துத்தந்த பகுதியை இஸ்ரேல் தங்களுக்குக் கொடுத்து விடவேண்டும் என்று பேச்சு வார்த்தை நடத்திக் கொண்டு வருகின்றார்.

யாசிர் அராபத் பேசும்போது ஒரு சமயம் தாங்கள் கானானியரின் சந்ததியார், ஆகையால் தங்களுக்கு இந்நாட்டின் மேல் முழு உரிமையும் உண்டு என்று பேசினார். இவர்கள் பலஸ்தீனாவின் பூர்வீகக் குடிகளுமல்ல; பெலிஸ்தியரின் வாரிசுக்களும் அல்ல. பெலிஸ்திய ஜாதியார் அழிந்து 1500 ஆண்டுகளுக்கு மேலாகி விட்டது. தங்களைப் பலஸ்தீனியர் என்று இவர்கள் சொல்லிக் கொண்டாலும் இவர்கள் சுத்த அரபிய முஸ்லிம்களே.

மேலும் இவர்களைப் பற்றி அறிய நான் வெளியிட்ட புத்தகம் "இஸ்ரவேல் பாகம் 2", 162 முதல் 173 ஆம் பக்கம் வரையிலான "பலஸ்தீனிய அகதிகள்" என்ற அத்தியாயத்தைப் பார்க்கவும்.

# 16
# ஹமாஸ் தீவிரவாதிகளைப் பற்றிய தீர்க்கதரிசனம்

கடந்த 10–15 ஆண்டுகளாக ஹமாஸ் என்ற தீவிரவாதக் கும்பல் (பலஸ்தீன விடுதலை இயக்கத்தின் தீவிரவாதப் பிரிவு) காசா பகுதியிலிருந்தும், மேற்குக்கரைப் பகுதியிலிருந்தும் இஸ்ரேல் நாட்டில் உயிருக்கும், உடைமைக்கும் பெரிய சேதம் விளைவித்தும், பல இடங்களில் திடீர் தாக்குதல் நடத்தியும் இஸ்ரேல் அரசாங்கத்துக்குப் பெரும் தொல்லைகளைத் கொடுத்துக்கொண்டு வருகின்றனர். அவர்களுடைய நோக்கமே இஸ்ரேல் என்ற நாட்டை ஒழித்துக் கட்ட வேண்டும் என்பதே.

1993 ஆம் ஆண்டு இத்தீவிரவாதிகளில் 450 பேரை இஸ்ரேல் அரசாங்கம் இஸ்ரேல் எல்லையை விட்டு லீபனோன் மலைப்பிரதேசத்திற்கு நாடு கடத்தியது. அவர்கள் குளிரிலும், பனியிலும், ஆகாரமும் இல்லாமல் அரும் பாடுபட்டனர். இதற்காக அரபு, முஸ்லிம் நாடுகள் இஸ்ரேலை வெகுவாகக் கண்டித்தன. உலக நாடுகளின் வேண்டுகோளின் பேரில் சிறிது சிறிதாக அவர்களை நாடு திரும்பும்படி இஸ்ரேல் அரசாங்கம் அனுமதித்தது.

இஸ்ரேல் அதிபர் இட்சாக் ரபீனும் பலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் யாசிர் அராபத்தும் 1993 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் அமெரிக்க ஜனாதிபதி பில் கிளின்டன் (Bill Clinton) முன்னிலையில் காசா பகுதிக்கும், படிப்படியாக மேற்குக் கரைப் பகுதிக்கும் சுயாதீனம் கொடுக்கும் ஒப்பந்தம் ஒன்று கையெழுத்திட்டனர். அது முதல் இவ்வொப்பந்தத்தை நிறைவேற்றும் முறைகளைப் பற்றித் தீவிரமாக ஆலோசனைகள் நடந்து வருகின்றன. இதற்கிடையில் இந்த ஹமாஸ் தீவிரவாதிகள் பல இடங்களில் திடீர் தாக்குதல் செய்தும், பஸ்களிலும் யூத கட்டிடங்களிலும் குண்டுகள் வைத்தும் உயிர் சேதத்தையும் பொருட்சேதத்தையும் உண்டாக்கிக் கொண்டிருக்கின்றனர். இதனால் காசா பகுதியிலிருந்தும், மேற்குக் கரைப் பகுதியிலிருந்தும் தினமும் இஸ்ரேல் நாட்டுக்குள் வந்து வேலை செய்து போன ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட பலஸ்தீன வேலை ஆட்கள் இஸ்ரேல் அரசாங்கத்தால் நிறுத்தப்பட்டு அவர்களுக்குப் பதிலாக பிலிப்பைன்ஸ் நாட்டிலிருந்தும் இன்னும் வேறு பல நாடுகளிலிருந்தும் தினசரி கூலிக்கு வேலையாட்கள் நியமிக்கப்பட்டு

இருக்கிறபடியால் காசா பகுதியிலும் மேற்குக் கரைப் பகுதியிலு மிருந்து வந்த ஊழியர்கள் வேலை இல்லாமல் பசியிலும் பட்டினியிலும் வாடிக் கொண்டிருக்கின்றனர்.

இந்த உறமாஸ் தீவிரவாதிகளைப் பற்றி 3000 ஆண்டுகளுக்கு முன்னதாகவே தாவீது அரசன் தீர்க்கதரிசனமாக முன்னுரைத்திருப் பதாக எபிரேய அறிஞர்கள் கூறுகின்றனர். அவர்கள் குறிப்பிடுவது 140 ஆம் சங்கீதத்தில் சில பாகங்கள். அவைகளைக் கீழே பார்ப் போம் :–

**முன்னுரைப்பு :** சங்கீதம் 140 : 1 – 4, 11 (கி.மு. 1000)

1) ''கர்த்தாவே, பொல்லாத மனுஷனுக்கு என்னைத் தப்புவியும்: கொடுமையுள்ளவனுக்கு என்னை விலக்கி இரட்சியும்''.

4) ''கர்த்தாவே துன்மார்க்கனுடைய கைகளுக்கு என்னை நீங்கலாக்கி, கொடியவனுக்கு என்னை விலக்கி இரட்சியும் அவர்கள் என் நடைகளைக் கவிழ்க்கப் பார்க்கிறார்கள்.

11) ''பொல்லாத நாவுள்ளவன் பூமியிலே நிலைப்பதில்லை : கொடுமையான மனுஷனைப் பறக்கடிக்கப் பொல்லாப்பு அவனை வேட்டையாடும்.

இவ் வசனங்களில் ''கொடுமையுள்ளவன், கொடியவன், கொடுமையான மனுஷன்'' என்ற பதங்களுக்கு ஆங்கிலத்தில் King James Version மொழியாக்கத்தில் மூன்று வசனங்களிலும் "Violent Man" என்றும், New International Version மொழியாக் கத்தில் "Men of Violence" என்றும் மொழிபெயர்க்கப்பட்டிருக் கின்றன.

இதே வார்த்தைக்கு, அதாவது ''கொடியவன்'', "Violent Man" "Man of Violence" என்ற வார்த்தைகளுக்கு எபிரேய மொழியில் கூறியிருப்பது ''இஷ் ஹமாஸிம்'' (Ish Hamasim) என்பதாகும். எபிரேய மொழியில் ''இம்'' சேர்த்தால் அவ்வார்த்தை பன்மையைக் குறிக்கும். ''ஹமாஸ்'' என்பது ஒருமை. ''ஹமாஸிம்'' என்பது பன்மை. ஆகவே புது அகில உலக மொழி பெயர்ப்பில் "Men of Violence" ''கொடியவர்கள்'' என்று மொழி பெயர்த்திருக்கிறார்கள்.

பரிசுத்த வேதாகமத்தின் மகிமை எவ்வளவென்று பாருங்கள். 3000 ஆண்டுகளுக்கு முன்னதாக தாவீது அரசன் உபயோகித்த அதே வார்த்தை இன்றைக்கு இஸ்ரவேல் ஜனங்களை அழிக்க அல்லது இஸ்ரேல் நாட்டை அழிக்கப் பிரயாசப்படும் ஒரு கூட்டத்தாருக்குப் பெயரிடப்பட்டிருக்கிறதென்றால், முன்னறிவிப்புகள் தேவனுடைய மனிதர்களுக்கு பரிசுத்த ஆவியினாலே ஏவப்பட்டு எழுதப்பட்டிருக்கின்றன என்பது திட்டவட்டமாகத் தெரிகிறது அல்லவா? ஆண்டவருடைய நாமத்துக்கே மகிமை உண்டாவதாக.

# 19
## யாசிர் அராபத்தைப் பற்றிய தீர்க்கதரிசனம்.

1994ஆம் ஆண்டு சமாதானத்திற்கான நோபல் பரிசு வழங்கப் பட்டவுடன் நோபல் பரிசுக் கழக அங்கத்தினர் காரே கிறிஸ்டியான் சென் (Kare Christiansen) என்பவர் இஸ்ரேல் பிரதமமந்திரி இட்சாக் ரபீன், வெளி நாட்டு மந்திரி, உஷிமோன் பிரிஸ், முதலியோரோடு பலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர், யாசீர் அராபத்துக்கும் சமாதானத்துக்கான நோபல் பரிசை வழங்கியதை எதிர்த்துத்தமது பதவியை இராஜினாமான செய்தார். யாசீர் அராபத்தின் முந்திய சரித்திரம் வன்முறையைத் தூண்டிவிடுபவ ராயும், புரட்சியாளராயும், கொடுமை புரிந்தவராயும், இரத்தக்கறை படிந்த கைகள் உடையவராயும், இருந்தது என்றும் அவருடைய வருங்கால சரித்திரம் முன் கூறக்கூடாததாக இருக்கிறபடியால் அவருக்குச் சமாதானப் பரிசு வழங்கியது ஒரு வெட்கக்கேடான முடிவு என்று காரே கிறிஸ்டியான்சென் கூறினார்.

இஸ்ரேல் நாட்டின் லிக்குட் கட்சியின் தலைவர் பெஞ்சமின் நெத்தன்யாகூ கூறும்பொழுது, அகில உலக வன்முறையைக் கண்டு பிடித்த முதன்மையான கொலைகாரனுக்கு இச்சமாதானப் பரிசு வழங்கப்பட்டது வெறும் கேலிக்கூத்து என்றார். எகிப்தில் அராபத் பேசும்பொழுது, இப்பரிசு எனக்கு வழங்கப்படவில்லை. ஆனால் சமாதானத்திற்காக உயிர்நீத்த, சிறைகளில் அடைபட்டுக்கிடக்கிற, சித்திரவதை அனுபவிக்கிற என்னுடைய சகோதர சகோதரிகளுக் கும், நம்முடைய வருங்கால குழந்தைகளுக்கும் வழங்கப்பட்டிருக் கிறது என்று கூறினார்.

ஜே. ஆர். சர்ச் (J.R. CHURCH) என்ற தீர்க்கதரிசன விரி வுரையாளர் பேசும்பொழுது, 1994ஆம் ஆண்டு நடக்கும் காரியங் களை நோக்கும்பொழுது சங்கீதம் 94:20 ஆம் வசனத்தில் கூறப் பட்டது நிறைவேறுகிறது என்று கூறினார்.

சங்கீதம் 94 : 20 : "தீமையைக் கட்டளையினால் பிறப்பிக்கிற கொடுங்கோலாசனம் உமக்கு இசைந் திருக்குமோ?"

புது திருப்புதல் : "சட்டங்களினால் தீமையைப் பிறப்பிக்கிற கொடுங்கோல் ஆசனத்திற்கும் உமக்கும் இசைவு உண்டோ?"

இஸ்ரவேல் – பாகம் 4

ரோமன் கத்தோ–
லிக்க வேதாகமம் : "அநீதத் தீர்ப்பளிப்பவர்கள் உம்மோடு தொடர்பு கொள்வாரோ? சட்டம் என்ற பெயரால் தொல்லை கொடுப்பவரோடு உமக்கு ஏது தொடர்பு?"

இதே வசனம் ஆங்கிலத்தில் கீழ்கண்டவாறு கொடுக்கப்பட்டிருக்கிறது :–

King James
Version : Psalms 94 : 20 "shall the throne of iniquity have fellowship with thee, which frameth mischief by a law ?"

N.I.V. : Psalms 94 : 20 "can a corrupt throne be allied with you-one that brings on misery by its decrees?"

"Framing mischief by laws" என்பதும் "brings misery by its decrees" என்ற வார்த்தைகளும் "தீமையைக் கட்டளையினால் பிறப்பிக்கிற கொடுங்கோலாசனம்" என்ற வார்த்தைகளும் யாசீர் அராபத்தைக்குறிக்கும் என்று அநேக தீர்க்கத்தரிசன விமர்சனகர்கள் கூறுகின்றனர். இதில் ஒரு விசேஷம் என்னவென்றால்:– எபிரேய மொழியில் யாசீர் (Yassir) என்ற வார்தைக்கு "தீர்ப்பளிப்பவன்" "சட்டங்களினால் தீமையைப் பிறப்பிக்கின்ற கொடுங்கோலன்" என்ற அர்த்தம் உள்ளது. அப்படியென்றால் இந்த வசனம் யாசீர் அராபத்துக்கு எவ்வளவு பொருத்தமாயிருக்கிறது. ஆண்டவர் யாசீர் அராபத்தை முன்குறித்தே இவ்வசனத்தை எழுதி வைக்கத் தூண்டியிருக்கிறார் போலும்.

21

# கட்டுப்படுத்தப்பட முடியாத யூதர்

கடந்த சுமார் 1900 ஆண்டுகளாக யூதர் ஒரு நாடற்ற ஜாதியார் என்றே கருதப்பட்டு வந்தனர். உலக சரித்திரத்தைக் கவனித்தால் ஜாதிகளின் ஏற்றத் தாழ்வுகள் கணிசமானதாக இருந்திருக்கின்றன. சிறந்த கலாச்சாரமும் பலமும் வாய்ந்த ஜாதிகள் செழித்து நின்று நாளாவட்டத்தில் ஒன்றுமில்லாமல் காணாமற் போயிருப்பதைக் காணலாம். தற்காலத்தில் வாழும் மக்களைக் கவனித்துப் பார்ப்போமென்றால் 4000 ஆண்டுகளுக்கு முன் வசித்தவர்களில் ஐந்து ஜாதியார் மட்டும் இப்பொழுது வாழுகிறார்கள் என்று அறியலாம் :- (1) சீனர்கள், (2) இந்தியர்கள், (3) எகிப்தியர், (4) யூதர், (5) குர்தியர் ஆதிகாலத்து மற்ற ஜாதியாரெல்லாம் ஏதோ ஒரு வழியில் கலப்படமாகி தங்கள் பூர்வீக நிலையை இழந்து அழிந்துவிட்டார்கள்.

இப்பொழுது ஒரு பாபிலோனியனிடம் பேச முடியாது: அல்லது ஒரு ஏத்தியனிடமோ அல்லது மோவாபியனிடமோ அல்லது ஒரு பெலிஸ்தியனிடமோ பேச முடியாது. ஏனென்றால் அவர்கள் அழிந்து மறைந்து போனார்கள்; ஆனால் 1900 ஆண்டுகள் சிதறடிக்கப்பட்டு, சித்திரவதை செய்யப்பட்டு, கூட்டங்கூட்டமாய்க் கொலை செய்யப்பட்டு, நாடு நாடாய் விரட்டியடிக்கப்பட்ட யூதனிடம் பேச முடியும். யூதர் எப்பொழுதோ அழிந்து ஒன்றுமில்லாமற் போயிருக்க வேண்டும்; ஆனால் அவர்கள் இப்பொழுது ஜீவித்திருப்பது சர்வ வல்லமை பொருந்திய ஆண்டவரின் அற்புதமே.

யூதரைப் பற்றிச் சில காரியங்களை அறிந்து கொள்வது பொருத்தமாயிருக்கும் :-

1) அவர்களுடைய 4000 ஆண்டு சரித்திரத்தில் 2500 ஆண்டுகள் தங்களுடைய நாட்டிற்கு வெளியே தான் ஜீவித்திருக்கிறார்கள்.

2) தங்களைச் சுற்றிலும் உருவான ஆறு பெரிய கலாச்சாரங்கள் வளர்ந்து அழிந்து போயும், இவர்கள் அநேக சந்தர்ப்பங்களில் முழுவதும் அழிக்கப்பட்டுப் போன விதமாகக் காணப்பட்டிருந்தாலும், தீர்க்கர்கள் மூலமாய்க் கூறப்பட்டபடியே, எஞ்சியிருந்தவர்கள் மூலமாய்த் தப்பிப் பிழைத்து இன்று ஒரு பலத்த ஜாதியாகக் காணப்படுகின்றனர்.

3) உலக ஜனத்தொகையோடு ஒப்பிடும்போது யூதர்கள் ஒரு சிறிய

சதவிகிதம் தான் என்றாலும் உலக சமுதாயத்தில் அவர்களின் பங்கு பெரும் அளவாயிருக்கிறது. சமூகயியல், கல்வி, இசை, இரசாயன வியல், வானியல், கணிதயியல், மருத்துவயியல், உலக சமாதானம், தொழில் துறை, வாணிகத் துறை, இயல்பியல், தத்துவ சாஸ்திரம், சட்டம் முதலிய துறைகளிலும், பெரிய தயாள சிந்தை படைத்தவர் களாகவும் உலகக் கண்ணோட்டத்தில் பெரும் சதவிகிதத்தை அடைந்தவர்களாகவும் இருக்கின்றனர்.

4) யூதரை அழித்துத் தீர்ப்பதற்கு பல ராஜ்யங்களால் அல்லது அரசர் களால் அல்லது தலைவர்களால் எடுத்துக் கொள்ளப்பட்ட எல்லா முயற்சிகளும் பலனற்றுப் போனது மட்டுமல்லாது, அவர்களை அழிப் பதற்குப் பிரயத்தனப்பட்ட ராஜ்யங்கள் அல்லது அரசர்கள் அல்லது தலைவர்கள்தான் அம்முயற்சியில் அழிந்து போயிருக்கிறார்கள்.

5) இவைகள் எல்லாவற்றிலும் மேலாக, நாடற்றவர்கள் என்று கருதப்பட்ட யூதர்களுக்குத் தான் அண்ட சராசரங்களையும் படைத்த சர்வ வல்லமையுள்ள ஆண்டவர் இப்பூமியில் ஒரு நாட்டைச் சர்வ சுதந்திரமாக வாக்களித்துக் கொடுத்திருக்கிறார். ஆண்டவர் இந்த ஜனங்களுக்கு வாக்களித்துக் கொடுத்த நில பாகத்திற்கு எல்லை களையும் குறித்துக் கொடுத்திருக்கிறார் (ஆதி 13: 14–15); (ஆதி. 15 : 18–21). அப்படி இருக்கும்போது மனிதர்கள் அவர்களை மடகாஸ்கர் தீவிலோ அல்லது டான்சானியா நாட்டிலோ அல்லது ஆஸ்திரேலியா விலோ குடியமர்த்த யோசனை செய்தது எவ்வளவு முட்டாள்தனம். அல்லது பிரிட்டிஷ் அரசாங்கமோ அல்லது ஐக்கிய நாடுகள் சங்கமோ கடவுள் குறித்துக் கொடுத்த எல்லையை நிராகரித்துத் தங்களுடைய சுய நலத்திற்காகவும், பல நாடுகளைப் பிரியப்படுத்தும் படியாகவும் அந்த நாட்டைப் பல பாகங்களாகப் பிரித்துக் கொடுத்துக் கொண்டிருப்பது எவ்வளவு பேதமை. இப்பேர்பட்ட நடவடிக் கையினால் உலகம் முழுவதும் பரவியிருந்த பிரிட்டிஷ் சாம்ராஜ்யம் சில ஆண்டுகளுக்குள் துண்டு துண்டாகப் பிரிக்கப்பட்டு இன்று உலகத்தின் எட்டாவது ஸ்தானத்திற்குத் தள்ளப்பட்டு போய் விட்டது. உலக ஐக்கிய நாடுகள் சபையும் முஸ்லிம் நாடுகளை அல்லது அரபு நாடுகளைப் பிரியப்படுத்த கர்த்தருடைய திட்டத்திற்கு எதிர்மாறாக நடந்து கொண்டே வருமானால் அந்நிறுவனமும் உலக அரங்கில் தள்ளப்பட்டுப் போகும் என்பதில் ஐயமில்லை.

இச்சந்தர்ப்பத்தில் கர்த்தர் எரேமியா தீர்க்கரின் மூலமாய் உரைத்திருக்கிற இரண்டு முன்னறிவிப்புகளைக் கவனிப்போம்.

**முன்னறிவிப்பு : ஏரேமியா 30:11 (கி.மு. 606)**

11) "............ உன்னைச் சிதறடித்த எல்லா ஜாதிகளையும் நான் நிர்மூலமாக்குவேன்; உன்னையோ நான் நிர்மூலமாக்காமலும், முற்றிலும் தண்டியாமல் விடாமலும், மட்டாய்த் தண்டிப்பேன்."

உலக சரித்திரத்தை நாம் பார்க்கும்போது இஸ்ரேல் ஜனத்தை சிதறடித்த எல்லா ஜாதிகளும் நிர்மூலமாக்கப்பட்டிருக்கின்றன என்பதைக் காணலாம். இதைப் பற்றித் தெளிவாய் "இஸ்ரேல் – பாகம் 2"11ஆம் அதிகாரம் "இஸ்ரவேலின் சத்துருக்கள் தண்டிக்கப்படுவார்கள்" என்ற அத்தியாயத்தைப் பார்க்கவும்.

**முன்னறிவிப்பு : எரேமியா 30:16 ( கி. மு. 606 )**

16) "ஆதலால் உன்னைப் பட்சிக்கிறவர்கள் யாவரும் பட்சிக்கப் படுவார்கள்; உன் சத்துருக்களெல்லாரும் சிறைப்பட்டுப் போவார்கள்; உன்னைச் சூறையாடுகிறவர்கள் சூறையாடப்படுவார்கள்; உன்னைக் கொள்ளையிடுகிற அனைவரையும் கொள்ளைக்கு ஒப்புக் கொடுப்பேன்".

சர்வவல்லமையுள்ள ஆண்டவர் எவ்வளவு திட்டவட்டமாகக் காரியங்களை முன்னறிவித்திருக்கிறார் என்று பாருங்கள். இவ்வசனம் நிறைவேறியிருக்கிறது, நிறைவேறிக்கொண்டிருக்கிறது இன்னும் நிறைவேற வேண்டியதும் இருக்கிறது. இஸ்ரவேல் நாட்டுக்கும் ஜனத்துக்கும் விரோதமாக சர்வதேச சங்கத்திலும், பாதுகாப்பு சபையிலும் தங்கள் வாக்குகளையளிப்பவர்களும் மேற்கூறிய வசனத்தின்படி ஆண்டவருடைய கோபாக்கினைக்கு உட்படுவார்கள் என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை. இவைகளைப்பற்றி தினசரி பத்திரிகைகளில் செய்திகளை நாம் வாசிக்கத்தான் போகிறோம்.

யூதரைப்பற்றி நாம் பார்க்கும்போது இச்ஜனத்தை ஆண்டவர் உருவாக்கினதே ஒரு அற்புதம்தான். ஆபிரகாம் 100 வயதும் சாராள் 90 வயதுமாய் இருக்கையில் ஆண்டவர் அவர்களுக்கு ஈசாக்கை அருளி அவன் சந்ததி செழித்திருக்கும் என்று வாக்கு பண்ணினார். அவ்விதமே இன்று இருக்கிறது என்பதைக் கண்கூடாகக் காண்கிறோம். எண்ணிக்கையில் ஆபிரகாமின் மற்றப் பிள்ளைகளின் சந்ததியாரை விடக் (அதாவது ஆகார் கேத்தூராளின் சந்ததியை விட) குறைவான எண்ணிக்கையாயிருந்தாலும் மற்ற எல்லாக் காரியங்களிலும் அவர்களையும் இன்னும் மற்ற ஜாதியாரைக் காட்டிலும் மேம்பட்டவர்களாகவே இருக்கிறார்கள்.

உலகில் வேறு எந்த ஜாதிக்கும் கடவுளுடைய வழி நடத்துதல் இஸ்ரவேலருக்குப் போல் இருந்ததில்லை. அவர்களுக்காக சிவந்த சமுத்திரம் இரண்டாகப் பிளந்து வழி உண்டாக்கியது; யோர்தான் நதி தன் ஓட்டத்தை நிறுத்தி இவர்களுக்கு வழிவிட்டு தண்ணீர் மதில் போல் நின்றது; வனாந்தரத்தில் 40 ஆண்டுகள் ஆச்சரியமான பிரகாரம் போஷிக்கப்பட்டார்கள்; 40 ஆண்டுகள் அவர்களுடைய ஆடைகள் கிழியவுமில்லை அவர்கள் பாதரட்சைகள் தேய்ந்து போகவுமில்லை; குளிருக்கு அக்கினி ஸ்தம்பமும் வெய்யிலுக்கு மேக ஸ்தம்பமும் அவர்களைப் பாதுகாத்தன; அவர்கள் தங்கள் எதிரிகளை முறியடிக்கும்படி சூரியனும் சந்திரனும் ஒரு நாளளவு தங்கள் ஸ்தானத் திலேயே நின்றன; எத்தனையோ ஜாதியார் அவர்களை அழிக்க முயன் றும் அவர்கள் இன்றும் ஒரு ஜாதியாராய் நீடித்திருப்பது ஒரு அற்புதமே.

அநேக போட்டித் தேர்வுகளில் அடையாளம் காணாதவாறு பெயர் எழுதாமல் அல்லது வேறு குறிப்பு ஏதும் இல்லாமல் திருத்தப் பட்ட விடைத் தாள்களிலும் யூத மாணவர் கலந்து கொண்ட தேர்வு களில் அவர்களே முதன்மையாக வந்து தங்கள் திறமையை நிலை நாட்டியிருக்கின்றனர்.

சிலுவைப் போர்கள் காலத்திலும் அதற்குப் பின்பும் யூதர்கள் போய்ச் சேர்ந்த ஒவ்வொரு நாட்டிலும் அவமானத்துக்கும், சித்திர வதைக்கும், பட்டயத்துக்கும், நாடு கடத்தலுக்கும், மதமாற்றத்துக்கும் உள்ளாக்கப்பட்டிருந்தாலும் மீந்திருந்த அவர்கள் கையிட்டுக் கொண்ட சிறு தொழிலானாலும் அதில் சர்வ வல்லமையுள்ள ஆண்டவரின் நடத்துதலும் ஆசீர்வாதமும் கூடவே இருந்து சொற்பக் காலத்தில் அவர்கள் கையிட்டுக் கொண்ட தொழில்களில் காரிய சித்தி பெற்றவர்களாகி பேர் பெற்று விளங்குகிறவர்களாகி மற்ற ஜனங்களின் பொறாமைக்கும் வெறுப்புக்கும் உள்ளாயினர்.

அதேவிதமாக உலகம் முழுவதும் சிதறிக்கிடந்த யூதர் கொஞ்சங் கொஞ்சமாய் 19 ஆம் 20 ஆம் நூற்றாண்டுகளில் ஆண்டவர் வாக்குத்தத்தம் பண்ணிய நாட்டில் வந்து குடியேறி ஆச்சரி யமான பிரகாரமாக 1948 ஆம் ஆண்டு தங்களுடைய அரசை நிறுவி விட்டனர். அதே சமயத்தில் குர்தியர் என்ற ஜாதியார் கடந்த 4000 ஆண்டுகளாக துருக்கியின் கிழக்குப் பகுதியிலும், இராக்கின் வடக்குப் பகுதியிலும், சீரியாவின் வடகிழக்குப் பகுதியிலும், குர்திஸ் தானின் தென் மேற்குப் பகுதியிலும் (அதாவது ஒரே கூட்டமான

சமுதாயமாக ஒரு குறிப்பிட்ட நிலப்பரப்புக்குள், ஆனால் நாலு அரசாங்கங்களில்) ஒரு கோடி பேர் வாழ்ந்து வந்தும் தங்களுக்குத் தனிப்பட்ட ஒரு அரசு அல்லது நாடு வேண்டும் என்று அந்தந்த நாடுகளோடு இடைவிடாமல் முயற்சி எடுத்தும், சண்டை போட்டும் பிரயோஜனமில்லாமல், தங்களுக்கென்று இதுவரை ஒரு தனி அரசு உருவாக்க முடியாமல் இருக்கிறார்கள்.

ஆனால் இந்த இஸ்ரவேல் மக்கள் தங்கள் அரசை நிறுவிய இந்த 50 ஆண்டுகளில் பெரிய பெரிய சவால்களை ஆண்டவரின் துணை கொண்டு வெகு இலகுவில் சமாளித்து வருகின்றனர். அதாவது:

1) தங்களைச் சுற்றிலுமுள்ள 22 அரபு நாடுகள் தங்களை அழித்துவிட வேண்டி மிகுந்த படை பலத்துடன் மேற்கொண்ட ஐந்து யுத்தங்களிலும் பெரிய வெற்றி கண்டு சுற்றிலுமுள்ள நாடுகளில் சில பகுதிகளையும் கைப்பற்றி அவர்கள் தங்களுடன் சமாதானப் பேச்சுக்கு வரும் அளவிற்கு பலம் மிகுந்த நாடாக ஆகிவிட்டார்கள்.

2) கடந்த 50 ஆண்டுகளில் மற்ற நாடுகளிலிருந்து இக்குட்டி இஸ்ரேல் நாட்டுக்குள் குடியேறிய யூதரின் எண்ணிக்கை 35,00,000. இச்சிறிய நாட்டுக்குள் இப்பெரிய எண்ணிக்கையுள்ள ஜனங்களைக் குடியமர்த்தி அவர்களுக்கு உண்ண உணவும், உடுக்க உடையும், தங்குவதற்கு வீடுகளும் கட்டிக் கொடுப்பது என்பது இலகுவான காரியமல்ல. இதில் விசேஷம் என்னவென்றால் இஸ்ரேல் நாட்டில், அதாவது 20,700 சதுர கிலோ மீட்டர் பரப்பளவில் பாதிக்கு மேல் வனாந்தரப்பகுதி; அதாவது நெகேவ் பாலைவனமும் யூதேயா பாலைவனமும். ஆகவே குறுகிய இடத்துக்குள் தான் இம் 35 லட்சம் பேரையும் குடியமர்த்தி இருக்கிறார்கள். அதே சமயத்தில் இஸ்ரவேலிலிருந்து வெளியேறியவர்கள் 8 லட்சம் பலஸ்தீனிய அகதிகள் என்று சுற்றியுள்ள அரபு நாடுகள் அவர்கள் அகதிகளாகவே நீடிக்கவும் ஐக்கிய நாடுகள் சபை அவர்களை ஆதரித்து உணவு, உடை, இருப்பிடம் கொடுக்கவும் விட்டுவிட்டிருக்கின்றனர். அரபு நாடுகளுக்கு ஏகப்பட்ட பணமும் ஏகப்பட்ட நிலம் தரிசாக விடப்பட்டுக் கிடந்தாலும் இந்த 8 லட்சம் பேரைக் காட்டியே இஸ்ரேல் நாட்டை ஒழித்துக் கட்ட திட்டம் தீட்டியிருக்கின்றனர்.

3) இஸ்ரேல் உருவான இந்த 50 ஆண்டுகளுக்குள் அதன் சாதனைகள் பெரிய சவால்களைச் சந்திப்பதாகவே இருந்திருக்கிறது.

1800ஆண்டுகள் கவனிப்பாரற்று பலவிதங்களில் நாசப்படுத்தப்பட்ட நிலங்களில் மரங்கள்கூட இல்லாமற்போனபடியால் மழை குறைந்து வனாந்தரமான பூமியைச் செவ்வைப்படுத்த கோடிக் கணக்கில் மரங் களை நட்டுப் பராமரிக்க வேண்டியதாயிற்று. இதற்கென்று யூத தேசீய நிதி முதலாவது நிலத்தை விலைக்கு வாங்கி, பின்னர் அந் நிலங்களில் மரக்கன்றுகளை நாட்டிப் பராமரித்தது. இது தவிர சில பிரதேசங்கள் சதுப்பு நிலங்களாயிருந்தபடியால் அங்கு மலேரியா காய்ச்சல் அதிகம் பரவிக் கொண்டிருந்தபடியால் சதுப்பு நிலங்களைச் சரிபண்ண ஆஸ்திரேலியா, நியூஜீலாந்து முதலிய நாடுகளிலிருந்து யூக்கலிப்டஸ் மரக்கன்றுகளை வரவழைத்து, அவைகளை நாட்டி சதுப்பு நிலங்களை நல்ல நிலங்களாகப் பயிரிடுவதற்கு ஏற்ற நிலங் களாக மாற்ற வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டபடியால் அதையும் மேற்கொண்டு செய்து முடித்தது.

4) சடுதியில் கூடிக்கொண்டிருக்கும் ஜனத்தொகையை குடியேற்று விக்க நெகேவ் பாலைவனம் பகுதியில் தான் காலி இடம் இருக்கிற படியால் அப்பிரதேசத்தை வனப்படுத்த தண்ணீர் வேண்டும். இதற் காக (1) தேசீய நீர் கால்வாய் மூலம் கலிலேயா கடலிலிருந்து தண்ணீர் கொண்டு வரும் திட்டம், (2) கடல் நீரை சுத்தப்படுத்தி உபயோகிக்கும் திட்டம், (3) அசுத்த நீரை சுத்தப்படுத்தி உபயோகிக் கும் திட்டம், (4) சொட்டு நீர் பாசனத் திட்டம் மூலம் நீர் சிக்கனம், (5) தரையடித் தண்ணீரைக் கண்டுபிடித்து அதை எடுக்கும் திட்டம் முதலிய முறைகளில் தண்ணீரை உபயோகித்து பாலைவனப் பகுதி யைச் சோலைவனம் ஆக்கும் பணி ஒரு பெரிய சவால். இதை அதிகத் திறமையாகச் சமாளித்துக் கொண்டு வருகிறது.

இவைகளிலும் விசேஷமாக உலகம் முழுவதிலும் சிதறடிக்கப் பட்ட யூதரின் பக்தி வைராக்கியம். போன நாடுகளில் அந்தந்த நாடு களின் மொழிகளைக் கற்று அந்தந்த நாட்டினரோடு உறவாடினாலும் யெகோவா தங்கள் கடவுள், அவர் மோசேயின் மூலம் கொடுத்த கற்பனைகளைக் கைக்கொள்ள வேண்டும் என்ற எண்ணத்துடன் ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாகத் தங்கள் கொள்கைகளை விட்டு விடாமல், மேசியா தங்கள் ராஜாவாக உலகத்துக்கு வந்து தங்கள் சிறையிருப்பைத் திருப்பித் தங்களை என்றென்றும் அரசாளுவார் என்ற நம்பிக்கையில் இருக்கின்றனர்.

**1995 ஆம் வருடத்திய கணக்குப்படி :**

| | | |
|---|---|---|
| அமெரிக்க ஐக்கிய நாடுகளில் | ... | 56,00,000 |
| கனடாவில் | ... | 3,50,000 |
| இரஷ்யாவில் | ... | 4,10,000 |
| பிரான்ஸில் | ... | 5,30,000 |
| இங்கிலாந்தில் | ... | 3,00,000 |
| இஸ்ரேல் நாட்டில் | ... | 44,00,000 |
| இதர நாடுகளில் | ... | 14,10,000 |
| ஆக மொத்தம் | ... | 1,30,00,000 யூதர் |

இருக்கின்றனர் என்று கணக்கெடுக்கப்பட்டிருக்கிறது.

(Source: AMI - Jerusalem Centre for Biblical Studies and Research) .

இந்த புள்ளிவிபரப்படி இஸ்ரேல் நாட்டில் இருக்கும் யூதரைப் போல் இரண்டு மடங்கு யூதர் வெளி நாடுகளில் குடியிருக்கின்றனர். இவர்களையும் ஆண்டவர் தான் ஆபிரகாமுக்கு வாக்குப் பண்ணின தேசத்தில் கூட்டிச் சேர்ப்பதாக மோசேயின் மூலமும் இன்னும் ஏசாயா, எரேமியா, ஆமோஸ், சகரியா முதலிய தீர்க்கதரிசிகள் மூலமும் வாக்குப் பண்ணியிருக்கிறார்.

இப்பொழுது மத்திய கிழக்கில் இஸ்ரவேலருக்கும் மற்ற அரபு நாட்டு முஸ்லிம்களுக்கும் இருக்கும் சமாதானமற்ற நிலைமையையும், இஸ்ரேல் நாட்டுக்குள் ஹமாஸ் போன்ற தீவிரவாதக் கும்பல்கள் நடத்தி வரும் வன்முறை சம்பவங்களையும் வைத்து நிதானித்து வெளி நாடுகளில் சிதறி ஜீவிக்கும் யூதர்கள் இஸ்ரேல் நாட்டில் வந்து குடியேறத் தயங்குகின்றனர். சமீப காலத்தில் இரஷ்ய நாட்டிலிருந்து யூதர் வெளியேற அனுமதிக்கப்பட்டபொழுது வெகு சொற்பப் பேரே இஸ்ரேலுக்கு வந்தனர். மிகுதியான பேர் இங்கிலாந்துக்கும், அமெரிக்க ஐக்கிய நாடுகளுக்கும் போய்க் குடியேறினர். என்றாலும் ஆண்டவருடைய முன்னறிவிப்பின்படி (ஆமோஸ் 9:9) "சல்லடையினால் சலித்தரிக்கிறது போல் இஸ்ரவேல் வம்சத்தாரை எல்லா

ஜாதிகளுக்குள்ளும் சலித்தரிக்கும் படிக்கு " உலக சரித்திரத்தையே மாற்றுவார் என்று சீக்கிரத்தில் எதிர்பார்க்கலாம்.

தானியேல் 9:27 ஆம் வசனத்தின்படி அந்திக் கிறிஸ்துவின் ஏழு ஆண்டு அரசாட்சியின் காலத்தில் யூத ஜனங்களோடு உடன் படிக்கை பண்ணி அவர்களுக்குச் சில சலுகைகள் கொடுப்பதனால் யூத ஜனங்கள் அவன் தான் வரப்போகும் மேசியா என்று எண்ணு வார்கள். அவனுடைய முதல் மூன்றரை வருட அரசாட்சியில் அல்லது அதற்கு சற்று முன்னமேயே எருசலேம் தேவாலயம் அதன் ஸ்தானத் திலே கட்டப்பட்டிருக்கும். ஆகவே இஸ்ரவேல் நாட்டிலே சுபீட்சம் ஏற்பட்டுவிட்டதென்று எண்ணி வெளி நாடுகளில் வசிக்கும் யூதரில் மிகுதியானபேர் ஒருவேளை அந்த 3½ ஆண்டுகளில் இஸ்ரேல் நாட்டுக்குள் வந்து குடியேறலாம். ஆனால் அந்த 3½ ஆண்டுகள் முடியும்போது மேசியா என்று நம்பிய அந்த மனிதன் பலியையும் காணிக்கையையும் ஒழியப் பண்ணி தன்னையே வணங்கும்படி கண் டிப்புப்படுத்துவான் (தானியேல் 9:27) . இதையே இயேசு கிறிஸ்து "பாழாக்கும் அருவருப்பைக் குறித்துத் தானியேல் தீர்க்கதரிசி சொல்லியிருக்கிறானே; வாசிக்கிறவன் சிந்திக்கக்கடவன்; அதை நீங்கள் பரிசுத்த ஸ்தலத்தில் நிற்கக் காணும்போது,யூதேயாவில் இருக்கிறவர்கள் மலைகளுக்கு ஓடிப்போகக் கடவர்கள் ........" (மத்தேயு 24:15,16) என்று கூறினார்.

யூதர்கள் அவனை வணங்க மறுக்கும்போது "உலகம் உண் டானது முதல் இதுவரைக்கும் சம்பவித்திராததும், இனிமேலும் சம்பவியாததுமான மிகுந்த உபத்திரவம் அவர்களுக்கு உண்டா யிருக்கும்"(மத்தேயு 24:21). தேசத்தில் இருக்கிற இரண்டு பங்கு மனுஷர் சங்கரிக்கப்பட்டு மாண்டு போவார்கள் (சகரியா 13:8).

இதற்குள் அந்திக் கிறிஸ்துவின் பிந்திய 3½ வருட அரசாட் சியும் முடிந்து அந்திக்கிறிஸ்துவும் கள்ளத்தீர்க்கதரிசியும் கந்தகம் எரியும் அக்கினிக் கடலிலே தள்ளப்படுவார்கள் (வெளி. 19:20). சாத்தானும் மனுஷரை மோசம் போக்காதிருக்கும்படிக்கு பாதாளத் திலே தள்ளியடைக்கப்படுவான் (வெளி. 20:1–2).

அப்பொழுது இயேசுவின் ஆயிர வருட அரசாட்சி பூமியிலே துவங்கி பல துறைகளிலும் சுபீட்சம் ஏற்படும்; (சகரியா 14:8; ஏசாயா 30:26; ஏசாயா 35:1; ஏசாயா 60:12,14; மீகா 4:3) முதலிய பாகங் களில் ஆயிர வருட அரசாட்சியில் இஸ்ரேல் நாட்டில் ஏற்பட்டிருக்கும்

முன்னேற்றத்தைப் பார்த்து அமெரிக்கா, இங்கிலாந்து முதலிய நாடுகளில் வசிக்கும் யூத மக்களும் இஸ்ரேல் நாட்டில் வந்து குடியேறுவார்கள்.

கொள்கையளவில் யூதர்களாக இஸ்ரேல் நாட்டிற்கு அவர்கள் வந்து சேர்ந்தாலும் இயேசு கிறிஸ்துவை மேசியாவாக ஏற்றுக் கொள்ளாதவர்களாகத் தான் வந்து சேருவார்கள். அவர்களைப் பார்த்து ஆண்டவர் கூறுவது : சகரியா 12:10–12, 13:2 வரையிலும் கொடுக்கப் பட்டிருக்கிறது : அவைகளைப் பார்ப்போம்:–

**சகரியா 12**

10) "நான் தாவீது குடும்பத்தாரின் மேலும் எருசலேம் குடிகளின் மேலும் கிருபையின் ஆவியையும் விண்ணப்பங்களின் ஆவியையும் ஊற்றுவேன்; அப்பொழுது அவர்கள் தாங்கள் குத்தின என்னை நோக்கிப் பார்த்து, ஒருவன் தன் ஒரேபேறானவனுக்காகப் புலம்புகிறதுபோல எனக்காகப் புலம்பி, ஒருவன் தன் தலைச்சன் பிள்ளைக்காகத் துக்கிக்கிறதுபோல எனக்காக மனங்கசந்து துக்கிப்பார்கள்.

12) "தேசம் புலம்பிக்கொண்டிருக்கும்; ஒவ்வொரு வம்சமும் தனித்தனியாகப் புலம்பும்; தாவீது குடும்பத்தார் தனியேயும், அவர்கள் ஸ்திரீகள் தனியேயும், நாத்தான் குடும்பத்தார் தனியேயும், அவர்கள் ஸ்திரீகள் தனியேயும்.................."

13 – 1) "அந்நாளிலே பாவத்தையும் அழுக்கையும் நீக்க, தாவீதின் குடும்பத்தாருக்கும் எருசலேமின் குடிகளுக்கும் திறக்கப்பட்ட ஒரு ஊற்று உண்டாயிருக்கும்.

2) "அந்நாளிலே நான் விக்கிரகங்களின் பேரும் தேசத்தில் இராதபடிக்கு அழிப்பேன்; அவைகள் இனி நினைக்கப்படுவதில்லை; தரிசனம் சொல்லுகிறவர்களையும், அசுத்த ஆவியையும் தேசத்திலிருந்து போய்விடவும் பண்ணுவேன் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்".

இயேசு கிறிஸ்துவின் ஆயிரம் வருட அரசாட்சியின்போது நாடு சமாதானமாய் இருக்கிறது என்பதை அறிந்ததும் உலகம் முழுவதிலும் சிதறடிக்கப்பட்டு மீந்திருப்பவர்கள் தெற்கத்தி காட்டாற்று வெள்ளம் போல் (சங்கீதம் 126 : 4) திரள் திரளாக இஸ்ரேல் நாட்டுக்கு வந்து சேருவார்கள். நாட்டில் அவர்களுக்கு இடமிருக்காது; ஆகவே அவர்கள் கீலேயாத் (யோர்தானின் மேற்குப் பாகம் – காத், மனாசே

கோத்திரத்தாருக்கு யோசுவா பிரித்துக் கொடுத்த பாகம்)திலும், லீபனோவிலும் குடியேறுவார்கள் (சகரியா 10: 9 –10)

**சகரியா 10 : 9)**

''நான் அவர்களை ஜனங்களுக்குள்ளே இறைத்த பின்பு, அவர்கள் தூர தேசங்களிலே என்னை நினைத்து தங்கள் பிள்ளை களோடுங்கூடப் பிழைத்துத் திரும்புவார்கள்.''

10) ''நான் அவர்களை எகிப்து தேசத்திலிருந்து திரும்பி வரப் பண்ணி அவர்களை அசீரியாவிலிருந்து கூட்டிக் கொண்டு, அவர் களை கீலேயாத் தேசத்திற்கும் லீபனோனுக்கும் வரப்பண்ணுவேன்; அவர்களுக்கு இடம் போதாமற்போகும் ''.

ஆகவே அக்காலத்தில், இப்பொழுது பலஸ்தீனியர் என்று கூறிக்கொள்ளும் ஜனங்கள் தாவா பண்ணும் மேற்குக்கரைப் பகுதியும், யூதருக்குப் போதாமல், யோர்தான் நாட்டில் ஒரு பகுதி யிலும், லீபனோன் நாட்டிலும் குடியேறியிருப்பார்கள். அதே விதமாக சகரியா 8:4–5 ஆம் வசனங்களின்படி :

4) ''திரும்பவும் எருசலேமின் வீதிகளில் முதிர்வயதினாலே தங்கள் கைகளில் கோலைப் பிடித்து நடக்கிற கிழவரும் கிழவிகளும் குடியிருப் பார்கள்.

5) ''நகரத்தின் தெருக்களிலே விளையாடுகிற ஆண்பிள்ளை களும், பெண்பிள்ளைகளும் அதின் வீதிகளில் நிறைந்திருக்கும் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்''.

அக்காலத்தில் எருசலேம் நகரம், ஐக்கிய நாடுகள் சபையின் தீர்மானப்படி ஒரு சர்வதேச நகரமாகவோ அல்லது இஸ்ரவேலுக்கும் பலஸ்தீனியர்களுக்கும் பொதுவான நகரமாகவோ அல்லாமல் யூதருக்குச் சொந்தமான நகரமாயிருக்கும்.

**முன்னுரைப்பு:**

சகரியா 8:23 ''அந்நாட்களில் பலவித பாஷைக்காரராகிய புறஜாதியாரில் பத்து மனுஷர் ஒரு யூதனுடைய வஸ்திரத் தொங்க லைப் பிடித்துக் கொண்டு : தேவன் உங்களோடே இருக்கிறார் என்று கேள்விப்பட்டோம்; ஆகையால் உங்களோடே கூடப் போவோம் என்று சொல்லி, அவனைப் பற்றிக் கொள்ளவார்கள் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்''.

கிறிஸ்துவின் ஆயிர வருட ஆரசாட்சியின் போது யூதர் மனந்திரும்பி இயேசுவைத் தங்கள் மேசியாவாக ஏற்றுக் கொண்டு ஜீவிக்கும் பொழுது அவர்களில் ஏற்பட்டிருக்கும் மாற்றத்தைக் கண்டு, அல்லது அவர்கள் ஆண்டவரால் ஆசீர்வதிக்கப்பட்டிருப்பதைக் கண்டு, புறஜாதியார் கடவுள் அந்த ஜனங்களோடிருக்கிறார் என்று உணர்ந்து அவர்களுக்குப் பயந்து, பணிந்து அவர்களைப் பின்பற்றி நடப்பார்கள்.

# தானியேலின் தீர்க்கதரிசனங்கள்

## முகவுரை

தானியேல் தீர்க்கதரிசன புத்தகத்தைப் பற்றி தற்கால வேத விற்பன்னர்கள் பலவிதமான வித்தியாசமான கருத்துக்களை வெளியிட்டிருக்கின்றனர். சில ஆராய்ச்சியாளர்கள் இப்புத்தகம் கி. மு. 607 முதல் கி.மு. 534 ஆம் ஆண்டுகளுக்குள் எழுதப்பட்டிருக்க வேண்டும் என்று கருதுகிறார்கள். ஆனால் நவீன இறையியல் விமர்சகர்கள் இப்புத்தகம் மக்கபேயரின் எழுச்சியின் காலத்தைச் ( கி.மு. 168–கி. மு. 164) சேர்ந்தது என்றும், இப்புத்தகம் தானியேலால் எழுதப்படவில்லை; கிறிஸ்துவுக்கு 160 முதல் 200 ஆண்டுகளுக்கு முன்தான் எழுதப்பட்டிருக்க வேண்டும் என்றும் கூறுகின்றனர். ஒரு விமர்சகர் 'தானியேல்' என்ற புத்தகம் வேதாகமத்தில் இல்லாமலிருந்தால் நலமாயிருந்திருக்கும் என்று கூட வாய் கூசாமல் கூறிவிட்டார்.

ஆனால் இத்தீர்க்கதரிசன புத்தகத்தை நாம் படிக்கும்போது இது தானியேலால் எழுதப்பட்டது என்பது தெள்ளத் தெளிவாகிறது; உதாரணமாக கீழ்கண்ட வசனங்களைப் பார்க்கவும் : தானியேல் 7:1; 7:28; 8:2; 9:2; 10:2; 12: 4,5. ஆனால் இவைகளுக்கு மேலாக நமக்கு ஆதாரம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து தான். மத்தேயு 24:15 ஆம் வசனத்தில் இயேசு கிறிஸ்து "மேலும், பாழாக்குகிற அருவருப்பைக் குறித்துத் தானியேல் தீர்க்கதரிசி சொல்லியிருக்கிறானே, வாசிக்கிறவன் சிந்திக்கத்கடவன்" என்று கூறி இவைகளை தானியேல் தான் எழுதினான் என்று ஊர்ஜிதம் செய்து விட்டார்.

நவீன விமர்சகர்களின் கூற்று மூன்று :–

(1) இத் தீர்க்கதரிசன புத்தகத்தில் மிக நுட்பமான சரித்திர நிகழ்ச்சிகள் (விசேஷமாக 11 ஆம் அதிகாரத்திலே) கூறப்பட்டிருக்கின்றன; இவைகள் முன்னுரைக்கப்பட்டதாகக் கூறப்படும் காலத்திற்கு சில ஆண்டுகளுக்குள் நடத்த சம்பவங்கள். ஆகையால் இவைகள் அந்த நிகழ்ச்சிகள் நடந்து முடிந்த பின்பே எழுதப்பட்டிருக்க வேண்டும் என்பதே.

இதற்கு நம்முடைய விடை என்னவென்றால் பழைய ஏற்பாட்டைப் புரட்டினோமென்றால் நூற்றுக்கணக்கான சம்பவங்கள் முன்னு

ரைக்கப்பட்டு, அவைகள் எப்படி நிறைவேறினவென்று அதே வேத பாகத்தில் சில வசனங்களுக்கு அப்பால் கூறப்பட்டிருக்கின்றன. சில முன்னுரைப்புக்கள் சில நாட்களில் நிறைவேறியிருக்கின்றன; சில ஒன்று அல்லது இரண்டு ஆண்டுகளில் நிறைவேறியிருக்கின்றன; சில 20 அல்லது 50 ஆண்டுகளில் நிறைவேறியிருக்கின்றன; சில 50 அல்லது 600 ஆண்டுகளுக்குப் பின் நிறைவேறியிருக்கின்றன; சில 2000 அல்லது 2500 ஆண்டுகளுக்குப் பின் நிறைவேறிக் கொண்டிருக்கின்றன; சில இன்னும் நிறைவேற வேண்டியதிருக்கிறது; வேத பண்டிதர்கள் சில முன்னுரைப்புகள் இயேசுவின் ஆயிரம் வருட அரசாட்சியில் நிறைவேறும் என்று கூறுகின்றனர். அப்படியிருக்கும்போது வார்த்தைக்கு வார்த்தை அதி நுணுக்கமாக நிறைவேறியிருப்பதால் அது சம்பவம் நடந்த பின் எழுதப்பட்டது என்ற கூற்று பூரண அவிசுவாசிகளின் கூற்றே தவிர வேறில்லை.

(2) இப்புத்தகம் இரண்டு மொழிகளில் எழுதப்பட்டிருக்கின்றது, அதாவது ஒரு பாகம் எபிரேய மொழியிலும் பின்பாகம் பாபிலோனிய பாஷையாகிய அரமேயிக் (சீரிய அல்லது கல்தேய மொழி) மொழியிலும் எழுதப்பட்டிருக்கிறது. ஆகவே இப்புத்தகம் வெவ்வேறு காலக் கட்டத்தில் எழுதப்பட்டு பின்னால் ஒன்றாகச் சேர்த்துக் கொள்ளப் பட்டது என்று கூறுவாரும் உண்டு.

இதற்கும் பதில் கூற முடியும். தானியேல் 60 ஆண்டுகளாக நான்கு அரசர்களுக்கு பிரதம மந்திரியாய்ச் செயலாற்றிக் கொண்டிருந்தார் என்று சரித்திரம் கூறுகிறது. இக்காலக் கட்டத்தில் முதலாவது யூத ஜனங்கள் சிறைக் கைதிகளாக வந்த சமயம் தங்கள் ஜென்ம பாஷையாகிய எபிரேய மொழியைத் தான் பேசினர். ஆகவே அக்காலத்தில் அவர்களுக்கு விளங்கத்தக்கதாக அவர்கள் மொழியிலேயே (எபிரேய மொழியிலேயே) சில பாகங்கள் எழுதப்பட்டன. ஆனால் காலம் செல்லச் செல்ல யூதர் தாங்கள் போய்ச் சேர்ந்து பழகிய பாபிலோனிய மக்களின் மொழியை அதிகமாக உபயோகித்ததினால் எபிரேய மொழி ரபிமார் உபயோகிக்கும் வேதாந்த மொழியாகத் தள்ளப்பட்டு சாதாரண மக்கள் பாபிலோனிய மொழியாகிய அரமாயிக் (சீரிய அல்லது கல்தேய) மொழியைப் பேசத் துவங்கிவிட்டனர். எழுபது வருட காலத்தில் சாதாரன மக்களுக்கு எபிரேய மொழி மறந்தே போய்விட்டது. ஆகவே அவர்களுக்கு விளங்கும் மொழியில் பிற்காலத்தில் எழுத வேண்டிய நிர்ப்பந்தம் தானியேலுக்கு ஏற்பட்டது. ஆகவே இப்புத்தகம் இரு மொழிகளில் எழுதப்பட்டிருக்கிறது.

இதை உறுதிப்படுத்த, நெகேமியா 8 ஆம் அதிகாரம் 7 ஆம் வசனத்தில் எஸ்றா நியாயப்பிரமாண புத்தகத்தை வாசித்த பொழுது (எபிரேய மொழி) அது பொது மக்களுக்கு விளங்காதபடியால் "யெசுவா, பானி, செரபியா ..... என்பவர்களும் லேவியரும் நியாயப் பிரமாணத்தைத் ஜனங்களுக்கு விளங்கப்பண்ணினார்கள்" (They gave an oral translation of God's law and explained it so that the people could understand it- (Good News Bible)

**(3)** தானியேல் 5:1, 5:30 இவ்வசனங்களில் பெல்ஷாத்சார் என்னும் பாபிலோனிய அரசன் என்று கூறப்பட்டிருக்கிறது. சில விமர்சர்கள்: நாங்கள் பாபிலோனிய சரித்திரத்தைக் கரைத்துக் குடித்திருக்கி றோம்; பெல்ஷாத்சார் என்ற பெயருடைய மன்னன் பாபிலோனை ஆண்டதில்லை; ஆகவே வேதத்தில் கூறப்பட்டிருப்பது தப்பிதம் என்று வாதிக்கின்றனர். அதே சமயத்தில் பாபிலோனிய வீழ்ச்சி உண்மை, அச்சமயத்தில் பாபிலோனை ஆரசாண்ட மன்னன் பெல்ஷாத்சார் இல்லை, நிபோனிடஸ் என்ற மன்னன் என்கின்றனர். அதே சமயத்தில் பாபிலோன் வீழ்ந்த சமயத்தில் நிபோனிடஸ் நூறு மைல் களுக்கு அப்பாலுள்ள ஒரு இடத்தில் இருந்ததாகவும் அதன் பின் அவன் பாரசீக மன்னனால் கைதாக்கப்பட்டான் என்றும் கூறு கின்றனர். இதற்கு என்ன விளக்கம் என்று பார்ப்போம் :–

அநேக ஆண்டுகளாக மேற்கூறிய கூற்றுக்கு வேத அறிஞர் களால் சரியான விளக்கம் கொடுக்க முடியாமற்தான் தடுமாறினர். ஆனால் சர் எச். ராலின்ஸன் (Sir H. Rawlinson ) என்ற தொல் பொருள் ஆராய்ச்சியாளர் கி.பி. 1854 ஆம் ஆண்டு கல்தேயரின் ஊர் (ஆபிரகாமின் ஊர்) என்ற நகரத்தில் இடிபாடுகளைத் தோண்டி ஆராய்ச்சி நடத்தியபொழுது சில எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட களிமண் ஊருளைகள் கண்டுபிடிக்கப்பட்டன. அவைகளை வாசித்துப் பார்க்கும்போது அது நிபோனிடஸ் அரசன் காலத்தவை என்றும், அவனால் "பெல்ஷாத்சார் என் மூத்த மகன்" என்றும் குறிப்பிடப் பட்டிருக்கிறது. 1876 ஆம் ஆண்டு சர் எச். ராலின்சன் பாபிலோன் இடிபாடுகளை ஆராய்கையில் 2000 க்கும் கூடுதலான களிமண் பலகைகள் கண்டுபிடிக்கப்பட்டன. அவைகளை வாசித்துப் பார்க்கும் போது பாரசீக மன்னன் கோரேஸ் பாபிலோனைப் படையெடுத்து அதைக் கைப்பற்றியதாகவும், நெபோனிடஸ் ஓடிப்போய்விட்டபடியால் அவன் பிடிக்கப்பட்டு காவலில் வைக்கப்பட்டதாகவும் தெரிகிறது. வேறொருகளிமண் பலகையில் "ஒரு இரவில் ராஜா மரித்தான்" என்றும் எழுதப்பட்டிருக்கிறது.

இவைகளிலிருந்து விளங்குவது என்னவென்றால் ஒரே சமயத்தில் இரண்டு பேர் அரச பொறுப்பை வகித்திருந்திருக்கின்றனர். நிபோனிடஸ் தகப்பனான அரசன் அவன் தலை நகரைவிட்டுப் போயிருந்த சமயம் அவனுடைய மூத்த மகன் பெல்ஷாத்சார் அவன் ஸ்தானத்தில் இரண்டாவது அரசனாக அல்லது ஆட்சியாளர் பொறுப்பை வகித்து மன்னனாக விளங்கினான். அவன் மன்னன் என்று கூறப்பட்டிருந்தாலும் இரண்டாவது ஸ்தானத்தில் இருந்திருக்கிறான். இதைப் பின்னால் விளக்குவோம்.

ஆதியாகமம் 41:39–44ஐப் பாக்கும்போது யோசேப்பு பார்வோனுக்கு அடுத்த இரண்டாம் ஸ்தானத்தைப் பெற்றான் – 43 ஆம் வசனத்தில் " தன்னுடைய இரண்டாம் இரதத்தில் அவனை ஏற்றி...." என்று பார்க்கிறோம்.

எஸ்தர் 10:3 ஆம் வசனத்தைப் பார்க்கும்போது "யூதனாகிய மொர்தெகாய் ராஜாவாகிய அகாஸ்வேருவுக்கு இரண்டாவதானவனும், யூதருக்குள் பெரியவனும்......" என்று,இராஜாவுக்கு இரண்டாம் ஸ்தானத்தில் வைக்கப்பட்டிருந்தான் என்று காண்கிறோம்.

தானியேல் 2:45–49 ஆம் வசனங்களைப் பார்க்கும்போது "ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் முகங்குப்புற விழுந்து தானியேலை வணங்கி.......தானியேலைப் பெரியவனாக்கி......பாபிலோன் மாகாணம் முழுதுக்கும் அதிபதியாகவும், பாபிலோனிலுள்ள சகல ஞானிகளின் மேலும் பிரதான அதிகாரியாகவும் நியமித்தான்". இராஜாவுக்கு இரண்டாவது ஸ்தானத்தில் அமர்த்தப்பட்டான் என்று தெரிகிறது.

ஆனால் தானியேல் 5:29 ஆம் வசனத்தில் "அப்பொழுது பெல்ஷாத்சார் தானியேலுக்கு இரத்தாம்பரத்தையும், அவன் கழுத்தில் பொற்சரப்பணியையும் தரிப்பிக்கவும், ராஜ்யத்திலே அவன் மூன்றாம் அதிகாரியாயிருப்பவன் என்று அவனைக்குறித்துப் பறைமுறையிடவும் கட்டளையிட்டான்" என்று பார்க்கிறோம்.

ஆகவே, தகப்பனான நிபோனிடஸ் முதல் ஸ்தானத்திலும், அவன் மகன் பெல்ஷாத்சார் இரண்டாம் ஸ்தானத்திலும் இருந்தபடியால் தானியேலை (தானியேல் 5:29) மூன்றாம் அதிகாரியாக இருப்பவன் என்று பறை முறையிடவும் கட்டளையிட்டான் என்று பார்க்கிறோம். இவைகளைக் கவனிக்குமிடத்து பெல்ஷாத்சார் என்ற அரசன் இருந்திருப்பது உண்மை; வேதாகமத்தைக் குறைகூறும் விமர்சர்களின் கூற்று விருதா என்று அறிகிறோம்.

(4) குறைகூறுபவர்களுக்குக் கிடைத்த அடுத்த ஆதாரம் தானியேல் 3:5 ஆம் வசனத்தில் கூறப்பட்டிருக்கும் வாத்தியக் கருவிகள். "எக்காளம், நாகசுரம், கின்னரம், வீணை, சுரமண்டலம், தம்புரு முதலான சகலவித கீதவாத்தியங்களின் சத்தத்தை நீங்கள் கேட்கும் போது, நீங்கள் தாழ விழுந்து, ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் நிறுத்தின பொற்சிலையைப் பணிந்து கொள்ளக்கடவீர்கள்". இப்பெரியோர்கள் கூறுவது என்னவென்றால் கின்னரம், வீணை, சுரமண்டலம், தம்புரு என்ற நான்கு வாத்தியங்க்ளும் கிரேக்கரால் உபயோகிக்கப்பட்டவை; கிரேக்கக் கலாச்சாரம் கி.மு. 333 க்குப் பின் தான் வந்தது; ஆகையால் அதன் பின் தான் இந்த வாத்தியக் கருவிகள் பாபிலோனில் உபயோகத்திற்கு வந்திருக்க வேண்டும். அப்படியாயின் தானியேல் புத்தகமும் அதற்குப் பின்னர் தான் எழுதப்பட்டிருக்க வேண்டும் என்பதே.

இதற்கு பதில்: கின்னரமும் வீணையும் கிரேக்கரால் கண்டு பிடிக்கப்பட்டவையல்ல. அவைகள் ஆசிய நாட்டுக் கருவிகள். சுரமண்டலம், தம்புரு என்னும் கருவிகள் கிரேக்க கலாச்சாரத்தைச் சேர்ந்தது என்று வைத்துக் கொண்டாலும், ஒரு காரியத்தை மனதில் கொள்ள வேண்டும். பரிசுத்த வேதாகமத்தில் இவ்வாத்தியங்களைப் பற்றி இதற்கு வெகு காலத்திற்கு முந்தினவைகளாகக் குறிப்பிடப்பட்டிருப்பதைக் காண்கிறோம். ஆதியாகமம் 4:21 இல் (கி.மு. 3875) யூபால் என்பவன் கின்னரக்காரர், நாகசுரக்காரர் யாவருக்கும் தகப்பன் என்று கூறப்பட்டிருக்கிறது. யாத்திராகமம் 19:13,16 ஆம் வசனங்களில் (கி.மு.1491) இஸ்ரவேல் ஜனங்கள் எக்காளத்தைப் பயன்படுத்தியதாகப் பார்க்கிறோம். சங்கீதம் 57, 108, 144, 150 முதலியவைகளில் (கி.மு.1000) தாவீது கின்னரம், வீணை சுரமண்டலம், தம்புரு முதலிய வாத்தியக் கருவிகளால் ஆண்டவரைத் தோத்தரித்ததைப் பார்க்கிறோம். ஆகவே தானியேலின் காலத்திற்கு நூற்றுக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்னதாகவே எபிரேய ஜனங்களால் இந்த வாத்தியக் கருவிகளெல்லாம் உபயோகப்படுத்தப்பட்டு வந்திருக்கின்றன. ஆகவே வேதத்தைக் குறைகூறுபவர்களின் கூற்று இவ்விஷயத்திலும் ஒவ்வாததாகிவிடுகிறது. ஆகவே தானியேல் தீர்க்கதரிசியின் புத்தகம் கடவுளால் ஏவப்பட்டு எழுதப்பட்ட மாசுமறுவற்ற புத்தகம்.

37

# தானியேலின் தீர்க்கதரிசனங்கள்

யூதேயா நாட்டிலிருந்து பாபிலோனுக்கு அநேகமாக கி.மு.605 ஆம் ஆண்டு சிறைக்கைதிகளாகக் கொண்டுபோகப்பட்டவர்களில் தானியேலும் ஒருவர். இவர் யூதேயாவின் இராஜ குலத்தைச் சேர்ந்தவர். உணவு காரியங்களில் கூட தன்னைத் தீட்டுப்படுத்திக் கொள்ளாமல் கர்த்தருக்குப் பயந்து நடந்தவர் – (தானியேல் முதலாம் அதிகாரத்தைப் பார்க்கவும்). ஆகவே ஆண்டவர் அவரை மேன்மைப் படுத்தினார். 90 வயது வரை உயிர் வாழ்ந்து நேபுகாத்நேச்சார், பெல்சாத்சார், தரியு, கோரேஸ் முதலிய அரசர்களுக்கு முதன் மந்திரியாக 60 ஆண்டுகள் பணியாற்றியதாகத் தெரிகிறது.

பரிசுத்த வேதாகமத்தில் தானியேல் என்ற புத்தகத்தை தானியேலே எழுதினார், அல்லது அவர் உயர் பதவியிலிருந்தபடியால் அவர் சொல்லச் சொல்ல அவருடைய எழுத்தாளர் எழுதியிருக்க வேண்டும். தானியேல் 7:1, 28; 8:2; 9:2; 10:1,2; 12:4,5 வசனங்களைக் கண்ணோக்கும்போது இப்புத்தகத்தின் ஆக்கியோன் தானியேல் தான் என்பது தெளிவாகிறது. ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவும் இப் புத்தகம் தானியேலால் எழுதப்பட்டது என்பதை மத்தேயு 24:15ஆம் வசனத்தின் மூலம் ஊர்ஜிதப்படுத்தியிருக்கிறார்.

என்றாலும் கி.பி. மூன்றாம் நூற்றாண்டில் போர்பிரி என்ற நாஸ்தீகன் இப்புத்தகம் கி.மு. இரண்டாம் நூற்றாண்டில் தான் எழுதப் பட்டிருக்க வேண்டும்; ஏனென்றால் உலக சரித்திரத்தில் நிறைவேறிய அநேக காரியங்கள் தெள்ளத் தெளிவாக இப்புத்தகத்தில் கூறப்பட்டிருப்பதால் யாரோ ஒருவர் நடந்து முடிந்த காரியங்களை நடக்கப் போவது போல் எழுதி தானியேல் பெயரில் சேர்த்து விட்டார் என்று வாதாடினார். ஆனால் ஜெரோம் என்ற அறிஞர் (கி. பி. 347 – 420) தகுந்த பதிலடி கொடுத்து இவ்வாதத்தை தகர்த்தெறிந்தார். என்றாலும் 1300 ஆண்டுகள் கழித்து நவீன இறையியல் கொள்கைக் காரர்கள் திரும்பவும் போர்பிரி (Porphyry) கூற்றை ஆதரித்துப் பேசிக் கொண்டு வருகிறார்கள். அவபக்தியாளர்கள் எது வேண்டுமானாலும் பேசட்டும். ஆண்டவர் தமது தீர்க்கர் மூலமாய் 2500 ஆண்டுகளுக்கு முன் முன்னுரைத்தவைகள் எப்படி உலக சரித்திரத்தில் நிறைவேறியிருக்கின்றன; இன்னும் எவை எவைகள் நிறைவேற வேண்டியுள்ளன என்பதை வரும் பக்கங்களில் கவனிப்போம்.

## நேபுகாத்நேச்சாரின் கனவும், தானியேலின் தரிசனமும்.

தானியேல் தீர்க்கதரிசியின் புத்தகம் இரண்டாம் அதிகாரத்தில் பாபிலோனின் மன்னாகிய நேபுகாத்நேச்சார் ஒரு சிலையைப் பற்றிய கனவு, கண்டதாகக் கூறப்பட்டிருக்கிறது. அதன் விபரம்:–

**தானியேல் 2 : 32 – 35 (கி.மு. 603)**

32) "அந்தச் சிலையின் தலை பசும்பொன்னும் , அதின் மார்பும் அதின் புயங்களும் வெள்ளியும், அதின் வயிறும் அதின் தொடையும் வெண்கலமும்,

33) "அதின் கால்கள் இரும்பும், அதின் பாதங்கள் பாதி இரும்பும் பாதி களிமண்ணுமாயிருந்தது.

34) "....கைகளால் பெயர்க்கப்படாத ஒரு கல் பெயர்ந்து உருண்டு வந்தது; அது அந்தச் சிலையை இரும்பும் களிமண்ணுமாகிய அதின் பாதங்களில் மோதி, அவைகளை நொறுக்கிப் போட்டது.

35) "அப்பொழுது அந்த இரும்பும், களிமண்ணும், வெண்கலமும், வெள்ளியும், பொன்னும் ஏகமாய் நொறுங்குண்டு, கோடை காலத்தில் போரடிக்கிற களத்திலிருந்து பறந்து போகிற பதரைப் போலாயிற்று; அவைகளுக்கு ஒரு இடமும் கிடையாதபடி காற்று அவைகளை அடித்துக் கொண்டு போயிற்று; சிலையை மோதின கல்லோவென்றால் ஒரு பெரிய பர்வதமாகி பூமியையெல்லாம் நிரப்பிற்று."

இக்கனவிற்குத் தானியேல் 2:38 – 44 ஆம் வசனங்களில் நாம் உலக நாடுகளின் வரலாற்றைக் கவனித்து, அனுமானித்து விளங்கிக் கொள்ளத்தக்கதாக விளக்கம் கொடுக்கப்பட்டிருக்கிறது. யோசேப்பின் காலத்தில் (கி. மு. 1707) எகிப்து தேசத்தில் 7 ஆண்டுகள் சுபிட்சமும், 7 ஆண்டுகள் பஞ்சமும் என்பதை அறிவிக்கப் பார்வோனுக்கு இரண்டு கனவுகளை ஆண்டவர் ஒரே இரவில் அவனுக்கு அனுப்பினார்; ஒன்று ஏழு கொழுமையான பசுக்களும் ஏழு மெலிந்துபோன பசுக்களும் நதியிலிருந்து ஏறி வந்தன; அந்த ஏழு மெலிந்த பசுக்களும் கொழுமையான பசுக்களை தின்று விட்டன வென்றும்; இரண்டாவது, ஏழு செழுமையான கதிர்களும் ஏழு சாவியான கதிர்களும் வளர்ந்தன; சாவியான கதிர்கள் செழுமையான கதிர்களை விழுங்கி போட்டன (ஆதியாகமம் 41). ஏழு

ஆண்டுகள் செழிப்பும் ஏழு ஆண்டுகள் பஞ்சமும் உண்டாகும் என்பதை உறுதிப்படுத்த ஒரே பொருளுள்ள இரண்டு கனவுகள் பார்வோனுக்குக் கொடுக்கப்பட்டது.

அதைப் போலவே நேபுகாத்நேச்சார் கண்ட கனவின் பொருளை உறுதிப்படுத்த அதே அர்த்தமுள்ள வேறொரு தரிசனம் தானியேலுக்குக் கொடுக்கப்பட்டது. இத்தரிசனம் தானியேலின் புத்தகம் 7ஆம் அதிகாரத்தில் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதாவது:–

**தானியேல் 7:2–8 ( கி. மு. 555 ) அதில் :**

3) "வெவ்வேறு ரூபமுள்ள நாலு பெரிய மிருகங்கள் சமுத்திரத்திலிருந்து எழும்பின.

4) "முந்தினது சிங்கத்தைப் போல இருந்தது: அதற்குக் கழுகுகளின் செட்டைகள் உண்டாயிருந்தது : நான் பார்த்துக் கொண்டிருக்கையில், அதின் இறகுகள் பிடுங்கப்பட்டது; அது தரையிலிருந்து எடுக்கப்பட்டு, மனுஷனைப்போல இரண்டு காலின் மேல் நிமிர்ந்து நிற்கும்படி செய்யப்பட்டது; மனுஷருடைய இருதயம் அதற்குக் கொடுக்கப்பட்டது.

5) "பின்பு கரடிக்கு ஒப்பாகிய இரண்டாம் மிருகத்தைக் கண்டேன்; அது ஒரு பக்கமாய்ச் சாய்ந்து நின்று, தன் வாயின் பற்களுக்குள்ளே மூன்று விலாவெலும்புகளைக் கவ்விக் கொண்டிருந்தது; எழும்பி வெகு மாம்சம் தின்னென்று அதற்குச் சொல்லப்பட்டது.

6) "அதின்பின்பு, சிவிங்கியைப் போலிருக்கிற வேறொரு மிருகத்தைக் கண்டேன்; அதின் முதுகின்மேல் பட்சியின் செட்டைகள் நாலு இருந்தது; அந்த மிருகத்துக்கு நாலு தலைகளும் உண்டாயிருந்தது; அதற்கு ஆளுகை அளிக்கப்பட்டது.

7) "அதற்குப் பின்பு, இராத்தரிசனங்களில் நாலாம் மிருகத்தைக் கண்டேன்; அது கெடியும் பயங்கரமும் மகா பலத்ததுமாயிருந்தது; அதற்குப் பெரிய இருப்புப் பற்கள் இருந்தது; அது நொறுக்கிப் பட்சித்து, மீதியானதைத் தன் கால்களால் மிதித்துப்போட்டது .......அதற்கு பத்துக் கொம்புகளிருந்தது.

8) "அந்தக் கொம்புகளை நான் கவனித்திருக்கையில், இதோ, அவைகளுக்கு இடையிலே வேறொரு சின்ன கொம்பு எழும்பிற்று; அதற்கு முன்பாக முந்தின கொம்புகளில் மூன்று பிடுங்கப்பட்டது. இதோ, அந்தக் கொம்பிலே மனுஷ கண்களுக்கு ஒப்பான கண்களும்

பெருமையானவைகளைப் பேசும் வாயும் இருந்தது"

இத்தரிசனத்துக்கு விளக்கம் தானியேல் 8:17 முதல் 25 ஆம் வசனம் வரையில் கொடுக்கபட்டிருக்கிறது. இத்தரிசனமும் நேபுகாத்நேச்சாரின் கனவும் ஒரே காரியத்தை விளக்குகின்றன என்பதை அறியலாம்; அதாவது நேபுகாத்நேச்சாரின் காலத்திலிருந்து கடைசி காலம் வரைக்கும் எழும்பும் நான்கு இராஜ்யங்களைப் பற்றியதாகும்.

இவைகளின் விளக்கங்களைக் கீழே காண்போம் : –

## முதலாம் ராஜ்யம் – பாபிலோனிய இராஜ்யம் – தானி 2 : 32 ; 7 :4

### நேபுகாத்நேச்சாரின் கனவு : தானி 2 : 32

பசும்பொன்னாலான தலை நேபுகாத்நேச்சாரின் பாபிலோனிய இராஜ்யம் என்று தானியேல் விளக்கினார். தலையிலிருந்து பாதங்கள் மட்டும் காலக்கிரமத்தில் ஒன்றன் பின் ஒன்றாக வரும் இராஜ்யங்களைக் குறிக்கும் என்றும் தனக்கு ஆண்டவர் வெளிப்படுத்தினார் என்று கூறினார்.

முதலாவது நேபுகாத்நேச்சாரின் பாபிலோனிய இராஜ்யம் பசும் பொன்னாகச் சித்தரிக்கப்பட்டது. இதற்கு இரண்டு காரணங்கள் உண்டு. முதலாவது, பாபிலோனின் கடவுளாகிய மார்துக் பசும் பொன்னின் கடவுள் என்று அழைக்கப்பட்டது. இரண்டாவது, பாபிலோனில் அக்காலத்தில் உபயோகிக்கப்பட்ட தங்கம் யாவரையும் பிரமிக்க வைக்கும். கட்டிடங்களின் மதில்கள் தங்கத் தகடுகளினால் மூடப்பட்டிருந்தன, விக்கிரகங்களும், கோவில்களும் தங்க மயமாய்க் காட்சியளித்தன. தானியேல் மூன்றாம் அதிகாரம் முதலாம் வசனத்தில் நேபுகாத்நேச்சார் அறுபது முழ உயரமும் ஆறு முழ அகலமுமான பொற்சிலையை உண்டு பண்ணினான் என்று பார்க்கிறோம். அதாவது தோராயமாக 90 ஆடி உயரமும் 9 அடி அகலமுமான ஒரு சிலை செய்ய எவ்வளவு தங்கம் வேண்டியதிருக்கும் என்று யூகித்துப் பாருங்கள்.

பாபிலோன் கோபுரம் என்று அழைக்கப்பட்ட கோபுரத்துக்குப் பக்கத்தில் பேலின் சிலை இருந்ததாம். அது முழுவதும் தங்கம். அக்கோவிலில் 40 அடி நீளமும் 15 அடி அகலமுமான ஒரு மேசை இருந்ததாம்; அது முழுவதும் தங்கம். சிலையும் மேசையும் சேர்த்து 50,000 பவுண்டு நிறையுள்ள தங்கமாம். அதோடு கூட இஷ்டார் என்ற தேவதையின் சிலையும், அக்கோவிலைக் காவல் காக்கும் இரண்டு

சிங்கங்களின் சிலையும் முழுவதும் தங்கமாயிருந்ததாம். ஆகவே நேபுகாத்நேச்சாரின் பாபிலோன் இராஜ்யம் பசும் பொன்னாலான இராஜ்யம் என்று குறிப்பிடப்பட்டது ஒரு வகையில் சரியே.

## தானியேலுக்குக் கிடைத்த தரிசனம். தானி. 7:4

சமுத்திரத்திலிருந்து நான்கு மிருகங்கள் ஏறி வருகிறதை தானியேல் கண்டார்; அதில் முதல் மிருகம் சிங்கத்தைப் போலிருந்தது. அதற்குக் கழுகின் செட்டைகள் உண்டாயிருந்தது. செட்டைகளுள்ள சிங்கம் பாபிலோன் அரசின் அரசாங்க சின்னமாக இருந்திருக்க வேண்டும். செட்டைகளுள்ள சிங்கங்களின் சிலைகள் அரசமாளிகைகளின் முன்பாகவும், கோவில்களின் முன்பாகவும் வைக்கப்பட்டிருந்தன. சிங்கம் வலுவையும், கழுகு வேகத்தையும் குறிப்பிடுகிறவைகளாகும். எரேமியா 50:17ஆம் வசனத்தில் நேபுகாத்நேச்சார் சிங்கத்துக்கு ஒப்பாகக் காட்டப்பட்டிருப்பதையும், எசேக்கியேல் 17: 3–13 ஆம் வசனங்களில் பாபிலோன் ராஜா பெரிய கழுகுக்கு ஒப்பிடப்பட்டிருப்பதையும் காணலாம். ஆபகூக் 1: 6–10ஆம் வசனங்களிலும் கல்தேய ராஜா (பாபிலோன் ராஜா) வின் வேகம் சிவிங்கிகளுடைய வேகத்தையும், கழுகுகளுடைய வேகத்தையும் மிஞ்சும் என்று கூறப்பட்டிருப்பதையும் காணலாம். இவ்விதமாக பாபிலோன் இராஜ்யம் வேகமாய் பரவி வலுவுற்றதாயிருக்கும்.

என்றாலும் அம்மிருகத்தின் இறகுகள் பிடுங்கப்பட்டது. மனுஷனைப் போல் இரண்டு கால்களின் மேல் நிமிர்ந்து நின்றது; அதற்கு மனுஷ இருதயம் கொடுக்கப்பட்டது என்று தானி. 7 : 4ஆம் வசனம் பின் பகுதியில் காண்கிறோம்.

இப்பகுதியின் நிறைவேறுதல் தானியேல் 4ஆம் அதிகாரத்தில் சொல்லப்பட்டிருப்பதைக் காணலாம். நேபுகாத்நேச்சார் மனுஷரிலிருந்து தள்ளப்பட்டு ஏழு ஆண்டுகள் மாட்டைப் போல் ஆகாயத்துப் பனியிலே நனைந்து வெளியிலே புல்லை மேய்ந்து திரிந்தான் என்று வேதாகமத்தில் காண்கிறோம். அந்நாட்கள் முடிந்தபோது அவன் புத்தி திரும்பி வந்தது; அவன் உன்னதமானவரை ஸ்தோத்தரித்துத் தன்னைத் திருத்திக் கொண்டான். அதன்பின் நாடுகளை ஜெயிக்க வேண்டும் என்ற எண்ணம் மாறி தன் பிரஜைகளை கவனிப்பதில் ஈடுபட்டான்.

நேபுகாத்நேச்சாருக்குப் பின் 23 ஆண்டுகளில் ஐந்து பேர் பாபிலோனிய நாட்டை ஆண்டனர். கடைசியாக பெல்ஷாத்சாரின்

காலத்தில் மேதியர் நாட்டைக் கைப்பற்றினர். அதோடு பசும்பொன்னாலான முதலாம் சாம்ராஜ்யம் முடிவுற்றது.

## இரண்டாம் இராஜ்யம் – மேதிய பெர்சிய இராஜ்யம் – தானி. 2: 32; 7 : 5.

### நேபுகாத்நேச்சாரின் கனவு: தானியேல் 2 : 32

"அந்த சிலையின்............மார்பும் அதின் புயங்களும் வெள்ளியும்"

சரித்திர பிரகாரம் கி.மு. 550ஆம் ஆண்டு மேதிய இராஜ்யம் பெர்சிய அரசோடு கோரேஸ் என்ற பெர்சிய அரசனின் கீழ் ஒன்று சேர்ந்தது. கி.மு.625 முதல் கி.மு.550 வரை மேதிய அரசு தற்காலத்து துருக்கியின் கிழக்குப் பகுதியிலிருந்து கஸ்பியன் கடலுக்குத் தெற்கேயும், கிழக்கேயும் இந்தியா வரைக்கும் பரவியிருந்தது. பெர்சியா தற்காலத்து இரான் நாடு. கோரேஸ் என்ற அரசனின் காலமுதல் மேதிய–பெர்சிய அரசு ஒரு கூட்டு அரசாக செயல்பட்டதாகப் பார்க்கிறோம். பெல்ஷாத்சார் காலத்தில் (தானியேல் 5ஆம் அதிகாரம்) பாபிலோன் ஜெயிக்கப்பட்ட போது மேதியனாகிய தரியு பாபிலோனைப் பிடித்தான் என்று பார்க்கிறோம்; ஆனால் பெர்சிய மன்னன் கோரேஸ் பொறுப்புள்ள அரசனாய் யூத மக்களை எருசலேமுக்கு அனுப்பி தேவாலயத்தைப் புதுப்பித்துக் கட்டச் சொன்னான் என்று பார்க்கிறோம். எஸ்தரின் சரித்திரத்தை நாம் படிக்கும்போது, அகாஸ்வேரு அரசன் (கி.மு. 521) இந்து தேசம் முதல் எத்தியோப்பியா தேசம் வரை உள்ள 127 நாடுகளை அரசாண்டான் என்றும், மேதியா –பெர்சியா நாடுகளிலுள்ள அதிபதிகளுக்கும் பிரபுக்களுக்கும் மேதியாவிலிருந்த சூசான் நகரத்து அரண்மனையிலே விருந்து பண்ணினான் என்றும் பார்க்கிறோம்.

சிலையின் இரண்டு கைகளும் மார்போடு ஒன்றாய் இணைக்கப்பட்டிருந்தது போல மேதிய பெர்சிய இராஜ்யங்கள் ஒன்றாய் இணைக்கப்பட்டிருந்தன. அக்கைகளும் மார்பும் வெள்ளியாயிருந்தது. (தானி. 2 : 32).

அக்காலத்தில், அந்நாடுகளில் வெள்ளி நாணயங்கள் தான் நடைமுறையில் கையாளப்பட்டன. மேதிய – பெர்சிய அரசாங்கம் தீர்வை வசூலித்து தன் கஜனாவை நிரப்புவதில் கவனமாயிருந்தது –

(எஸ்றா 4 : 13 இல் இதைப் பற்றிக் காண்கிறோம்). ஆகவே மேதிய பெர்சிய அரசுக்கு வெள்ளியை ஒப்பிட்டு நேபுகாத்நேச்சாரின் கனவில் வந்தது சரியே.

**தானியேலுக்குக் கிடைத்த தரிசனம்: தானி. 7 : 5.**

"பின்பு கரடிக்கு ஒப்பாகிய வேறே இரண்டாம் மிருகத்தைக் கண்டேன்; அது ஒரு பக்கமாய்ச் சாய்ந்து நின்று, தன் வாயின் பற்களுக்குள்ளே மூன்று விலாவெலும்புகளைக் கவ்விக் கொண்டிருந்தது; எழும்பி வெகு மாம்சத்தைத் தின்னென்று அதற்குச் சொல்லப்பட்டது".

கரடியானது சிங்கத்தைவிட பருமனுள்ளதாகவும், சுறுசுறுப்பு குறைந்ததாகவும் இருக்கிறதென்பது நமக்குத் தெரியும். அதைப் போலவே மேதிய – பெர்சிய இராஜ்யம் பாபிலோனிய (கல்தேய) இராஜ்யத்தைவிட விஸ்தீரணத்தில் அதிக பெரியதாயிருந்தது. என்றாலும் தன் நாட்டை விஸ்தரிப்பதில் அவசரப்படாமல் காரியங்களைச் செய்து வந்தது. மேதிய – பெர்சிய படையும் எண்ணிக்கையில் அதிகப் பெரியதாயிருந்தது. ஆனால் அப்படைகள் வெகு சாவதானமாகத் தான் செயல்பட்டன.

அக்கரடியானது ஒரு பக்கமாய்ச் சாய்ந்து நின்றது என்று கூறப்பட்டிருக்கிறது. மேதிய பெர்சிய இராஜ்யங்கள் கூட்டாயிருந்தாலும், காலப்போக்கில் பெர்சிய இராஜ்யம் பலமடைந்து மேதிய இராஜ்யத்தின் பலத்தைக் குறுகிப்போகப் பண்ணி தான் வலுவடைந்தது.

அக்கரடியானது தன் வாயின் பற்களுக்குள்ளே மூன்று விலாவெலும்புகளைக் கவ்விக் கொண்டிருந்தது என்று கூறப்பட்டிருக்கிறது. இதன் தாற்பரியம், மேதிய பெர்சிய அரசு அதனுடைய எல்லையோடு, லிதியா, பாபிலோன், எகிப்து முதலிய நாடுகளையும் ஜெயித்துப் பிடித்துத் தன் ஆதிக்கத்தில் வைத்துக் கொண்டது என்று சரித்திர ஆசிரியர்கள் கருதுகின்றனர்.

கடைசியாக இக்கரடியைப் பற்றி, "எழும்பி வெகு மாம்சத்தைத் தின்னென்று அதற்குச் சொல்லப்பட்டது" என்று வேதத்தில் கூறப்பட்டுள்ளது. இதற்கு விளக்கம் : மேதிய பெர்சிய அரசுக்கு பல நாடுகளை ஜெயிக்க வேண்டுமென்ற ஆசை. அதன் பலனாக கிரீஸ் நாடு வரைக்கும் நாடுகளை ஜெயித்துக் கொண்டு போனது என்று சரித்திரம் கூறுகிறது.

மேதிய–பெர்சிய இராஜ்யத்தைக் குறித்தும் அதின் வீழ்ச்சியைக் குறித்தும் தானியேலுக்கு இரண்டாவது ஒரு தரிசனம் கொடுக்கப் பட்டது. அதை தானியேல் 8: 2–7 வசனங்களில் காணலாம் :அதாவது:

2) "......ஏலாம் தேசத்திலுள்ள .......... ஊலாய் என்னும் ஆற்றங்கரையில் தானியேல் இருந்தார்."

3) ".......இரண்டு கொம்புகளுள்ள ஆட்டுக்கடா ஆற்றிற்கு முன்பாக நின்றது: அதின் இரண்டு கொம்புகளும் உயர்ந்த வைகளாயிருந்தது: ஆகிலும் அவைகளில் ஒன்று மற்றதைப் பார்க்கிலும் உயர்ந்திருந்தது; உயர்ந்த கொம்பு பிந்தி முளைத் தெழும்பிற்று.

ஊலாய் என்னும் ஆறு 150 மைல் நீளமுள்ளதும். தற்காலத்து டைகிரிஸ் என்ற நதியின் உபநதியுமாகும்.

"இரண்டு கொம்புகளுள்ள ஆட்டுக்கடா "மேதிய பெர்சிய ராஜ்யத்தைக் குறிக்கும். " இரண்டு கொம்புகளும் உயர்ந்தனவாயிருந் தனவென்பது: மேதிய இராஜ்யமும் பெரியது, பெர்சிய இராஜ்யமும் பெரியது என்பதாகும். "ஆகிலும் அவைகளில் ஒன்று மற்றதைப் பார்க் கிலும் உயர்ந்திருந்தது: உயர்ந்த கொம்பு பிந்தி முளைத்தெழும்பிற்று" என்பது: ஒரு இராஜ்யம் வலிமை மிக்கதாய் விஸ்தீரணமும் அதிகமானதாயிருந்தது, அது பிந்தி எழும்பிய இராஜ்யம். சரித்திர வாயிலாகப் பார்ப்போமானால் மேதிய இராஜ்யத்திற்குப் பின்னால் பெர்சிய இராஜ்யம் பிரபலமாகி, மேதிய இராஜ்யத்தை தன்னோடு கூட்டாய் இணைத்துக் கொண்டு அலெக்சாண்டர் அந்த இராஜ்யத் தை ஜெயிக்கும் வரை பெர்சிய இராஜ்யமாக விளங்கியது. மேதிய இராஜ்யம் கி.மு. 625–550 வரை. கி.மு.550ஆம் ஆண்டு இரண்டு இராஜ்யங்களும் ஒன்றாயின. பெர்சிய இராஜ்யம் கி.மு. 550–331 வரை மேதிய இராஜ்யத்தின் பகுதிகளையும் சேர்த்து அரசாண்டது.

4) "அந்த ஆட்டுக்கடா மேற்கும், வடக்கும், தெற்கும், பாய் கிறதைக் கண்டேன்; ஒரு மிருகமும் அதின் முன்னே நிற்கக்கூடா திருந்தது; அதின் கைக்குத் தப்புவிப்பாருமில்லை; அது தன் இஷ்டப் படியே செய்து வல்லமை கொண்டது"

ஆட்டுக்கடாவாக விவரிக்கப்பட்ட மேதிய–பெர்சிய இராஜ்யம் வலிமை கொண்டு மேற்கேயும், வடக்கேயும், தெற்கேயும் தன்னுடைய எல்லைகளை விஸ்தீரணப்படுத்தியது. இது காலக்கிரமத்தில் பெர்சிய இராஜ்யமானது.

5) ...''மேற்கேயிருந்து ஒரு வெள்ளாட்டுக்கடா நிலத்திலே கால் பாவாமல் தேசத்தின் மீதெங்கும் சென்றது; அந்த வெள்ளாட்டுக் கடாவின் கண்களுக்கு நடுவே விசேஷித்த கொம்பு ஒன்று இருந்தது''

மேற்கேயிருந்து வந்த வெள்ளாட்டுக் கடா கிரேக்க இராஜ்யம். அது நிலத்திலே கால் பாவாமல் தேசத்தின் மீதெங்கும் சென்றது என்பது அந்த இராஜ்யம் வெகு வெகு விரைவில் நாடுகளைப் பிடித்துப் பரவிக் கொண்டிருந்தது என்பது அர்த்தம்.அந்த வெள்ளாட்டுக்கடாவின் கண்களுக்கு நடுவே ஒரு விசேஷித்த கொம்பு இருந்தது என்பது அந்த கிரேக்க இராஜ்யத்தில் முதலாவது ஒரு பலவானான அரசன் எழும்பினான். (அலெக்சான்டர்)

6–7) ''வெள்ளாட்டுக் கடா ஆட்டுக்கடாவின் கிட்டச் சேர்ந்து.....அதை முட்டி அதின் இரண்டு கொம்புகளையும் முறித்துப் போட்டது.......வெள்ளாட்டுக் கடா அதை தரையிலே தள்ளி மிதித்துப் போட்டது''.

கிரேக்க மன்னன் (அலெக்சான்டர்) மேதிய–பெர்சிய இராஜ்யங்களை ஜெயித்து தன் காலடியில் கொண்டு வந்தான்.

இப்படியாக நேபுகாத்நேச்சார் கண்ட சிலையின் இரண்டாம் பாகமான இராஜ்யமும் தானியேலுக்குக் கிடைத்த முதலாம் தரிசனத்தின் இரண்டாம் மிருகமாகிய கரடியைப் பற்றிய விளக்கமும், தானியேலுக்குக் கிடைத்த இரண்டாம் தரிசனத்தில் ஆட்டுக் கடாவின் தாற்பரியமும் முடிந்தது.

## மூன்றாம் இராஜ்யம் – கிரேக்க இராஜ்யம் – தானி.2 : 32; 7 : 6 ; 8 : 8 ; 11 : 3–4.

### நேபுகாத்நேச்சாரின் கனவு : தானியேல் 2 : 32.

''அந்த சிலையின்..........வயிறும் அதின் தொடையும் வெண்கலமும்''

உலக சரித்திரத்தின் பிரகாரம் மேதிய–பெர்சிய அரசுகளுக்குப் பின் இஸ்ரவேல் ஜனங்களுடைய நாட்டோடு தொடர்பு கொண்ட அடுத்த இராஜ்யம் கிரேக்க ராஜ்யம் ஆகும். பழைய ஏற்பாட்டின் கடைசி புத்தகம் எழுதப்பட்டது கி.மு. 397ஆம் ஆண்டு. புதிய ஏற்பாடு எழுதப்பட்டது கி.பி. 60ஆம் ஆண்டு முதல் என்று காண்கிறோம். இந்த இடைப்பட்ட, தோராயமாக 400 ஆண்டு காலத்தில் யூத

சமுதாயத்தில் பெரிய மாறுதல்கள் ஏற்பட்டிருக்கிறது; அவைகளில் முக்கியமானது மொழி. பழைய ஏற்பாடு எழுதப்பட்டது எபிரேய மொழியில்: ஆனால் புதிய ஏற்பாடு எழுதப்பட்டதோ கிரேக்க மொழியில். ஆக இந்த 400 ஆண்டு காலத்தில் கிரேக்க கலாச்சாரம், பண்பாடு, மொழி முதலியவைகள் பலஸ்தீனா நாட்டை ஆக்கிரமித்து விட்டன. இதற்குக் காரணம் கிரேக்க சாம் ராஜ்யம் இப்பகுதியில் தன் ஆதிக்கத்தைச் செலுத்தியதே.

நேபுகாத்நேச்சார் கண்ட கனவிலே வந்த மூன்றாவது வயிறும் தொடையும் வெண்கலத்திலான சிலை. இது மூன்றாவதாக உலகத்தில் தோன்றியதாகிய கிரேக்க சாம்ராஜ்யம்.

மாசிடோனிய அரசனான பிலிப் கிரேக்க தீபகற்பத்தை ஜெயித்து ஒரே நாடாக ஆக்கினான். அவனுடைய மகன் அலெக்சான்டர் தன் இளம் வயதிலேயே, தன் தகப்பன் மரித்தவுடன் அரசனானான். கி.மு. 333ஆம் ஆண்டு சீரியாவில் இஸ்ஸூஸ் என்ற இடத்தில் நடந்த யுத்தத்தில் அலெக்சான்டர் பெர்சிய படைகளை வென்றான்; அது முதல் படு வேகமாக 12 ஆண்டுகளில் இந்தியா வரைக்கும் நாடுகளை ஜெயித்து வந்தான். சரித்திரத்தில் மகா அலெக்சான்டர் என்ற கௌரவ பட்டத்தையும் பெற்றான். சரித்திரத்தில் வேறு ஒரு அரசனுக்கும் "மகா" என்ற அடைமொழி பெயருக்கு முன் கொடுக்கப் படவில்லை.

அலெக்சான்டர் சீரியா நாட்டை ஜெயித்து தீரு சீதோன் நகரங்களையும் பிடித்த பின் எருசலேமுக்கு நேராக வந்தபோது ஒரு அரிய காரியம் நடந்தது. அதை இச்சந்தர்ப்பத்தில் நாம் அறிந்து கொள்வது அவசியம்.

தீரு, சீதோன் நகரங்கள் முழுமையாக அழிக்கப்பட்டன; ஆகவே எருசலேமுக்குச் சமீபமாக வருகிறான் என்று தெரிந்தவுடனே மக்கள் அதிக கிலேசப்பட்டனர். என்றாலும் இச்சந்தர்ப்பத்தில் ஆண்டவர் எருசலேமையும் தேவாலயத்தையும் பாதுகாப்பேன் என்று முன்னுரைத்திருக்கிறார் :–

**முன்னுரைப்பு : சகரியா 9 : 8 (கி.மு. 487)**

"சேனையானது புறப்படும்போதும், திரும்பி வரும்போதும், என் ஆலயம் காக்கும்படி அதைச் சுற்றிலும் பாளையம் போடுவேன்; இனி ஒடுக்குகிறவன் அவர்களிடத்தில் கடந்து வருவதில்லை; அதை என் கண்களினாலே பார்த்துக் கொண்டிருக்கிறேன்".

நிறைவேறுதல் :

இந்த வசனம் எந்த சந்தர்ப்பத்தில் கூறப்பட்டது என்பதை முதலில் நாம் பார்க்க சகரியா 9ஆம் அதிகாரம் முதலாம் வசனத்திலிருந்து வாசித்துப் பார்க்கக் கேட்டுக் கொள்கிறேன். அதிராக் தேசம், தமஸ்கு, ஆமாத், தீரு, சீதோன், அஸ்கலோன், அஸ்தோத் முதலிய தேசமும், நகரங்களும் குட்டிச் சுவராக்கப்படும் சந்தர்ப்பத்தில் மேற்கண்ட வசனம் எருசலேமைப் பற்றிக் கூறப்பட்டிருக்கிறது. அதாவது மகா அலெக்சான்டர் இந்த நகரங்களையெல்லாம் அழிக்கும்போது எருசலேமும், தேவாலயமும் பாதுகாக்கப்படும் என்று ஆண்டவர் சகரியா தீர்க்கதரிசியின் மூலம் கூறியிருக்கிறார். இது எப்படி நிறைவேறியதென்று பார்க்கலாம் :-

அலெக்சான்டரின் படை எருசலேமை நோக்கி வருகிறது என்ற அச்சமயமிருந்த பிரதான ஆசாரியன் யதுவா (Jaddua) கேள்விப்பட்டவுடன் அதிகமாகப் பயந்து தன்னுடைய மக்களையும், ஆசாரியரையும் அழைத்து ஆண்டவருக்குப் பலி செலுத்தி ஆண்டவர் தங்களைப் பாதுகாக்கும்படி ஜெபிக்கும்படி கேட்டுக் கொண்டான். பின்னர் அலெக்சான்டருடைய படை நகரை நெருங்கி வருகிறது என்பதை அறிந்தவுடன் தான் பிரதான ஆசாரியனுடைய உடையை அணிந்து கொண்டு மற்ற ஆசாரியர்களைத் தங்கள் ஆசாரிய உடைகளை அணிந்து கொண்டு தன்னைப்பின்பற்றி வரும்படி உத்தரவிட்டான். ஜாடுவா நீலமும் தங்க நிறமான உடை உடுத்தி மார்பில் பிரதான ஆசாரியனுடைய மார்ப் பதக்கத்தையும் அணிந்து, தலையில் யெகோவாவின் நாமம் பதித்த பொற் தலைப்பாகையையும் அணிந்திருந்தான்.

இவர்களைப் பார்த்ததும் அலெக்சான்டர் தனிமையாக நேரே வந்து பிரதான ஆசாரியனின் பாதத்தண்டை நெடுஞ்சாங்கிடையாய் விழுந்து பணிந்து கொண்டான். வந்த யூதர் யாவரும் ஒரே குரலில் அலெக்சான்டரை வரவேற்றனர். அலெக்சான்டருடைய சேனாபதிகளும் படை வீரரும் அலெக்சான்டருக்கு பைத்தியம் பிடித்து விட்டதோ என்று ஏங்கி நின்றனர்.

அப்பொழுது அலெக்சான்டர் தன் சேனாதிபதிகளைப் பார்த்து, நீங்கள் அதிசயிக்க வேண்டாம்; நான் மாசிடோனியாவிலிருந்தபொழுது எப்படி ஆசியா முழுவதையும் ஜெயிக்க முடியும் என்று எண்ணிக் கொண்டிருக்கும் போது என் சொப்பனத்தில் இதே மனிதனைக் கண்டேன். இதே உடையுடன் அம்மனிதன் நீ தாமதிக்காமல்

உடனே புறப்பட்டுப் போய் பெர்சியரை ஜெயி என்று கூறினான் என்றான். அதேவிதமாக ஜெயம் பெற்றேன் என்றான்.

பிரதான ஆசாரியன் அலெக்சான்டரை தேவாலயத்துக்கு அழைத்துக் கொண்டு போய் தங்களுடைய முறைமைப்படி யெகோவா வுக்கு பலியிடச் செய்தான். பிரதான ஆசாரியன் தானியேலின் புத்த கத்திலிருந்து கிரேக்கர் எப்படி பெர்சியரை ஜெயிப்பார்கள் என்ற முன்னறிவிப்பைக் காட்டியபொழுது அலெக்சான்டர் இது தன்னைப் பற்றிக் கூறப்பட்ட முன்னுரைப்பு என்று எண்ணிக் கொண்டான். உடனே அலெக்சான்டர் யூதருக்கு என்ன வேண்டுமோ அதைத் தரு வதாகக் கூறினான். அதற்குப் பிரதான ஆசாரியன், தாங்கள் தங்க ளுடைய யெகோவாவின் கட்டளைகளைக் கடைப்பிடிக்கவும், ஒவ் வொரு ஏழாம் ஆண்டும் வரி செலுத்துவதிலிருந்து விலக்கப்பட வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டான்; அந்த வேண்டுதல் அலெக் சான்டரால் அங்கீகரிக்கப்பட்டது.

இப்படியாக கி.மு. 487ஆம் ஆண்டு சகரியா மூலமாக ஆண்டவர் அருளிய முன்னுரைப்பு கி.மு. 333 ஆம் ஆண்டு நிறைவேறி, எருசலேம் நகரும் தேவாலயமும் அச்சமயம் சேத மடையாமல் காக்கப்பட்டன.

## மூன்றாம் இராஜ்யம்

### தானியேலுக்குக் கிடைத்த தரிசனம். தானி.7 :6

"அதற்குப் பின்பு, சிவிங்கியைப்போலிருக்கிற வேறொரு மிருகத்தைக் கண்டேன்; அதின் முதுகின் மேல் பட்சியின் செட்டைகள் நாலு இருந்தது; அந்த மிருகத்துக்கு நாலு தலைகளும் உண்டாயிருந் தது; அதற்கு ஆளுகை அளிக்கப்பட்டது"

இந்த மூன்றாம் இராஜ்யம் மேதிய – பெர்சிய இராஜ்யத்துக்குப் பின்னால் உருவான கிரேக்க இராஜ்யம். இது சிவிங்கியின் வேகமு டையதாய் 12 ஆண்டுகளுக்குள் வட இந்தியா மட்டுமுள்ள எல்லா நாடுகளையும் மகா அலெக்சான்டரின் தலைமையில் ஜெயித்தது. இந்தியா வந்தபொழுது அலெக்சான்டரின் படை வீரர் களைத்து சலித் துப் போய்விட்டபடியால் அலெக்சான்டர் திரும்ப வேண்டியதாயிற்று.

அம்மிருகத்துக்கு நான்கு செட்டைகளிருந்தன என்பது நான்கு செட்டைகளால் அதிவேகமாக பறக்கக் கூடியது போல வெகு

வேகமாக நாடுகளை ஜெயித்துப் போனது எனலாம். அம்மிருகத்துக்கு நான்கு தலைகளிருந்தனவென்றும் காண்கிறோம். இதன் அர்த்தம் இந்த இராஜ்யம் நாலு பாகமாகப் பிரிந்து போகும் என்பதே. கிரேக்க இராஜ்யம் நான்காகப் பிரிந்து போகும் என்பதை தானியேல் 8:8ஆம் வசனத்திலும், தானியேல் 11:3–4 வசனங்களிலும் கூறப்பட்டிருக்கிறபடியால் இச்சம்பவம் முக்கியத்தும் வாய்ந்ததாகத் தெரிகிறது.

தானியேல் 8 : 8 "அப்பொழுது வெள்ளாட்டுக் கடா மிகுதியும் வல்லமை கொண்டது; அது பலங்கொண்டிருக்கையில், அந்த பெரிய கொம்பு முறிந்துபோயிற்று; அதற்குப் பதிலாக ஆகாயத்தின் நாலு திசைகளுக்கும் எதிராய் விசேஷித்த நாலு கொம்புகள் முளைத்தெழும்பினது"

இந்த வெள்ளாட்டுக் கடாவின் கொம்பு கிரேக்க மன்னன் அலெக்சான்டர் என்றும் பார்த்தோம். கிரேக்க இராஜ்யம் தன் உன்னத நிலைமையிலிருக்கும் போது அதின் அரசனாகிய மகா அலெக்சான்டர் பாபிலோனில் தனது 33ஆம் வயதில் மரணமடைந்தான். அவன் மரணமடைந்தவுடன் அவனுடைய பெரிய சாம்ராஜ்யத்தை அவனுடைய நான்கு தளபதிகளும் தங்களுக்குள் பிரித்துக் கொண்டனர்.

**தானியேல் 11 : 3 – 4 (கி.மு. 534)**

3) "ஆனாலும் பராக்கிரமமுள்ள ஒரு ராஜா எழும்பி, பிரபலமாய் ஆண்டு, தனக்கு இஷ்டமானபடி செய்வான்.

4) அவன் எழும்பின பின்பு, அவனுடைய இராஜ்யம் உடைந்து போய், வானத்தின் நாலு திசைகளிலும் பகுக்கப்படும்; ஆனாலும் அது அவனுடைய சந்ததியாருக்கல்ல, அவன் செய்த ஆளுகையின்படியுமல்ல; அவனுடைய இராஜ்யம் பிடுங்கப்பட்டு, அவனுடையவர்களல்லாத வேறே பேர்களிடமாய்த் தாண்டிப்போம்.

இத்தரிசனத்தில் தானியேலுக்கு மகா அலெக்சான்டரைப் பற்றி (கிரேக்க இராஜ்யத்தைப் பற்றி) இன்னும் கொஞ்சம் தெளிவாய்க் கூறப்பட்டிருப்பதைக் காணலாம்.

அதாவது அலெக்சான்டர் மரித்த பின் அவனுடைய இராஜ்யம் நான்கு பாகமாகப் பிரிக்கப்படும். என்றாலும் அது அவனுடைய சந்ததியாருக்குப் போய்ச் சேராது. என்ன நடந்ததென்றால் இத்தளபதிகள் அலெக்சான்டரின் தாயார், மனைவி, மகன், ஒன்றுவிட்ட

சகோதரன் முதலிய பட்டத்து சுதந்திரவாளிகளையெல்லாம் கொன்று விட்டு தாங்கள் தங்களுக்குள்ளே ஜெயித்த நாடுகளையெல்லாம் கீழ்கண்டவாறு பகிர்ந்து கொண்டனர்.

1) தாலமி (Ptolemy) எகிப்து, பலஸ்தீனா, அரேபியா பெட்ரியா, சீரியாவின் ஒரு பகுதி.

2) செலூக்கஸ் (Seleucus) சீரியாவின் ஒரு பகுதி, பாபிலோனி யாவும் அதற்குக் கிழக்கே இந்தியா மட்டுமுள்ள நாடுகள்.

3) லைசிமாக்கஸ் (Lysimachus) திரேஸ், (மாசிடோனியாவின் கிழக்குப் பகுதி), பித்தினியா (துருக்கியின் மேற்குப் பாகம்)

4) கசான்டர் (Cassander) மாசிடோனியாவின் பிற பகுதிகளும், கிரேக்கு தேசமும்.

மேலே குறிப்பிட்ட நால்வரில் ஒருவராகிலும் அலெக்சான்டரின் குடும்பத்தைச் சேர்ந்தவர்களல்ல. ஆகவே தானியேல் 11:4 இன் பின் பகுதி எவ்வளவு திட்டவட்டமாக எழுத்துக்கு எழுத்து 200 ஆண்டு களுக்குப் பின் நிறைவேறியிருக்கிறது என்பதைக் கண்ணோக்கும் போது ஆண்டவருடைய முன்னறிவிப்புக்கள் எவ்வளவு உண்மையான வைகள் என்பது புலப்படுகிறது.

இந்த நான்கு தளபதிகளின் கீழ் செயல்பட்ட நான்கு இராஜ்யங் களில் எகிப்தை அரசாண்ட தாலமி குடும்பமும், சீரியாவை அர சாண்ட செலூக்கஸின் செலூஸிட் குடும்பமும் பலஸ்தீனா நாட்டைத் தங்கள் ஆட்சிக்குள் வைத்துக் கொள்ள வேண்டும் என்று பிரயாசப் பட்டனர். இதைப் பற்றி பின்னால் ஒரு அத்தியாயத்தில் கவனிக் கலாம்.

இந்த இரண்டு குடும்பத்தாரும் கிரேக்க பண்பாடு, கலாச் சாரம், இறை வணக்கம், மொழி முதலியவற்றைத் தங்கள் பகுதிகளில் புகுத்த பெரும் நடவடிக்கைகள் எடுத்தனர். சீரியாவைக் கைப்பற்றிய செலுக்கஸின் சந்ததியில் வந்த அண்டியோக்கஸ் எபிபெனஸ் (Antiochus Epiphanus) என்பவனைப் பற்றி தானியேல் 8ஆம் அதிகாரம் 8 முதல் 14ஆம் வசனம் வரை ஒரு முன்னறிவிப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. இம் முன்னறிவிப்பின் அர்த்தம் தானியேல் 8 : 23–26ஆம் வசனங்களில் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதைக் கொஞ்சம் கவனிப்போம் :–

**தானியேல் 8 : 8 – 14**

8) "........அதற்குப் பதிலாக ஆகாயத்தின் நாலு திசைகளுக்கும் எதிராய் விசேஷித்த நாலு கொம்புகள் முளைத்தெழும்பினது".

9) "அவைகளில் ஒன்றிலிருந்து சின்னதான ஒரு கொம்பு புறப்பட்டு, தெற்குக்கும், கிழக்குக்கும் எதிராகவும், சிங்காரமான தேசத்துக்கு நேராகவும் மிகவும் பெரிதாயிற்று".

10) "அது வானத்தின் சேனை பரியந்தம் வளர்ந்து, அதின் சேனையாகிய நட்சத்திரங்களில் சிலவற்றைப் பூமியிலே விழப்பண்ணி, அவைகளை மிதித்தது".

11) "அது சேனையினுடைய அதிபதி பரியந்தமும் தன்னை உயர்த்தி, அவரிடத்திலிருந்து அன்றாட பலியை நீக்கிற்று; அவருடைய பரிசுத்த ஸ்தானம் தள்ளுண்டது".

12) "பாதகத்தினிமித்தம் அன்றாட பலியோடுங்கூடச் சேனையும் அதற்கு ஒப்புக்கொடுக்கப்பட்டது; அது சத்தியத்தை தரையிலே தள்ளிற்று; அது கிரியை செய்து அநுகூலமடைந்தது".

13) "....... அன்றாட பலியைக் குறித்தும், பாழ்க்கடிப்பை உண்டாக்கும் பாதகத்தைக் குறித்தும், பரிசுத்த ஸ்தலமும் சேனையும் மிதிபட ஒப்புக்கொடுக்கப்படுவதைக் குறித்தும், உண்டான தரிசனம் எதுவரைக்கும் இருக்கும் என்று கேட்டான்".

14) "அவன் என்னை நோக்கி: இரண்டாயிரத்து முந்நூறு இராப்பகல் செல்லும் வரைக்கும் இருக்கும்; பின்பு பரிசுத்த ஸ்தலம் சுத்திகரிக்கப்படும் என்றான்".

இத்தரிசனத்திற்கு விளக்கம், தானியேல் 8 : 23 –26ஆம் வசனங்களில் கூறப்பட்டிருக்கிறது. அதாவது: அலெக்சான்டருடைய இராஜ்யம் நான்காகப் பிரிந்து போன பின்பு அவைகளில் ஒன்றிலிருந்து ஒரு அரசன் எழும்புவான்; அவன் வலிமை பெற்று யூதருக்கு விரோதமாய் எழும்பி அநேகரைக் கொன்றும் போடுவான்; யூத தேவாலயத்திலே ஜீயஸ் என்ற கிரேக்க தெய்வத்தின் சிலையை வைத்து தேவாலயத்தைத் தீட்டுப்படுத்துவான்; 2300 இராப்பகலுக்குப் பின் தேவாலயம் சுத்திகரிக்கப்படும்.

செலூக்கஸ்க்குப்பின் ஐந்து அரசர்கள் எழும்பினார்கள். ஆறாம் அரசனாக அந்தியோக்கஸ் எபிபெனஸ் என்ற அரசன் கி.மு. 175 முதல் கி.மு. 164 வரை அரசாண்டான். அவன் பணம்

திரட்டுவதற்காக முதலாவது எருசலேம் தேவாலயத்தைக் கொள்ளையடித்தான்; மகா பரிசுத்த ஸ்தலத்தில் கிரேக்க கடவுளின் (ஜீயஸ்) சிலையை நிறுவினான்; கிடைத்த யூத வேதபுத்தகங்களையெல்லாம் தீக்கு இரையாக்கினான்: விருத்தசேதனம் செய்யக்கூடாது என்று தடுத்தான்; ஓய்வு நாள் ஆசரிப்பை நிறுத்தினான்; இவைகளை மீறியவர்களையெல்லாம் ஈவு இரக்கமின்றி கொலை செய்தான். யூதருக்குத் தீட்டான பன்றியை தேவாலயத்தில் பலியிட்டு தேவாலயத்தை அவமதித்தான்.

10 ஆம் வசனத்தில் வானத்தின் சேனையாகிய நட்சத்திரங்களில் சிலவற்றை பூமியிலே விழப்பண்ணினான் என்பதற்கு கடவுளின் சேனையாகிய (நட்சத்திரங்களாக விளங்கும்) யூத ஜனங்கள் என்று பொருள்படும். அவர்களைப் படுகொலை செய்து பூமியிலே விழப்பண்ணினான் என்று அர்த்தம். தேவாலயம் பரிசுத்த குலைச்சலாக்கப்பட்டதற்கும் பரிசுத்த ஸ்தலம் சுத்திகரிக்கப்படுவதற்கும் இடைப்பட்ட காலம் 2300 இராப் பகல் செல்லும் என்று கூறப்பட்டுள்ளது. (தானி. 8 : 14). ஒவ்வொரு நாளும் காலையிலும், மாலையிலும் தவறாமல் பலி செலுத்த வேண்டும் என்பது ஆண்டவரின் கட்டளை (யாத்திராகமம் 29:39). ஆகவே 2300 இராப்பகல் என்பது 1150 நாட்களைக் குறிக்கும் என்று வேத ஆராய்ச்சியாளர்களும் தீர்க்கதரிசன வல்லுனர்களும் கருதுகின்றனர். அப்படியாயின் தேவாலயம் எப்பொழுது பரிசுத்த குலைச்சலாக்கப்பட்டது என்பது தெரியவேண்டும். அந்தியோக்கஸ் எபிபெனஸ் கி.மு. 168 டிசம்பர் 25 ஆம் நாள் விக்கிரகத்துக்கு ஒரு மேடையை கட்டினான் என்று சரித்திராசிரியர்கள் கூறுகின்றனர். ஆசாரியன் மத்தத்தியாஸின் மகன் ஜுடாஸ் மக்கபியாஸ் என்பவன் சீரியரிடமிருந்து எருசலேமை விடுவித்து தேவாலயத்தை சுத்திகரித்தது கி.மு. 165 டிசம்பர் 25ஆம் நான் என்று சரித்திராசிரியர்கள் கணித்திருக்கின்றனர். இடைப்பட்ட காலம் 3 ஆண்டுகள்–

| | | |
|---|---|---|
| அல்லது அக்காலக் கணக்குப்படி ஆண்டுக்கு 360 நாட்களென்றால் | | 1080 நாட்கள். |
| ஆனால் வேதாகம கணக்குப்படி பரிசுத்தக் குலைச்சலாக்கப்பட்டது | ........ | 1150 நாட்கள். |
| வித்தியாசம் | ........ | 70 நாட்கள். |

இதன் பிரகாரம் பார்க்கும்போது ஆண்டியோக்கஸ் எபிபெனஸ் கி.மு. 168 டிசம்பர் மாதம் அல்ல, அவ்வருடம் அக்டோபர் மாதம் 15ஆம்

தேதியே தேவாலயத்தில் பல அசுசியான காரியங்களைச் செய்து அதைத் தீட்டுப்படுத்தினான் என்று அனுமானிக்கலாம்.

அந்தியோக்கஸ் எபிபெனஸ் "அவன் கையினாலல்ல வேறு விதமாய் முறித்துப் போடப்படுவான்"(தானியேல் 8:25 இன் கடைசிப்பாகம்) என்று பார்க்கிறோம். அவன் முதிர்வயதாகி சாதாரண மரணம் அடைந்ததாகத் தெரியவில்லை. அலெக்சான்டரைப் போல யுத்தத்திற்குப் போய் திரும்பி வந்து சடுதியில் மரணமடைந்தான் என்று சரித்திராசிரியர்கள் கூறுகின்றனர்.

அந்தியோகஸ் எபிபெனஸுக்குப் பின் 6 அரசர்கள் செலுக்கஸின் நாட்டை ஆண்டனர். அதன்பின் அந்த இராஜ்ம் கி.மு. 130 இல் ஒரு முடிவுக்கு வந்து நேபுகாத்நேச்சாரின் கனவில் வந்த நான்காம் இராஜ்யம் ஆரம்பமானது.

## நான்காம் இராஜ்யம் – ரோம இராஜ்யம் – தானியேல் 2 : 33 ;7: 7, 8.

### நேபுகாத்நேச்சாரின் கனவு – தானியேல் 2 : 33.

"அதின் (சிலையின்) கால்கள் இரும்பும், அதின் பாதங்கள் பாதி இரும்பும் பாதி களிமண்ணுமாயிருந்தது".

இவ்வசனத்தின் பொருள் தானியேல் 2:40–43ஆம் வசனங்களில் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதாவது;

40) நாலாவது, இராஜ்யம் இரும்பைப் போல உரமாயிருக்கும்; இரும்பு எல்லாவற்றையும் எப்படி நொறுக்கிச் சின்னபின்னமாக்குகிறதோ, அப்படியே இது நொறுக்கிப் போடுகிற இரும்பைப்போல அவைகளையெல்லாம் நொறுக்கித் தகர்த்துப்போடும்.

41–42) பாதங்களும், கால் விரல்களும் பாதி குயவனின் களிமண்ணும், பாதி இரும்புமாயிருந்தது என்னவென்றால் அந்த இராஜ்யம் ஒரு பங்கு உரமும் ஒரு பங்கு நெரிசலுமாயிருக்கும்; இரும்பினுடைய உறுதியிலே கொஞ்சம் அதிலே இருக்கும்.

43) இரும்பு களிமண்ணோடே கலவாதது போல அந்த இராஜ்ய மக்கள் மற்றவர்களோடே சம்மந்தம் கலப்பார்கள், என்றாலும் ஒருவரோடு ஒருவர் ஒட்டிக் கொள்ளாதிருப்பார்கள்.

கிரேக்க இராஜ்யத்திற்குப் பின் பலஸ்தீன நாட்டோடு சம்மந்தப் பட்ட அடுத்த இராஜ்யம் ரோம இராஜ்யம். இந்த இராஜ்யம் ஆரம்பத் தில் இரும்பைப் போல உறுதியாக இருந்தாலும் வர வர அது பத்து விரல்களைப் போல பிளவுபட்டு இரும்பும் களிமண்ணும் கலந்த பாதங் களும் விரல்களும் போல நெரிசலான இராஜ்யமாயிருக்கும்.

இதைப் பற்றி தானியேலுக்குக் கிடைத்த தரிசனம் என்ன என்று பார்ப்போம்:–

## நான்காம் இராஜ்யம்

### தானியேலுக்குக் கிடைத்த தரிசனம். தானி. 7 : 7,8

7) "அதற்குப் பின்பு, இராத்தரிசனங்களில் நாலாம் மிருகத் தைக் கண்டேன்; அது கெடியும் பயங்கரமும் மகா பலத்ததுமாயிருந் தது; அதற்குப் பெரிய இருப்புப் பற்கள் இருந்தது; அது நொறுக்கிப் பட்சித்து, மீதியானதைத் தன் கால்களால் மிதித்துப் போட்டது; அது தனக்கு முன்னிருந்த எல்லா மிருகங்களைப் பார்க்கிலும் வேற்றுரு வமாயிருந்தது; அதற்குப் பத்துக் கொம்புகள் இருந்தது".

8) "அந்தக் கொம்புகளை நான் கவனித்திருக்கையில், இதோ, அவைகளுக்கு இடையிலே வேறொரு சின்ன கொம்பு எழும்பிற்று; அதற்கு முன்பாக முந்தின கொம்புகளில் மூன்று பிடுங்கப்பட்டது. இதோ, அந்தக் கொம்பிலே மனுஷ கண்களுக்கு ஒப்பான கண்களும் பெருமையானவைகளைப் பேசும் வாயும் இருந்தது.

11) "........அந்தக் கொம்பு பெருமையான பேச்சுக்களைப் பேசினதினிமித்தம் அந்த மிருகம் கொலை செய்யப்பட்டது; அதின் உடல் அழிக்கப்பட்டு, எரிகிற அக்கினிக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டது".

இந்த நாலாம் மிருகத்தைப் பற்றிய தரிசனத்திற்கு தானி யேலுக்கு விளக்கம் கொடுக்கப்பட்டது; அதை தானியேல் 7ஆம் அதிகாரம் 23 முதல் 25ஆம் வசனங்களில் காணலாம். இவைகளை உலக சரித்திரத்தில் எப்படி நிறைவேறியது அல்லது நிறைவேறிக் கொண்டிருக்கின்றனவென்று பார்க்கலாம்.

கிரேக்க அரசுக்குப் பின் பலஸ்தீனா நாட்டோடு சம்மந்தப்பட்ட அடுத்த அரசு ரோம அரசு. கி.மு. 753 முதல் கி.மு. 509ஆம் ஆண்டு வரை சிற்றரசர்களால் சிறிய இராஜ்யமாக ரோம அரசு ஒரு குறுகிய

பகுதியில் செயல்பட்டு வந்தது. அதன் பின் சிறிது சிறிதாக வலுவடைந்து கி.மு. 146ஆம் ஆண்டு அலெக்சான்டரின் இராஜ் யத்தின் மாசிடோனிய பகுதியைக் கைப்பற்றியது. பின்னர் கி.மு. 64 ஆம் ஆண்டு அலெக்சான்டரின் சேனாதிபதி செலூக்கஸின் சந்ததி யார் ஆண்டு வந்த பகுதிகளையெல்லாம் கைப்பற்றியது. இதில் பலஸ் தீனா பகுதியும் அடங்கும். அதிலிருந்து கொஞ்சங் கொஞ்சமாய் வலு வடைந்து கி.பி. 565ஆம் ஆண்டு வரை மத்தியதரைக் கடலைச் சுற்றிய பிரதேசங்களையும், ஐரோப்பா கண்டத்தில் பெரும் பகுதி யையும் தன் இருப்புக் கரத்தால் ஆண்டு வந்தது.

ரோம இராயன்கள் கொடுங்கோல் மன்னர்களாகவும், ரோம வீரர்கள் ஈவு இரக்கமில்லாத மனிதர்களாகவும் இருந்தனர். ரோம இராயன்கள் தங்களை கடவுளாக வணங்க வேண்டும் என்று ஆணை பிறப்பித்தன் விளைவாக யூதர் அதற்கு இணங்காதபடியால் யூதருக்கும் ரோமருக்கும் எப்பொழுதும் கடும் போராட்டம் நடந்து கொண்டேயிருந்தது. உபாகமம் 28ஆம் அதிகாரம் 48–51ஆம் வசனங்கள் ரோம அரசர்களின் கொடூர அரசாட்சியை முன்னறி வித்து எழுதப்பட்டவை என்று திட்டவட்டமாக நம்பலாம். கி.மு. 27ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த காயஸ் ஜூலியஸ் சீசர் ஆக்டேவியனஸ் என்ற அரசன் அகஸ்டஸ் (Gaius Julius Ceasar Octavianus - title - "AUGUSTUS") என்ற பட்டத்தோடு அரியணையேறினான். அவனுடைய காலத்தில் தான் வரிவிதிப்பு பலமாயிருந்தது. அதற் காகக் குடிமதிப்பு ஆணை பிறப்பிக்கப்பட்டது. லூக்கா 2:1 "அந் நாட்களில் உலகமெங்கும் குடிமதிப்பு எழுதப்படவேண்டுமென்று அகஸ்துராயனால் கட்டளை பிறந்தது" அந்தப்படி யோசேப்பும் மரி யாளும் தங்கள் சொந்த ஊரான பெத்லகேமுக்குப் போன பொழுது நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து பிறந்தார் என்று காண்கிறோம்.

இந்த ரோம இராஜ்யத்தைப் பற்றி நாம் பார்க்கும்பொழுது, அது நேபுகாத்நேச்சார் கனவில் வந்த சிலையில் முதலாவது இரண்டு கால்களைப் போல் இரண்டாகப் பிரிந்து, பின்னர் கால்களில் பத்து விரல்களைப் போல் பத்துப் பாகங்களாகப் பிரிந்திருக்கும் என்று காண்கிறோம்.

உலக சரித்திர வாயிலாகப் பார்க்கும்பொழுது, கான்ஸ்டன் டைன் என்ற ரோம ராயனின் காலத்தில் (கி.பி. 394ஆம் ஆண்டு) ரோம இராஜ்யம் இரண்டாகப் பிரிக்கப்பட்டு, மேற்குப் பகுதிக்கு ரோ மாபுரி தலை நகராகவும், கிழக்குப் பகுதிக்கு பைசான்டியம் என்ற

நகர், கான்ஸ்டான்டிநோபிள் என்று மறு பெயரிடப்பட்டு, தலை நகராகவும் ஆக்கப்பட்டது. கி.பி. 1453 ஆம் ஆண்டு ஒட்டமான் துருக்கிய முஸ்லிம் மன்னர்கள் கான்டான்டிநோப்பிள் நகரைப் பிடித்த பொழுது அதற்கு இஸ்டான்புல் (Istanbul) என்று மறுபெயரிட்டனர்.

ரோம இராஜ்யம் கி.பி. 565ஆம் ஆண்டு போல் பலம் குன்றி சுயேச்சையான பல நாடுகளாகப் பிரிந்து போனது. பாதமும் விரல் களும் இரும்பும் களிமண்ணும் கலந்திருந்ததைப் போல பிரிக்கப்பட்டுப் போன இராஜ்யம் உறுதியற்றவைகளாக உலக சரித்திரத்தில் கடைசி காலம் மட்டும் இருக்கும்.

தானியேலின் தரிசனத்தில், நான்காம் மிருகம் பத்துக் கொம்பு களுள்ளதாய் இருந்தது; அவைகளுக்கு இடையிலே ஒரு சின்ன கொம்பு எழும்பிற்று; அதற்கு முன்பாக முந்தின கொம்புகளில் மூன்று பிடுங்கப்பட்டன. இந்த பத்துக் கொம்புகளும் பத்து இராஜ்யங்களைக் குறிக்கும்.

இதுவரைக்கும் கடந்தகால உலக சரித்திரத்தைப் பற்றிய முன்னறிவிப்புகள் நேபுகாத்நேச்சாருக்கு சிலை வடிவிலும், தானி யேலுக்கு தரிசனத்தில் நாலு மிருகங்களாகவும் வெளிப்படுத்தப் பட்டனவென்று பார்த்தோம். இந்த முன்னறிவிப்புகள், இரண்டின் பின்பகுதிகளும் இறுதி காலத்தில் நடக்கப் போகும் காரியங்களைக் குறித்தவைகள். அதாவது –:

நேபுகாத்நேச்சானின் கனவில் (தானியேல் 2 :34, 35) " நீர் பார்த்துக்கொண்டிருக்கும்போதே, கைகளால் பெயர்க்கப்படாத ஒரு கல் பெயர்ந்து உருண்டு வந்தது; அது அந்தச் சிலையை இரும்பும் களிமண்ணுமாகிய அதின் பாதங்களில் மோதி, அவைகளை நொ றுக்கிப் போட்டது.

35) "அப்பொழுது அந்த இரும்பும் களிமண்ணும், வெண்கல மும், வெள்ளியும், பொன்னும் ஏகமாய் நொறுங்குண்டு, கோடை காலத்தில் போரடிக்கிற களத்திலிருந்து பறந்து போகிற பதரைப் போ லாயிற்று; அவைகளுக்கு ஒரு இடமும் கிடையாதபடி காற்று அவை களை அடித்துக் கொண்டு போயிற்று; சிலையை மோதின கல்லோ வென்றால், ஒரு பெரிய பர்வதமாகி பூமியையெல்லாம் நிரப்பிற்று. "இதற்கு விளக்கம் தானியேல் 2:44 ஆம் வசனத்தில் கூறப்பட்டிருக் கிறது. அதாவது:–

44) "அந்த ராஜாக்களின் நாட்களிலே பரலோகத்தின் தேவன்

என்றென்றைக்கும் அழியாத ஒரு இராஜ்யத்தை எழும்பப் பண்ணுவார்; அந்த இராஜ்யம் வேறே ஜனத்துக்கு விடப்படுவதில்லை; ஒரு கல் கையால் பெயர்க்கப்படாமல் மலையிலிருந்து பெயர்ந்து உருண்டு வந்து, இரும்பையும், வெண்கலத்தையும், களிமண்ணையும், வெள்ளியையும், பொன்னையும், நொறுக்கினதை நீர் கண்டீரே, அப்படியே அது அந்த இராஜ்யங்களையெல்லாம் நொறுக்கி, நிர்மூலமாக்கி, தானோ என்றென்றைக்கும் நிற்கும்.

கைகளால் பெயர்க்கப்படாத கல் இயேசு கிறிஸ்துவைக் குறிக்கும். இந்த நான்கு இராஜ்யங்களின் முடிவு காலத்தில் புறஜாதிகளின் இராஜ்யம் அழிக்கப்பட்டு இயேசு கிறிஸ்துவின் இராஜ்யம் என்றென்றைக்கும் உலகம் முழுவதும் பரவியிருக்கும்.

தானியேலுக்குக் கிடைத்த தரிசனத்திலே நாலாவது இராஜ்யத்தின் முடிவிலே நடக்கப் போவதைப் பற்றிக் கீழ்க்கண்டவாறு வெளிப்படுத்தப்பட்டிருப்பதைக் காணலாம் :– தானியேல் 7: 24–27.

24) "அந்தப் பத்துகொம்புகள் என்னவென்றால், அந்த இராஜ்யத்திலே எழும்பும் பத்து ராஜாக்களாம்; அவர்களுக்குப் பின்பு வேறொருவன் எழும்புவான்; அவன் முந்தினவர்களைப் பார்க்கிலும் வேறாயிருந்து, மூன்று ராஜாக்களை தாழ்த்திப் போட்டு,

25) " உன்னதமானவருக்கு விரோதமாக வார்த்தைகளைப் பேசி, உன்னதமானவருடைய பரிசுத்தவான்களை ஒடுக்கி, காலங்களையும், பிரமாணங்களையும் மாற்ற நினைப்பான்; அவர்கள் ஒரு காலமும், காலங்களும், அரைக்காலமும் செல்லுமட்டும் அவன் கையில் ஒப்புக்கொடுக்கப்படுவார்கள்.

26) "...... முடிவுபரியந்தம் அவனை சங்கரிக்கும்படியாகவும் அழிக்கும்படியாகவும் அவனுடைய ஆளுகையை நீக்கிப்போடுவார்கள்.

27) "வானத்தின் கீழெங்குமுள்ள ராஜ்யங்களின் ராஜரீகமும் ஆளுகையும் மகத்துவமும் உன்னதமானவருடைய பரிசுத்தவான்களாகிய ஜனங்களுக்குக் கொடுக்கப்படும்; அவருடைய ராஜ்யம் நித்திய ராஜ்யம்; சகல கர்த்தத்துவங்களும் அவரைச் சேவித்து, அவருக்குக் கீழ்ப்பட்டிருக்கும்".

இப்பகுதியிலும், தானியேலுக்கு வெளிப்படுத்தப்பட்ட தரிசனத்திலே இந்த நான்கு இராஜ்யங்களின் முடிவிலே இயேசு-

கிறிஸ்துவின் இராஜ்யம் ஸ்தாபிக்கப்பட்டு அது சதா காலமும் இருக்கும் என்று வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது.

இப்பகுதியில் பத்து இராஜ்யங்களுக்குள் எழும்பும் ஒரு சின்ன கொம்பைப் பற்றிக் கூறப்பட்டிருக்கிறதைப் பார்க்கிறோம். இதைப் பற்றி வெளிப்படுத்தின விசேஷம் 13,17 ஆம் அதிகாரங்களில் கூறப்பட்டிருக்கிறது.

இப்படியாக நேபுகாத்நேச்சாருக்கும், தானியேலுக்கும் உலக இராஜ்யங்களைப் பற்றி வெளிப்படுத்தப்பட்டவைகளில் முதல் மூன்று இராஜ்யங்களின் சரித்திரங்களும் முழுவதும் நிறைவேறிவிட்டன. நான்காவது இராஜ்யமான ரோம இராஜ்யத்தின் சரித்திரத்தில் முதல் பகுதியும் நிறைவேறிவிட்டது. இரண்டாம் பகுதியான தானியேல் 2:35 ஆம் வசனமும் தானியேல் 7 ஆம் அதிகாரம் 24–27 ஆம் வசனங்களில் அடங்கிய முன்னுரைப்புக்கு ஆதாரமாக இப்பொழுது உலக சரித்திரம் சிறுகச் சிறுக முன்னேறி நிறைவேறிக் கொண்டு வருகிறது.

இவைகளைப் பற்றித் தெளிவாக " இறுதி காலமும் இயேசுவின் இரண்டாம் வருகையும் " என்ற புத்தகத்தில் ஆராய்வோம்.

# தானியேலின் 70 வாரங்கள்.

இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையைக் குறித்து பழைய ஏற்பாட்டில் முன்னறிவித்துக் கொண்டிருக்கும் புத்தகங்களில் முதன் மையானது தானியேலின் புத்தகம் தான். தானியேல் வரப்போகும் மேசியாவைப் பற்றி மட்டுமல்ல; அவர் வரும் காலம், அவருடைய இராஜ்யத்தின் அடையாளம், அவர் வருகைக்கு முன் நிகழப்போகும் துன்பங்கள் முதலியவற்றையும் முன்னறிவித்திருக்கிறார். இவை களில் முக்கியத்துவத்தை அறிந்து போலும் கும்ரான் என்ற பிரதே சத்தில் வசித்த எஸ்ஸேனர் என்ற யூதத் துறவிகளின் கூட்டத்தார் பழைய ஏற்பாட்டில் மற்ற புத்தகங்களைவிட தானியேலின் புத்தகத் திற்கு அதிக முக்கியத்துவம் கொடுத்திருக்கிறார்கள். எப்படியென் றால் 1947 ஆம் ஆண்டுக்குப் பின் கண்டுபிடிக்கப்பட்ட சவக்கடல் சுருள்களில் பழைய ஏற்பாட்டின் பகுதிகளில் ஏசாயாவின் புத்தகம் முழுமையாகக் கிடைத்திருக்கின்றது; மற்ற புத்தகங்களின் பகுதிகள் அல்லது சிறு சிறு துண்டுகள் தான் கிடைத்திருக்கின்றன; ஆனால் தானியேலின் புத்தகத்தின் எட்டு முழு பிரதிகளும் இப்புத்தகத்தின் பகுதிகள் அநேக பிரதிகளும் கிடைத்திருக்கின்றன. ஆகவே இத்துறவிகள் தானியேலின் புத்தகத்திற்கு அதிமுக்கியத்துவம் கொடுத்திருக்கிறார்கள் என்று தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர்.

அவபக்தர்கள் என்ன கூறிக்கொண்டிருந்தாலும், ஆர்.கே. ஹரிஸன் (R.K. Harrison), கிளீஸன் ஆர்ச்சர், (Gleason Archer), லியோன் உட் (Leon Wood) முதலிய எபிரேய, அரமாயிக் மொழி வல்லுனர்கள் (தானியேல் புத்தகத்தின் சில பகுதிகள் அரமாயிக் மொழியில் எழுதப்பட்டிருக்கிறது), இம் மொழிகளின் நடை கி.மு. ஆறாம் நூற்றாண்டைச் சேர்ந்தது; நவீன இறையியலோர் கூறுவது போல் கி.மு. முதலாம் அல்லது இரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்தது அல்ல என்று ஆணித்தரமாகக் கூறியிருக்கின்றனர்.

**மேசியாவின் காலத்தைப் பற்றிய தானியேலின் முன்னறிப்பு.**

மேசியா என்ற எபிரேய வார்த்தைக்கு அபிஷேகம் பண்ணப் பட்டவர் என்று அர்த்தம். இது கிரேக்க மொழியில் கிறிஸ்டோஸ் (christos) என்றும், ஆங்கிலத்தில் கிரைஸ்ட் (Christ) என்றும் தமிழில் கிறிஸ்து என்றும் மொழி பெயர்க்கப்பட்டிருப்பதைக் காண்கிறோம்.

மேசியா வெளிபடுவதைப் பற்றி தானியேல் 9: 24-26 ஆம் வசனங்களில் காண்கிறோம்; அதாவது :-

**முன்னுரைப்பு :- தானியேல் 9:24-26 ( கி. மு. 538)**

24) "மீறுதலைத் தவிர்க்கிறதற்கும், பாவங்களைத் தொலைக்கிறதற்கும், அக்கிரமத்தை நிவிர்த்திபண்ணுகிறதற்கும், நித்திய நீதியை வருவிக்கிறதற்கும், தரிசனத்தையும் தீர்க்கதரிசனத்தையும் முத்திரிக்கிறதற்கும், மகா பரிசுத்தமுள்ளவரை அபிஷேகம் பண்ணுகிறதற்கும், உன் ஜனத்தின் மேலும் உன் பரிசுத்த நகரத்தின் மேலும் எழுபது வாரங்கள் செல்லும்படி குறிக்கப்பட்டிருக்கிறது."

25) "இப்போதும் நீ அறிந்து உணர்ந்துகொள்ள வேண்டியது என்னவென்றால்: எருசலேமைத் திரும்ப எடுப்பித்துக் கட்டுகிறதற்கான கட்டளை வெளிப்படுவது முதல், பிரபுவாகிய மேசியா வருமட்டும் ஏழு வாரமும், அறுபத்திரண்டு வாரமும் செல்லும்; அவைகளில் வீதிகளும் அலங்கங்களும் மறுபடியும் கட்டப்படும்; ஆனாலும் இடுக்கமான காலங்களில் இப்படியாகும்".

26) "அந்த அறுபத்திரண்டு வாரங்களுக்குப் பின்பு மேசியா சங்கரிக்கப்படுவார்; ஆனாலும் தமக்காக அல்ல; நகரத்தையும் பரிசுத்த ஸ்தலத்தையும் வரப்போகிற பிரபுவின் ஜனங்கள் அழித்துப் போடுவார்கள்; அதின் முடிவு ஜலப்பிரவாகம்போல இருக்கும்; முடிவுபரியந்தம் யுத்தமும் நாசமும் உண்டாக நியமிக்கப்பட்டது".

**நிறைவேறுதல் :-**

24 ஆம் வசனத்தின்படி ஆறு காரியங்கள் நிறைவேறுகிறதற்கு 70 வாரங்கள் குறிக்கப்பட்டிருக்கிறது என்று காண்கிறோம். இந்த ஆறு காரியங்களைப் பற்றி ஆராயுமுன் "வாரம்" என்பதைப் பற்றி விளங்கிக் கொள்வோம். வாரம் என்ற வார்த்தை எபிரேய மொழியில் ஏழு என்னும் எண்ணுக்கும், ஏழின் பன்மைக்கும், நாட்களுக்கும், வாரங்களுக்கும், ஆண்டுகளுக்கும் பயன்படுத்தக்கூடிய ஒரு வார்த்தை. தமிழ் வேதாகம மொழி பெயர்ப்பில் சில இடங்களில் ஒரு வாரம் என்னும் பொழுது 24 மணி நேரங்கொண்ட ஏழு நாட்களைக் குறிக்கும். சில இடங்களில் ஆண்டிற்கு 360 நாட்களைக் கொண்ட ஏழு வருடங்களைக் குறிக்கும் -(கிறிஸ்துவுக்கு முன்னான காலங்களில் 360 நாட்கள் ஒரு வருடமாகக் கணிக்கப்பட்டது.)

தானியேல் 9:24 ஆம் வசனத்தில் "எழுபது வாரங்கள்

செல்லும்'' என்று முன்னறிவிக்கப்பட்டிருக்கிறது. 70 வாரங்கள் என்னும்பொழுது 490 நாட்கள். சரித்திரவாக்கில் கணக்கிடும்போது ஒரு நாளை ஒரு வருடம் என்று கணக்கிடவேண்டும்; அப்படிப் பார்க்கும்போது 490 ஆண்டுகள் அவ்வசனத்தில் கூறப்பட்டிருக்கும் ஆறு காரியங்கள் நிறைவேறக் குறிக்கப்பட்டிருக்கிறது என்று வாசிக்கிறோம். அவையாவன :-

1) மீறுதலைத் தவிர்க்கிறதற்கும்,

2) பாவங்களைத் தொலைக்கிறதற்கும்,

3) அக்கிரமத்தை நிவிர்த்தி பண்ணுகிறதற்கும்,

4) நித்திய நீதியை வருவிக்கிறதற்கும்,

5) தரிசனத்தையும் தீர்க்கதரிசனத்தையும் முத்திரிக்கிறதற்கும்,

6) மகா பரிசுத்தமுள்ளவரை அபிஷேகம் பண்ணுகிறதற்கும்,

உன் ஜனத்தின் மேலும் உன் பரிசுத்த நகரத்தின் மேலும் எழுபது வாரங்கள் செல்லும்படி குறிக்கப்பட்டிருக்கிறது.

மேற்கூறிய ஆறு காரியங்களும் இலகுவாய் விளங்கிக் கொள்ளக் கூடாதவைகளாய் இருக்கின்றன. ஆகையால் ஆங்கிலத்தில் என்ன கூறியிருக்கிறது என்று பார்ப்போம் :-

New International version : Daniel 9:24

" Seventy sevens are decreed for your people and your holy city

1) to finish transgression,

2) to put an end to sin,

3) to atone for wickedness,

4) to bring in everlasting righteousness,

5) to seal up vision and prophecy, and

6) to anoint the most holy.

இவைகளை இன்னும் கொஞ்சம் தெளிவாக விளங்கிக் கொள்வோம் :-

முதலாவது, "மீறுதலைத் தவிர்க்கிறதற்கும்". அதாவது ஆண்டவருடைய கட்டளைகளை மீறுவது நிறுத்தப்படவும், அல்லது ஆண்டவருக்கு விரோதமாகக் கலகம் பண்ணுவது அல்லது கிளர்ச்சி பண்ணுவது நிறுத்தப்படவும் 70 வாரங்கள் குறிக்கப்பட்டிருக்கிறது. யூதரும், கிறிஸ்தவர்களுமே ஆண்டவருடைய கட்டளைகளை மீறுவது, அல்லது ஆண்டவருக்கு விரோதமாகக் கலகம் பண்ணுவது முடிவுறும் என்று ஒத்துக் கொள்ளுகின்றனர். அதே சமயம் யூதரானாலும், புறமதஸ்தரானாலும், உண்மையான விசுவாசிகள் மட்டும் மேசியாவின் (இயேசு கிறிஸ்துவின்) 1000 வருட ஆரசாட்சியில் பிரவேசிப்பார்கள் என்று கருதுகின்றனர். ஆனால் கிறிஸ்தவர்கள், "மீறுதலைத் தவிர்க்கிறது" என்பதற்கு, இயேசு கிறிஸ்துவை மேசியாவாக உலகத்தார் அனைவரும் ஏற்றுக் கொள்ளுதல் என்று அர்த்தம் என்று விளக்குகின்றனர்.

இரண்டாவது "பாவங்களைத் தொலைக்கிறதற்கும்" 70 வாரங்களாகும் என்று முன்னுரைக்கப்பட்டிருக்கிறது. இந்த இடத்தில் பாவங்கள் என்னும் பொழுது, ஆண்டவருக்கு விரோதமாகக் கலகம் செய்வது அல்லது கிளர்ச்சி செய்வது தவிர மற்ற பாவங்கள்; அதாவது:

மாம்சத்தின் கிரியைகளாகிய விபசாரம், வேசித்தனம், அசுத்தம், காமவிகாரம், விக்கிரகாராதனை, பில்லிசூனியம், பகைகள், விரோதங்கள், வைராக்கியங்கள், கோபங்கள், சண்டைகள், பிரிவினைகள், மார்க்கபேதங்கள், பொறாமைகள், கொலைகள், வெறிகள், களியாட்டங்கள் முதலியவைகளைக் குறிக்கும்.

"பாவங்களைத் தொலைக்கிறதற்கும்" என்பதற்குப் பொருள்: மேசியாவின் இராஜ்யத்தில் இருக்கும் பிரஜைகள் ஒரு பரிசுத்த கட்டுப்பாட்டுக்குள் இருப்பார்கள்; இன்றைய நிலையோடு ஒப்பிடும் போது பாவம் இருக்காது; அதே சமயத்தில் பாவத்துக்குத் தண்டனை உடனுக்குடன் நேர்மையாக வழங்கப்படும் என்று பொருள்படும்.

மூன்றாவது, " அக்கிரமங்களை நிவிர்த்தி பண்ணுகிறதற்கும்" என்பதும் இந்த 70 வார அட்டவணைக்குள் அடங்கும். "அக்கிரமம் நிவிர்த்தி பண்ணுவது" என்பதற்கு கொடுமை, தீமை, அக்கிரமம் முதலியவை நீங்க பிராயச்சித்தம் அல்லது ஈடு செய்வது என்று பொருள்படும். பழைய ஏற்பாட்டில் உபயோகிக்கப்பட்டிருக்கும் கப்ஃபார் (Kaphar) என்ற வார்த்தைக்கு ஒரு பலி செலுத்துவதின் மூலம் பாவத்தை மூடுவது என்று பொருள்படும்.

இயேசு கிறிஸ்து பாவ நிவாரண பலியாக மரித்ததின் மூலம் இது நிறைவேறியது என்று கிறிஸ்தவர்களாகிய நாம் விசுவாசிக்கிறோம். ஆனால் யூதர் இதை ஒப்புக்கொள்வதில்லை; உலகத்தின் முடிவு பரியந்தம் மிருக பலி செலுத்தப்பட வேண்டுமென்பது தெய்வ நியமம் என்று அவர்கள் எண்ணுகின்றனர்.

நான்காவதாக ''நித்திய நீதியை வருவிக்கிறதற்கும்'' 70 வாரங்கள் ஆகும். இதை விளங்கும்படி கூற வேண்டுமானால், முடிவில்லாத நீதி, நேர்மை முதலியவைகள் ஏற்பட அல்லது கொண்டு வரப்பட 70 வாரங்கள் ஆகும். அதாவது கடவுளின் இராஜ்யம் அல்லது இயேசுவின் 1000 வருட அரசாட்சி ஏற்பட (அதாவது ஏசாயா 11:6–9; சகரியா 12:9–10; எசேக்கியேல் 36:26–27 வசனங்களில் கூறியிருக்கிறபடி அல்லது முன்னறிவித்தப்படி உலகம் மாற) 70 வாரங்களாகும்.

ஐந்தாவதாக, ''தரிசனத்தையும், தீர்க்கதரிசனத்தையும் முத்திரிக்கிறதற்கும்'' 70 வாரம் ஆகும். அதாவது மேசியாவின் அரசாட்சி ஆரம்பிக்கும்போது, தம்முடைய தாசர்கள், தீர்க்கதரிசிகள் மூலமாக, தரிசனங்களின் வாயிலாகவும், தீர்க்கதரிசனங்கள் (முன்னறிப்புகள்) வாயிலாகவும் அறிவிக்கப்பட்டவைகளெல்லாம், 70 ஆம் வாரம் துவங்கும் போது நிறைவேறித் தீர்ந்திருக்கும்.

ஆறாவதாக, ''மகா பரிசுத்தமானவரை அபிஷேகம் பண்ணுகிறதற்கும் '' 70 வாரங்களாகும். சில யூதர்கள், இக்காரியம் வரப்போகும் மேசியாவின் காலத்தில் கட்டப்பட்டு பிரதிஷ்டை செய்யப்படப் போகும் ஆலயத்தின் மகா பரிசுத்த ஸ்தலத்தைக் குறிக்கும் என்று விமர்சிக்கின்றனர். அவர்கள் எசேக்கியேல் 40–44 ஆம் அதிகாரங்களில் வர்ணிக்கப்பட்டிருக்கும் தேவாலயத்தையும், அங்கே ஏறெடுக்கப்படும் பலிகளையும் குறிக்கும் என்று எண்ணுகின்றனர். ஆனால் கிறிஸ்தவர்களாகிய நாமோ இது இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின் பொற்காலத்தைக் குறிக்கும் என்று அர்த்தப்படுத்துகின்றோம். எப்படியாயினும் தானியேல் 9 ஆம் அதிகாரம் 24 ஆம் வசனத்தில் கூறப்பட்டுள்ள ஆறு காரியங்கள் நிறைவேற 70 வாரங்கள், ஆதாவது 70 X 7 நாட்கள் - 490 நாட்கள். அல்லது தீர்க்கதரிசன கணிப்புப்படி 490 ஆண்டுகள் ஆகும்.

இந்த 70 வாரங்களும் தானியேல் 9:25–27 ஆம் வசனங்களில்

7 வாரங்கள்,
62 வாரங்கள்,
1 வாரம்

என்று மூன்று பாகங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. இது நம்மைக் குழப்புவதற்காகவோ அல்லது பைத்தியகாரத்தனமாகவோ எழுதப் பட்ட கணக்கு அல்ல. ஆண்டவருடைய திட்டவட்டமான நிகழ்ச்சி நிரல் இதில் அடங்கி இருக்கிறது; அதை கீழே கவனிப்போம். :–

பரிசுத்த வேதாகமத்தில் யூதர்கள் பாபிலோனிய சிறை யிருப்பிலிருந்து திரும்பிப் போய் எருசலேம் தேவாலயத்தையும், எருசலேம் நகரையும் திரும்ப எடுப்பித்துக் கட்டுவதைப் பற்றி மூன்று ஆணைகள் புறஜாதி மன்னர்களால் பிறப்பிக்கப்பட்டிருப்பதைக் காண்கிறோம், அவையாவன :–

1) 2 நாளாகமம் 36 : 23 எஸ்றா 1 : 2 – 4 ---- பாரசீக மன்னன் கோரேசினால் கி.மு. 539 ஆம் ஆண்டு இந்த ஆணை பிறப் பிக்கப்பட்டது. இவ்வாணை எருசலேம் தேவாலயத்தை எடுப்பித்துக் கட்டுவதைப் பற்றி மட்டும் பிறப்பிக்கபபட்டது. இதன் பிரகாரம் யூதாவின் அதிபதியாகிய சேத்பாத்சார் 42,360 யூதருடனும், 7,337 வேலைக்காரர், வேலைக்காரிகளுடனும், 200 பாடகர், பாடகிகளு டனும் யூதேயா நாட்டில் வந்து குடியேறினான். என்றாலும் தேவாலய கட்டுமான வேலை ஆரம்பிக்கப்பட்ட பொழுது அந்நாட்டில் குடியிருந்த சிலராலே தடுக்கப்பட்டு தேவாலய வேலை தடைப்பட்டது. அப்படி யிருந்தும் கி. மு. 519 ஆம் ஆண்டு தேவாலயம் கட்டி முடிக்கப்பட்டது.

2) இரண்டாவது ஆணை கி.மு.458 ஆம் ஆண்டு அர்த்த சஷ்டா மன்னன் வேதபாரகனாகிய எஸ்றாவுக்கு எருசலேம் தேவாலய ஆராதனைகளைக் குறித்து பிறப்பித்தான். இவ்வாணை (எஸ்றா 7: 11–26 ஆம் வசனங்களில் கொடுக்கப்பட்டிருக்கிறது). எஸ்றாவோடு பாபிலோனிலிருந்து புறப்பட்டுப் போனவர்கள் ஆண்கள் 1514 பேரும் அவர்களுடைய மனைவிமாரும் பிள்ளைகளுமாவர்.

3) மூன்றாவது ஆணை அர்த்தஷ்டா அரசனால் கி.மு. 445 ஆம் ஆண்டு நெகேமியாவுக்கு எருசலேமின் அலங்கத்தையும், வீடு களையும் செப்பனிட பிறப்பிக்கப்பட்டது.

இந்த மூன்றாவது ஆணை தான் தானியேல் 9:25 ஆம் வசனத்தில் குறிப்பிடப்பட்ட ஆணை. அதாவது :–

"எருசலேமைத் திரும்ப எடுப்பித்துக் கட்டுகிறதற்கான கட்டளை வெளிப்படுவது முதல், பிரபுவாகிய மேசியா வருமட்டும் ஏழு வாரமும், அறுபத்திரண்டு வாரமும் செல்லும்; அவைகளில் வீதிகளும் அலங்கங்களும் மறுபடியும் கட்டப்படும்; ஆனாலும் இடுக்கமான காலங்களில் இப்படியாகும்".

ஏழு வாரங்களும், அறுபத்திரண்டு வாரங்களுமாகும் என்று பிரித்துக்காண்பித்திருப்பதின் நோக்கம், நகர வீதிகளையும் அலங்கங்களையும் கட்டி முடிப்பதற்கு 7 வாரங்கள் (அதாவது 49 ஆண்டுகள்) ஆகும் என்றும் அக்காலங்கள் இடுக்கமான காலங்களாக இருக்கும் என்றும் கூறப்பட்டுள்ளது. நெகேமியாவின் புத்தகத்தைப் பார்த்தோமென்றால் எவ்வளவு கஷ்டங்களின் மத்தியில் நெகேமியாவும் அவருடைய ஆட்களும் அலங்கத்தைக் கட்டக் கஷ்டப்பட்டார்கள் என்பது விளங்கும். சன்பல்லாத் என்ற சமாரியாவின் அரச பிரதிநிதி (மோவாபியன்), தொபியா என்ற அம்மோனியன், இன்னும் சில அம்மோனியர், அரபியர், அஸ்தோத்தியர் முதலானவர்கள் அலங்கத்தின் வேலையைத் தடை செய்தது மட்டுமல்ல, அர்த்தசஷ்டா அரசனுக்கு பிராதும் செய்தனர். வேலை தடைபடாமல் நடைபெற நெகேமியா தன்னிடமிருந்தவர்களில் பாதிப்பேரை ஈட்டிகளையும், பரிசைகளையும், வில்லுகளையும், கவசங்களையும் பிடித்துக் காவல் காக்கவும், மீதிப் பேர் கட்டட வேலையைச் செய்யவும், ஒழுங்கு பண்ணினான். இப்படியாக இவ்வேலையைத் தடை செய்ய மோவாபியரும், அம்மோனியரும், அரபியரும், அஸ்தோத்தியரும் முயன்றும், இந்நெருக்கத்தின் மத்தியில் வேலை நடந்தேறியது.

இவ்வேலை முடிந்த பின் 62 வாரங்கள்,

அதாவது 62 X 7 = 434 (நாட்கள்) ஆண்டுகள் கழித்து "பிரபுவாகிய மேசியா வருவார், (தானி யேல் 9 : 25).

தானியேல் 9:26 ஆம் வசனத்தில் "அந்த அறுபத்திரண்டு வாரங்களுக்குப் பின்பு மேசியா சங்கரிக்கப்படுவார்," அதாவது அலங்கத்தை எடுப்பித்துக் கட்டுவதற்கு ஆணை பிறப்பிக்கப்பட்ட 69 வாரங்களுக்குப் பின்: அதாவது 69 X 7 = 483 ஆண்டுகளுக்குப் பின் மேசியா சங்கரிக்கப்படுவார்.

இது எப்படி என்று பார்ப்போம் :–

| | |
|---|---|
| மேசியா சங்கரிக்கப்படுவது | 483 ஆண்டுகளுக்குப் பின் |
| எருசலேமை எடுப்பித்துக் கட்ட அர்த்தசஷ்டா கட்டளை பிறப்பித்தது கி.மு. | 445 ஆம் ஆண்டில் |
| | 38 |

| | | |
|---|---|---|
| ஜூலியன் காலண்டர் கணக்கிடும் போது ஏற்பட்ட தவறுதல் (ஜூலியன் கணக்குப் படி இயேசு கிறிஸ்து கி.மு. 4ஆம் ஆண்டில் பிறந்ததாகக் கூறப்படுகிறது) | 4 | ஆண்டுகள் |
| அதைக் கழித்தால் ...... | 34 | ஆண்டுகள் |
| அதோடு கி.மு. 1 ; கி.பி. 1 என்பதை ஒரே ஆண்டாக எடுத்துக் கொள்ள வேண்டும் | 1 | ஆண்டு |
| அப்படியென்றால் இயேசு கிறிஸ்து இராஜாவாகப் பவனி வந்து சிலுவையி லறையப்பட்டது கி.பி. | 33 | ஆம் ஆண்டு ஆகும். |

இதை விளக்க பல அறிஞர்கள் பல சிக்கலான கணக்குகளைப் போட்டுக் காட்டுகிறார்கள். ஆனால் நாம் இலகுவில் விளங்கிக் கொள்ளும் வகையில் மேலே கொடுக்கப்பட்டிருக்கும் குறிப்புகளைக் கொடுத்திருக்கிறேன். தானியேல் 9:26 ஆம் வசனத்தில் மேசியா சங்கரிக்கப்படுவார் என்னும் வசனத்திற்குப் பின் "ஆனாலும் தமக்காக அல்ல" என்னும் முன்னுரைப்பையும் கூறியிருக்கிறார். ஆம், இயேசு கிறிஸ்து தமக்காக மரிக்கவில்லை; நம்மை நம்முடைய பாவங்களிலிருந்து மீட்கும்படியாகத் தம்மையே ஏக பலியாக ஒப்புக் கொடுத்து தானியேல் தீர்க்கரின் மூலமாகக் கொடுக்கப்பட்ட முன்னறிவிப்பை நிறைவேற்றினார்.

தானியேல் 9:26ஆம் வசனத்தின் முன் பகுதியோடு 69ஆம் வாரத்தின் காரியங்கள் முடிவடைந்தன. 70 ஆம் வாரத்தின் நிகழ்ச்சிகள் 69ஆம் வாரத்திற்குப் பின் உடனே நிகழ்வதல்ல. 69ஆம் வாரத்துக்கும் 70 ஆம் வாரத்துக்கும் இடையில் ஒரு பெரிய இடைவெளியாகிய திருச்சபையின் காலம் குறுக்கிடுகிறது. நாம் இப்பொழுது அந்த இடைப்பட்ட திருச்சபையின் காலத்தில் இருக்கிறோம்.

பரிசுத்தவான்கள் எடுத்துக் கொள்ளப்படும்போது திருச்சபையின் காலம் முடிவடைந்து தானியேல் தீர்க்கதரிசனத்தில் கூறப்பட்டுள்ள 70ஆம் வாரம் ஆரம்பமாகும். தானியேல் 9:26ஆம் வசனத்தின் பின் பாகமும், 27 ஆம் வசனமும் இந்த 70ஆம் வாரத்தில் நடைபெறப் போகும் காரியங்களைப் பற்றிக் கூறப்பட்டிருக்கிறபடியால் அவைகளை "இறுதி காலமும் இயேசுவின் இரண்டாம் வருகையும்" என்ற புத்தகத்தில் காணலாம்.

# வட, தென்திசை ராஜாக்கள்

**தானியேல் 11**

நேபுகாத்நேச்சார் கண்ட கனவின் மூன்றாம் இராஜ்யம் கிரேக்க இராஜ்யம் என்று பார்த்தோம். இந்த கிரேக்க இராஜ்யத்தில் வரும் ஒரு அரசன், அண்டியோக்கஸ் எபிபெனஸ் என்பவனைப் பற்றி தானியேல் 8ஆம் அதிகாரம் 8–14 வசனங்களில் விஸ்தரிக்கப்பட்டிருப்பதையும் பார்த்தோம். கிரேக்க இராஜ்யத்தின் பிற்கால சரித்திரத்தில் சீரியா, பாபிலோனியா, இன்னும் இதர கிழக்கு நாடுகளை அரசாண்ட செலூக்கஸின் சந்ததியார் (செலூஸிட்ஸ்) என்பவர்களும், எகிப்தை அரசாண்ட தாலமி என்பவனின் சந்ததியாரும் பலஸ்தீனா நாட்டின் மேல் கண்வைத்து தங்களுக்குள் சண்டையிட்டுக் கொண்டனர். இதைப் பற்றி தானியேலுக்கு ஒரு தரிசனம் கிடைத்தது; அதை தானியேலின் புத்தகம் 11 ஆம் அதிகாரத்தில் காணலாம்.

இத்தரிசனம் மிகத் தெளிவாக, வரிசைக்கிரமமாக கூறப்பட்டிருக்கிறபடியால் அவபக்தர்கள் இந்த அதிகாரத்தில் அடங்கிய தீர்க்க தரிசனம் முன்னறிவிப்பல்ல, இச்சம்பவங்கள் நடந்து முடிந்தபின் நடக்கப்போவதாக ஊர் பேர் தெரியாத யாரோ எழுதி தானியேல் புத்தகத்தில் சேர்த்துவிட்டனர் என்று கூறி பரிசுத்த வேதாகமத்தின் மகிமையைக் குறைக்கப் பார்க்கின்றனர். என்றாலும் சமீப காலத்தில் சவக்கடல் சுருள்கள் கண்டெடுக்கப்பட்டவைகளில் தானியேலின் புத்தகமும் ஒன்று. இவைகள் எஸ்ஸேனர் என்ற கூட்டத்தினரால் கி.மு. 2 ஆம் நூற்றாண்டுக்கு முன்னமேயே நகல்கள் எடுத்து ரோமரால் அவர்களுக்குத் துன்பம் வந்த காலத்தில் கெபிகளில் ஒளித்து வைக்கப்பட்டவையாகையால் இவைகள் சம்பவங்கள் நடந்த பின் எழுதப்பட்டவைகளல்ல என்பது புலனாகிறது. இதைப் பற்றி அவபக்தர்கள் அபிப்பிராயம் கூறாமல் மௌனம் சாதிப்பதாகத் தெரிகிறது. தானியேல் கி.மு. 530 ஆம் ஆண்டு இறந்ததாகக் கருதப் படுகிறது; ஆகவே இச்சம்பவங்களெல்லாம் நடக்கப்போவதை முன்னறிவிப்பவைகள் என்பதை விசுவாசிக்க வேண்டும்.

இவ்வதிகாரத்தில் கொடுக்கப்பட்டிருக்கும் முன்னறிவிப்புகளை விளங்கிக் கொள்ள வேண்டுமானால் வசனம் வசனமாக உலக சரித்திரத்தில் எப்படி நிறைவேறியிருக்கிறதென்று பார்க்க வேண்டும். அவைகளைக் கவனிப்போம் :

**முன்னுரைப்பு :– தானி. 11 : 2**

"........ இன்னும் மூன்று ராஜாக்கள் பெர்சியாவில் எழும்புவார்கள்; அதின் பின்பு நாலாம் ராஜாவாயிருப்பவன் எல்லாரிலும் மகா ஐசுவரிய சம்பன்னனாகி, தன் ஐசுவரியத்தினால் பலங்கொண்டு, கிரேக்கு ராஜ்யத்துக்கு விரோதமாகச் சகலரையும் எழுப்பிவிடுவான்".

**நிறைவேறுதல் :–**

"இன்னும் மூன்று ராஜாக்கள் பெர்சியாவில் எழும்புவார்கள்" என்பதிலிருந்து நாம் அறிந்து கொள்ள வேண்டியது; ஒரு பெர்சிய அரசன் ஆட்சியிலிருக்கும்போது இத்தரிசனம் தானியேலுக்குக் கிடைத்திருக்கிறது. ஆகவே நான்கு பெர்சிய அரசர்கள் எழும்புவார்கள்; அவர்களில் கடைசியாக வருபவன் ஐசுவரியத்தினால் பலங்கொண்டு கிரேக்க அரசனுக்கு விரோதமாக யுத்தத்திற்குப் போவான். அந்த நான்கு அரசர்களின் பெயர்கள் :–

1) காம்பீசஸ் (Cambyses) (கி.மு. 529 – 522)

2) சூடோ ஸ்மெர்டிஸ் (Pseudo-smerdis) (கி.மு. 522 – 521)

3) தரியு 1, ஹிஸ்டாஸ்பஸ் (Darius I, Hystaspes) (கி.மு. 521 – 486)

4) கோரேஸ் 1 (Xerxes I) (கி.மு. 486 – 465)

இவர்களில் நான்காவதாக வந்த கோரேஸ் 1, அதிக பிரபலமாகி கிரீஸ் நாட்டோடு யுத்தத்திற்குப் போனான். ஒரு பெரிய புயல் காற்றினால் அவனுடைய கப்பல்கள் சேதமானதுடன் அநேக வீரர்களும் மடிந்தனர். ஆகவே அவன் தோல்வியடைந்து தன் நாட்டிற்குத் திரும்பினான்.

**முன்னுரைப்பு : தானியேல் 11 : 3–4. (கி.மு. 534)**

3) "ஆனாலும் பராக்கிரமமுள்ள ஒரு ராஜா எழும்பி, பிரபலமாய் ஆண்டு, தனக்கு இஷ்டமானபடி செய்வான்.

4) "அவன் எழும்பினபின்பு, அவனுடைய இராஜ்யம் உடைந்து போய், வானத்தின் நாலு திசைகளிலும் பகுக்கப்படும்; ஆனாலும் அது அவனுடைய சந்ததியாருக்கல்ல, அவன் செய்த ஆளுகையின்படியும் அல்ல; அவனுடைய ராஜ்யம் பிடுங்கப்பட்டு, அவனுடையவர்களல்லாத வேறே பேர்களிடமாய்த் தாண்டிப்போம்".

**நிறைவேறுதல்:**

இம்முன்னறிவிப்பு மகா அலெக்சான்டரைக் குறிக்கும் என்று முன்னமே பார்த்தோம். அவன் மரணமடைந்தவுடன் அவனுடைய சேனாதிபதிகள் நால்வர் அலெக்சான்டரின் தாய், மனைவி, மகன், ஒன்றுவிட்ட சகோதரன் முதலிய பட்டத்து வாரிசுகளையெல்லாம் கொன்றுவிட்டு சாம்ராஜ்யத்தைத் தங்களுக்குள்ளே பகிர்ந்து கொண்டார்கள். ஆகவே பரிசுத்த வேதாகமம் கூறியபடி அவனுடைய சந்ததியாருக்கில்லாமல் வேற்று மனிதர்களுக்கு ஆளுகை போய்விட்டது. இதன் விபரங்கள் முந்திய அத்தியாயத்தில் கொடுக்கப்பட்டிருக்கிறது, பார்க்கவும்.

**முன்னுரைப்பு : தானியேல் 11 : 5 (கி.மு. 534)**

5) "தென்திசை ராஜா பலவானாயிருப்பான்; ஆனாலும் அவனுடைய பிரபுக்களில் ஒருவன் அவனைப் பார்க்கிலும் பலவானாகி ஆளுவான்; இவனுடைய ஆளுகை பலத்த ஆளுகையாயிருக்கும்".

**நிறைவேறுதல் :–**

அலெக்சான்டருக்குப் பின் நான்காகப் பிரிந்த இராஜ்யங்களில் சீரியா, பாபிலோனியாவை ஆண்ட மன்னர்கள் "வட தேசத்து ராஜா" என்றும், எகிப்தை அரசாண்ட மன்னர் "தென் திசை ராஜா" என்றும் இப்பகுதியில் கூறப்பட்டு வருகிறது. ஆகவே தென்திசை ராஜா, அதாவது எகிப்து ராஜா பலவானாயிருப்பான். அச்சமயத்தில் எகிப்தின் ராஜாவாயிருந்தவன் முதலாவது தாலமி சோட்டர் (Ptolemy I Soter) (கி.மு. 323 – 285). இவனைவிட பலவானாயிருப்பவன் என்று குறிப்பிடப்பட்டவன் முதலாம் செலூக்கஸ் நிக்கட்டார் (Seleucus I Nicator) (கி.மு. 312–281). செலூக்கஸ் சீரியா நாட்டு மன்னன்; என்றாலும் அலெக்சான்டரின் வேறொரு சேனைத் தலைவன், அன்டிகோனஸ் என்பவன், செலூக்கஸ் நிக்கட்டாரை நாட்டை விட்டு விரட்டி விட்டு தான் ராஜ பதவியில அமர்ந்தான். செலூக்கஸ் நிக்கட்டார் எகிப்துக்கு வந்து தாலமி சோட்டரின் தளபதியாகி எகிப்தின் படை பலத்தை பெருக்கி சீரியாவுக்குப் போய் அன்டிகோனஸை ஜெயித்து ஆசியா மைனரிலிருந்து (துருக்கியிலிருந்து) இந்தியா வரைக்குமுள்ள தேசங்களைத் திரும்பவும் கைப்பற்றிக்கொண்டான். இப்படியாக எகிப்தின் ராஜாவைப் பார்க்கிலும் பலவான் ஆவான் என்பது நிறைவேறியது.

**முன்னுரைப்பு: தானியேல் 11 : 6–8 (கி.மு. 534)**

6)''அவர்கள் சில வருஷங்களுக்குப் பின்பு, ஒருவரோடொருவர் சம்பந்தம் பண்ணும்படிக்குத் தென்றிசை ராஜாவின் குமாரத்தி வடதிசை ராஜாவினிடத்தில் வருவாள்; ஆனாலும் அவளுக்குப் புயபலம் இராமற்போம். அவனும் அவனுடைய புயமும் நிலைநிற்பதில்லை; அவளும் அவளை அழைத்து வந்தவர்களும், அவளைப் பெற்றவனும், அவளை அக்காலங்களில் பலப்படுத்தினவனும் ஒப்புக்கொடுக்கப்படுவார்கள்''.

7) ''ஆகிலும் அவளுடைய வேர்களின் கிளையாகிய ஒருவன் தன் ஸ்தானத்தில் எழும்பி, இராணுவத்தோடே வந்து, வடதிசை ராஜாவின் அரணிப்புக்குள் பிரவேசித்து, அவர்களை விரோதித்து,

8) ''அவர்களுடைய அதிபதிகளையும், அவர்களுடைய விலையேறப்பெற்ற வெள்ளியும் பொன்னுமாகிய பாத்திரங்களையும், அவர்களுடைய தெய்வங்களையுங் கூட எகிப்துக்குக் கொண்டு போய், சில வருஷங்கள் மட்டும் வடதிசை ராஜாவைப் பார்க்கிலும் நிலையாய் நிற்பான்''.

**நிறைவேறுதல் :**

சில ஆண்டுகளுக்குப் பின் இரண்டாம் தாலமி பிலடெல்பஸ் (Ptolemy II philadelpus) (285–246 கி.மு) எகிப்தின் அரசன், சீரியாவோடு சமாதானமாயிருந்தால் தங்கள் பலத்தை அதிகப்படுத்தலாம் என்று எண்ணி, தன் மகள் பெரினிஸ் (Berenice) ஐ சீரிய அரசன் இரண்டாம் அந்தியோக்கஸ் தியோஸ் (Antionchus II Theos) (கி.மு. 261–246)க்கு விவாகம் பண்ணிக் கொடுத்தான். ஆனால் அந்த உறவு அதிக நாள் நீடிக்கவில்லை. அந்தியோக்கஸின் முதல் மனைவி லோடீஷியா என்பவள் (Laodiceia) சதி பண்ணி தன் கணவன் அன்டியோக்கசையும் பெரினீசையும் கொலை செய்து போட்டாள். அதே சமயத்தில் பெரினீசின் தகப்பனும் இறந்து போனார்.

இவைகளுக்குப் பின்னர் மூன்றாம் தாலமி யூர்கெட்டஸ் (Ptolemy III Euergetes) (கி.மு. 246 – 222) என்ற எகிப்திய அரசன் எழும்பி சீரியாவின் மேல் படை எடுத்து, பரிசுத்த வேதாகமத்தில் கூறப்பட்டபடியே (தானி. 11 : 7–8) அங்கிருந்து வெகு திரவியத்தைக் கொள்ளையடித்துக் கொண்டு வந்தான். இந்த மூன்றாம் தாலமி பெரினீசின் சகோதரன். இவன் கொள்ளையடித்துக் கொண்டு வந்தவைகளில் 2500 க்கும் மேற்பட்ட சீரிய தெய்வங்களின்

சிலைகளும் அடங்கும். இச்சிலைகளில் சில முன்னதாக எகிப்திலிருந்து சீரியரால் கொள்ளையடித்துக் கொண்டு போகப்பட்டவை. அச்சிலைகளை மீட்டுக் கொண்டு வந்தபடியால் எகிப்தியர் அவனுக்கு யூர்கெட்டஸ் (Euergetes) என்ற கௌரவ பட்டத்தைச் சூட்டினர். இவ்வார்த்தைக்கு "நன்மை செய்பவர்" என்று அர்த்தம்.

லொடிஷியாவின் மகன் செலூக்கஸ் காலினிக்கஸ் (Seleucus II Callinicus) கி.மு.246 முதல் 226 ஆம் ஆண்டு வரை சீரியாவை அரசாண்டான். என்றாலும் தாலமி யூர்கெட்டஸ் செலூக்கஸுக்குப் பின் 5 ஆண்டுகள், அதாவது கி.மு.221ஆம் ஆண்டு வரை அரசாண்டு "சில வருஷங்கள் மட்டும் வடதிசை ராஜாவைப் பார்க்கிலும் நிலையாய் நிற்பான் (11:8) என்ற முன்னறிவிப்பை நிறைவேற்றினான்.

**முன்னுரைப்பு : தானியேல் 11 : 9. (கி.மு. 534)**

9)"தென்றிசை ராஜா அவன் ராஜ்யத்துக்கு விரோதமாக வந்து, தன் தேசத்துக்குத் திரும்பிப் போவான்".

**நிறைவேறுதல் :-**

கி.மு. 226ஆம் ஆண்டுக்குப் பின்னும் சீரிய எகிப்திய இராஜ்யங்களுக்கிடையே சச்சரவுகள் நடந்துகொண்டே இருந்தன. எகிப்திய அரசன் தாலமி யூர்கெட்டஸ் அதிக நாட்டைச் சேர்த்துக் கொள்ள சீரியாவுக்கு விரோதமாய்ப் படையெடுத்தான். என்றாலும் பாதி வழியில் தன் படைகளை திருப்பி அழைத்துக் கொண்டான்.

**முன்னுரைப்பு : தானியேல் 11 : 10 –12 (கி.மு. 534)**

10) "ஆனாலும் அவனுடைய குமாரர் யுத்தஞ்செய்ய எத்தனித்து, திரளான சேனைகளை கூட்டுவார்கள்; இவர்களில் ஒருவன் நிச்சயமாய் வந்து, வெள்ளம்போலக் கடந்து, திரும்பவும் தன்னுடைய அரண்மட்டும் யுத்தங்கலந்து போவான்".

11) "அப்பொழுது தென்றிசை ராஜா கடுங்கோபங்கொண்டு புறப்பட்டுப் போய், வடதிசை ராஜாவோடே யுத்தம் பண்ணுவான்; இவன் பெரிய சேனையை ஏகமாய் நிறுத்துவான்; ஆனாலும் இந்தச் சேனை அவன் கையில் ஒப்புக் கொடுக்கப்படும்".

12)"அவன் இந்தச் சேனையை நீக்கினபின்பு, அவனுடைய இருதயம் கர்வம் கொள்ளும்; அவன் அநேகமாயிரம் பேரை மடிவிப்பான்; ஆனாலும் பலங்கொள்ளமாட்டான்".

**நிறைவேறுதல்:–**

சீரிய மன்னன் செலூக்கஸ் கல்லினிக்கஸ் (Seleucus II Callinicus) (246–226) என்பவனின் மக்கள் செலூக்கஸ் செரானஸ் (Seleucus III Ceraunus) என்பவனும் மூன்றாம் அந்தியோக்கஸ் (Antiochus III) என்பவனும் தங்களுடைய தகப்பனாரிடமிருந்து எகிப்தில் ஜெயித்த பகுதிகளை மீட்கும்படி ஒரு யூத்தத்தைத் துவக்கினர். ஆனால் செலூக்கஸ் செரானஸ் என்பவன் தன் சேனாதிபதியால் நஞ்சு வைக்கப்பட்டு கொல்லப்பட்டான். ஆகையால் மூன்றாம் அந்தியோக்கஸ் தனிமையில் யுத்தத்தை நடத்தும்படியாயிற்று.

இதற்கிடையில் எகிப்தில் மூன்றாம் தாலமி யூர்கெட்டஸ் இறந்து அவர் மகன் நாலாம் தாலமி பிலோபேட்டர் (ptolemy IV Philopator) (கி.மு.221–203) அரசனானான். சீரிய மன்னன் மூன்றாம் அந்தியோக்கஸ், எகிப்து மன்னன் பிடித்த பகுதிகளையெல்லாம் திரும்பவும் கைப்பற்றினான். அவன் சேனை போன இடமெல்லாம் பாழான நிலங்களாக்கப்பட்டன. கி.மு.217 ஆம் ஆண்டில் சீரிய மன்னன் மூன்றாம் அந்தியோக்கஸ் திரும்பவும் 70,000 படை வீரரோடு எகிப்தின் மேல் படையெடுத்தான். எகிப்திய மன்னனும் ஒரு பெரிய சேனையோடு சீரிய படையில் 10,000 வீரருக்கு மேல் சங்கரித்து பெரும் வெற்றியடைந்தான். மூன்றாம் அந்தியோக்கஸ் அந்தியோகியாவுக்குப் பின்வாங்கினான். தன்னுடைய வெற்றியில் கர்வங்கொண்ட எகிப்திய மன்னன் தாலமி பிலோபேட்டர் தான் வென்ற இடங்களையெல்லாம் சுற்றிப் பார்த்துவிட்டு வரும் வழியில் எருசலேமுக்கு வந்து தேவாலயத்தில் மகாபரிசுத்த ஸ்தலத்திற்குள்ளும் போக முற்பட்டான். ஆனால் யூத மக்கள் தடுத்து விட்டனர். இதனால் கோபங்கொண்ட தாலமி பிலோபேட்டர் 40,000 யூதரைக் கொன்றான். சில சரித்திராசிரியர்கள் அச்சமயம் கொல்லப்பட்ட யூதரின் எண்ணிக்கை 60,000 என்று கணித்திருக்கின்றனர். அவன் எகிப்துக்குப் போன பின்பு அங்குள்ள தன் பிரஜைகளில் ஆயிரக்கணக்கான யூதரை கொலை செய்தான். இதன் காரணமாக அவனுடைய இராஜ்யம் அதிக பலமிழந்தது. இவ்விதமாக 10–12 ஆம் வசனங்களில் கூறப்பட்ட முன்னறிவிப்புக்கள் நிறைவேறின.

**முன்னுரைப்பு :– தானியேல் 11:13–16 ( கி. மு. 534 )**

13) "சில வருஷங்கள் சென்றபின்பு வடதிசை ராஜா திரும்ப முந்தின சேனையிலும் பெரிதான சேனையைச் சேர்த்து, மகா பெரிய சேனையோடும் வெகு சம்பத்தோடும் நிச்சயமாய் வருவான்.

14) “அக்காலங்களில் தென்றிசை ராஜாவுக்கு விரோதமாக அநேகர் எழும்புவார்கள்; அப்பொழுது உன் ஜனத்திலுள்ள துண்டரிக்கக்காரரின் புத்திரர் தரிசனத்தை நிறைவேற்றத் தங்களை உயர்த்துவார்கள்.

15) “வடதிசை ராஜா வந்து, கொத்தளம் போட்டு, அரணான நகரங்களைப் பிடிப்பான்; தென்றிசை ராஜாவின் புயபலங்களும் அவன் தெரிந்து கொண்ட ஜனமும் நில்லாமற்போம்; எதிர்க்கிற தற்குப் பெலன் இராது.

16) “ஆகையால் அவனுக்கு விரோதமாக வருகிறவன் தன் இஷ்டப்படிச் செய்வான்; அவனுக்கு முன்பாக நிலை நிற்பவன் ஒருவனும் இல்லை; அவன் சிங்காரமான தேசத்தில் தங்குவான்; எல்லாம் அவன் கைவசமாகும்”.

**நிறைவேறுதல் :-**

பதினான்கு ஆண்டுகள் உருண்டோடின. சீரியாவின் அரசன் மூன்றாம் அந்தியோக்கஸ் தன் தோல்வியிலிருந்து மீண்டு தன் சேனையைப் பலப்படுத்திக் கொண்டான். இதற்கிடையில் எகிப்திய மன்னன் தாலமி பிலோபேட்டர் மரித்து அவனுடைய நான்கு அல்லது ஐந்து வயதான தாலமி எபிபெனஸ் ( Ptolemy V Epiphanes) என்பவன் அரசனான்.

சீரிய மன்னன் மூன்றாம் அந்தியோக்கஸ் எகிப்தை எப்படியும் ஜெயிக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் பெரிய சேனையோடும், அச்சேனைக்குச் சம்பளம் கொடுக்கவும், மற்ற செலவுகளுக்காகவும் பெரும் பணத்தை சேகரித்து எடுத்துக் கொண்டு புறப்பட்டான். மாசிடோனியா நாட்டின் மன்னன் பிலிப் என்பவன் சீரிய மன்னனோடு கூட்டு சேர்ந்து கொண்டான்.

ஆனால் சிறுவனான எகிப்து மன்னன் தாலமி எபிபெனசுக்கோ அவனுடைய தகப்பனாருக்கு எதிரிகளாயிருந்த மந்திரிகளும், அவன் தகப்பன் கொடுமைப்படுத்தி கொலை செய்த யூதரின் பந்துக்களும் விரோதிகளாயிருந்தனர். அவர்களைத்தான் துண்டரிக்கக்காரர் என்ற முன்னுரைப்பில் கூறப்பட்டிருக்கிறது. ஆகவே சீரிய மன்னன் பலவானாகி தன் இஷ்டப்படி நடந்து கொண்டான். அரணான நகரங்கயெல்லாம் பிடித்தான். சீதோன் நகரைப் பிடித்தான்; அதன் பின் பலஸ்தீனா நாட்டையும் பிடித்துக் கொண்டான். இவ்விதமாக 13–16 ஆம் வசனங்களில் கூறப்பட்ட முன்னுரைப்பு நிறைவேறியது.

**முன்னுரைப்பு :– தானியேல் 11:17 – (கி. மு. 534 )**

17) "தன் (சீரியா ராஜா) ராஜ்யத்தின் வல்லமையோடெல்லாம் தானும் தன்னோடேகூடச் செம்மை மார்க்கத்தாரும் வர, இவன் தன் முகத்தைத் திருப்புவான்; இப்படிச் செய்து கெடுதியுண்டாகும்படி அவனுக்கு ஒரு கன்னிப் பெண்ணைக் கொடுப்பான்; ஆனாலும் அவளாலே ஸ்திரம் பெறான்; அவள் அவன் பட்சத்தில் நில்லாள்".

**நிறைவேறுதல் :–**

சீரிய அரசன், மூன்றாம் அத்தியோக்கஸ் (கி.மு. 223–187) பலஸ்தீனா நாட்டைத் தன் வசமாக்கிக்கொண்ட பின் அங்கிருந்த யூதரையும் (செம்மை மார்க்கத்தார்) தனக்கு உதவியாகச் சேர்த்துக் கொண்டு எகிப்து அரசன் தாலமி எபிபெனஸுக்கு விரோதமாய் புறப்பட்டான். எகிப்தை தன் நாட்டோடு சேர்த்துக் கொள்வதற்கு ஒரு உபாயத்தைக் கையாண்டான். அதாவது தன் அழகிய மகள் கிளியோ பாட்ரா (Cleopatra) என்பவளை 5 வது தாலமிக்கு மணம் முடித்து அதன் மூலம் அந்நாட்டைக் கைப்பற்றலாம் என்று எண்ணினான். தன் மகள் எப்படியும் தனக்குச் சாதமாகச் செயல்படுவாள் என்று எண்ணினான். அப்படியே இருவருக்கும் திருமணம் முடிந்தது; ஆனால் அந்தியோக்கஸ் எண்ணியபடி கிளியோபாட்ரா தன் தகப்பனுக்கு அனு சரணையாகத் தன் கணவனைக் காட்டிக் கொடுக்கவில்லை. மாறாக, தன் கணவனுக்கு அனுசரணையாக அந்தியோக்கஸுக்கு விரோதமாக ரோம அரசனோடு கூட்டு வைத்துக் கொள்ள தூது போனாள். அந்தி யோக்கஸின் தந்திரம் பலிக்கவில்லை. இவ்விதமாக தானியேல் 11:17 ஆம் வசனத்தில் கூறப்பட்ட முன்னறிவிப்பு நிறைவேறியது.

**முன்னுரைப்பு :– தானியேல் 11:18–19 ( கி. மு. 534 )**

18) "பின்பு இவன் தன் முகத்தைத் தீவுகளுக்கு நேராகத் திருப்பி, அநேகந் தீவுகளைப் பிடிப்பான்; ஆனாலும் ஒரு சேனாபதி இவன் செய்கிற நிந்தையை ஒழியப்பண்ணுவதுமல்லாமல், இவன் செய்த நிந்தையினிமித்தம் இவனுக்குச் சரிக்குச் சரிக்கட்டுவான்.

19) "ஆகையால் தன் முகத்தைத் தன் தேசத்தின் அரண் களுக்கு நேராகத் திருப்புவான்; அங்கே இடறிவிழுந்து காணப் படாமற் போவான்".

**நிறைவேறுதல் :–**

எகிப்தைப் பிடிப்பதற்குத் தான் கையாண்ட தந்திரம்

பலிக்காமல் போகவே, நாடுகளைப் பிடிக்க வேண்டும் என்ற ஆவலில் அவன் (மூன்றாம் அந்தியோக்கஸ்) தன் கவனத்தை மத்தியதரைக் கடலிலுள்ள சில தீவுகளைப் பிடிப்பதில் செலுத்தினான். அச்சமயத்தில் ரோமர் தங்களுடைய ஆதிக்கத்தை மத்தியதரைக் கடலிலும், அதைச் சுற்றியுள்ள நாடுகளிலும் விரிவுபடுத்திக் கொண்டிருந்தார்கள். ஆகவே சீரிய மன்னன் தங்களுடைய எல்லைக்குள் நுழைவதை விரும்பாதவர்களாக சீரிய மன்னனை விரட்டியடிக்கும்படி தங்களுடைய முக்கிய சேனையை அனுப்பினர். அச்சேனை மூன்றாம் அந்தியோக்கஸின் சேனையைத் தோற்கடித்து ஐரோப்பிய பகுதிகளிலிருந்து விரட்டியது. மூன்றாம் அந்தியோக்கஸ் பின்வாங்கி தன் அரணான அந்தியோகியாவிற்குப் போய்ச் சேர்ந்தான். அதன்பின் ரோம அரசோடு செய்து கொண்ட ஒப்பந்தப்படி ரோம அரசுக்கு ஒரு பெரிய தொகையைக் கப்பமாகக் கட்ட வேண்டியவனானான். ஆனால் கையில் பணமில்லாதபடியால் எலிமாயிஸ் (Elymais) என்ற மாகாணத்திலிருந்த பிரபலமான ஜூப்பித்தரின் கோவிலைக் கொள்ளையடிக்க முயற்சித்தான். இதை அறிந்த அப்பகுதி மக்கள் கோபமடைந்து அவனைக் கொன்று போட்டார்கள். இவ்வாறாக 'அங்கே இடறி விழுந்து காணப்படாமற்போவான்' என்ற முன்னறிவிப்பு வார்த்தைக்கு வார்த்தை நிறைவேறியது.

**முன்னுரைப்பு :- தானியேல் 11:20. (கி.மு. 534)**

20) "செழிப்பான ராஜ்யத்தில் தண்டல்காரனைத் திரியப் பண்ணுகிற ஒருவன் தன் ஸ்தானத்தில் எழும்புவான்; ஆகிலும் சில நாளைக்குள் கோபமில்லாமலும் யுத்தமில்லாமலும் நாசமடைவான்".

**நிறைவேறுதல்:-**

மூன்றாம் அந்தியோக்கஸ் கொலை செய்யப்பட்டபின் ( கி.மு. 187), நான்காம் செலூக்கஸ் பிலோபேட்டர் (Seleucus IV Philopater) (கி.மு. 187-175) தன் தகப்பன் ஸ்தானத்திற்கு வந்தான். தன் தகப்பன் ரோமரோடு ஒப்பந்தம் செய்து கொண்டபடி ரோம இராயனுக்கு வருடா வருடம் 1000 தாலந்து பொன் கப்பமாகக் கட்ட வேண்டியதிருந்தது. இப்பெரிய தொகையைச் சேகரிக்க ஹெலியோடோரஸ் என்பவனை நியமித்தான். (2 மக்கபேயர் 3:7). எருசலேம் தேவாலயத்தில் அதிக செல்வம் குவிக்கப்பட்டிருக்கிறதென்றும் அதைக் கைப்பற்றிவர ஹெலியோடோரஸ் பணிக்கப்பட்டான். ஹெலியோடோரஸ் எருசலேம் தேவாலயத்திற்குப் போய் அங்குள்ள திரவியத்தைக் கைப்பற்ற முயன்றபொழுது ஜனங்களும்

பிரதான ஆசாரியனும் மற்ற ஆசாரியர்களும் ஆலயத்தின் முன் நெடுங்கிடையாய் விழுந்து ஆண்டவரிடம் மன்றாடினார்கள். அப்பொழுது ஆச்சரியமான பிரகாரமாய் விலையுயர்ந்த ஆடைகளை அணிந்த பயங்கரத்துக்குரிய ஒருவர் ஒரு குதிரையின் மேல் தோன்றினார். அவரைக் கண்டதும் ஹெலியோடோரஸின் மனிதர் பயத்தினால் கீழே தள்ளப்பட்டார்கள். குதிரை வலிமையுடன் ஹெலியோடோரசை தன் முன்னங்கால்களால் உதைத்துத் தள்ளியது; அப்போது அழகிய ஆடைகள் அணிந்த இரண்டு வாலிபர் அவன் இரண்டு பக்கமும் நின்று அவனை விடாமல் அடித்துக் காயப்படுத்தி அவனை ஒரு நாற்காலியில் வைத்து வெளியே கொண்டு போனார் கள்; அவன் மூர்ச்சையானான். பின்னர் அவனுக்கு உயிர் பிச்சை கொடுத்த ஆண்டவருக்குக் காணிக்கை செலுத்தி திரும்பிப் போ னான். (இச்சம்பவம் 2 மக்கபேயர் மூன்றாம் அதிகாரத்தில் அழகாக விஸ்தரித்துக் கூறப்பட்டிருக்கிறது. – (தயவு செய்து ரோமன் கத்தோலிக்க வேதாகமத்தில் இதை வாசித்துப் பார்க்கவும்)

பின்னர், சீரிய அரசன் நான்காம் செலூக்கஸ் பிலோபேட்டர் ஹெலியோடோரசினால் கொலை செய்யப்பட்டான். ஆக, நான்காம் செலூக்கஸ் "கோபமில்லாமலும் யுத்தமில்லாமலும் நாசமடைவான்" என்ற வேதவாக்கின்படி தான் நம்பிய வேலைக்காரனால் நம்பிக்கை துரோகம் செய்யப்பட்டு கொலை செய்யப்பட்டதினால் ஆண்டவரின் முன்னுரைப்பு வார்த்தைக்கு வார்த்தை நிறைவேறிற்று.

**முன்னுரைப்பு :– தானியேல் 11 : 21 (கி.மு. 534)**

21)"அவன் (நான்காம் செலூக்கஸ் பிலோபேட்டர்) ஸ்தானத்தில் அவமதிக்கப்பட்டவன் ஒருவன் எழும்புவான்; இவனுக்கு ராஜ்யபாரத்தின் மேன்மையைக் கொடாதிருப்பார்கள்; ஆனாலும் இவன் சமாதானமாய் நுழைந்து, இச்சகம் பேசி, ராஜ்யத்தைக் கட்டிக் கொள்ளுவான்".

**நிறைவேறுதல் :–**

நான்காம் செலூக்கஸ் பிலோபேட்டரின் மகன் டெமட்ரியஸ் (Demetrius) என்பவன் தான் சரியான வாரிசு. ஆனால் அச்சமயத் தில் அவன் ரோமாபுரியில் பிணைக் கைதியாய் வைக்கப்பட்டிருந்தான்; ஆகையால் உடனே செயல்பட முடியவில்லை. ஹெலியோடோரஸ் தான் சிம்மாசனத்தைக் கைப்பற்ற வேண்டும் என்ற ஆவலில் செயல்பட்டான். ஆனால் அநேகர் எகிப்திய ராஜாவை அரசனாக்கி விட வேண்டும் என்று எண்ணினர்.

இச்சந்தர்ப்பத்தில் செலூக்கஸ் பிலோபேட்டரின் சகோதரன் அந்தியோக்கஸ் என்பவன் அத்தேனே பட்டணத்தில் இருந்தான். அவன் தன் சகோதரன் மரித்துப் போனதைக் கேள்விப்பட்டவுடன் சீரியாவுக்கு வந்து அங்குள்ள சிற்றரசர்களுக்குப் பல சலுகைகள் செய்து கொடுப்பதாக வாக்குக் கொடுத்து அவர்களைத் தன் வசப்படுத்திக் கொண்டு, தேசத்தின் பிரமுகர்களை முகஸ்துதி பேசித் தன் வலைக்குள் போட்டுக் கொண்டு, சாதா பிரஜைகளுக்கு, தான் அரசனானால் பல சலுகைகள் செய்து தருவதாகவும், ரோமாபுரியில் பிணைக் கைதியாயிருக்கும் டெமட்ரியஸ் வரும் வரை தான் அரசை தற்காலிகமாக மேற்பார்வை பார்த்துக் கொள்ளப் போவதாகவும், ரோம அரசிடம் தான் அவர்களுக்கு உண்மையுள்ள அடிபணிந்து நடக்கும் அரசனாக இருப்பேன் என்று வாக்குப் பண்ணியும், முன்னுரைப்பில் கூறப்பட்டிருப்பது போல் "சமாதானமாய் நுழைந்து, இச்சகம் பேசி" அரியணையில் ஏறினான். பட்டத்துக்கு வரக்கூடிய இன்னொரு நபர் டெமட்ரியஸின் தம்பி; இவன் குழந்தையாயிருந்தான்; அவன் இலகுவில் கொலை செய்யப்பட்டான். இந்நிகழ்ச்சிகளால் நான்காம் செலூக்கஸ் பிலோபேட்டரை கொலை செய்த ஹெலியோடோரஸ் சரித்திரத்தில் இல்லாதபடி எங்கோ போய் மறைந்துவிட்டான். ஆகவே நான்காம் அந்தியோக்கஸ் எபிபெனஸின் ஆட்சி அச்சமயத்திற்கு நிரந்தரமாயிற்று. அவன் கி.மு. 175 முதல் 164 ஆம் ஆண்டு வரை அரசாண்டு முன்னுரைப்பை நிறைவேற்றினான்.

**முன்னுரைப்பு:- தானியேல் 11 : 22-23 (கி.மு. 534)**

22)"பிரவாகமாய் வருகிற சேனைகள் இவனாலே பிரவாகமாய் முறியடிக்கப்படும்; உடன்படிக்கையின் தலைவனும் முறிக்கப்படுவான்".

23)"ஏனெனில் அவனோடே சம்மந்தம் பண்ணின நாட்கள் முதல் அவன் சூதாய் நடந்து, கொஞ்சம் ஜனங்களோடே புறப்பட்டு வந்து பெலங்கொள்ளுவான்".

**நிறைவேறுதல் :-**

நான்காம் அந்தியோக்கஸ் அரியணை ஏறினாலும் அவனுக்கு இடறல்கள் அதிகமிருந்தன. எகிப்து அரசன் பலத்த சேனையுடன் இவனை எதிர்த்தான். நாலாம் அந்தியோக்கஸும் பலத்த சேனையுடன் போய் அவனை ஜெயித்தான். ரோம அரசு வெகு விரைவில்

தன் இராஜ்யத்தை விஸ்தரித்துக் கொண்டு வந்தது இவனுக்கு ஒரு பெரும் தடையாயிருந்தது. அதே சமயத்தில் யூத ஜனங்களும், தங்கள் பிராதான ஆசாரியன் மூன்றாம் ஒனியாஸ் (Onias III) இன் தலைமையில் தங்கள் அதிருப்தியைத் தெரிவித்தனர். 22ஆம் வசனத்தில் கூறப்பட்டபடி "உடன்படிக்கையின் தலைவன்", அதாவது உடன்படிக்கையின் மக்களாகிய யூதரின் தலைவன், "முறிக்கப்படுவான்". நடந்தது என்னவென்றால் நான்காம் அந்தியோக்கஸ் அப்பொழுது பிரதான ஆசாரியனாயிருந்த மூன்றவது ஒனியாஸ் (Onias III) என்பவனை பதவி நீக்கம் செய்துவிட்டு அவனுடைய தம்பி ஜேசன் (Jason) என்பவனிடம் பெரும் தொகையைப் பெற்றுக் கொண்டு அவனை பிரதான ஆசாரியனாக்கினான். சில நாட்களில் அந்தியோக்கஸின் அடியாள் மூன்றாம் ஒனியாஸைக் கொலை செய்து விட்டான். ஆனால் அந்தியோக்கஸ் இதோடு நிற்கவில்லை; சில நாட்கள் கழித்து ஜேசனுடைய சகோதரன் மெனலாஸ் என்பவனிடம் இன்னும் அதிகமான தொகையைப் பெற்றுக் கொண்டு தன்னுடைய அடியாட்களை வைத்து ஜேசனை அப்பதவியிலிருந்து நீக்கிவிட்டு மெனலாசை (Menelaus) பிரதான ஆசாரியனாக்கினான்.

நான்காம் அந்தியோக்கஸ் அரியணை ஏறும்போது அவனுடைய நிலைமை அதிக மோசமாய்த் தானிருந்தது; தனியாய் தன் தந்திர யுக்திகளைப் பிரயோகித்துச் சிறுகச் சிறுக தன்னுடைய பதவியைப் பலப்படுத்திக் கொண்டதினால் 22, 23ஆம் வசனங்களின் முன்னுரைப்பை நிறைவேற்றினான்.

**முன்னுரைப்பு :– தானியேல் 11 : 24–26 (கி.மு. 534)**

24)"தேசம் சுகவாழ்வோடும் சம்பூரணத்தோடும் இருக்கையில், அவன் உட்பிரவேசித்து, தன் பிதாக்களும், தன் பிதாக்களின் பிதாக்களும் செய்யாததைச் செய்வான்; கொள்ளையிட்டுச் சூரையாடி, பொருளை அவர்களுக்கு இறைத்துப் பங்கிட்டு, அரண்களுக்கு விரோதமாகத் தனக்குள் உபாயங்களை யோசிப்பான்; சிலகால மட்டும் இப்படியிருக்கும்.

25)"பின்னும் தென்றிசை ராஜாவுக்கு விரோதமாகப் பெரிய சேனையோடே போர் செய்யத் தன் வல்லமையையும் தன் ஸ்திரத்தையும் எழுப்புவான்; அப்பொழுது தென்றிசை ராஜா மிகவும் பலத்த பெரிய இராணுவத்தோடே போய் யுத்தங்கலப்பான்; ஆனாலும் அவர்கள் அவனுக்கு விரோதமாகத் துராலோசனை பண்ணியிருந்தபடியால், அவன் நிற்கமாட்டான்".

26)''அவனுடைய போஜனங்களைச் சாப்பிடுகிறவர்கள் அவனை நாசப்படுத்துவார்கள்; ஆகையால் அவனுடைய இராணுவம் பிரவாகமாய் வரும்; அநேகர் கொலையுண்டு விழுவார்கள்''.

**நிறைவேறுதல்:-**

நான்காம் அந்தியோக்கஸ் சீரியா பகுதி, ஆசியா பகுதி இன்னும் சுற்றியுள்ள நாடுகளில் தன் அதிகாரத்தை நிலைப்படுத்திக் கொண்டபின், அப்பிரதேசங்களிலிருந்த கோவில்கள், தனவந்தர்கள், சிநேகிதர்கள் முதலியவர்களிடமிருந்த ஆஸ்திகளையெல்லாம் சேகரித்து (தன் முன்னோர்கள் செய்யாத அளவுக்குக் கொள்ளையடித்து) அவைகளையெல்லாம் சாதாரண ஏழை மக்களுக்குப் பங்கிட்டுக் கொடுத்து அவர்களுடைய நன்மதிப்பைச் சம்பாதித்துக் கொண்டான். பொது ஜனங்கள் தன்பக்கத்தில் இருக்கிறார்கள் என்று நிச்சயித்துக் கொண்ட பின் ஒரு பெரிய சேனையைத் திரட்டிக் கொண்டு எகிப்து அரசன் ஆறாம் தாலமி பிலோமேட்டருக்கு (Ptolemy VI Philometer) (கி.மு.181–146) விரோதமாய் படையெடுத்தான். எகிப்து அரசன் ஆறாம் தாலமி தன் சேனைத்தலைவர்களின் தலைமையில் தன் படைகளை அனுப்பி வைத்தான். நான்காம் அந்தியோக்கஸ் தந்திரமாய் படைத் தலைவர்களைத் தனக்குச் சாதகமாக நடந்துகொள்ள வைத்துவிட்டான். ஒரு ஆண்டிற்குள் நான்காம் அந்தியோக்கஸ் அநேகமாக முழு எகிப்து நாட்டையும் தன் கைவசப்படுத்திவிட்டான். (1 மக்கபேயர் 1:17–20). ஆறாம் தாலமி பிலோமேட்டர் தோல்வியடைந்து தன் தேசத்தின் தென் பகுதிக்கு ஓடி தப்பித்துக் கொண்டான். என்றாலும் அவன் ஒரு பெரிய சேனையைத் திரட்டி அந்தியோக்கஸோடு போருக்கு வந்தான்.

**முன்னுரைப்பு :- தானியேல் 11 : 27–28 (கி.மு. 534)**

27)''இந்த இரண்டு ராஜாக்களின் இருதயமும் தீமை செய்ய நினைக்கும்; ஒரே பந்தியிலிருந்து பொய் பேசுவார்கள்; ஆனாலும் அது வாய்ப்பதில்லை; குறித்த காலத்துக்கு முடிவு இன்னும் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும்.

28) "அவன் மகா சம்பத்தோடே தன் தேசத்துக்குத் திரும்பி, தன் இருதயத்தைப் பரிசுத்த உடன்படிக்கைக்கு விரோதமாக வைத்து, அதற்கானதைச் செய்து, தன் தேசத்துக்குத் திரும்பிப் போவான்."

**நிறைவேறுதல் :-**

சீரிய அரசன் நான்காம் அந்தியோக்கசுக்கும் எகிப்து அரசன்

தாலமி பிலோமேட்டருக்கும் பெலூசியம் என்ற இடத்தில் யுத்தம் நடந்தது. அதில் எகிப்திய மன்னன் தோற்றானாயினும், இருவரும் ஒரு சமாதான ஒப்பந்தத்திற்காக ஒரே மேசையில் உட்கார்ந்து, சாப்பிட்டுப் பேசினார்கள் என்பது தெரிகிறது; ஆனால் இருவரும் மனம் விட்டு உண்மையைப் பேசாமல் இருவருமே ஒருவனை ஒருவன் கெடுக்க நினைத்து பொய் பேசினார்கள். அவர்கள் பேச்சு சமாதானத்தில் முடியவில்லையென்றாலும் நான்காம் அந்தியோக்கஸ் பெரும் செல்வத்தைப் பெற்றுக் கொண்டு தன் நாட்டுக்குப் புறப்பட்டான்.

எகிப்திய அரசனோடு நடந்த யுத்தத்தில் யூதர்கள் தனக்கு ஆதரவளிக்கவில்லை என்று சீரிய மன்னன் நான்காம் அந்தியோக்கஸுக்கு அதிகக் கோபம். ஆகையால் யூதருக்கும் பரிசுத்த நகரமாகிய எருசலேமுக்கும் விரோதமாக நடவடிக்கை எடுக்கத் துவங்கினான்.

**முன்னுரைப்பு :- தானியேல் 11 : 29 – 30 (கி. மு. 534)**

29) "குறித்த காலத்திலே திரும்பவும் தென்தேசத்திற்கு வருவான்; ஆனாலும் அவனுடைய பின் நடபடி முன் நடபடிபோல் இராது.

30) "அவனுக்கு விரோதமாக கித்தீமின் கப்பல்கள் வரும்; அதினால் அவன் மன நோவடைந்து, திரும்பிப் போய், பரிசுத்த உடன்படிக்கைக்கு விரோதமாகக் குரோதங்கொண்டு, அதற்கானதைச் செய்து, பரிசுத்த உடன்படிக்கையைத் தள்ளினவர்களை அநுசரிப்பான்".

**நிறைவேறுதல் : –**

நான்காம் அந்தியோக்கஸ் (குறித்த காலத்திலே) இரண்டு ஆண்டுகள் கழித்து திரும்பவும் எகிப்து தேசத்தின்மேல் படையெடுத்தான். ஆனால் அவனுக்கு ஒரு ஆச்சரியம் காத்திருந்தது; அதாவது எகிப்திய அரசன் தாலமி பிலோமேட்டரும் அவன் சகோதரன் ஒருவனும் கூட்டுச் சேர்ந்து ஒற்றுமையாய் நான்காம் அந்தியோக்கஸை எதிர்த்தனர். அதுமட்டுமல்ல, அவர்கள் விரைவில் வளர்ந்து வரும் ரோம அரசுடன் சமாதான ஒப்பந்தம் செய்து கொண்டபடியால் ரோம கப்பல்படை கித்தீமிலிருந்து (கிரேக்க நாட்டின் சமீபத்திலிருக்கும் ஐரோப்பிய நாடுகளும், தீவுகளும்) எகிப்துக்கு உதவுவதற்காக அந்தியோக்கஸுக்கு விரோதமாக வந்தன. இதை அறிந்த அந்தியோக்கஸ் மனசோர்வடைந்து எகிப்தின் மேல் படையெடுப்பதை

நிறுத்தி பலஸ்தீனா நாட்டுக்குள் புகுந்தான். அங்கு அவன் நியமித்த மெனலாஸ் பிரதான ஆசாரியனாகவும் அவனைச் சேர்ந்த சிலரும் அந்தியோக்கஸின் நடவடிக்கைகளை ஆதரித்தனர். ஆகவே அவர் களுக்குச் சில சலுகைகள் காட்டினான்.

**முன்னுரைப்பு : – தானியேல் 11 : 31 ( கி. மு. 534 )**

31) "ஆனாலும் அவனிடத்திலிருந்து புறப்பட்ட சேனைகள் எழும்பி, அரணான, பரிசுத்த ஸ்தலத்தைப் பரிசுத்த குலைச்சலாக்கி, அன்றாட பலியை நீக்கி, பாழாக்கும் அருவருப்பை அங்கே வைப்பார்கள்".

**நிறைவேறுதல் : –**

நான்காம் அந்தியோக்கஸ் எபிபெனஸின் சேனைத் தலைவர் கள் அந்தியோக்கஸின் ஆணைப்படி யூதரை பெரும் கொடுமைக்குள் ளாக்கி, ஆண்களையும், பெண்களையும், பிள்ளைகளையும் கோட்டைச் சுவரின்மேலிருந்தும், மச்சுவீடுகளின் மேலிருந்தும் தள்ளிவிட்டு அல்லது வீசி எறிந்து கொலை செய்தும், அவர்களுடைய வேத புத்தகங்களை தீக்கிரையாக்கியும், தேவாலயத்தின் செல்வத்தை யெல்லாம் கொள்ளையடித்தும், மகாபரிசுத்த ஸ்தலத்துக்குள் நுழைந்து அங்கே கிரேக்கருடைய தெய்வமாகிய ஜீயஸ் ஒலிம்பஸின் சிலையை கி. மு. 168 ஆம் ஆண்டு நிறுவியும், தேவாயலத்தில் யூதருக்கு அருவருப்பான பன்றியைப் பலி செலுத்தி தேவாலயத்தைத் தீட்டுபடுத்தினான். அச்சமயம் அவன் 40,000 யூதரைக் கொலை செய்தானென்றும் 80,000 யூதரை அடிமைகளாக விற்றானென்றும் சரித்திரம் கூறுகிறது. இவ்வாறு 31 ஆம் வசனத்தில் முன்னுரைக்கப் பட்டவைகள் வார்த்தைக்கு வார்த்தை நிறைவேறின.

**முன்னுரைப்பு : – தானியேல் 11 : 32 – 35 (கி. மு. 534)**

32) "உடன்படிக்கைக்குத் துரோகிகளாக இருக்கிறவர்களை இச்சகப் பேச்சுகளினால் கள்ள மார்க்கத்தாரராக்குவான்; தங்கள் தேவனை அறிந்திருக்கிற ஜனங்கள் திடங்கொண்டு, அதற்கேற்றபடி செய்வார்கள்.

33) "ஜனங்களில் அறிவாளிகள் அநேகருக்கு அறிவை உணர்த்துவார்கள்; அநேக நாள் மட்டும் பட்டயத்தினாலும், அக்கினி யினாலும், சிறையிருப்பினாலும், கொள்ளையினாலும் விழுவார்கள்.

34) "இப்படி அவர்கள் விழுகையில் கொஞ்சம் ஒத்தாசையால்

சகாயமடைவார்கள்; அப்பொழுது அநேகர் இச்சகவார்த்தைக ளோடே அவர்களை ஒட்டிக் கொள்வார்கள்.

35) "அறிவாளிகளைப் புடமிடுகிறதற்கும், சுத்திகரிக்கிற தற்கும், வெண்மையாக்குகிறதற்கும் அவர்களில் சிலர் விழுவார்கள்; முடிவு கால பரியந்தம் இப்படியிருக்கும்; குறித்த காலம் வர இன்னும் நாள் செல்லும்".

**நிறைவேறுதல் : –**

அலெக்சான்டர் காலத்திலிருந்தே கிரேக்க கலாச்சாரம் புனித பூமியாகிய பலஸ்தீனாவிலும் பரவத் துவங்கியது. செல்வந்தர்களான யூதர்களும், சில ஆசாரியர்களும் கூட கிரேக்க கலாச்சாரத்தில் மோகங்கொண்டு கிரேக்க விக்கிரகங்களுக்கு பலியிட்டு தங்களைத் கெடுத்துக் கொண்டார்கள். இவர்கள் ஹெலினிஸ்ட்கள் (Hellenists) என்று அழைக்கப்பட்டனர். இன்னொரு சாரார் யூத மார்க்கத்தில் பக்தி வைராக்கியம் கொண்ட, பொதுவாக ஏழை யூதர்கள். இவர்கள் கிரேக்க விக்கிரக வணக்கத்தையும் கலாச்சாரத்தையும் எதிர்த்து நின்றவர்கள். இவர்கள் ஹஸிடிம் (Hasidim) என்று அழைக்கப் பட்டனர்.

அந்தியோக்கஸ் எபிபெனஸ் யூதர்களில் பெரும்பாலோர் ஹெலினிஸ்ட்டுகள் என்று எண்ணி கி.மு. 168 ஆம் ஆண்டு யூத மார்க்கம் சட்ட விரோதமானது என்று பிரகடனப்படுத்தி, 40,000 பேரைக் கொன்று, 80,000 பேரை அடிமைகளாக விற்று, தேவாலயத் தைக் கொள்ளையடித்து, பன்றியை தேவாலயத்தில் பலி செலுத்தி தேவாலயத்தைத் தீட்டுப்படுத்தி, ஜீயஸ் ஒலிம்பஸ் (Jeus Olimpus) என்ற கிரேக்க தெய்வத்தின் சிலையை தேவாலயத்தில் நிறுவி அதை ஒரு புறஜாதி ஆலயமாக்கினான். அவன் நியமித்த மெனலாஸ் என்ற பிரதான ஆசாரியன் அவனை திருப்திப்படுத்த சிலைகளுக்குத் தூபம் காட்டி பலி செலுத்தினான். அதுமட்டுமல்ல மெனலாஸ் வைதீக யூதர்களைத் தேடிப்பிடித்து படை வீரருக்குக் காட்டிக்கொடுத்து அவர்களைக் கொலை செய்யவும் வகை செய்தான். அதோடு நில்லாமல் அந்தியோக் கஸால் முதலாவது பதவி நீக்கம் செய்யப்பட்ட மூன்றாவது ஒனியாஸ் என்ற பிரதான ஆசாரியனையும் கொலை செய்வித்தான். இப்படியாக 32, 33 ஆம் வசனங்களின் முன்னறிவிப் புகள் நிறைவேறின.

இந்நடவடிக்கைகளால் வைதீக யூதர்களுக்கு (Hasidim)

அதிருப்தி ஏற்பட்டது. எருசலேமுக்கு 17 மைல்கள் வடமேற்கே மொடீன் (Modein) என்ற கிராமத்தில் கிரேக்க தெய்வம் ஜீயசுக்குப் பன்றியை பலி செலுத்த வேண்டும் என்று கிரேக்க படை வீரர் வற்புறுத்தியபொழுது மத்தத்தியாஸ் (Mattathias) என்ற வயோதிப ஆசாரியன் மறுத்ததோடு தன்னை பலியிடும்படி வற்புத்திய படை வீரனையும், தனக்குப் பதிலாக பலி செலுத்த ஒப்புக்கொண்ட யூதனையும் கி. மு. 167 ஆம் ஆண்டு கொலை செய்துவிட்டு, அவனும் அவனுடைய ஐந்து ஆண் மக்களும் பக்கத்து மலைகளுக்கு ஓடி விட்டனர். வெகு சீக்கிரத்தில் அநேக வைராக்கிய யூதர் (Hasidim) அவர்களுக்கு ஆதரவாகக்கூடினர்.

இக்குடும்பத்தினர் ஹஸ்மோனியர் (Hasmonaeans) என்று அவர்கள் குடும்பப் பெயரிலும், அவர்களின் பிற்கால தலைவன் யூதாஸ் மக்கபே என்பவனின் பெயரில் மக்கபேயர் (Maccabeus) என்றும் அழைக்கப்பட்டனர்.

சில நாட்களில் மத்தத்தியாஸ் இறந்து போனார். அவருடைய மூன்றாவது மகன் யூதாஸ் மக்கபேயஸ் (Judas Maccabeus) மத்தத்தியாஸின் ஸ்தானத்தை எடுத்து அந்தியோக்கஸ் எபிபென ஸின் படைகளோடு யுத்தம் பண்ணத்தொடங்கினான்.

அந்தியோக்கஸ் எபிபெனஸின் படைத் தலைவன் லைசியாஸ் (Lysias) என்பவன் 50,000 படை வீரரோடு யூதாஸ் மக்கபேயோடு யூத்தத்திற்கு வந்தான். யூதாசோடு இருந்த யூத வீரர் 10,000 பேர் தான். ஆனால் யூதாஸ் வெற்றியடைந்தான். லைசியாஸ் திரும்பவும் 65,000 படை வீரரோடு யூதாசை எதிர்த்தான். இந்தத் தடவையும் ஆண்டவர் யூதாஸ் மக்கபேக்கு ஜெயம் கொடுத்தார்.

யூதாஸ் மக்கபே முதல் காரியமாக எருசலேம் தேவாலயத் திற்குப் போய் அங்கிருந்த சீரிய படைகளை விலக்கிவிட்டு, தேவால யத்தைப் பழுது பார்த்து, கி.மு. 165 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 25 ஆம் தேதி தேவாலயத்தைச் சுத்திகரித்து, மோசேயின் நியாயப்பிரமா ணங்களின்படி ஆராதனைகளையும் பலிகளையும் செலுத்த ஆவன செய்தான். 1 மக்கபேயர் 4 : 36–58 ஆம் வசனங்களில் யூதாஸ் மக்கபேயஸினால் தேவாலயம் சுத்தரிக்கப்பட்டதைப் பற்றி விஸ்தார மாகக் கூறப்பட்டிருக்கிறது.

தேவாலயத்தைச் சுத்திகரித்து மோசேயின் கட்டளைகளின் படி ஏழு கிளைகள் கொண்ட பொன் குத்துவிளக்கை ஏற்றுகையில்,

அங்கே ஒரு சிறு குப்பியில் கொஞ்சம் எண்ணெ மட்டும் இருப்பதைக் கண்டனர். தேவாலய பிரதிஷ்டைப் பண்டிகையை (யோவான் 10:22) கொண்டாட ஒரு நாளைக்கு மட்டும் போதுமான எண்ணெய் தானிருந்தது. ஆனால் அவர்கள் அதைக் கொளுத்தியபொழுது தங்களுக்கு வேறு எண்ணெய் கிடைக்குமட்டும் எட்டு நாட்கள் இரவும் பகலும் அற்புதமாக அந்த குத்து விளக்கு எரிந்து கொண்டேயிருந்தது. தேவாலய பிரதிஷ்டைப் பண்டிகை அது முதல் எட்டு நாட்கள் அநுசரிக்கப்பட்டு, அதோடு கூட குத்துவிளக்கும் எட்டு கிளைகள் கொண்ட குத்துவிளக்காகச் செய்யப்பட்டது. இந்தப் பண்டிகை ஹனூக்கா (Hanukkah) என்று அழைக்கப்பட்டது. சில குத்து விளக்குள் ஒன்பது கிளைகளுள்ளவைகளாகவும் செய்யப்படுவதும் உண்டு. இன்னும் தேவாலயம் யூதாஸ் மக்கபேயஸினால் சுத்திகரிக்கப் பட்டதை நினைவு கூறும் வகையில் எட்டு நாள் பிரதிஷ்டைப் பண்டிகை யூதரால் கொண்டாடப்பட்டு வருகிறது. இந்த குத்துவிளக்கு மெனோரா (Menorah) என்று அழைக்கப்படுகிறது.

இவ்விதமாக தானியேல் 11:32 முதல் 35 ஆம் வசனங்களின் முன்னுரைப்புக்கள் நிறைவேறின. சீரிய அரசன் அந்தியோக்கஸ் எபிபெனஸ் கி.மு. 160ஆம் ஆண்டு மரித்தான். அவனுக்குப் பின் வந்த அவனுடைய சந்ததியரான அரசர்கள் ரோம அரசின் பிடிக்குள் சிக்கி ஏழாம் அந்தியோக்கஸுக்குப் பின் (கி.மு. 130) பெயரே இல்லாமற் போயிற்று.

அதைப் போல யூதாஸ் மக்கபேயசும் கி.மு. 160ஆம் ஆண்டு மரித்தான். அவனுக்குப் பின் யோனத்தான், சீமோன் என்னும் அவனுடைய சகோதரர் கி.மு. 135ஆம் ஆண்டு வரையும், அவர்களுக்குப் பின் யூதாஸ் மக்கபேயுவின் மகன் ஜான் ஹிர்கானசும் (John Hyrcanus) அவனுடைய சந்ததியாரும் கி.மு. 135ஆம் ஆண்டு முதல் கி.மு. 37ஆம் ஆண்டு வரையும் மக்கபேயர் குடும்பத் தார் என்றும் யூத பிரதான ஆசாரியரென்றும் பலஸ்தீனாவை ஆண்டு வந்தனர். கி.மு. 37ஆம் ஆண்டு ரோம அரசின் ஆளுகைக்குள் பலஸ்தீனா நாடு வந்தது. இதுமேயனாகிய ஏரோது ரோம அரசால் கலிலேயாவின் தேசாதிபதியாக நியமிக்கப்பட்டான்.

இவ்விதமாக தானியேலுக்குக் கிடைத்த தரிசனத்தில் கிரேக்க இராஜ்யத்தைப் பற்றிய பகுதியும், கிரேக்க இராஜ்யத்தோடு சம்மந்தப் பட்ட ஹஸ்மோனிய மக்கபேய அரசர்களின் ஆட்சியும் (தானியேல் 11ஆம் அதிகாரம் 35ஆம் வசனம் வரையுள்ள முன்னறிவிப்புகள்) நிறைவேறின.

தீர்க்கதரிசனங்களில் இயேசு கிறிஸ்துவைப்பற்றி முன்னறிவிக்கும் போது முதலாம் வருகையும், இரண்டாம் வருகையும் சில இடங்களில் தொடர்ச்சியாய்க் கூறப்பட்டிருப்பது போல (ஏசாயா 11 : 1 –9; லூக்கா 1:31–33 ஐப் பார்க்கவும்), தானியேல் 11 ஆம் அதிகாரத்திலும் 35 ஆம் வசனம் வரை சீரியா, எகிப்து அரசுக்களைப் பற்றிக் கூறிவிட்டு, 36ஆம் வசனம் முதல் அவ்வதிகாரம் முடியும்வரை (45 ஆம் வசனம் வரை) முன்னுரைக்கப்பட்டிருப்பவைகள் முடிவு காலம், அதாவது அந்திக்கிறிஸ்துவின் காலத்தில் நிறைவேறுபவை என்று தீர்க்கதரிசன ஆராய்ச்சி அறிஞர்கள் கருதுகின்றனர். ஆகவே இப்பாகத்தை "இறுதி காலமும் இயேசுவின் இரண்டாம் வருகையும் என்ற புத்தகத்தில் கவனிப்போம்.

(Source for Chapter 11 - Explanatory Notes given by Thomas Scott, Rector of Aston Samford, Bucks, in the 6 Volume Holy Bible, printed in 1844 and published by Crocker and Brewster, Boston U.S.A.)

# 1335 நாட்கள்

இஸ்ரவேல் ஜனங்களுடைய சரித்திரத்தைக் கவனித்தோமென்றால் அவர்கள் சர்வவல்லமை பொருந்திய ஆண்டவரால் தெரிந்தெடுக்கப்பட்ட ஜனமாயிருந்தும், அவருடைய கற்பனைகளுக்குக் கீழ்ப்படியாமல், விசேஷமாக விக்கிரகாராதனையில் ஈடுபட்டு அவருடைய கோபாக்கினைக்கு உள்ளானபடியால் அவர்களுக்கு ஆண்டவர் வாக்குத்தத்தம் பண்ணிக் கொடுத்த நாட்டிலிருந்து விரட்டப்பட்டு உலகம் முழுவதும் சிதறடிக்கப்பட்டு, பலவிதமான இம்சைகளுக்கும், உபத்திரவங்களுக்கும் ஆளாகி, தோராயமாக 2700 ஆண்டுகள் நாட்டை விட்டு வெளியேற்றப்பட்டதால் அவர்களுக்கு வாக்களிக்கப்பட்ட நாடு புறஜாதியாரால் ஆளப்பட்டு வந்தது. அசீரியர், கிரேக்கர், ரோமர், பைசான்டியர், அரபியர், செல்ஜுக்கியர், சிலுவை போர் வீரர், மமலூக்கியர், ஒட்டமானியர், ஆங்கிலேயர் முதலானவர்கள் இந்த நாட்டை பல பல காலங்களில் ஆண்டு வந்திருக்கின்றனர். கி.பி. 7ஆம் நூற்றாண்டு முதல் இந்த நாடு முஸ்லிம்களால் ஆளப்பட்டு வந்திருக்கிறது. அரபியர், செல்ஜுக்ஸ், மமலூக்கியர், ஒட்டமானிய துருக்கியர் என்பவர்கள் யாவரும் முஸ்லிம்களே.

இதைப் பற்றியும் தானியேல் தீர்க்கதரிசி ஒரு அற்புதமான முன்னறிவிப்பைக் கூறியிருக்கிறார். அதைப் பார்ப்போம்.

**முன்னுரைப்பு :- தானியேல் 12 : 12 (கி.மு. 534)**

12)''ஆயிரத்து முந்நூற்று முப்பத்தைந்து நாள் மட்டும் காத்திருந்து சேருகிறவன் பாக்கியவான்''.

**நிறைவேறுதல் :-**

இவ்வாக்கியத்தில் யூதருக்கு 1335 நாட்களுக்குப் பின் ஆசீர்வாதம் வரும் என்று தானியேல் முன்னறிவித்திருக்கிறார். எண்ணாகமம் 14:34; எசேக்கியேல் 4:4-6 வசனங்களின்படி தீர்க்கதரிசனங்களில் ஒரு நாள் ஒரு வருடத்திற்கு ஈடாகும். அப்படிப் பார்த்தால் 1335 ஆண்டுகள் யூதர்கள் பொறுத்திருக்க வேண்டும்.

கி.பி. 622ஆம் ஆண்டு முஸ்லிம் மதம் முகமது நபியால் ஆரம்பிக்கப்பட்டது. அவ்வருடமுதல் முகமது நபியைப் பின்பற்றிய முகமதியர் அரேபியா, சீரியா, பலஸ்தீனா முதலிய நாடுகளில் தங்கள் மதத்தை பரப்பினர். வெகு சில ஆண்டுகளில் வட ஆப்பிரிக்கா,

ஐரோப்பாவில் பெரும் பாகம், துருக்கி, இன்னும் கிழக்கே மங்கோலியா மட்டும் பரவியது. கி.பி. 637ஆம் ஆண்டு எருசலேம் தேவாலயம் இருந்த இடத்தில் ஓமர் என்ற சுல்தானால் (Mosque of Omar) ஓமர் மசூதி கட்டப்பட்டது. முகமதியர், சிலுவைப் போர் வீரர், இவர்களுக்குள் நடந்த யுத்தங்களிலும் அதிகமாகப் பாதிக்கப்பட்டவர்கள் யூதர்களே. ஓட்டமான் துருக்கியரின் 400 வருட அரசாட்சியில் பலஸ்தீனா நாடு ஒரு பாலைவனமாகவே மாறியது. அப்பிரதேசத்தில் வசித்த யூத மக்களின் எண்ணிக்கையும் வெகுவாகக் குறைந்தது. அரபிய முஸ்லிம்களும் விவசாயத்தில் அக்கரையற்றவர்களாக நிலங்களை தரிசாகப் போட்டுவிட்டனர்.

யூதர்கள் பல பல காலங்களில் பல பல நாடுகளிலிருந்து துரத்தப்பட்டு அநேகமாக உலக நாடுகளிலெல்லாம் சிதறிப் போய், திரும்ப ஆண்டவர் ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு என்ற தங்கள் முற்பிதாக்களுக்கு வாக்குத்தத்தம் பண்ணிக் கொடுத்த நாட்டில் திரும்பக் குடியேறுவோமா என்ற சந்தேகத்தில் ஜீவித்து வந்தனர். இச்சந்தர்ப்பத்தில் ஒரு அரிய நிகழ்ச்சியை ஆண்டவர் உருவாக்கினார். 1914ஆம் ஆண்டு முதலாம் உலக மகா யுத்தம் ஆரம்பமானது. ஐரோப்பாவில் பெரும் பகுதி ஜெர்மானியர் ஆதிக்கத்துக்கு உட்பட்டது. இங்கிலாந்து ஜெர்மெனி நாட்டுக்கு எதிரி. இங்கிலாந்தின் கப்பல்களிலுள்ள பீரங்கிகளை இயக்க அசிடோன் என்ற மருந்து தேவைப்பட்டது. இம்மருந்து அதுவரை ஐரோப்பாவிலிருந்து வரவழைக்கப்பட்ட ஒரு வகை மரத்திலிருந்து செய்யப்பட்டது. ஐரோப்பிய நாடுகள் ஜெர்மெனியின் கையிலிருந்தபடியால் இங்கிலாந்துக்கு அசிடோன் தயார் செய்யக்கூடிய மரங்களில்லாமற்போயிற்று.

அச்சமயத்தில் சைம் வீஸ்மான் (Dr. Chaim Weismann) என்ற யூத விஞ்ஞானி மான்செஸ்டர் நகரில் பல பல பொருள்களிலிருந்து அசிடோன் எப்படி தயாரிக்க முடியும் என்பதை ஆராய்ச்சி செய்து கொண்டிருந்தார். அவருக்கு பிரிட்டிஷ் அரசாங்கத்திலிருந்த மேல் அதிகாரிகள் அநேகரோடு நல்ல தொடர்பு இருந்தது. பிரிட்டனின் முதன் மந்திரி சைம் வீஸ்மானிடம் தங்களுக்கு வேண்டிய அசிடோன் தயார் செய்து கொடுக்கும்படி கேட்டுக் கொண்டார். சைம் வீஸ்மானும் தனக்கு சரியான தொழிற்கூடமும் வேண்டிய அளவு சோளமும் (Maize) கொடுக்கக் கூடுமானால் தன்னால் அசிடோன் வேண்டிய அளவு தயாரித்துக் கொடுக்க முடியும் என்றார். வெகு விரைவில் தொழிற்கூடம் உருவானது; வேண்டிய அளவு சோளமும்

கொடுக்கப்பட்டது; சைம் வீஸ்மான் போதிய அளவு அசிடோன் மருந்து உற்பத்தி பண்ணி பிரிட்டிஷ் அரசுக்குக் கொடுத்தார்; இங்கிலாந்தும் யுத்தத்தில் ஜெயம் பெற்றது.

இதற்குப் பிரதி பலனாக சைம் வீஸ்மானுக்குத் தகுந்த வெகுமதி அளிக்க பிரிட்டிஷ் பிரதமரும் யுத்த மந்திரியும் விரும்பி அவருக்கு என்ன வெகுமதி வேண்டும் என்று கேட்டபொழுது, வீஸ்மான் தனக்கு ஒன்றும் வேண்டாமென்றும், ஆனால் தன் ஜனங்கள் (யூதர்) பலஸ்தீனாவில் குடியேற அனுமதிக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார். அக்கோரிக்கைக்கு இணங்க பிரிட்டிஷ் சட்டசபையின் அங்கிகாரத்தோடு வெளி நாட்டு மந்திரியாயிருந்த பால்போர் (Balfour) என்பவர் யூதர்கள் பலஸ்தீனாவில் வந்து குடியேறுவதற்கு பிரிட்டிஷ் அரசாங்கத்துக்கு ஒரு தடையுமில்லை என்ற கீழ் கண்ட பிரகடனத்தை 1917ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 2ஆம் தேதி வெளியிட்டார். அப்பிரகடனத்தின் ஆங்கில வாசகம் கீழ்கண்டவாறு:–

"His Majesty's government views with favour the establishment in Palestine of a national home for the Jewish people, and will use their best endeavours to facilitate the achievement of that object, it being understood that nothing shall be done which may prejudice the civil and religious rights of existing non-religious communities in Palestine, or the rights and political status enjoyed by Jews in any other community".

இப்பிரகடனம் வெளிவந்து தோராயமாக ஒரு மாதத்தில் எருசலேம் நகரம் துருக்கிய முஸ்லிம் ஆதிக்கத்திலிருந்து பிரிட்டன் கைக்கு வந்தது. உடனே சர்வதேச கூட்டமைப்பு (The League of Nations) பால்போர் பிரகடனத்தை அங்கிகரித்தது. துருக்கியரிடமிருந்து எருசலேம் பிரிட்டனின் கைக்கு மாறியதும் ஆண்டவரின் அற்புதமே. அதாவது, துருக்கியரின் நம்பிக்கையும், அவர்களுக்குள் ஒரு பழமொழியும் இருந்தது; அதாவது எருசலேம் துருக்கியரின் கையிலிருந்து விடுபடவேண்டுமானால் எகிப்திலிருக்கும் நீல நதியின் தண்ணீர் எருசலேமில் ஓட வேண்டும் என்பதே. அதாவது, நீல நதியின் தண்ணீர் எருசலேம் கட்டப்பட்டிருக்கும் மலைகளின் மேல் ஏறி வந்து ஓட முடியாது, ஆகையால் ஒருவரும் எருசலேமை துருக்கியர் கையிலிருந்து ஜெயிக்க முடியாது என்பதே.

ஆனால் நடந்தது என்னவென்றால் எகிப்திலிருந்து ஆங்கிலேய படை சீனாய் பாலைவனம் மூலமாய் எருசலேமை நோக்கி முன்னேறியது. அப்பிரதேசத்தில் தண்ணீர் தட்டுப்பாடு அதிகமாகையால் தன் படைக்குப் போதிய தண்ணீர் கிடைக்க அப்படையின் தளபதி ஜெனரல் ஆலன்பி (General Allenby) நீல நதியின் தண்ணீரை குழாய் மூலம் கொண்டு வர ஒழுங்கு பண்ணினார். எருசலேமுக்கு அருகில் வரை நீல நதித் தண்ணீர் கொண்டு வரப்பட்டு விட்டது என்பதைக் கேள்விப்பட்ட துருக்கியப் படைகள் ஒரு எதிர்ப்பும் தெரிவிக்காமல் புறப்பட்டுவிட்டன. அதுமட்டுமல்லாமல் ஜெனரல் ஆலன்பி ஆகாய விமானங்கள் மூலமாய் எருசலேமின் நிலைமை எப்படி இருக்கிறதென்று கண்டறிய தன் ஒற்றர் விமானங்களை அனுப்பினார். அதுவரை ஆகாய விமானங்களையே பார்த்திராத துருக்கிய படை வீரர் இவ்விமானங்களைக் கண்டதும் பயந்து ஒரு குண்டு கூட சுடாமல் நகரத்தை விட்டுக் காலி பண்ணிப் போய் விட்டனர். இதன் மூலம் ஆண்டவர் ஏசாயா தீர்க்கனின் மூலம் கூறிய முன்னறிவிப்பு நிறைவேறியது:-

**முன்னுரைப்பு :- ஏசாயா 31 : 5 (கி.மு. 713)**

"பறந்து காக்கிற பட்சிகளைப் போல, சேனைகளின் கர்த்தர் எருசலேமின் மேல் ஆதரவாயிருப்பார்; அவர் அதைக் காத்துத் தப்பப் பண்ணுவார்; அவர் கடந்து வந்து அதை விடுவிப்பார்".

**நிறைவேறுதல்:**

முதலாம் உலக மகா யுத்த காலத்தில்தான் முதன் முதல் ஆகாய விமானங்கள் யுத்தத்தில் ஈடு படுத்தப்பட்டன. முதன் முதல் ஆகாய விமானங்களினால் எருசலேம் நகர் தான் அழிவின்றி காப்பாற்றப்பட்டது. இதைக் கர்த்தர் ஏசாயா தீர்க்கனின் மூலமாக 2630 ஆண்டுகளுக்கு முன்னதாகவே முன்னறிவித்துவிட்டார்.

இவ்விதமாக கி.பி. 1917ஆம் ஆண்டு துருக்கியர் ஆங்கிலேயருக்கு எருசலேமை விட்டு விட்டு ஓடிவிட்டனர். அதுமுதல் எருசலேம் ஆங்கிலேயரின் வசமானது; துருக்கிய முஸ்லிம்களின் ஆளுகை முற்றுப்பெற்றது. 1917ஆம் ஆண்டு முஸ்லிம்களின் சந்திர வருடக் கணக்குப்படி 1335. தானியேல் தீர்க்கதரிசியின் முன்னறிவிப்பின்படி 1335 ஆண்டுகள் முஸ்லிம்கள் எருசலேமைத் தங்கள் ஆதிக்கத்தில் வைத்திருந்தனர்; அதுவரை யூதர் காத்திருக்கவேண்டியதாயிருந்தது.

கீழே 1917ஆம் ஆண்டு துருக்கியில் வெளியிடப்பட்ட ஒரு நாணயத்தின் படம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதில் ஆங்கிலேய ஆண்டு 1917 என்றும் அதற்கு எதிராக அரபிய மொழியில் 1335 அச்சடிக்கப்பட்டிருப்பதையும் காணலாம். இவ்விதமாக தானியேல் மூலமாக ஆண்டவர் வெளிப்படுத்திய 1335 ஆண்டுக்கணக்கும் நிறைவேறியிருக்கிறது.




*The date opposite 1917 is the Arabic for 1335.*

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| ١ | ٢ | ٣ | ٤ | ٥ | ٦ | ٧ | ٨ | ٩ | ٠ |
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 0 |

(Source : Israel's Destiny and the coming Deliverer by Gordon Lindsay Pages 19-20)

# 91

# நாட்டுக்கு இஸ்ரவேல் என்ற நாமம் சூட்டப்படும்

சாலொமோன் அரசனுக்குப் பின் நாடு இரண்டாக, இஸ்ரவேல் என்ற பத்து கோத்திரங்களடங்கிய பாகம் ஒரு ராஜ்யமாகவும், யூதா, பென்னியமீன் கோத்திரங்கள் அடங்கிய பாகம் யூத ராஜ்யம் என்றும் இரண்டு ராஜ்யங்களாகப் பிரிந்து போயின. இரண்டு இராஜ்யங் களுக்கும் தனித்தனி அரசர்களிருந்தனர். இரண்டு இராஜ்யங் களிலும் வெவ்வேறு தீர்க்கர்கள் கடவுளுடைய வார்த்தைகளை எடுத்துக் கூறி வந்தார்கள்.

இஸ்ரவேல் நாட்டை கி.மு. 722ஆம் ஆண்டு அசீரியர் ஜெயித்து தங்கள் நாட்டிற்குப் பெரும்பாலனவர்களைச் சிறைக் கைதிகளாகக் கொண்டு போனார்கள். அதேவிதமாக பாபிலோன் ராஜா யூதா நாட்டை ஜெயித்து கி.மு. 605ஆம் ஆண்டு முதல் கி.மு. 586ஆம் ஆண்டு வரை பல தடவைகளில் அநேகரைச் சிறைக் கைதிகளாக பாபிலோனுக்குக் கொண்டு போனான். பாபிலோனுக்குக் கொண்டு போகப்பட்ட கைதிகளில் யூதேயா நாட்டில் தீர்க்கராக அச்ஜனங்களை வழி நடத்திய எசேக்கியேலும் ஒருவர். இவர் பாபிலோன் நாட்டில் இருக்கும்பொழுது தன்னுடைய தீர்க்கதரிசனங்களையெல்லாம் எழுதி முடித்தார்.

கடைசிகால சம்பவங்களைக் குறித்து அநேகக் காரியங் களைத் தீர்க்கதரிசனமாக எழுதி வைத்திருக்கிறார். அதில் ஒன்று எசேக்கியேலின் புத்தகம் 38, 39ஆம் அதிகாரங்களில் கொடுக்கப் பட்டிருக்கும் மேசேக் தூபாலின் படையெடுப்பு; அதாவது ரஷ்யா கடைசி நாட்களில் யூத ஜனங்களின்மேல் படையெடுத்து முற்றிலும் கடவுளால் அழிக்கப்படுவதைப் பற்றியது.

இந்த சம்பவத்தைக் குறித்த ஒரு விசேஷம் என்னவென்றால்: எசேக்கியேல் யூதேயா நாட்டைச் சேர்ந்தவர்; யூதேயாவிலே ஒரு ஆசாரியக் குடும்பத்தில் பிறந்தவர், ஆகையால் லேவி குடும்பத்தில் பிறந்தவர். அப்படி இருக்கும்போது ரஷ்யர் அவர்களுடைய நாட்டின் மேல் படையெடுக்கப் போகிறார்கள் என்று தீர்க்கதரிசனமாகக் கூறும்போது யூத ஜனம், யூதேயா தேசம், யூதேயாவிலுள்ள மலைகள் என்றல்லவா அவர் கூறியிருக்க வேண்டும். அப்படியில்லாமல் இந்த

இரண்டு அதிகாரங்கள் முழுவதிலும் இஸ்ரவேல் வம்சம், இஸ்ரவேல் தேசம், இஸ்ரவேல் மலைகள் என்று 18 தடவைகள் இந்த இரண்டு அதிகாரங்களில் மட்டும் குறிப்பிட்டிருக்கிறார்:

| | | |
|---|---|---|
| இஸ்ரவேல் தேசம், இஸ்ரவேல் மலைகள் என்று | 8 | தடவைகளும் |
| இஸ்ரவேல் வம்சத்தார், இஸ்ரவேல் மக்கள், இஸ்ரவேல் ஜனம் என்று | 9 | தடவைகளும் |
| இஸ்ரவேல் என்று | 1 | தடவையும் |

ஆக மொத்தம் 18 தடவைகள் குறிப்பிட்டிருக்கிறார். ஆனால் ஒரு தடவை கூட யூதேயா அல்லது யூத ஜனம் என்று குறிப்பிட வில்லை.

ஆகவே இந்த கோகு–மாகோகு–இஸ்ரவேல் யுத்தம் நடக்கும் போது இஸ்ரவேல் என்ற தேசம் தான் இருக்கும்; யூதேயா தேசம் என்று அழைக்கப்படமாட்டாது என்பதைத் தெளிவாகக் காட்டி விட்டார். அதைப் போலவே கடைசி காலங்களில் நிறைவேறப் போகும் காரியங்களைப் பற்றி மற்ற அதிகாரங்களில் குறிப்பிடும்போதும் இஸ்ரவேல் நாடு, இஸ்ரவேல் மக்கள் என்று தான் எசேக்கியேல் தீர்க்கதரிசி வர்ணித்திருக்கிறார். இதை நோக்கும்போது 2500 ஆண்டுகளுக்கு முன்னரே யூத/இஸ்ரேலிய ஜனங்கள் ஆண்டவர் ஆபிரகாமுக்கு வாக்குத்தத்தம் பண்ணிக் கொடுத்த கானான் தேசத்தில் கூட்டிச் சேர்க்கப்படுவார்கள், அச்சமயத்தில் யூதர் என்ற ஜாதியார் குடியிருக்கும் அந்தப் பிரதேசத்திற்கு இஸ்ரவேல் என்ற நாமம் சூட்டப்பட்டிருக்கும் என்பதை அப்பொழுதே ஆண்டவர் தீர்மானித்துத் தமது தீர்க்கருக்கு அதை வெளிப்படுத்தி எழுதியும் வைத்துவிட்டார் என்பதைப் பார்க்கிறோம்.

## நியாயாதிபதிகளைப் பற்றிய தீர்க்கதரிசனம்

ஆண்டவர் தாம் தெரிந்து கொண்ட இஸ்ரவேல் நாட்டைப் பற்றியும் அந்த ஜனங்களைப் பற்றியும் எவ்வளவு கரிசனையுள்ளவராயிருக்கிறார் என்பதை அவர் ஒவ்வொரு சிறு காரியத்தைப் பற்றியும் தம்முடைய திட்டத்தைத் தமது தீர்க்கத்தரிசிகள் மூலமாய் முன்னறிவித்திருப்பதைப் பார்க்கும்போது ஆச்சரியமாயிருக்கிறது. இஸ்ரவேல் ஜனங்களுக்கு நடக்கப் போகும் பல பல விஷயங்கள் முன்னறிவிக்கப்பட்டு அவைகள் நிறைவேறியிருப்பதை முதல் இரண்டு புத்தகங்களிலும் பார்த்தோம். இப்பொழுது நியாயாதிபதிகளைப் பற்றிக் கூறப்பட்டிருப்பதைப் பார்ப்போம்:-

**முன்னுரைப்பு :-**

**ஏசாயா 1 : 25-26. (கி.மு. 760)**

25)"நான் என் கையை உன்னிடமாய்த் திருப்பி, உன் களிம்பு நீங்க உன்னைச் சுத்தமாய்ப் புடமிட்டு, உன் ஈயத்தையெல்லாம் நீக்குவேன்".

26)"உன் நியாயாதிபதிகளை முன்னிருந்ததுபோலவும், உன் ஆலோசனைக்காரரை ஆதியில் இருந்தது போலவும் திருப்பக் கட்டளையிடுவேன்; பின்பு நீ நீதிபுரம் என்றும், சத்திய நகரம் என்றும் பெயர்பெறுவாய்".

**நிறைவேறுதல் :**

கடந்த 1900 ஆண்டுகளாக இஸ்ரவேல் ஜனங்கள் பல நாடுகளிலும் சிதறடிக்கப்பட்டு "அநேக நாள் ராஜா இல்லாமலும், பலி இல்லாமலும், சிலை இல்லாமலும், ஏபோத் வஸ்திரம் இல்லாமலும், தேராபீம் இல்லாமலும்" இருந்தார்கள். இப்படி சிதறடிக்கப்பட்ட ஜனங்களுக்கு முன்னிருந்ததைப் போல நியாயாதிபதிகளையும் கட்டளையிடுவேன் என்று கர்த்தர் கூறியிருக்கிறார். 1948ஆம் ஆண்டு இஸ்ரேல் நாடு பிரகடனப்படுத்தப்பட்ட பின்பு நியாயஸ்தலங்களும் நியாயாதிபதிகளும் நியமிக்கப்பட்டார்கள். 12 நியாயாதிபதிகள் கொண்ட ஒரு உச்ச நீதி மன்றமும் அமைக்கப்பட்டது. என்றாலும் இவ்வுச்ச நீதி மன்றம் ஒரு வாடகைக் கட்டிடத்தில் தான் இயங்கிக் கொண்டிருந்தது.

1984ஆம் ஆண்டில், மறைந்த ஜேம்ஸ் டி. ராத்சைல்ட் என்பவரின் மனைவி, டாரதி டி. ராத்சைல்ட், இஸ்ரேல் நாட்டிற்கு ஒரு உச்ச நீதி மன்றக் கட்டிடம் கட்டிக் கொடுக்க ஆசிப்பதாகவும் அக்கட்டிடம் இப்பொழுது இருக்கும் நாடாளுமன்றக் கட்டிடத்திற்குச் சமீபத்தில் அமைந்தால் நன்றாயிருக்கும் என்றும் பிரதம மந்திரியைக் கேட்டுக் கொண்டார் (நாடாளுமன்றக் கட்டிடத்தைக் கட்டுவதற்கு வேண்டிய பணத்தைக் கொடுத்தவர்களும் ராத்சைல்ட் குடும்பத்தார் தான்). அப்படியே பாராளுமன்றக் கட்டிடத்திற்கு அருகாமையில் உச்ச நீதி மன்றம் அமைக்க அனுமதி கொடுக்கப்பட்டது.

1986 ஆம் ஆண்டு துவங்கி 1993 ஆம் ஆண்டு இப்புதிய கட்டிடம் நீதி, நேர்மை, இரக்கம், கருணை முதலியவற்றின் சின்னமாக அமைக்கப்பட்டு நாட்டிற்கு அர்ப்பணிக்கப்பட்டது. இதுவும் ராத்சைல்ட் குடும்பத்தினர் நாட்டிற்குத் தங்கள் அன்பளிப்பாகக் கொடுத்ததே. இவ்விதமாக நாட்டிற்கு ஒரு நிரந்தரமான உச்ச நீதிமன்றக் கட்டிடம் கிடைத்து ஏசாயா தீர்க்கரினால் 2750 ஆண்டுகளுக்கு முன் முன்னறிவிக்கப்பட்ட காரியம் நமது தலைமுறையில் நிறைவேறியிருக்கிறது.

# இஸ்ரவேலின் வறண்ட நிலத்தைப் பற்றிய தீர்க்கதரிசனம்

இஸ்ரவேல் நாட்டில் இரண்டு பாலைவனங்கள் உள்ளன. (1) நெகேவ் என்ற பாலைவனம்; அதின் பரப்பளவு 12,000 சதுர கிலோமீட்டர். இதில் ஒரு பகுதி பாதி வறண்ட பாலைவனம் என்று வர்ணிக்கப்படுகிறது. இப்பிரதேசத்தில் ஆண்டுக்கு ஒன்று முதல் 12 அங்குல மழை (25 மில்லி மீட்டர் முதல் 300 மில்லி மீட்டர்) தான் பெய்கிறது. அப்படியே கன மழை பெய்தாலும் சடுதியில் வெள்ளப் பெருக்கு எடுத்து காட்டாறுகள் மூலமாய் ஓடி விவசாயத்திற்கோ அல்லது நிலத்திற்கோ பயனற்றதாகிவிடுகிறது.

(2) யூதேயா பாலைவனம். இது சவக்கடலுக்கு மேற்கே சராசரி 40 மைல் நீளம் 8 மைல் அகலமும் உள்ள (320 சதுர மைல் அல்லது தோராயமாக 900 சதுர கிலோ மீட்டர்) பூமி. இப்பகுதி யூதேயா மலைகளிலிருந்து (2000 அடி உயரத்திலிருந்து) சவக் கடலுக்கு (சமுத்திர மட்டத்துக்குக் கீழ் 1300 அடி) சடுதியாய் 3300 அடி இறங்கும். இப்பகுதி கரடு முரடான மழை குன்றிய வறட்டுப் பிரதேசம். விவசாயத்திற்கு ஏற்றதல்ல. ஆனால் சிறிது காலத்தில் இப்பிரதேசத்தையும் யூதர் செழிப்பான விவசாய நிலமாக மாற்றிவிடக் கூடும்.

சிடி போக்கர் என்ற இடத்திலுள்ள பென்கூரியன் பாலைவன பல்கலைக்கழகம் பாலைவனத்தைச் சோலை வனமாக்க அநேக ஆராய்ச்சிகள் மேற்கொண்டிருக்கிறது; அதில் ஒன்று நெகேவ் பாலைவனத்தை ஆராய்ச்சி செய்வதே. அப்படி ஆராய்ச்சி மேற்கொண்டதில் யோசுவாவின் காலத்தில் இஸ்ரவேல் ஜனங்கள் கானான் நாட்டில் வந்து குடியேறிய காலத்தில் நெகேவ் பகுதியில் மழை குறைவாயிருந்தபடியால் தண்ணீரைச் சேமித்து வைத்து கால்வாய்கள் மூலமாக நீர்பாசானம் செய்து விவசாயம் செய்திருக்கின்றனர் என்றும் இதற்கு ஆதாரமாக ஆங்காங்கே அனேகக் குடியிருப்புக்கள் இருந்திருக்கின்றன என்றும் கண்டு பிடித்திருக்கின்றனர். காலம் செல்லச் செல்ல குடியிருப்புக்கள் அழிந்து, சடுதி வெள்ளங்கள் விவசாயத்திற்கேற்ற மேல்மண்ணை அரித்துக்கொண்டு போயிருந்தாலும் அப்பாலைவனத்தில் விவசாயம் செய்ய முடியும் என்று கண்டு பிடித்திருக்கின்றனர்.

அதே சமயத்தில் இப்பொழுது வருடந்தோறும் லட்சக் கணக்கில் எத்தியோப்பியா, இரஷ்யா, போலந்து முதலிய நாடுகளி லிருந்து வரும் யூதரைக் குடியமர்த்துவது ஒரு அத்தியாவசியமான காரியம். அதற்கு நிலம் வேண்டும். இஸ்ரேல் 1967 ஆம் ஆண்டு பிடித்த காசா பகுதியில் ஜனநெருக்கம் அதிகம்; யூதேயா–சமாரியா பகுதியில் குடியேற்றங்கள் உண்டு பண்ணுவதற்கு பலஸ்தீனிய தரப் பிலிருந்து பெரிய எதிர்ப்பு கிளம்பி கலவரம் அதிகமாகிக் கொண்டே போகிறது. ஆகவே இஸ்ரேல் நாடு வேறு வழியில்லாமல் நெகேவ் பாலைவனப் பிரதேசத்தை அபிவிருத்தி செய்ய வேண்டிய நிர்பந்தத் தில் இருக்கிறது.

முதலாவது 1956 ஆம் ஆண்டு அந்நாட்டின் மத்திய பகுதியி லிருந்து நெகேவ் பிரதேசத்திற்கு ஒரு தண்ணீர் குழாய் அமைக்கப் பட்டது. பின்னர் கலிலேயாக் கடலிருந்து தெற்கே கொண்டு வரப் பட்ட தேசீய நீர் குழாயுடன் இணைக்கப்பட்டு நெகேவிற்கு விவசாயத் திற்காக ஓரளவு நீர் ஒதுக்கப்பட்டது. இதனால் அங்கு சில குடியிருப் புக்கள் தோன்றி உஷ்ண பிரதேசத்தில் விளையக்கூடிய விவசாயப் பொருட்கள் விளைவிக்கப்பட்டு வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யுமளவுக்கு முன்னேறியிருக்கிறது.

இன்னும் நிலத்தடி நீரைக் கண்டுபிடித்ததில் நெகேவ் பிரதேசத்திலே அதிக ஆழத்தில் கணிசமான நீர் இருப்பதாகக் கண்டறிந்து ஆழ்கிணறுகள் மூலமாக நீரை உறிஞ்சி எடுத்து விவ சாயத்திற்குப் பயன்படுத்தி பாலைநிலத்தை விவசாய நிலமாக மாற்றிக் கொண்டு வருகிறார்கள்.

இவைகளுக்கெல்லாம் நீரைச் சிக்கனப்படுத்தும் சொட்டு நீர்பாசன முறை கம்யூட்டர்களின் உதவியால் கணக்கிடப்பட்டு, குறைந்த நீரிலும் அதிக மகசூல் எடுக்க சீரிய முயற்சிகள் எடுக்கப் பட்டு வருகின்றன.

**முன்னறிவிப்பு :– ஏசாயா 35 : 1–2 (கி. மு. 713)**

1) "வனாந்தரமும் வறண்ட நிலமும் மகிழ்ந்து, கடுவெளி களித்து, புஷ்பத்தைப் போலச் செழிக்கும்".

2) "அது மிகுதியாய்ச் செழித்துப் பூரித்து ஆனந்தக் களிப்புடன் பாடும்; லீபனோனின் மகிமையும், கர்மேல், சாரோன் என்பவைகளின் அலங்காரமும் அதற்கு அளிக்கப்படும்; அவர்கள் கர்த்தருடைய மகிமையையும், நமது தேவனுடைய மகத்துவத்தையும் காண்பார்கள்".

**ஏசாயா 49 : 19 (கி.மு. 712)**

19)"அப்பொழுது உன் வனாந்தரங்களும், உன் பாழிடங்களும், நிர்மூலமான உன் தேசமும், இனிக் குடிகளின் திரளினாலே உனக்கு நெருக்கமாயிருக்கும்; உன்னை விழுங்கினவர்கள் தூரமாவார்கள்".

**ஏசாயா 51 : 3 (கி.மு. 712)**

3)"கர்த்தர் சீயோனுக்கு ஆறுதல் செய்வார்; அவர் அதின் பாழான இடங்களையெல்லாம் தேறுதலடையச் செய்து, அதின் வனாந்தரத்தை ஏதேனைப் போலவும், அதின் அவாந்தரவெளியைக் கர்த்தரின் தோட்டத்தைப் போலவும் ஆக்குவார்; சந்தோஷமும் மகிழ்ச்சியும், துதியும், கீதசத்தமும் அதில் உண்டாயிருக்கும்".

மேலே கொடுக்கப்பட்ட பாகங்களில் நான்கு காரியங்களைப் பார்க்கிறோம் :

1) வனாந்தரமான இடங்கள் ஒரு காலத்தில் செழிப்பான பூமியாக மாறும், ஏதேன் தோட்டத்தைப் போல.

2) வனாந்தரமும் ஒரு காலத்தில் ஜனங்கள் நெருக்கமாய்க் குடியிருக்கும் இடங்களாக மாறும்.

3) அதைப் போலவே ஒரு காலத்தில் குடியேற்றப்பட்டிருந்து பின்னர் குடியிருப்பாரில்லாமல் பாழாய்ப் போன இடங்களும் திரும்பவும் நெருக்கமாய்க் குடியேற்றப்பட்ட இடங்களாக மாறும்.

4) அப்பேர்ப்பட்ட குடியிருப்புகளில் ஆடல் பாடலும், ஆண்டவரைத் துதிக்கும் சத்தமும், மகிழ்ச்சியின் ஆரவாரங்களும் கேட்கும்.

**நிறைவேறுதல்கள்:-**

இப்பொழுது இஸ்ரேல் நாட்டில் ஏற்பட்டுக் கொண்டிருக்கும் விவசாய முன்னேற்றங்களைக் கவனிக்கும்போது வெகு சீக்கிரத்தில் நெகேவ் பாலைவனம் ஒரு சோலைவனமாக மாற்றப்படும். அதற்கு வேண்டிய நிலத்தடி தண்ணீர் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது.

இப்பொழுதே அப்பிரதேசத்தில் சில குடியிருப்புகள் வந்து விட்டன. இஸ்ரேலின் முதல் பிரதமராகிய டேவிட் பென்கூரியன், "பாலைவனத்தை நாம் மேற்கொள்ள வேண்டும், இல்லாவிட்டால் பாலைவனம் நம்மை மேற்கொண்டுவிடும்" என்று கூறி, அதற்கு எடுத்துக்காட்டாக தானே சிடி போக்கர் என்ற இடத்தில் (பெயர்சேபாவிற்குத் தெற்கே, பாலைவனத்தில்) தனக்கு ஒரு வீட்டைக் கட்டி அங்கு குடியிருந்து அங்கேயே மரித்தார். அவ்வூரிலேயே பாலைவன ஆராய்ச்சி பல்கலைக் கழகம் இயங்கி வருகிறது.

நம்முடைய நாட்டில் வறட்சியான பிரதேசங்களில் வேலிகளுக்காக முள்ளுள்ள சதுரக் கள்ளி மரங்களை நட்டிருப்பதைப் பார்த்திருக்கிறோம். அதைப் போல சில இடங்களில் சதுரக் கள்ளிகள் புதர் புதராக கிளை விடாமல் 20 அடி உயரத்திற்கு வளர்ந்திருக்கிறதைப் பார்த்திருக்கிறோம். இஸ்ரேல் நாட்டில் இப்பேர்ப்பட்ட கள்ளிகளை மணற்பாங்கான பாலைவனத்தில் நட்டு அவைகளுக்கு சொட்டு நீர் பாசான முறையில் சிக்கனமாக நீரைப் பாய்ச்சி அவைகளை வளர்த்து நாளாவட்டத்தில் அவைகள் செத்து விழுந்து மணலுக்கு மேல் ஒரு அடுக்கு இயற்கை உரப்பகுதியை உருவாக்கி அவைகளின் மேல் வேறு பயிர்களை வளர்த்துப் பாலைவனத்தை சோலை வனமாக மாற்றுகிறார்கள்.

நம் நாட்டில் குளிர் பிரதேசங்களில் கண்ணாடி வீடுகள் (Glass Houses) அமைத்து அவைகளுக்குள் உஷ்ணப் பிரதேசத் தில் வளரும் பூச்செடிகளை வளர்ப்பதைப் பார்த்திருக்கிறோம். சில பூங்காக்களிலும் இவ்வித கண்ணாடி வீடுகளைக் காணலாம். ஆனால் இஸ்ரேல் நாட்டில் இப்பொழுது நெகேவ் பாலைவனப் பிரதேசத்தில் உஷ்ணத்தைக் கட்டுப்படுத்த கண்ணாடி வீடுகளைப் பெரும் அளவில் அமைத்து அவைகளில் பாலிதீன் பைகளில் பக்குவப்படுத்தப்பட்ட மண்ணை நிரப்பி (இங்கு தேயிலை நர்சரி உண்டு பண்ணுவது போல்) காய்கறிச் செடிகளையும், விதவிதமான பூச்செடிகளையும் பயிரிடுகின்றனர். இக்கண்ணாடி வீடுகளின் கூரைகளை வேண்டிய அளவு திறந்து மூடி வெளிச்சத்தையும் வெப்ப நிலையையும் ஒழுங்குபடுத்தக் கூடியதாய் அமைத்துக் கொள்ளுகின்றனர். இவ்விதமாய் விவசாயம் செய்வதினால் வருடத்திற்கு இரண்டு அல்லது மூன்று மகசூல் எடுக்க முடிகிறது. இவ்வனாந்தரத்தில் இதுவரை 3,000 ஹெக்டேர் நிலத்தில் இம்முறை கையாளப்படுகிறது.

இவ்வித கண்ணாடி வீடுகளில் பயிரிடப்படும் ரோஜாச் செடிகளில் ஒரு பருவ காலத்தில் ஒரு ஹெக்டேருக்கு 30,000 ரோஜாப் பூக்களும், தக்காளி பயிரிட்டால் ஒரு ஹெக்டேருக்கு 300 டன் தக்காளிப் பழங்களும் அறுவடை செய்கிறார்கள். சாதாரண நிலத்தில் அங்கு ஒரு ஹெக்டேருக்கு 100 டன் தக்காளி தான் கிடைக்கும்.

அதுமட்டுமல்ல குளிர் பிரதேசங்களில் வளரும் கிளாடியோலா, டியுலிப் முதலிய பூ வகைகளை அப்பிரதேசங்களில் விளைவிக்க முடியாத காலங்களில் இங்கு பயிரிட்டு அவைகளை குளிர் பிரதேச

நாடுகளுக்கு ஏற்றுமதி செய்து அதின் மூலமாய் அன்னியச் செலா வணி அதிகம் சம்பாதிக்கின்றனர்.

நெகேவ் பாலைவனத்தில் விளைவிக்கும் அடுத்த பிரதான மான பயிர் கத்தாழை. இந்த முள் செடி புதர் புதராக நம் நாட்டில் ஒரு காலத்தில் எங்கு பார்த்தாலும் வளர்ந்து கிடந்தது; ஆனால் 40 ஆண்டுகளுக்கு முன் ஒருவிதமான பூச்சி அச்செடிகளில் பரவி அச் செடிகளையே கொன்று போட்டு அப்புதர்களே இல்லாமல் ஆக்கி விட்டது. இஸ்ரேல் நாட்டில் இப்பொழுது முள் இல்லாத கத்தாழை உருவாக்க பல முயற்சிகள் எடுத்து ஒரு அளவுக்கு வெற்றி கண்டிருக் கிறார்கள். இக்கத்தாழையின் பழங்கள் சுவையானவை. அதன் இளம் தளிர்கள் தடிப்பமானதாக இருந்தாலும் கீரையைப் போல் சமைத்துச் சாப்பிடக்கூடியது. இஸ்ரேல் நாட்டில் பெரிய உணவு விடுதிகளிலும் யாவரும் விரும்பிச் சாப்பிடும் ஒரு உணவாக உள்ளது. கத்தாழையின் செத்த பகுதிகள் பாலை நிலங்களைப் பண்படுத்த உபயோகிக்கப் படுகின்றன.

இன்னும் தண்ணீர் தேக்கி வைக்கக்கூடிய இடங்களில், அதிலும் விசேஷமாக மணற்பாங்கான பகுதிகளில் பேரீச்ச மரங்கள் பயிரிடப்படுகின்றன. இவைகள் அமோக விளைச்சல் கொடுக்கத் தக்கதாக, விதைகளிலிருந்து செடிகள் வளர்க்காதபடி, மரங்களின் பக்கத்தில் வெடித்து வரும் கன்றுகளைப் பயிர் செய்து அதிக மகசூ லைப் பெறுகின்றனர்.

அடுத்தபடியாக வறண்ட நிலங்களை செழுமையான வைகளாக்க இஸ்ரேலியர் பெருமளவில் நாம் சாதாரணமாக ரெயில் வே கத்தாழை என்று கூறும் செடிகளை பயிரிட்டு அவைகளின் மூலம் நிலத்தைப் பக்குவப்படுத்துவது மட்டுமல்ல அவைகளின் நீண்ட இலைகளிலிருந்து நார் எடுத்து அவைகளினால் கயிர், பாய், கம்ப ளங்கள் முதலியவைகளைச் செய்து புதிதாக குடியேறும் மக்களுக்கு வேலை கொடுத்துப் பராமரிப்பது. கம்பளங்கள் என்னும் பொழுது, அவைகள் தரமானவைகளாய், வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யக் கூடிய தரமுள்ளவைகளாய் தயாரிக்கப்படுகின்றன. அதே சமயத்தில் இச்செடிகள் மரங்களைப் போல் தண்டுவிட்டு வளர்ந்து பூ பூத்து சாகும்போது அந்தக் கழிவுகள் நிலத்தைப் பண்படுத்தி வளமாக்க உபயோகிக்கப்படுகின்றன.

இப்பொழுது இஸ்ரேல் நாட்டிற்கு ஏற்பட்டிருக்கும் நெருக்க டியில் புதிதாக வந்து சேரும் யூதர்களைக் குடியேற்ற நெகேவ்

பாலைவனம் தான் இருக்கிறது. இங்கு இப்பொழுது சிறு சிறு குடியேற்றங்கள் (கிபுட்ஸ்) உண்டாக்கப்பட்டிருக்கின்றன. இக்குடியேற்றங்களைச் சுற்றி கனி கொடுக்கும் ஆரஞ்சு, மா முதலிய மரங்களும் நடப்பட்டு செழுமையாகக் காணப்படுகின்றது.

1996ஆம் ஆண்டு கணக்குப்படி நெகேவ் பாலைவனத்தில் 6,000 பேர் நிரந்தரமாகக் குடியேறியிருக்கின்றனர். மேற்படி நடவடிக்கைகளினால் வறண்ட நிலம் செழுமையான நிலமாகச் சில ஆண்டுகளில் மாறும்போது ஏசாயா 35:2 ஆம் வசனத்தில் கூறப்பட்டபடி "அந்தப்பகுதி மிகுதியாய்ச் செழித்துப் பூரித்து ஆனந்தக் களிப்புடன் பாடும்; லீபனோனின் மகிமையும், கர்மேல், சாரோன் என்பவைகளின் அலங்காரமும் அதற்கு அளிக்கப்படும்". இதனால் குடியேற்றங்கள் அதிகரிப்பதினால் ஜன நெருக்கம் அதிகமாகி ஆடல் பாடலும், கர்த்தரைத் துதிக்கும் கீத சத்தமும், மகிழ்ச்சியின் சத்தமும் இப்பகுதியிலே கேட்கப்படும்.

இவ்விதமாக ஆண்டவர் ஏசாயா தீர்க்கதரிசியின் மூலமாக 2700 ஆண்டுகளுக்கு முன் கூறிய முன்னறிவிப்புகள் நமது காலத்தில் நிறைவேறிக் கொண்டு வருகிறது.

# யாப்பேத்துக்கு நோவாவின் ஆசீர்வாதம்

ஜலப்பிரளயத்துக்குப் பின் நோவா பயிரிடுகிறவனாகி, திராட்சத் தோட்டத்தை நாட்டினான். பின்பு அவன் திராட்சரசத்தைக் குடித்து வெறிகொண்டு தன் கூடாரத்தில் வஸ்திரம் விலகிப் படுத்திருந்தான். இதைக் கண்ட இளைய மகன், காம், தன் சகோதரர் சேமுக்கும் யாப்பேத்துக்கும் அறிவித்தான். அவர்களிருவரும் ஒரு வஸ்திரத்தை எடுத்து பின்னாக வந்து தங்கள் தகப்பனுடைய நிர்வாணத்தை மூடினார்கள். பின்னால் இதை அறிந்த நோவா தன் இளைய மகனுடைய சந்ததியை (கானானை) சபித்தான். (கானானுக்குக் கொடுக்கப்பட்ட சாபத்தைப் பற்றி இஸ்ரவேல் பாகம் 3,116 ஆம் பக்கம் பார்க்கவும்). அதே சமயத்தில் நோவா சேமையும் யாப்பேத்தையும் ஆசீர்வதித்தான். யாப்பேத்துக்குக் கொடுத்த ஆசீர்வாதத்தைப் பற்றி இங்கு பார்ப்போம்:-

**முன்னுரைப்பு :- ஆதியாகமம் 9 : 27 (கி.மு. 2348)**

27) "யாப்பேத்தை தேவன் விர்த்தியாக்குவார்; அவன் சேமுடைய கூடாரங்களில் குடியிருப்பான்; கானான் அவனுக்கு அடிமையாயிருப்பான்".

**நிறைவேறுதல் :-**

பிற்கால சரித்திரப்படி காமின் சந்ததியார் ஆப்பிரிக்காக் கண்டத்திலும், சேமின் சந்ததியார் அரேபியா, தற்கால ஈரான், ஈராக், சீனா முதலிய கிழக்கு நாடுகளிலும், யாப்பேத்தின் சந்ததியார் மத்திய தரைக் கடலுக்கு வடக்கே உள்ள நாடுகளிலும், அதாவது ஐரோப்பாக் கண்டத்திலும் குடியேறினார்கள் என்று தெரிகிறது. ஐரோப்பாக் கண்டத்தில் குடியேறியவர்கள் பின்னால் கிறிஸ்தவர்களானார்கள். ரோமன் கத்தோலிக்கச் சபையிலிருந்து சீர்திருத்த சபை பிரிந்த பொழுது, சீர்திருத்த சபைக்கு துன்புறுத்தல் நேரிட்டது. அப்பொழுது அக்கிறிஸ்தவர்கள் பெருமளவில் அமெரிக்காவுக்குக் குடிபெயர்ந்து அங்கு குடியேறினார்கள். இவ்வண்ணமாக அமெரிக்காவில் யாப்பேத்தின் சந்ததியார் பலுகிப் பெருகினர். ஆகவே ஐரோப்பாக் கண்டத்திலும், அதைச் சுற்றியுள்ள தீவுகளிலும் அமெரிக்கா, கனடா முதலிய நாடுகளிலும் அவைகளைச் சுற்றியுள்ள தீவுகளிலும் யாப்போத்தின் சந்ததியார் பலுகிப் பெருகினர் என்று தெரிகிறது.

வேறொரு பாரம்பரியப்படி, சாலமோன் ராஜாவுக்குப் பின் இஸ்ரவேல் இராஜ்யம் இரண்டாய்ப் பிரிந்தது (இஸ்ரவேல், யூதா இராஜ்யம் என்று). கி.மு. 721ஆம் ஆண்டு போல அசீரியா ராஜா இஸ்ரவேல் ராஜ்யத்தை ஜெயித்து அந்த ஜனங்களை அசீரியாவுக்கு சிறைக்கைதிகளாகக் கொண்டு போனான். அவர்கள் தற்காலத்தில் காணாமற்போன பத்துக் கோத்திரத்தார் என்று அழைக்கப்படுகின்றனர்; ஏனென்றால் இஸ்ரவேல் வம்சத்தாராக அப்பகுதிகளில் ஜனங்களைக் காணோம். சிலரின் கூற்று என்னவென்றால் இந்த பத்துக் கோத்திரத்தார் நாளடைவில் மேற்கு, வடமேற்கு நோக்கிப் போய் ஐரோப்பா முழுவதும், இங்கிலாந்திலும் குடியேறி, பின்னால் அமெரிக்காவிலும் போய்க் குடியேறினர். பிரிட்டிஷ் சாம்ராஜ்யம் உலகம் முழுவதும் பரவியபொழுது இவர்கள் உலகம் முழுவதும் ஆளும் ஒரு ஜனமாக ஆசீர்வதிக்கப்பட்டனர் என்பது. இப்பொழுதும் ஆங்கிலேயர், அமெரிக்கர் என்ற மக்கள் ஐரோப்பா, அமெரிக்கா, கனடா, தென் ஆப்பிரிக்கா, ஆஸ்திரேலியா முதலிய நாடுகளில் பலுகிப் பெருகி இருக்கிறார்கள். ஆனால் இந்தக் கூற்றுப் பிரகாரம் இவர்கள் சேமுடைய வம்சாவழியாகிறார்கள். ஆகவே இக்கூற்று சரியில்லை. முதலாவது கூறியபடி யாப்பேத்தின் சந்ததியார் தான் ஆங்கிலேயரும், அமெரிக்கரும்; இவர்கள் தற்காலத்தில் அமெரிக்கா, கனடா, அவைகளைச் சுற்றியுள்ள தீவுகள், ஐரோப்பா கண்டம் அதைச் சுற்றியுள்ள தீவுகள், தென் ஆப்பரிக்கா, ஆஸ்திரேலியா கண்டமும் அதைச் சுற்றியுள்ள சில தீவுகளிலும் வசிக்கின்றனர்.

ஆகவே யாப்பேத்துக்கு நோவா கொடுத்த ஆசீர்வாதம் உண்மையாகவே தற்காலத்தில் நிறைவேறியிருக்கிறது; ஏனென்றால் நான்கு கண்டங்களில் யாப்பேத்தின் வம்சாவழியினர் பெருவாரியாக வசிப்பதைக் காண்கின்றோம். அவர்களின் சரியான ஜனக்கணக்கு என்னவென்று தெரியவில்லை. என்றாலும் ஐரோப்பா, இங்கிலாந்து, வட அமெரிக்கா, கனடா, ஆஸ்திரேலியா, நியூஜீலாந்து, முதலிய கண்டங்களிலும் நாடுகளிலும் மிகுதியான ஜனத்தொகை யாப்பேத்தின் சந்ததியார் என்று திட்டமாகச் சொல்லலாம்.

இவ்வண்ணமாக யாப்பேத்துக்கு நோவா கொடுத்த முதல் ஆசீர்வாதம் (ஜனம் பெருத்தவனாக இருப்பான் என்பது) நிறைவேறலாயிற்று.

இரண்டாவது ஆசீர்வாதம் "அவன் சேமுடைய கூடாரங்களில் குடியிருப்பான்" என்பதும் நோவா உரைத்தபடியே நிறைவேறியிருப்

பதைக் காணலாம். எப்படியென்றால் மேற்கித்திய நாட்டவர் யாப்பேத்தின் சந்ததியார் தொழில் வளர்ச்சியில் அதிக முன்னேற்றமடைந்தவர்கள். ஆகவே விசேஷமாக சேமுடைய சந்ததியார் குடியிருக்கும் அரேபிய நாடுகளில் எண்ணெய் வளத்தைக் கண்டுபிடித்து அதற்கான ஆலைகளை நிர்மாணிப்பதிலும், இன்னும் கிழக்கித்திய நாடுகளில் தொழில் வளத்தைப் பெருக்குவதற்கு உதவுவதிலும், காப்பி, தேயிலை முதலிய பண்ணைகளை நிறுவி அவைகளுக்குரிய ஆலைகளை நிர்மாணிப்பதிலும் வல்லுனர்களாய் சேமின் வம்சாவழியினருக்கு உதவும்பொருட்டு சேம் வம்சாவழியினர் வசிக்கும் பகுதிகளில் பெருவாரியாகக் குடியேறி தொழில் வளத்தை பிற்பட்ட கிழக்கத்திய நாடுகளில் மேம்படுத்தினர். பெருவாரியானவர்கள் இப்பிராந்தியங்களிலேயே குடியிருந்து "அவன் சேமுடைய கூடாரங்களில் குடியிருப்பான்" என்ற வாக்கை நம் கண் முன்னாலேயே நிறைவேற்றியிருக்கிறதைக் காண்கிறோம்.

மூன்றாவதாகக் "கானான் அவனுக்கு அடிமையாயிருப்பான்" என்ற முன்னறிவிப்பு. நாம் (இஸ்ரவேல் பாகம் 3, 116–117 ஆம் பக்கங்களில்) பார்த்தபடி நோவா கானானைச் சபித்தான். கானானுடைய தகப்பன் காம் ஆப்பரிக்காக் கண்டத்தில் குடியேறியதாகப் பாரம்பரியம் கூறுகிறது. ஆப்பரிக்க மக்கள் அதிக முன்னேற்றமடையாதவர்களாக வெகு காலம் காடுகளில் வேட்டையாடி வசிக்கிறவர்களாகவே இருந்தனர். யாப்பேத்தின் சந்ததியார் (ஐரோப்பியரும், அமெரிக்காவில் குடியேறிய மக்களும்) வெகுவாக முன்னேறி ஐரோப்பாவிலும், விசேஷமாக அமெரிக்காவிலும் மற்ற தீவாந்தரங்களிலும் தாங்கள் உண்டுபண்ணிய காப்பி, தேயிலை, ரப்பர், வாழை, ஏலம், கொக்கோ முதலிய தோட்டப் பண்ணைகளில் கூலியாட்களாக வேலை செய்ய ஆப்பிரிக்க மக்களை (காமுடைய சந்ததியாரைப்) பிடித்து அவர்களை அமெரிக்காவிலும் ஐரோப்பாவிலும் அடிமைகளாகச் சந்தைகளில் விற்றனர். சமீப காலம் வரை கானானின் சந்ததியார் பல நாடுகளில் யாப்பேத்தின் வம்சாவழியினருக்கு அடிமைகளாகவே விளங்கினர்.

இவ்வண்ணமாக நேவாவின் மூன்றாவது ஆசீர்வாதமும் யாப்பேத்துக்கு வார்த்தைக்கு வார்த்தை நிறைவேறலாயிற்று. பரிசுத்த வேதாகமத்தின் கூற்றுக்கள் எவ்வளவு ஆச்சரியமான பிரகாரமாக உண்மையாயிருக்கின்றன. இவைகளை விசுவாசிக்க மறுத்து, இவைகள் யாரோ பிற்காலத்தில் கேள்விப்பட்டவைகளை

எழுதி வைத்த கட்டுக் கதைகள் என்று கூறும் வேதப் புரட்டர்களை என்ன செய்வது? என்ன செய்யலாம் என்று வாசகர்களே தீர்ப்புக் கூறுங்கள். தீர்ப்புக்கூற நாம் யார்? சர்வ வல்லமையுள்ள ஆண்டவரே பார்த்துக்கொள்ளுவார்.

# நவீன கண்டுபிடிப்புகளைப் பற்றி பழங்கால தீர்க்கர்களின் முன்னுரைப்பு

## நியூட்ரான் குண்டு (Neutron Bomb) பற்றியது.

இரண்டாம் உலக மகாயுத்த காலத்தில் பலவிதமான குண்டு களைக் கண்டு பிடித்தனர். அதில் ஒரு வகைக் குண்டு தான் நியூட்ரான் குண்டு. இவ்வகைக் குண்டுகள் அதிகமான உஷ்ணத்தைக் கக்கு வதனால் மனிதர் செத்தாலும் கட்டடங்கள் சேதப்படாது: இதைப் பற்றி சகரியா தீர்க்கன் கீழ்கண்டபடி விஸ்தரித்திருக்கிறார்:–

**முன்னுரைப்பு :– சகரியா 14 : 12 (கி.மு. 487)**

"எருசலேமுக்கு விரோதமாக யுத்தம் பண்ணின எல்லா ஜனங்களை யும் கர்த்தர் வாதிக்கும் வாதையாவது: அவர்கள் காலூன்றி நிற்கையிலும் அவர்களுடைய சதை அழிந்து போகும்; அவர்கள் கண்கள் தங்கள் குழி களிலே கெட்டுப் போகும்; அவர்கள் நாவு அவர்கள் வாயிலே அழுகிப் போகும்".

**நிறைவேறுதல் :–**

நியூட்ரான் குண்டுகள் வெடிக்கப்பட்டால் அதின் சுற்று வட்டாரத்தில் ஏற்படும் மின் அணு கதிர்களின் சொல்லொணா உஷ்ணத்தினால் மனித னுடைய சதை வெந்து அழுகிப்போம். அதி நுட்பமான கண், வாய் முதலிய அவயவங்கள் சடுதியாய் அழிந்துவிடும்.

இப்பேர்ப்பட்ட குண்டு பிற்காலத்தில் உபயோகிக்கப்படும் என்று சகரியா தீர்க்கருக்கு 2500 ஆண்டுகளுக்கு முன்னதாகவே ஆண்டவர் வெளிப்படுத்தி விட்டார்.

## ஜெட் ஆகாய விமானங்களைப் பற்றியது.

தற்காலத்து ஜெட் ஆகாய விமானங்களைப் பற்றி ஏசாயா தீர்க்கர் தனக்கு வெளிப்படுத்தப்பட்டபடி தன்னுடைய காலத்துப் பாணியில் சூசக மாகக் கூறியிருக்கிறார். அதைப் பார்ப்போம் :–

**முன்னுரைப்பு :– ஏசாயா 5 : 26–30 (கி.மு. 760)**

26) "....அவர்களைப் பூமியின் கடையாந்தரங்களிலிருந்து பயில் காட்டி அழைப்பார்; அப்பொழுது அவர்கள் தீவிரமும் வேகமுமாய் வருவார்கள்".

27) "அவர்களில் விடாய்த்தவனும் இடறுகிறவனும் இல்லை; தூங்குகிறவனும் உறங்குகிறவனுமில்லை; அவர்களில் ஒருவனுடைய இடுப்பின் கச்சை அவிழ்வதும், பாதரட்சைகளின் வார் அறுந்து போவதும் இல்லை".

28) "அவர்கள் அம்புகள் கூர்மையும், அவர்கள் வில்லுகளெல்லாம் நாணேற்றினவைகளும், அவர்கள் குதிரைகளின் குளம்புகள் கற்பாறை யாக எண்ணப்பட்டவைகளும், அவர்கள் உருளைகள் சுழல்காற்றுக்கு ஒத்தவைகளுமாயிருக்கும்".

29) "அவர்கள் கெர்சிப்பு சிங்கத்தின் கெர்ச்சிப்பு போலிருக்கிறது; பால சிங்கங்களைப்போலக் கெர்ச்சித்து, உறுமி, இரையைப் பிடித்து, தப்பிக்கிறவன் இல்லாமல், அதை எடுத்துக்கொண்டு போய்விடுவான்".

30) "அந்நாளில், சமுத்திரம் இரைவது போல் அவர்களுக்கு விரோதமாய் இரைவார்கள்; அப்பொழுது தேசத்தைப் பார்த்தால், இதோ, அந்தகாரமும் வியாகுலமும் உண்டு; அதின் மேகங்களினால் வெளிச்சம் இருண்டுபோம்".

**நிறைவேறுதல் :-**

இப்பகுதியில் விஸ்தரிக்கப்பட்டிருக்கும் காரியங்களைக் கவனிப்போம் :

1) பூமியின் எந்தப் பகுதியிலிருந்தும் வருவார்கள்.

2) வருகிறவர்களின் வேகத்துக்கு அளவிருக்காது.

3) அப்படி வேகமாய் வருகிறவர்கள் களைத்துப் போக மாட்டார்கள்.

4) அவர்கள் தூங்க நேரமிருக்காது.

5) அவர்களுடைய உடைகள் சரீரத்தோடு இணைந்து விலகிவிடாத படி பொருத்தப்பட்டிருக்கும்.

(இவைகளெல்லாம் ஜெட் விமானிகளுக்குப் பொருந்தும்)

6) அவர்கள் ஆயுதங்கள் குறிபார்த்த வண்ணம் இருக்கும்.

7) அவர்களுடைய வாகனங்கள் கற்பாறையைப் போல் உறுதியான வைகளாக இருக்கும்.

8) அவ்வியந்திரங்களை இயக்குகிறவைகள் சுழல் காற்றுக்கு ஒப் பானதாக வேகமும் பலமுமுள்ளவைகளாயிருக்கும்.

9) அவைகள் புறப்பட்டுப் போகும் போது அவைகளின் சத்தம்

சிங்கத்தின் உறுமலைப் போல் பெரிய சத்தமாயிருக்கும்.

10) அவைகள் புறப்பட்டுப் போனால் தாங்கள் எடுத்த காரியத்தைச் சிங்கத்தைப் போல் நிறைவேற்றிவிட்டுத் திரும்பும்.

11) அவைகள் குண்டுகளை வீசி தேசங்களின் மேல் அழிவையும் ஜனங்களுக்கு வியாகுலத்தையும் உண்டாக்கி விடும்.

12) ஜெட் விமானங்கள் பறக்கத் துவங்கிய பின் அவைகளுக்குப் பின்னால் மேகத்தைப் போல புகை எழும்பி வானம் இருண்டு போகத் தக்கதாய் இருக்கும்.

(இந்த விளக்கங்கள் ஜெட் விமானங்களுக்குப் பொருந்தும்.)

இப்படியாக இக்காலத்துக் கண்டுபிடிப்பை 2700 ஆண்டுகளுக்கு முன் ஏசாயா தீர்க்கதரிசி விளக்க முயன்றிருக்கிறார். அக்காலத்திய அவர்களுடைய நிலைமையில் இவ்வண்ணம் தான் ஜெட் விமானத்தை வர்ணித்திருக்க முடியும். ஆகவே 2700 ஆண்டுகளுக்கு முன்னதாகவே ஆண்டவர் இக்காலத்துக் கண்டுபிடிப்பைப் பற்றி ஏசாயா தீர்க்கருக்கு வெளிப்படுத்திவிட்டார்.

# இராக் நாட்டைப் பற்றிய கர்த்தருடைய முன்னறிவிப்பு

இராக் என்ற நாடு 1932ஆம் ஆண்டு சுதந்திர நாடாக உருவானது. அதற்கு முன் ஆங்கிலேயர், துருக்கியர், பாரசீகர், அசீரியர், பாபிலோனியர் முதலானோரால் இப்பகுதி ஆளப்பட்டது. அதற்கு முன் இப்பகுதி மொசப்பத்தேமியா என்று அழைக்கப்பட்டது. மொசப்பத்தேமியா என்ற வார்த்தைக்கு "இரண்டு நதிகளுக்கு இடைப்பட்ட பாகம்" என்று பொருள். அதாவது ஐப்பிராத்து, இதக்கேல் (டைகிரிஸ்) நதிகளுக்கு மத்தியிலுள்ள நாடு. கி.மு. 4000 ஆண்டுகளுக்கு முன்பே சுமேரியன் நாகரீகம் இப்பிராந்தியத்தில் உருவானது என்று அறிஞர்கள் கருதுகின்றனர். இந்நாட்டின் வரலாறு கீழ் கண்டவாறு :–

கி.மு. 4000 – கி.மு. 2800 வரை மொசப்பத்தேமியா என்ற நாடாய் இருந்தது.

கி.மு. 2800 – கி.மு. 1300 வரை இரண்டாகப் பிரிந்து பாபிலோனியா, அசீரியா என்ற நாடுகளானது.

கி.மு. 1300 – கி.மு. 625 வரை ஒரே அசீரிய இராஜ்யமாய் மாறியது. இக்காலத்தில் பல சுற்றுப்புற நாடுகளை ஜெயித்து அதிக பலமுள்ள நாடாய் விளங்கியது. இக்காலத்தில் இஸ்ரவேல் நாட்டில் ஏசாயா, மீகா முதலிய தீர்க்கர்கள் தீர்க்கதரிசனம் உரைத்து ஜனங்களை எச்சரித்தனர்.

கி.மு. 625 – கி.மு. 333 வரை அசீரியா பலமிழந்து மொசப்பத்தேமியா, சீரியா என்று இரண்டு நாடுகளாகியது.

கி.மு. 312–கி.மு.64 வரை மகா அலெக்சான்டரின் தளபதி செலூக்கஸ் நிக்கட்டாரின் சந்ததியாரிடம் செலூஸிட் இராஜ்யமானது.

கி.மு. 64 – கி.பி. 395 வரை ரோம இராஜ்யத்தின் ஒரு பாகமானது.

கி.பி. 395–கி.பி.636 வரை ரோமருக்கும், பார்த்தியருக்கும், சசேனியருக்கும், பைசான்டியருக்கும் இடையில் யுத்தக்களம் ஆனது.

கி.பி. 636 – கி.பி. 1258 வரை அரபிய முஸ்லிம்களில் ஆளுகைக்குட்பட்டது.

கி.பி. 1258 – கி.பி. 1516 வரை மங்கோலியரின் ஆட்சிக்குட்பட்டது.

கி.பி. 1516 – கி.பி. 1917 வரை ஒட்டமானிய துருக்கியரின் ஆட்சிக் குட்பட்டது.

கி.பி. 1917 முதல் ஆங்கிலேயரின் ஆட்சி துவங்கியது.

கி.பி. 1921 இல் ஆங்கில அரசுக்குக் கீழ் ஒரு முடியரசு ஏற்படுத்தப்பட்டது.

கி.பி. 1932 இல் நாட்டுக்கு முழு சுதந்திரம் அளிக்கப்பட்டது.

கி.பி. 1958 இல் ஒரு புரட்சி ஏற்பட்டு முடியரசு கவிழ்க்கப்பட்டது.

கி.பி. 1968 இல் பொதுவுடமை "பாத்" கட்சி அரசைப் பிடித்தது.

கி.பி. 1980 இல் இரான் நாட்டோடு யுத்தம் தொடுத்தது.

கி.பி. 1990 ஆகஸ்ட் 2ஆம் தேதி குவெய்த் நாட்டை ஆக்கிரமித்துப் பிடித்தது.

1990ஆம் ஆண்டு ஆகஸ்ட் 2ஆம் நாள் இராக் அதிபர் சதாம் ஹுசேன் குவெய்த் நாட்டைப் படையெடுத்துத் தன் நாட்டோடு இணைத்துக் கொண்டு, குவெய்த் இராக்கின் 19வது மாகாணம் என்று உலகுக்கு அறிவித்து விட்டார். சதாம் ஹுசெனின் வாதம் என்னவென்றால் மொசப்பத்தேமியா என்ற நாடு இருந்த காலத்தி லிருந்தே (அதாவது கி.மு. 4000 ஆண்டு முதற்கொண்டே) குவெய்த்தும் இராக்கும் ஒரே நாடாகத் தான் இருந்தது. சமீப காலத் தில், அதாவது கி.பி. 1700ஆம் ஆண்டுக்குப் பின் தான் குவெய்த் தனி நாடானது. தற்சமயம் இருக்கும் இராக் நாடு அந்த மொசப்பத் தேமியா நாட்டைப் பின்னால் அரசாண்டு வந்த பாபிலோனியர், அசீரியர் முதலிய அரசுகளின் வாரிசு. ஆகையால் குவெய்த்தை நான் என் நாடோடு இணைத்துக் கொண்டது சரி தான் என்பதே.

கடைசி காலங்களில் இப்பகுதியில் நடக்கப்போகும் காரியங்களை முன்னறிவிக்கும் போது பரிசுத்த வேதாகமம் இராக்கை அசீரியா என்றே வர்ணித்திருக்கிறது.

**உதாரணமாக :– ஏசாயா 19 : 23–25 ( கி.மு. 714 )**

23)"அக்காலத்திலே எகிப்திலிருந்து அசீரியாவுக்குப் போகிற பெரும் பாதை உண்டாயிருக்கும்; அசீரியர் எகிப்துக்கும், எகிப்தியர் அசீரியாவுக்கும் வந்து, எகிப்தியர் அசீரியரோடுங்கூட ஆராதனை செய்வார்கள்".

24)"அக்காலத்திலே இஸ்ரவேல் எகிப்தோடும் அசீரியாவோடும் மூன்றாவதாகப் பூமியின் நடுவில் ஆசீர்வாதமாயிருக்கும்".

25)"அவர்களைக் குறித்து சேனைகளின் கர்த்தர்: எகிப்தியராகிய என் ஜனமும், அசீரியராகிய என் கரத்தின் கிரியையும், இஸ்ரவேலராகிய என் சுதந்தரமும் ஆசீர்வதிக்கப்பட்டது என்று சொல்லி அவர்களை ஆசீர்வதிப்பார்".

ஆகையால் அசீரியாவில் பிற்காலத்தில் நடக்கப் போவதைப் பற்றிப் பரிசுத்த வேதாகமத்தில் கூறப்பட்டிருப்பது தற்கால இராக் நாட்டிற்குப் பொருந்தும்.

பரிசுத்த வேதாகமத்தில் நாடுகள் குறிப்பிட்டிருக்கும் போது அவைகளுக்கும் இஸ்ரவேல் நாட்டுக்கும் அல்லது இஸ்ரவேல் ஜனத்துக்கும் ஏதாவது சம்மந்தம் இருக்கும். இஸ்ரவேல் ஜனத்துக்குத் தாம் கொடுத்த வாக்குத்தத்தங்கள் நிறைவேற அந்நிய அரசர்களை அல்லது நாடுகளை ஆண்டவர் பயன்படுத்தி வருகிறார் என்பதைப் பரிசுத்த வேதாகம வாயிலாகவும், முதலாம், இரண்டாம் உலக மகா யுத்தங்களின் மூலமாகவும் அறிகிறோம். உதாரணமாக, இஸ்ரவேல் வடக்கு பத்துக் கோத்திரங்களைத் தண்டிக்க அசீரிய மன்னன் 5ஆம் சல்மனாசாரை ஆண்டவர் பயன்படுத்தினார். அதைப் போல இஸ்ரவேலின் தெற்கு இரண்டு கோத்திரங்களைத் தண்டிக்க ஆண்டவர் பாபிலோனிய மன்னன் நேபுகாத்நேச்சாரைப் பயன்படுத்தினார்.

இஸ்ரேல் நாடு உருவாகி இன்றைய நிலைக்கு வந்து சேருவதற்கு இரண்டு உலக மகா யுத்தங்கள் தேவைப்பட்டன. என்றாலும் ஆண்டவர் ஆபிரகாமுக்கு வாக்குப் பண்ணியதில் மூன்றில் ஒரு பங்கு கூட இன்னும் யூதர் கைக்கு வந்து சேரவில்லை. கி.பி. 1990ஆம் ஆண்டு இராக்குக்கும் குவெய்த்துக்கும் நடந்த யுத்தத்தில் இராக்கின் அதிபதி சதாம் ஹுசேய்ன் இஸ்ரேல் நாட்டை அந்த யுத்தத்தில் ஈடுபடுத்தி அரபு முஸ்லிம் அரசுகளின் ஆதரவைத் திரட்டவும், இஸ்ரரேல் நாட்டை அழிக்கவும் திட்டம் போட்டார். அச்சமயத்தில் சில வேத அறிஞர்கள் அந்த யுத்தத்தின் மூலம் ஆபிரகாமுக்கு ஆண்டவர் வாக்குத்தத்தம் பண்ணிய பூமி இஸ்ரேல் நாட்டுக்குக் கிடைக்குமோ என்று எண்ணினர்; ஆனால் அவர்களுடைய எதிர்பார்ப்பு நிறைவேறவில்லை. ஆண்டவர் ஆபிரகாமுக்கு வாக்குப் பண்ணிய நிலப்பரப்பைக் கவனிப்போம் :-

**ஆதியாகமம் 15 : 18–21 (கி.மு. 1913)**

18) "அந்நாளிலே கர்த்தர் ஆபிரகாமோடே உடன்படிக்கை பண்ணி, எகிப்தின் நதி துவக்கி ஐப்பிராத்து நதி என்னும் பெரிய நதி மட்டுமுள்ளதும்,

19) "கேனியரும், கெனிசியரும், கத்மோனியரும்,

20) "ஏத்தியரும், பெரிசியரும், ரெப்பாயீமியரும்,

21) "எமோரியரும், கானானியரும், கிர்சாசியரும், எபூசியரும் என்பவர்கள் இருக்கிறதுமான இந்தத் தேசத்தை உன் சந்ததிக்குக் கொடுத்தேன் என்றார்".

இந்நிலப்பரப்பைக் கவனித்துப் பார்த்தால் தாவீது, சாலமோன் அரசர்கள் ஆண்ட நிலப்பகுதியைக் காட்டிலும் அதிகமான பகுதி களடங்கும்; அல்லது தற்கால தேசங்களின் பிரிவுப்படி இஸ்ரேலுக்கு ஐக்கிய நாடுகள் சபை 1947ஆம் ஆண்டு பிரித்துக் கொடுக்க உத்தேசித்த நிலப் பரப்பைவிட இன்னும் கீழ்கண்ட நிலப்பரப்பு இஸ்ரேல் நாட்டுக்குக் கிடைக்க வேண்டும்:–

1) சீனாய் தீபகற்பத்தில் எகிப்து நதி என்ற சிறு ஆற்றிலிருந்து கிழக்கேயும் வடக்கேயும் உள்ள நிலப்பரப்பு. இப்பகுதி 1967ஆம் ஆண்டு ஆண்டவரால் இஸ்ரேலுக்குக் கொடுக்கப்பட்டது என்றாலும் 1982 ஆம் ஆண்டு காம்ப் டேவிட் உடன்படிக்கையின் படி எகிப்துக்கு இஸ்ரேல் இப்பகுதியைத் திருப்பிக் கொடுத்து விட்டது. (சில வேத ஆராய்ச்சியாளர் எகிப்து நதி என்பது எகிப்தில் ஓடும் நீல நதி; அதற்குக் கிழக்கேயுள்ள பிரதேசம் முழுவதும் ஆண்டவர் அபிரகாமுக்கு வாக்குப் பண்ணிய பூமி என்று கூறுகின்றனர்).

2) காசா பகுதி,

3) மேற்குக் கரை பகுதி (யூதேயா, சமாரியா) இந்த இரு பகுதிகளும் 1967ஆம் ஆண்டு யுத்தத்தில் இஸ்ரேலின் கைக்கு வந்தன. இப்பகுதிகளில் அநேக புது யூதக் குடியேற்றங்களை இஸ்ரேல் நிர்மாணித்து யூதரை அங்கு குடியேற்றியது. ஆனால் 1987ஆம் ஆண்டு முதல் அங்கு வசிக்கும் அரபிய முஸ்லிம்கள் வன்முறையில் இஸ்ரேல் நாட்டுக்கு விரோதமாகக் கலகத்தில் ஈடுபட்டபடியால் அவர்களைச் சமாளிக்க இஸ்ரேல் நாட்டு பிரதமர் இட்சாக் ரபீன் என்பவர் அல்பத்தா என்ற பலஸ்தீனிய முஸ்லிம் தீவிர வாதிகளுடன் சமாதான ஒப்பந்தப் பேச்சு வார்த்தைகள் நடத்தி காசா

பகுதியை முழுவதும் பலஸ்தீனிய தீவிரவாதிகளுக்குத் தாரை வார்த்தும், மேற்குக் கரைப் பகுதியில் எரிகோவைச் சுற்றியுள்ள சிறு பாகத்தை முதலாவது பரீட்சார்த்தமாக அவர்கள் கையில் கொடுத்தும் பின்னர் படிப்படியாய் ஐந்து ஆண்டுகளில் முழு மேற்குக் கரைப் பகுதியையும் அவர்களுக்குக் கொடுத்துவிடுவது என்று ஒப்பந்தம் பண்ணினார். இதைச் சகிக்காத ஒரு வைதீக யூத வாலிபன், யீகல் அமீர், (Yigal Amir) 1995 நவம்பர் மாதம் 5 ஆம் தேதி டெல் அவீவ் நகரில் ஒரு சமாதான பொதுக் கூட்டம் நடத்தி முடித்து வரும்பொழுது அவரைச் சுட்டுக் கொன்று விட்டான். ஆனால் அவருக்குப் பின் அவருடைய அயல் நாட்டு மந்திரி அந்தப் பேச்சு வார்த்தைகளைத் தொடர்ந்து நடத்திக்கொண்டு வந்தார்.

4) ரெப்பாயீமர் குடியிருந்த நாடு – இது தற்கால யோர்தான் நாட்டின் மேற்குப் பகுதி.

5) எமோரியர் குடியிருந்த நாடு – இது தற்கால யோர்தான் நாட்டின் வட பகுதியும், சீரியா நாட்டின் தென் பகுதியுமாகும். இப்பகுதிகள் இரண்டும் யோர்தான் நதிக்குக் கிழக்கே கீலேயாத், பாசான் என்று அழைக்கப்பட்ட பகுதிகள். இவைகள் மோசேயினால் காத் கோத்திரத்துக்கும் மனாசே பாதி கோத்திரத்துக்கும் பிரித்துக் கொடுக்கப்பட்டவை. யோர்தான் நதிக்குக் கிழக்கு பக்கத்தில் அமைந்த நாடுகள். 1922ஆம் ஆண்டு ஆங்கிலேயரால் டிரான்ஸ் ஜோர்டான் என்று பெயரிடப்பட்டு அரபிய நாடோடிகளின் தலைவன் அப்துல்லாவுக்கு அளிக்கப்பட்டது.

6) ஏத்தியர் நாடு – இப்பிரதேசம் தற்கால சீரியா நாட்டில் அடங்கும்.

7) "ஐப்பிராத்து நதி வரை" – சில வேத ஆராய்ச்சியாளர் சீரியா நாட்டின் ஒரு பகுதியும், இராக் நாட்டின் ஒரு பிரதேசமும் இதில் அடங்கும் என்று கருதுகின்றனர். சாலேம் கிர்பான் (Salem Kirban) என்ற அரபிய கிறிஸ்தவ வேதாகம தீர்க்கதரிசன விரிவுரை யாளர் தெற்கே சீனாய் பாலைவனத்திலிருக்கும் எகிப்து நதி துவக்கி நேர் கிழக்கே ஐப்பிராத்து நதி மட்டும், 850 மைல் அகலம் இஸ்ர வேலின் தெற்கு எல்கையாகவும், வடக்கே ஹாமாத் என்ற நகரை எல்கையாக வைத்து மத்திய தரைக் கடலிலிருந்து ஐப்பிராத்து நதி வரை 200 மைல் அகலம், மேற்கே மத்திய தரைக் கடல், கிழக்கே ஐப்பிராத்து நதி; இந்த எல்கைகளுக்குட்பட்ட நாடு முழுவதும் என்று கி.பி.

கருதுகிறார். இதற்கு இவர் கொடுக்கும் ஆதாரம் எண்ணாகமம் 13:21 உம், எண்ணாகமம் 34 : 1–15 வசனங்களும்.

ஆகவே சீரியா, இராக் பகுதிகளும் ஆண்டவர் ஆபிரகாமுக்கு வாக்குத்தத்தம் பண்ணிய பிரதேசத்தில் அடங்குகிறபடியால் இராக் இஸ்ரேல் நாட்டின் மீது தான் இரஷ்யா நாட்டிலிருந்து பெற்ற 'ஸ்கட்' (Scud) ஏவுகனைகளை ஏவிவிட்டு இஸ்ரேல் நாட்டை சண்டைக் கிழுத்து தன் நாட்டை விஸ்தரித்துக் கொள்ளவும், அரபு நாடுகளின் ஒத்தாசையைப் பெற்றுக் கொள்ளவும் திட்டம் தீட்டியது. ஆனால் அத்திட்டம் பலிக்கவில்லை.

அசீரியா நாட்டைப் பற்றி ஏசாயா தீர்க்கதரிசி கூறியிருப் பதற்கும், கி.பி. 1990ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் குவெய்த்தில் இராக் நாட்டால் நடத்தப்பட்ட காரியங்களுக்கும் எவ்வளவு ஒற்றுமை இருக்கிறதென்று பாருங்கள் :–

**முன்னுரைப்பு :– ஏசாயா 10 : 12–14 ( கி.மு. 713 )**

12) "ஆதலால்: ஆண்டவர் சீயோன் மலையிலும் எருசலேமிலும் தமது செயலையெல்லாம் முடித்திருக்கும் போது, அசீரிய ராஜாவினு டைய பெருமையான நெஞ்சின் வினையையும், அவன் கண்களின் மேட்டிமையான பார்வையயம் நான் விசாரிப்பேன் என்கிறார்".

13) "அவன்: என் கையின் பெலத்தினாலும், என் ஞானத்தினா லும் இதைச் செய்தேன்; நான் புத்திமான், நான் ஜனங்களின் எல்லை களை மாற்றி, அவர்கள் பண்டகசாலைகளைக் கொள்ளையிட்டு வல்லவனைப் போல் குடிகளைத் தாழ்த்தினேன்".

14) "ஒரு குருவிக் கூட்டைக் கண்டுபிடிக்கிறது போல் என் கை ஜனங்களின் ஆஸ்தியைக் கண்டு பிடித்தது; விட்டுவிடப்பட்ட முட்டை களை வாரிக் கொள்வது போல் பூமியையெல்லாம் நான் வாரிக் கொண்டேன்; ஒருவரும் செட்டையை அசைத்ததுமில்லை, வாயைத் திறந்ததுமில்லை, கீச்சென்று சத்தமிட்டதுமில்லை என்று சொல்லு கிறான்".

**நிறைவேறுதல் :**

மேலே கூறப்பட்டிருக்கும் காரியங்கள் நடக்கும் காலம், "ஆண்டவர் தமது செயலையெல்லாம் எருசலேமில் முடித்திருக்கும் போது", அதாவது எருசலேம் நகரம் புறஜாதிகளால் மிதிக்கப்படும் காலம் நிறைவேறும் போது என்று எடுத்துக் கொண்டோமென்றால்,

1967ஆம் ஆண்டு முதல் எருசலேம் நகரம் முழுமையும் இஸ்ரேல் நாட்டின் கைக்குள் வந்துவிட்ட இக்காலம் என்று அனுமானிக்கலாம். என்றாலும் பலஸ்தீனியர் என்று தங்களை அழைத்துக் கொள்ளும் அல்ஃபத்தா அரபிய முஸ்லிம்கள் எருசலேம் தான் தங்களுடைய வருங்கால பலஸ்தீனிய நாட்டின் தலை நகரம் என்றும், அது கிடைக்கும் வரை தங்கள் போராட்டத்தைக் கைவிடுவதில்லை என்றும் கூறிக் கொண்டு இஸ்ரேல் நாட்டுடன் சமாதான பேச்சு வார்த்தைகளுக்கு முட்டுக் கட்டை போட்டுக் கொண்டு வருகிறார்கள்.

13ஆம் 14ஆம் வசனங்களில் கூறப்பட்டிருக்கும் சில காரியங்களைக் கவனிக்கலாம். இராக்கின் அதிபதி சதாம் ஹுசேன், தான் அதிக பலவான் என்றும், தன் இராஜ்யம் அதிக பலமுள்ளதென்றும், தான் அதிக ஞானவான் என்றும் எண்ணிக் கொண்டு தன்னை இரண்டாம் நேபுகாத்நேச்சார் என்று அழைத்துக் கொண்டார். நேபுகாத்நேச்சார் என்பதற்கு "எல்கைகளை மாற்றுபவன்" என்ற அர்த்தமும் உண்டு. ஆகவே சதாம் ஹுசேன் முதலாவது இரான் நாட்டோடு யுத்தம் துவங்கி இரானின் எல்லைப் பகுதியில் சிறிது பாகத்தை தன் நாட்டோடு சேர்த்தார்; எட்டு ஆண்டுகள் யுத்தம் நடந்தது. அடுத்தது குவெய்த் நாட்டைப் படையெடுத்து சில நாட்களில் முழு நாட்டையும் தன் நாட்டோடு சேர்த்துக்கொண்டு இராக்கின் 19ஆம் மாகாணம் என்று பிரகடனப்படுத்தினார்.

அது மட்டுமல்ல, அரபு முஸ்லிம் நாடுகளுக்குத் தான் தலைவன் ஆகிவிட வேண்டும் என்ற எண்ணத்திலும் இஸ்ரேல் நாட்டை ஜெயிக்க வேண்டும் என்ற எண்ணத்திலும் 1980ஆம் ஆண்டுகளிலேயே ஒரு அணு உலையைக் கட்ட ஆரம்பித்தார். சதாம் ஹுசேய்னின் தந்திரத்தை அறிந்த இஸ்ரேல் நாடு 1981ஆம் ஆண்டே அவ்வுலையை குண்டு போட்டுத் தகர்த்து இராக்கின் யோசனையைப் பாழடித்தது.

இராக் எட்டு ஆண்டுகள் ஈரான் நாட்டோடு யுத்தம் செய்ததில் அதின் பொருளாதாரம் அதிக சீர்குலைந்து போனது. 100 கோடி டாலர் உலக அரபியரல்லாத நாடுகளிலுமிருந்தும், வங்கிகளிலிருந்தும் கடன் வாங்கியிருந்தது. 3500 கோடி கோடி டாலர்கள் சவுதி அரேபியா, குவெய்த், கத்தார் முதலிய நாடுகளிடமிருந்து கடன் வாங்கியிருந்தது. இவைகளைத் திருப்பித் தர வழியில்லாத காரணத்தால் ஒரு சுருக்க வழியைக் கடைப் பிடித்தது. முதலாவது குவெய்த்தின் ஏராளமான செல்வமும், நில எண்ணெயும் அதன் கண்களை

உறுத்தியது. குவெய்தை சண்டைக்கு இழுக்க ஒரு யுக்தியைக் கை யாண்டது. அதாவது, முதலாவதாக குவெய்த் இராக்கின் எல்லைக் குட்பட்ட பகுதியிலிருந்து 240 கோடி கோடி டாலர் பெருமானமான நில எண்ணெயை திருட்டுத் தனமாக உறிஞ்சி எடுத்துக் கொண்ட தினால் இராக்குக்குப் பெரும் நஷ்டத்தை விளைவித்ததென்றும், இரண்டவதாக இராக்கின் நிலப்பரப்பில் குவெய்த் படைத் தளங்களை அமைத்து இராக்குக்குச் சொந்தமான நிலத்தை ஆக்கிரமித்திருக்கிற தென்றும் அரபு கூட்டமைப்பு நாடுகளுக்கு ஒரு புகாரை அனுப்பியது. அதோடு கூட, குவெய்த்தும், ஐக்கிய அரபு குடியரசு நாடுகளும் அமெரிக்காவோடு சேர்ந்து சதி செய்து அதிகமான எண்ணெயை, எண்ணெய் வள நாடுகளின் கூட்டுத் தீர்மானத்திற்கு எதிராக, உலகச் சந்தைக்கு அனுப்பியதால் இராக் நாட்டிற்கு பெரும் நஷ்டத் தை விளைவித்துவிட்டன என்றும் குறை கூறியது.

இராக்கின் ஜனத்தொகை 1,56,76,000. குவெய்த்தின் மொத்த ஜனத்தொகை 18,00,000; இதில் நில எண்ணெய் கிணறுகளில் வேலை செய்ய வந்த வெளி நாட்டவர் 10,00,000 பேர்: 4,00,000 பேர் அரபு–இஸ்ரேலிய யுத்தங்களில் அகதிகளாகி குடிபெயர்ந்து இராக் கில் குடியேறிய பலஸ்தீனிய அரபு முஸ்லிம்கள்; மீதி 4,00,000 பேர் தான் குவெய்த் நாட்டவர்.

குவெய்த் உலக நாடுகளிலேயே அதிக எண்ணெய் வளமிக்க நாடு; உலக நாடுகளிலேயே தன் ஊழியர்களுக்கு அதிக மாதச் சம் பளம் கொடுக்கும் நாடும் குவெய்த் தான். அது தன் நாட்டின் பாது காப்புக்கென்று வைத்திருந்த படையின் எண்ணிக்கை 20,000 பேர் மட்டும் தான்.

இச்சந்தர்ப்பத்தில் இராக் கி.பி. 1990 ஆகஸ்ட் மாதம் 2ஆம் தேதி தன் 10,00,000 பேர் அடங்கிய படையை குவெய்த்தின் மேல் அனுப்பி ஒரு முன் எச்சரிக்கையுமில்லாமல் நாட்டைக் கைப்பற்றியது. இராக்கின் சடுதி நடவடிக்கையால் குவெய்த்தின் அதிபதி, அமீர் ஷெய்க் ஜாபர் அல் அஹ்மத் அல் சாபா (Emir Sheikh Jaber al Ahmad al Sabah) தன் குடும்பத்துடன் சவுதி அரேபியா நாட்டில் தஞ்சம் புகுந்தார். யோர்தானின் மன்னன் ஹுசேய்ன் அரபு மாநாட் டைக் கூட்டி ஒரு சமரச முயற்சியில் ஈடுபட்டார். ஆனால் யேமன், பலஸ்தீனிய விடுதலை இயக்கம், மாரிடானியா, லிபியா, சூடான், ஜிபௌதி முதலிய நாடுகள் இராக் செய்தது தவறு என்று சுட்டிக் காட்டக் கூட முன்வரவில்லை.

இதற்கிடையில் ஒரு பெரிய யுத்தம் ஆரம்பிக்கப் போகிறது என்பதை அறிந்த வெளி நாட்டவர் தங்கள் சொத்துக்களையும், உடமைகளையும் விட்டுவிட்டு உயிர் தப்பினால் போதும் என்று குவெய்த்தை விட்டு வெளியேறத் துவங்கினர். ஆனால் குவெய்த்திலிருந்து நேராக வேறு நாடுகளுக்குப் போக ஆகாய விமான வசதியோ அல்லது கப்பல் வசதியோ இல்லாமற் போனபடியால், ஜனங்கள் யோர்தான் தலைநகர் அம்மானுக்கு வந்து அங்கிருந்து தங்கள் நாடுகளுக்குப் போக வேண்டியதாயிற்று. ஆனால் குவெய்த்திலிருந்து அம்மானுக்கு வருவதற்கு ஒரு வாகன வசதியும் கிடையாது. மக்கள் பாலைவனத்தில் சாப்பாடும், தண்ணீரும் இல்லாமல் கடும் வெப்பத்தில் சிக்கி அதிக சிரமப்பட்டு அம்மான் வந்திருக்கின்றனர். அங்கிருந்து ஆகாய விமானங்கள் மூலம் தங்கள் தங்கள் நாடுகளுக்குப் போயினர்.

இச்சந்தர்ப்பத்தில் தான் ஏசாயா 10ஆம் அதிகாரம் 13, 14ஆம் வசனங்களில் அடங்கிய முன்னறிவிப்புகள் வார்த்தைக்கு வார்த்தை நிறைவேறியது. குவெய்த்தின் அமீர் உயிர் தப்பினால் போதும் என்று வெளியேறிவிட்டார். அதைப் போல வெளி நாட்டவரும் தங்கள் வங்கிக் கணக்கிலிருந்த பணத்தைக் கூட எடுக்க முடியாமல் வெளியேறினர். இது சதாம் ஹுசேய்னின் படைக்கு அதிக வசதியாய்ப் போய் விட்டது. நாட்டை விட்டு வெளியேறிய மக்களின் உடமைகள், கார்கள், மற்ற வாகனங்கள், தொலை காட்சிப் பெட்டிகள், சலவை இயந்திரங்கள் (வாஷிங் மெஷின்கள்), வீட்டுச் சாமான்கள், முதலிய எல்லாப் பொருட்களும் நூற்றுக் கணக்கான லாரிகளில் ஏற்றப்பட்டு இராக்கிற்குக் கொள்ளையடித்துக் கொண்டு போகப்பட்டன. இவ்விதமாக "அவர்கள் பண்டகசாலைகளைக் கொள்ளையிட்டு வல்லவனைப் போல் குடிகளைத் தாழ்த்தினேன்" என்ற வாக்கும், "ஒரு குருவிக் கூட்டைக் கண்டுபிடிக்கிறது போல் என் கை ஜனங்கள் ஆஸ்தியைக் கண்டுபிடித்தது ; விட்டுவிடப்பட்ட முட்டைகளை வாரிக் கொள்வதைப் போல் பூமியையெல்லாம் நான் வாரிக் கொண்டேன் ; ஒருவரும் செட்டையை அசைத்ததுமில்லை, கீச்சென்று சத்தமிட்டதுமில்லை என்று சொல்லுகிறான்" என்ற ஆண்டவருடைய முன்னறிவிப்பு எப்படி வார்த்தைக்கு வார்த்தை 2703 ஆண்டுகளுக்குப் பின் துல்லியமாக நிறைவேறியது என்பதைக் கண்ணோக்கும்போது பரிசுத்த வேதாகமம் எவ்வளவு மகத்துவமானது என்பது விளங்குகிறதல்லவா?.

கி.பி. 1990 ஆகஸ்ட் 6ஆம் தேதி ஐக்கிய நாடுகளின் பந்தோபஸ்து சபை கூடி இராக்–குவெய்த் விவகாரத்தைப் பற்றிப் பேசி என்ன நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று தீர்மானித்தது. இதைப் பற்றியும் ஆண்டவர் மீகா தீர்க்கதரிசியின் மூலமாக ஒரு அபூர்வ முன்னுரைப்பைக் கொடுத்திருக்கிறார். அதைக் கவனிப்போம் :–

**முன்னுரைப்பு :– மீகா 5 : 5–6 (கி.மு. 710)**

5) "இவரே சமாதான காரணர்:அசீரியன் நம்முடைய தேசத்திலே வரும் போதும், நம்முடைய அரண்மனைகளை மிதிக்கும் போதும், ஏழு மேய்ப்பரையும் மனுஷரில் எட்டு அதிபதிகளையும் அவனுக்கு விரோதமாக நிறுத்துவேன்".

6) "இவர்கள் அசீரியா தேசத்தையும், நிம்ரோத்தின் தேசத்தையும், அதினுடைய வாசல்களுக்கு உட்புறமாகப் பட்டயத்திற்கு இரையாக்குவார்கள்; அசீரியன் நம்முடைய தேசத்தில் வரும்போதும், நம்முடைய எல்லைகளை மிதிக்கும்போதும் அவனுக்கு நம்மைத் தப்புவிப்பார்".

**நிறைவேறுதல் :–**

சர்வ வல்லமையுள்ள ஆண்டவர் 2703 ஆண்டுகளுக்கு முன்னதாகவே அசீரியனுக்கு (தற்கால இராக் நாட்டுக்கு) விரோதமாக ஏழு மேய்ப்பர்களையும் எட்டு அதிபதிகளையும் நிறுத்துவேன் என்று கூறியிருக்கிறார். அதாவது மேய்ப்பர்களைப் போல் ஜனங்களை நடத்திக் கொண்டு போகிறவர்களையும், தேசத் தலைவர்களையும் இராக்குக் விரோதமாக நடவடிக்கை எடுக்க ஏற்படுத்துவேன் என்று கூறியிருக்கிறார். 7 + 8 = 15; அதாவது 15 நாட்டுத் தலைவர்களை அல்லது பிரமுகர்களை ஏற்படுத்துவேன் என்று ஆண்டவர் கூறியிருக்கிறார். இந்த சச்சரவில் முடிவு எடுக்கும்படி ஐக்கிய நாடுகளின் பொதுச் சபையினால் ஐக்கிய நாடுகளின் பாதுகாப்புச் சபை பணிக்கப்பட்டது. ஐக்கிய நாட்டுப் பாதுகாப்புச் சபையின் எண்ணிக்கை 15. அச்சமயத்தில் பாதுகாப்புச் சபையில் அங்கத்தினராயிருந்த நாடுகள் வருமாறு :–

1) அமெரிக்க ஐக்கிய நாடு (யு.எஸ்.ஏ) 2) பிரிட்டன்,
3) பிரான்ஸ், 4) சீனா,
5) இரஷ்யா, 6) அர்ஜென்டினா,
7) பல்கேரியா, 8) காங்கோ,

9) மேற்கு ஜெர்மெனி, 10) கானா,

11) இத்தாலி, 12) ஜப்பான்,

13) ஐக்கிய அரபு எமிரேட்ஸ், 14) வெனிசூலா,

15) ஜாம்பியா.

இந்த 15 நாட்டுத் தலைவர்களும் அல்லது அவர்கள் பிரதி நிதிகளும் 1990 ஆகஸ்ட் 10ஆம் தேதி நியூயார்க்கில் கூடி, இராக் உடனே குவெய்த் நாட்டை விட்டு வெளியேறி அரசை குவெய்த் அமீரிடம் ஒப்படைக்க வேண்டும்; இராக் வெளியேறும் வரை அதன் மீது வர்த்தகத் தடை ஏற்படுத்தப்படும்; ஐந்து மாதங்களுக்குள் வெளியேறத் தவறினால் குவெய்த்தை விட்டு இராக்கை வெளியேற்ற ஐக்கிய நாட்டுப் பாதுகாப்புச் சபை ஏற்ற நடவடிக்கை எடுக்கலாம் என்ற தீர்மானத்தை நிறைவேற்றியது.

1991 ஜனவரி 10ஆம் தேதி இந்த ஐந்து மாதக் கெடு முடிந்தது, என்றாலும் இராக் குவெய்த்தை விட்டு வெளியேறவில்லை. ஆகவே 1991 ஜனவரி 17ஆம் தேதி அமெரிக்காவும், இராக்கின் செய்கையை ஆதரிக்காத இன்னும் 27 நாடுகளும் ஐக்கிய நாடுகளின் பாதுகாப்புச் சபையின் தீர்மானத்தை அமுல் நடத்தும் முகமாய் இராக்கின் மேல் தாக்குதல் நடவடிக்கையில் இறங்கின. இதைப் பற்றியும் ஆண்டவர் எரேமியா தீர்க்கதரிசியின் மூலமாய் ஒரு ஆச்சரியமான முன்னறி விப்பைக் கொடுத்திருக்கிறார். அதைக் கவனிப்போம் :–

**முன்னுரைப்பு :– எரேமியா 51 : 1–2 (கி.மு. 595)**

1) "கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால் : இதோ, நான் பாபிலோனுக்கு விரோதமாகவும், எனக்கு விரோதமாய் எழும்புகிற வர்களின் மத்தியில் குடியிருக்கிறவர்களுக்கு விரோதமாகவும் அழிக் கும் காற்றை எழும்பப் பண்ணி",

2) "தூற்றுவாரைப் பாபிலோனுக்கு அனுப்புவேன்; அவர்கள் அதைத் தூற்றி வெறுமையாக்கிப் போடுவார்கள்; ஆபத்து நாளிலே அதற்கு விரோதமாய்ச் சூழ்ந்து கொண்டிருப்பார்கள்".

**நிறைவேறுதல் :–**

இதுவரை அசீரியா தேசத்தைப் (இராக்) பற்றிய தீர்க்கதரி சனங்களை எடுத்துக்காட்டி விவரித்துக் கொண்டிருந்துவிட்டு இப்பொழுது பாபிலோனைப் பற்றிய தீர்க்கதரிசனத்தை எடுத்துக் கூறுகிறாரே என்று நீங்கள் எண்ணலாம். ஏசாயா காலத்தில் கி.மு.

710ஆம் ஆண்டு அசீரியா என்று அழைக்கப்பட்ட நாடு எரேமியா தீர்க்கதரிசியின் காலத்தில், நேபோபொலேசார், நேபுகாத்நேச்சார் முதலிய அரசர்களின் காலத்தில், பாபிலோனைத் தலை நகரமாகக் கொண்டு பாபிலோனியா என்ற நாடாக அழைக்கப்பட்டது. ஆகவே இதே இராக் நாட்டிற்கு எரேமியாவின் காலத்தில் பாபிலோன் தலை நகரமாயிருந்தது; தற்காலத்தில் பாபிலோன் அழிந்து போய் அதற்குப் பதிலாய் பாபிலோனுக்கு 50 மைல் தூரம் வடக்கேயுள்ள பாக்தாத் நகரம் இராக் நாட்டிற்குத் தலை நகரமாயிருக்கிறது.

ஆகவே எரேமியா தீர்க்கதரிசி பாபிலோனைப் பற்றிக் கூறி யிருக்கும் முன்னறிவிப்பு தற்கால இராக் நாட்டிற்குப் பொருந்தும்.

மேலே கூறப்பட்ட முன்னுரைப்பில் ஆண்டவர் இராக் நாட்டிற்கு விரோதமாக "அழிக்கும் காற்றை" எழும்பப் பண்ணி, தூற்றுவாரை இராக்குக்கு அனுப்பி அவர்களால் இராக் வெறுமையாக்கிப் போடப்படும் என்று கூறுகிறார். ஆங்கிலத்தில் அழிக்கும் காற்று என்பதற்கு "Destroying Wind" என்று K. J. V. வேதாகமத்தில் மொழி பெயர்க்கப்பட்டிருக்கிறது.

அரபு நாடுகள் அநேகமாய் எல்லாமே பாலைவனப் பிரதேசம். பாலைவனத்தில் சூறாவளிக் காற்று அடித்தால் அதிக வேகமாகவும், பலத்த சேதத்தை உண்டு பண்ணுவதாகவும் இருக்கும். ஆகையி னால் போலும் மேலே குறிப்பிட்ட இருபத்தெட்டு நாடுகளும் இராக் நாட்டிற்கு விரோதமாகப் படையெடுத்த பொழுது தங்களுடைய இந்த நடவடிக்கைக்கு ஆங்கிலத்தில் "Operation Desert Storm" என்று பெயர் வைத்தார்கள். இதற்குத் தமிழில் "பாலைவன புயற்காற்று நடவடிக்கை" என்று அர்த்தம்.

பரிசுத்த வேதாகமத்தில் 2586 ஆண்டுகளுக்கு முன் கர்த்தர் எரேமியா தீர்க்கரின் மூலமாக இந்நடவடிக்கைக்கு பெயரும் கி.பி. 1991ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபை இந்நடவடிக் கைக்கு சூட்டிய பெயரும் ஒன்று போல இருப்பது தற்செயலாக ஏற்பட்டதா அல்லது தீர்க்கதரிசன நிறைவேறுதலா?

பாபிலோனை (இராக் நாட்டை) முறியடிப்பதற்கு ஒரு நாட்டை யல்ல அநேக நாடுகளை அனுப்புவேன் என்ற பொருள்படும் முன்னறி விப்பு எரேமியா 5:2 ஆம் வசனத்தில் காணப்படுகிறது. அதே விதமாக இராக்குக் விரோதமாக ஒரு நாடு அல்ல 28 நாடுகள் தங்கள் படை பலத்தை அனுப்பி இந்த யுத்தத்தில் கலந்து கொண்டன என்பதும்

இன்னொரு தீர்க்கதரிசன நிறைவேறுதல் என்பதை அறிந்து கொள்ள வேண்டும்.

இன்னும் பாபிலோனுக்கு (இராக்குக்கு) விரோதமாக ஏவப்படும் ஆயுதங்களைப் பற்றியும் எரேமியாவின் மூலமாய் ஆண்டவர் முன்னுரைத்திருக்கிறார். அவைகளையும் பார்ப்போம் :–

**முன்னுரைப்பு :– எரேமியா 51 : 27 (கி.மு. 595)**

27) ''தேசத்திலே கொடியேற்றுங்கள்; ஜாதிகளுக்குள் எக்காளம் ஊதுங்கள்; ஜாதிகளை அதற்கு விரோதமாக ஆயத்தப் படுத்துங்கள்; அரராத், மின்னி, அஸ்கெனாஸ், என்னும் ராஜ்யங்களை அதற்கு விரோதமாக வரக் கூப்பிடுங்கள்; அதற்கு விரோதமாகத் தளகர்த்தனுக்குப் பட்டங் கட்டுங்கள்; சுணையுள்ள வெட்டுக் கிளிகள் போன்ற குதிரைகளை வரப் பண்ணுங்கள்''.

**நிறைவேறுதல்கள் :**


''தேசத்திலே கொடியேற்றுங்கள்'' என்பதற்கு அர்த்தம் 'யுத்தத்திற்கு ஆயத்தப்படுங்கள்' என்பதே. இவைகளெல்லாம் 2500 ஆண்டுகளுக்கு முன்னான பாஷையிலும், தற்காலத்து நவீன யுத்தக் கருவிகளை அக்காலத்துக் கருவிகளை வைத்து விளக்கப் பிரயாசை எடுத்திருப்பதும் காணப்படுகிறது. இவைகளை நாம் விளங்கிக் கொள்ளப் பிரயாசப்படுவோம் :–

''ஜாதிகளுக்குள் எக்காளம் ஊதுங்கள்'' – இராஜ்யங்களுக்கு யுத்தம் ஆரம்பமாகிறது என்று அறிவியுங்கள் அல்லது யுத்தத்திற்கு வாருங்கள் என்று அழைப்பு விடுங்கள். ''அரராத், மின்னி, அஸ்கெனாஸ் என்னும் ராஜ்யங்களை அதற்கு விரோதமாக வரக் கூப் பிடுங்கள்'' – இந்த இராஜ்யங்கள் தற்காலக் கருங்கடலுக்கும் கஸ்பியன் கடலுக்கும் இடைப்பட்ட பிரதேசத்தில் அக்காலத்திலிருந்த இராஜ்யங்கள். இவைகளோடு ஐக்கிய நாடுகள் சபையைச் சேர்ந்த மற்ற நாடுகளுக்கும் ஐ.நா. பாதுகாப்புச் சபை இராக்குக்கு விரோதமாக யுத்தத்தில் கலந்து கொள்ள அழைப்பு விடுத்தது; ஆனால் மொத்தம் 28 நாடுகள் மட்டும் ஆயுதங்கள், கப்பல்கள், ஆகாய விமானங்கள், டாங்குகள், படை வீரர்கள் முதலியவைகளை அனுப்பி யுத்தத்தில் கலந்து கொண்டன.

''அதற்கு விரோதமாகத் தளகர்த்தனுக்குப் பட்டங்கட்டுங்கள்'' – 28 நாடுகளிலிருந்து வெவ்வேறு படைகள் வந்து கூடும் பொழுது

ஒவ்வொரு நாட்டுப் படைக்கும் ஒவ்வொரு தளபதி இருப்பான். அதோடு கூட ஆகாயப் படை, கப்பல் படை, தரைப் படை என்று வெவ்வேறு படைகளிருக்கும்போது அவைகளை நடத்த ஒவ்வொரு படைக்கும் ஒரு தளபதி இருப்பான்; ஆனால் இவைகளை ஒன்று சேர்த்து கூட்டு நடவடிக்கை எடுக்க எல்லா தளபதிகளுக்கும் மேலாக ஒரு தலைமைத் தளபதி இருக்க வேண்டியது அத்தியாவசியம். அப்படி ஜெனரல் நார்மன் ஸ்வாஸ்காப் (General Norman Schwascaf Chairman of the Joint Chiefs of Staff) என்பவரை தலைமை தளபதிகளின் கூட்டுக்கு தலைவராகத் தேர்ந்தெடுத்து, அவரை இந்த "பாலைவன புயற்காற்று நடவடிக்கை" (OPERATION DESERT STORM) க்குத் தலைமைத் தளபதியாக நியமித்துத் "தளகர்த்தனுக்குப் பட்டங்கட்டுங்கள்" என்ற முன்னறிவிப்பையும் நிறைவேற்றினார்கள்.

"சுணையுள்ள வெட்டுக்கிளிகள் போன்ற குதிரைகளை வரப்பண்ணுங்கள்". 2500 ஆண்டுகளுக்கு முன் அவர்களுக்கு வேகமாய்ப் பிரயாணம் பண்ணக்கூடிய வாகனம் (மிருகம்) குதிரை தான். தற்காலத்தில் உபயோகிக்கப்படும் அதிவேக இரகசிய போர் விமானங்கள் எரேமியா தீர்க்கருக்கு வெட்டுக் கிளியின் உருவத்தைப் போல் தரிசனத்தில் காட்டப்பட்டிருக்கப்பட வேண்டும். அதோடு தற்கால போர் விமானங்கள் அதிவேகமானவைகளாகவும், குறி தவறாமல் குண்டுகளை வீசி யுத்தம் செய்யக் கூடியவைகளாகவும் இருப்பதால் எரேமியா தீர்க்கர் "சுணையுள்ள வெட்டுக்கிளிகள் போன்ற குதிரைகளை வரப்பண்ணுங்கள்" என்று குறிப்பிட்டிருக்கிறார். உதாரணத்துக்கு வெட்டுக்கிளியின் உருவத்தில் ஒரு அமெரிக்க விமானத்தின் படம் கீழே கொடுக்கப்பட்டிருக்கிறது.



வெட்டுக் கிளிகளைப் போன்ற உருவமுள்ளதும், வெகு வேகமும், குறி தவறா புத்திக் கூர்மையுள்ளதுமான, ஏறி சவாரி செய்யக் கூடியதுமான வாகனங்களை இராக்குக்கு விரோதமாகக்

கொண்டு வாருங்கள் என்று தீர்க்கர் கூறுகிறார். இவ்விதமான 1242 ஆகாய விமானங்கள் இராக்கை குவெய்த்திலிருந்து வெளியேற்ற உபயோகிக்கப்பட்டன.

இதே போல அக்கால பாஷையில் தற்காலத்து ஆயுத வாகனம் வர்ணிக்கப்பட்டிருக்கிறது; அதையும் கவனிப்போம் :-

**முன்னுரைப்பு :- எரேமியா 50 : 27 (கி.மு. 595)**

27)"அதின் காளைகளையெல்லாம் வெட்டுங்கள்; அவைகள் கொலைக்களம் சேரக்கடவது ஐயோ! அவர்கள் விசாரிக்கப்படும் நாள் வந்ததே".

**நிறைவேறுதல் :-**

தற்காலத்தில் உபயோகிக்கும் டாங்கிகள் (Tanks) இரும்புக் கவச பீரங்கி பொருத்திய வாகனங்கள் அக்காலத்து காளைகளுக்கு ஒப்பிட்டுக் கூறப்பட்டிருக்கிறது. இராக் – குவெய்த் யுத்தத்தில் உபயோகிக்க இராக் 5500 டாங்கிகளை தயார் செய்து வைத்திருந்தது என்றும் ஆனால் இராக்குக்கு விரோதமாக யுத்தம் பண்ணிய 28 நாட்டுப் படைகளும் மொத்தம் 3673 டாங்கிகளைத் தான் பயன் படுத்தினவென்றும் புள்ளி விபரங்கள் கூறுகின்றன. என்றாலும் இராக்கின் அதிகப்படியான டாங்கிகள் எதிரிகளின் குண்டு வீச்சினால் சேதப்படுத்தப்படுத்தப்பட்டன என்று சரித்திரம் கூறுகிறது.

முஸ்லிம் நாடுகளையும், அரபு நாடுகளையும் பிரியப்படுத்தவும், தனக்கு சாதகமாக செயல்பட அழைக்கவும் சதாம் ஹுசேன் தான் இராஷ்யாவிலிருந்து வாங்கி வைத்திருந்த ஸ்கட் ஏவுகனைகளை இஸ்ரேல் நாட்டின் மீது ஏவத் துவங்கினார். அவருடைய ஆலோசனை என்னவென்றால், இஸ்ரேல் திருப்பித் தன்னை தாக்கினால் உடனே முஸ்லிம் நாடுகளும், அரபு நாடுகளும் தனக்கு உதவிக்கு வந்து ஐக்கிய நாடுகளின் படைகளோடு யுத்தம் தொடுக்கும் என்பதே. ஆனால் அமெரிக்கா இஸ்ரேல் பதிலடி கொடுக்க வேண்டாம் என்று தடுத்து நிறுத்திவிட்டு அதற்குப் பதிலாக ஸ்கட் ஏவுகணைகளை தடுத்து நிறுத்தி அழிக்கக்கூடிய பேட்ரியாட் ஏவு கணைகள் என்ற ஆயுதங்களை தனது அரேபிய படைத் தளங்களிலிருந்து உபயோகித்து ஸ்கட் ஏவுகணைகளை அழித்துப் போட்டது. இராக் இஸ்ரேல் நாட்டின் மேல் நாற்பது ஸ்கட் ஏவுகணைகளை ஏவி விட்டது; சதாம் ஹுசேன் கவனம் முழுவதும் எருசலேம் டெல் அவீவ் நகர்களின் மேல் தான் இருந்தது; ஒரு ஏவுகணை குறி தவறி பாலைவனப்

பிரதேசத்தில் விழுந்து பிரயோஜனமில்லாமல் போனது; 38 ஸ்கட் ஏவுகணைகள் அமெரிக்க பேட்ரியாட் மிசில்களால் அழிக்கப்பட்டன. ஒரு ஏவுகணை ஒரு கட்டிடத்துக்கு சேதமுண்டாக்கியது. அதில் மூன்று பேர் மட்டும் இறந்ததாகச் செய்திகள் கூறின.

**முன்னுரைப்பு :- ஏசாயா 31 : 5 (கி.மு. 713)**

5) "பறந்து காக்கிற பட்சிகளைப் போல, சேனைகளின் கர்த்தர் எருசலேமின் மேல் ஆதரவாக இருப்பார்; அவர் அதைக் காத்துத் தப்பப் பண்ணுவார்; அவர் கடந்து வந்து அதை விடுவிப்பார்".

**நிறைவேறுதல் :**

மேலே கூறியபடி ஆண்டவர் எருசலேமின் மேல் ஆதரவாக இருந்து ஒரு சேதமும் இல்லாதபடி இந்த யுத்தத்தில் எருசலேம் நகரத்தை பறந்து தாக்கும் பேட்ரியாட் மிசில்கள் மூலமாய் காப்பாற்றினார்.

அதுமட்டுமல்ல, சதாம் ஹுசேய்ன் ஒரு குண்டு வீசினால் 10 லட்சம் பேரை சாகடிக்கக்கூடிய நச்சு வாயு குண்டுகளையும் அதிகமாகச் சேகரித்து வைத்திருந்தார். ஆகையினால் யூத மக்கள் அதிகம் பயந்து போய் எல்லா யூதருக்கும், மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்றுவரும் யாவருக்கும் கூட நச்சு வாயு தடுப்பு சாதனங்களையும் கொடுத்து ஆயத்தமாக இருந்தனர். ஆனால் சதாம் ஹுசேன், தான் நச்சு வாயு குண்டுகளை ஏவி விட்டால் அமெரிக்கா தன் நாட்டின் மீது அது குண்டுகளைப் போட்டுவிடுமோ என்று பயந்து இஸ்ரேல் நாட்டின் மீது நச்சு வாயு குண்டுகளைப் போடவில்லை. இவ்விதமாக இந்த யுத்தத்தில் இஸ்ரேல் நாட்டிற்கும், எருசலேமுக்கும், டெல் அவீவ் நகருக்கும் சேதமில்லாமல் கர்த்தர் காப்பாற்றினார்.

**முன்னுரைப்பு :- எரேமியா 50 : 9 (கி.மு. 595)**

9) "இதோ, நான் பாபிலோனுக்கு விரோதமாக வட தேசத்தில் இருக்கும் பெரிய ஜாதிகளின் கூட்டத்தை எழுப்பி, அதை வரப்பண்ணுவேன்; அவர்கள் அதற்கு விரோதமாக ஆயத்தம் பண்ணுவார்கள்; அங்கேயிருந்து வருகிறவர்களால் அது பிடிக்கப்படும்; அவர்களுடைய அம்புகள் சாமர்த்தியமுள்ள பராக்கிரமசாலியின் அம்புகளைப் போல் இருக்கும்; அவைகள் விருதாவாய்த் திரும்புவதில்லை".

**நிறைவேறுதல்கள் :-**

இராக்-குவெய்த் விவகாரத்தில் குவெய்த்தை விட்டு இராக்கை வெளியேற்ற வட தேசத்திலிருக்கும் பெரிய ஜாதிகளின் கூட்டத்தை

எழுப்பி வரப் பண்ணுவேன் என்று ஆண்டவர் எரேமியா தீர்க்கதரிசியின் மூலமாக உரைத்திருக்கிறார். இந்தக் கூட்டத்தில் முக்கிய பங்கு எடுத்துக் கொண்ட நாடுகளில் முக்கியமானவைகள் இராக்குக்கு வடக்கே உள்ள அமெரிக்க ஐக்கிய நாடுகள், பிரிட்டன், ஜெக்கோஸ்லவேக்சியா, இரஷ்யா, இத்தாலி, கனடா முதலிய நாடுகள் ஆகும். இன்னும் இந்தக் கூட்டில் முக்கியமான நாடுகள் அர்ஜென்டினா, செனகல், நைகர், பங்களாதேஷ், பாகிஸ்தான், எகிப்து, மொராக்கோ, ஆறு வளைகுடா நாடுகள், ஆஸ்திரேலியா, முதலிய நாடுகளும் அடங்கும். இந்நாடுகளின் தரைப் படை, கடற்படை, ஆகாயப் படை முதலியவைகள் ஒன்று சேர்ந்து கூட்டு நடவடிக்கையில் 100 மணி நேரத்தில் இராக்கின் படைகள் பின்வாங்கி குவெய்த்தை விட்டு வெளியேறின. ஆனால் அவைகள் வெளியேறுவதற்கு முன் 600க்கும் அதிகமான எண்ணெய் கிணறுகளை ஒன்றுக்கும் உதவாமல் தூற்றுப் போட்டு மேலும் 650 எண்ணெய் கிணறுகளுக்கு தீ வைத்துவிட்டுப் போயின.இந்த 650 எண்ணெய் கிணறுகளின் தீயை அணைக்க உலக முழுவதிலுமிருந்து தீ அணைப்பு வல்லுனர்கள் ஒரு வருட காலம் போராட வேண்டியதிருந்தது.

நான்கு நாள் யுத்தத்தில் பன்நாட்டுப் படைகளிடம் இராக்கின் படைகள் தோற்றுப் போய் சரணடைய வேண்டியதாயிற்று.

"அவர்களுடைய அம்புகள் சாமர்த்தியமுள்ள பராக்கிரமசாலியின் அம்புகளைப் போலிருக்கும்; அவைகள் விருதாவாய்த் திரும்புவதில்லை". தற்காலத்து நவீன ஆயுதங்களை 2500 ஆண்டுகளுக்கு முன் அவர்கள் உபயோகித்த அம்புகளுக்குத்தான் ஒப்பிட்டுக் கூற முடியும். ஆனால் அப்படி உபயோகிக்கப்படும்ஆயுதங்கள் மிக வலுவுள்ளவைகளாகவும் குறி தவறாதவைகளாகவும், அதிக சேதத்தை உண்டு பண்ணுகிறவைகளாகவும் இருக்கும் என்று எரேமியா வர்ணித்திருக்கிறார். இந்த யுத்தத்தில் உபயோகிக்கப்பட்ட அதி நவீன ஆயுதங்களும் அப்பேர்ப்பட்டவைகளே. 5 அடி கனமுள்ள கான்கிரீட் கூரையையும் மதில்களையும் கொண்டு அமைக்கப்பட்ட பதுங்கு குழிகளையும் ஊடுருவிச் சென்று சேதம் விளைவிக்கும் ஆற்றல் கொண்ட ஏவுகணைகள் உபயோகிக்கப்பட்டன. இவைகள் ஒன்றாகிலும் குறி தவறி வீணானதில்லை. இப்படியாக பரிசுத்த வேதாகமத்தின் முன்னுரைப்புக்கள் அப்பட்டமாக வார்த்தைக்கு வார்த்தை நிறைவேறின.

**முன்னுரைப்பு :– எரேமியா 51 : 30–32 (கி.மு. 595)**

30) "பாபிலோனின் பராக்கிரமசாலிகள் யுத்தம் பண்ணாமல்

கோட்டைகளில் இருந்துவிட்டார்கள்; அவர்கள் பராக்கிரமம் அழிந்து பேடிகளானார்கள்; அதின் வாசஸ்தலங்களைக் கொளுத்திப் போட்டார்கள்; அதின் தாழ்பாள்கள் உடைக்கப்பட்டது'';

31) ''கடையாந்திர முனை துவக்கி அவனுடைய பட்டணம் பிடிபட்டது என்றும், துறை வழிகள் அகப்பட்டுப் போய், நாணல்கள் அக்கினியால் சுட்டெரிக்கப்பட்டது என்றும், யுத்த மனுஷர் கலங்கியிருக்கிறார்கள் என்றும் பாபிலோன் ராஜாவுக்கு அறிவிக்க'',

32)''அஞ்சற்காரன் மேல் அஞ்சற்காரனும், தூதன் மேல் தூதனும் ஓடுகிறான்''.

**நிறைவேறுதல் :-**

யுத்த வீரர்களும், ஆயுத படை வீரரும் குவெய்த் நாட்டைப் பிடிக்க அனுப்பப்பட்டு அவர்கள் 28 நாடுகளின் படைகளையும் சமாளிக்க முடியாமலும், ஆகாய படைகளின், கப்பற் படையின் தாக்குதல்களுக்கும் ஈடு கொடுக்க முடியாமல் பின்வாங்கி, சரணடைந்து கொண்டிருந்தபொழுது, இராக்கின் பிரதம தளபதி சதாம் ஹுசேய்னும் அவருடைய விசேஷ தளகர்த்தர்களும் பாக்தாத்தில் பூமிக்கடியில் 18 அடி ஆழத்தில், ரிக்டர் அளவுப்படி 7. 0 அளவுள்ள நில நடுக்கத்தைத் தாங்கக் கூடியதும், 300 டிகிரி செல்சியஸ் உஷ்ணத்தைத் தாங்கக் கூடியதும், ஏவுகணைகளையும், ஆகாயத்திலிருந்து போடப்படும் குண்டுகளினால் சேதமடையாம விருக்கக் கூடியதுமான பதுங்கு குழிகளில் பாதுகாப்பாகத் தங்கிக் கொண்டு யுத்தத்தை நடத்திக் கொண்டிருந்தார்கள். அவர்கள் பேடிகள் தானே!

ஆனாலும் பாக்தாத் நகரின் வீடுகளும், ஐப்பிராத்து நதியின் மேல் கட்டப்பட்டிருந்த எல்லா பாலங்களும், ரோடுகளும் பந்நாட்டுப் படைகளால் முழுவதும் அழிக்கப்பட்டன. நதி வழி போக்குவரத்தும் முழுவதும் அழிக்கப்பட்டது.

இந்நிலைமையை சதாம் ஹுசேய்னுக்கு அறிவிக்க ''அஞ்சற்காரன் மேல் அஞ்சற்காரனும், தூதன் மேல் தூதனும் ஓடுகிறான்''. சதாம் ஹுசேய்னின் படைகள் தோற்கடிக்கப்பட்டு பின்வாங்கி வருவதை உடனுக்குடன் அவருக்குப் பல வழிகளிலும் செய்திகள் அனுப்பப்பட்டுக் கொண்டிருந்தது. எவ்வளவு துல்லியமாக காரியங்கள் முன்னறிவிக்கப்பட்டுவிட்டன என்பதைக் காணும் போது பரிசுத்த வேதாகமத்தின் மேன்மை விளங்குகிறது.

**முன்னுரைப்பு :– எரேமியா 51 : 45 (கி.மு. 595)**

45) "என் ஜனங்களே, நீங்கள் அதின் (பாபிலோனின்– இராக்கின்) நடுவிலிருந்து புறப்படுங்கள்; கர்த்தருடைய கோபத்தின் உக்கிரத்துக்குத் தப்பும்படி அவனவன் தன் தன் ஆத்துமாவை இரட்சித்துக் கொள்ளக்கடவன்".

**நிறைவேறுதல் :–**

இராக் குவெய்த்தின் மேல் படையெடுக்கப் போகிறதென்பதை அறிந்ததும் குவெய்த்திலிருந்த அந்நிய நாட்டவர்களெல்லாரும் தங்கள் உடைமைகளையும் விட்டு விட்டு உயிர் தப்ப நாட்டை விட்டு வெளியேறினர். அதைப் போலவே 28 நாடுகளின் படைகள் திரட்டத் திட்டமிட்டவுடன் இராக் நாட்டிலிருந்த எல்லா அந்நிய நாட்டவரும் வெளியேறிவிடும்படி எச்சரிக்கப்பட்டனர். அதன்படி எல்லா வெளி நாட்டவரும் இராக் நாட்டை விட்டு வெளியேறி எரேமியா 51ஆம் அதிகாரம் 45ஆம் வசனத்தை நிறைவேற்றினர்.

**முன்னுரைப்பு :– எரேமியா 51 : 25 (கி.மு. 595)**

25)"இதோ, பூமியையெல்லாம் கெடுக்கிற கேடான பர்வதமே, நான் உனக்கு விரோதமாக வந்து, என் கையை உனக்கு விரோதமாக நீட்டி, உன்னைக் கன்மலைகளிலிருந்து உருட்டி, உன்னை எரிந்து போன பர்வதமாக்கிப் போடுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்".

**நிறைவேறுதல் :–**

இராக் பேராசையினால் ஈரான் மீதும், குவெய்த் மீதும் யுத்தம் தொடுத்தது மட்டுமல்ல சுற்றியுள்ள அரபிய நாடுகளின் எரிச்சலையும் சம்பாதித்துக் கொண்டது. பந்நாட்டுப் படைகள் இராக்கை ஜெயித்த பின் ஐக்கிய நாட்டுப் பாதுகாப்புச் சபை இராக் நாட்டின் மீது பொருளாதாரத் தடையை விதித்தது. இதனால் மற்ற நாடுகள் இராக் நாட்டோடு வர்த்தகம் செய்வதும், அதனிடமிருந்து கச்சா எண்ணெய் வாங்குவதும் தடை செய்யப்பட்டது. இதனால் இராக்கின் பொருளாதாரம் மிகவும் சீர் குலைந்து போய் நாடு மருத்துவ வசதி, மருந்துகளில்லாமலும், விவசாயத்திற்கு வேண்டிய உரம் முதலியவைகள் வாங்க வசதியில்லாமலும், இன்னும் பலவிதமான தடைகளினால் நாடு வறுமையில் சிக்கித் தவித்துக் கொண்டிருக்கிறது. இராக் நாடு குண்டுகளுக்கு இரையாகி நிலங்களெல்லாம் பாழும் வனாந்தரமாகி "எரிந்து போன பர்வதமாகி" இருக்கிறது.

சதாம் ஹுசேய்ன் தன் மனதை மாற்றி ஐக்கிய நாடுகள் சபையின் நிபந்தனைகளுக்கு உட்பட்டு வந்தால் இராக்கின் மேல் விதிக்கப்பட்டிருக்கும் தடை நீக்கப்பட்ட பின் அது திரும்பவும் தன் பழைய செழுமையான நிலைமைக்கு வரக்கூடும்.

**முன்னுரைப்பு :- எரேமியா 51 : 44 (கி.மு. 595)**

44) "நான் பாபிலோனிலிருக்கிற பேலைத் தண்டிப்பேன்; அது விழுங்கினதை அதின் வாயிலிருந்து கக்கப்பண்ணுவேன்; ஜாதிகள் இனி அதினிடத்திற்கு ஓடி வர மாட்டார்கள், பாபிலோனின் மதிலும் விழும்".

**நிறைவேறுதல் :-**

இப்பொழுது இராக் முஸ்லிம் நாடாக இருப்பதால் "பேல்" என்னும் பாபிலோனிய தெய்வம் இப்பொழுது வணங்கப்படாவிட்டாலும், பேலை வணங்கும் ஒரு சிறு கூட்டத்தார் இருக்கலாம். என்றாலும் இது அந்த தெய்வத்தைக் குறிக்காமல் அந்த நாட்டைக் குறித்துச் சொல்லப்பட்ட வார்த்தை. அதாவது ஆண்டவர் பாபிலோனை ( தற்கால இராகைத் ) தண்டிப்பேன் என்கிறார். அதோடு கூட "அது விழுங்கினதை அதின் வாயிலிருந்து கக்கப்பண்ணுவேன்" என்கிறார். அதாவது அண்டை நாடாகிய குவெய்த்தை விழுங்கியது; அதை சில மாதங்களுக்குள் இராக்கினிடமிருந்து விடுவித்து விட்டார். ஆகவே இராக் விழுங்கியதைக் கக்கிப் போட்டது; இப்படியாக காத்தருடைய வார்த்தை நிறைவேறியது.

**முன்னுரைப்பு :- எரேமியா 51 : 37 (கி.மு. 595)**

37)"அப்பொழுது பாபிலோன் குடியில்லாத மண்மேடுகளும், வலுசர்ப்பங்களின் தாபரமும், பாழும், ஈசல் போடப்படுதலுக்கு இடமுமாய்ப் போகும்".

**நிறைவேறுதல் :-**

இந்த இடத்தில் பாபிலோன் என்னும் போது இராக் நாட்டையல்ல பாபிலோன் நகரையே குறித்துக் கூறப்பட்டிருக்கிறது. இஸ்ரவேல் பாகம் 3 முதலாம் பதிப்பில் 54 முதல் 63ஆம் பக்கங்கள் வரை பாபிலோன் நகரைப் பற்றியும் அது எவ்விதமாக குட்டிச்சுவராய் விளங்கும் என்றும் பார்த்தோம். ஏசாயா 13: 9 – 20ஆம் வசனங்களில் "பாபிலோனானது தேவனால் சோதோமும் கொமோராவும் கவிழ்க்கப்பட்டது போல் கவிழ்க்கப்படும்" என்று கூறப்பட்டிருக்கிறது. அதைப்

போல அகஸ்து இராயன் காலத்தில் (கி.மு. 27 முதல் கி.பி. 14 வரை) வாழ்ந்த ஸ்ட்ராவோ என்ற வரலாற்று ஆசிரியர் பாபிலோன் ஒரு பாலைவனம் ஆகிவிட்டது என்று எழுதி வைத்திருக்கிறார். ஆகவே 1900 ஆண்டுகளாக பாபிலோன் நகரம் குட்டிச்சுவராய்ப் போய் விட்டது.

ஆனால் பரிசுத்த வேதாகமத்தைப் பொய்ப்பிக்கும் வண்ணம் இராக்கின் அதிபர் சதாம் ஹுசேய்ன் தான் இரண்டாம் நேபுகாத் நேச்சார் என்று விளம்பரப்படுத்திக் கொண்டு தான் பாபிலோனை பழைய நிலைக்குக் கொண்டு வரப்போவதாகக் கூறிக் கொண்டு அந் நகரைக் கட்டத் துவக்கினார். இதற்கென்று கி.பி. 1980ஆம் ஆண்டுக்குப் பின் 10 கோடி டாலர்களைச் செலவு செய்து 1 கோடியே 50 லட்சம் செங்கல்கள் செய்யப்பட்டன. அச்செங்கல்களில் 100 செங்கலுக்கு ஒரு செங்கல்லில் சதாம் ஹுசேய்ன் என்று தன் பெயரை அரபு மொழியில் பொறிக்கவும் உத்தரவிட்டார். அது மட்டுமல்ல நேபுகாத்நேச்சார் நிர்மாணித்திருந்த பழைய தொங்கு தோட்டத்தைப் போல் ஒரு தோட்டத்தைத் திரும்பவும் நிர்மாணிக்க சரியான திட்டம் தீட்டித் தருபவர்களுக்கு 15 லட்சம் டாலர் சன்மானம் தருவதாகவும் அறிவித்தார்.

( **ஆதாரம் :** Prophetic Round up April/May **1990** )

பாபிலோனின் முக்கிய நுழைவாசல் முன் இருந்ததைப் போல திரும்பவும் கட்டப்பட்டது.

( **ஆதாரம் :** End Time News - December **1990** )

ஆனால் இவைகளெல்லாம் மனிதர் நிரந்தரமாகக் குடியேறி வசிப்பதற்குக் கட்டப்படவில்லை. சுற்றுலா பயணிகளைக் கவருவதற்கும், அதன் மூலமாய்த் தன் நாட்டிற்கு வருவாயை அதிகரிப்பதற்கும், தனக்குப் பெயரும் புகழும் உண்டாக்கிக் கொள்வதற்காகவும் செய்யப்பட்ட காரியங்களாகத் தோன்றுகிறது. எது எப்படி இருந்தாலும் ஆண்டவருடைய தீர்மானத்தை மனிதனால் மாற்ற முடியுமா? ஆண்டவருடைய தீர்மானம் : ''இனி என்றென்றைக்கும் அது (பாபிலோன் நகரம்) குடியேற்றப்படுவதில்லை; தலைமுறை தலைமுறையாய் ஒருவரும் அதில் சஞ்சரிப்பதுமில்லை'' என்பதே – (எரேமியா 50:39). இந்த வேத வாக்கு நிறைவேற இராக் குவெய்த்தை ஆக்கிரமித்துப் பிடித்தபடியால் ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையின் தீர்மானப்படி 28 நாடுகள் இராக்கின் மேல்

நடவடிக்கை எடுத்து குவெய்த்தை விட்டு விரட்டி, இராக்கின் மீது வர்த்தகத் தடை விதித்தது. இதனால் இராக்கிற்கு பெருத்த சேதம் விளைந்தது மட்டுமின்றி அதன் பொருளாதாரம் மிகவும் சீர்குலைந்து போனது. யுத்தத்தால் சேதமடைந்த தன் தலை நகர் பாக்தாத் நகரை சீர் செய்யவே முடியாத நிலை உருவாகிவிட்டது. ஜனங்களுக்கு உணவு, மருத்துவ வசதி, போக்கு வரத்து வசதி முதலியவைகளும் செய்து கொடுக்க முடியாத நிலை உருவாகிவிட்டது. இந்நிலையில் புதிதாக பாபிலோன் நகரை எடுப்பித்துக் கட்டுவது எங்ஙனம்? இன்னும் அநேக ஆண்டுகளுக்கு பாபிலோனை திரும்ப எடுப்பித்துக் கட்டும் யோசனைக்கே இடமில்லை.

எல்லாம் வல்ல இறைவனின் திருவாக்கு ஒரு நாளும் பொய்க்காது என்பது இதனால் நிருபணமாகிறது.

# லவோதிக்கேயா சபையைப் பற்றிய முன்னறிவிப்பு

ஆசியாவிலுள்ள ஏழு சபைகளுக்கு எழுத வேண்டியதை ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து யோவான் அப்போஸ்தலனுக்கு வெளிப்படுத்தி எழுதி வைத்தார். அவைகளில் லவோதிக்கேயா சபையும் ஒன்று. பரிசுத்த வேதாகமத்தில் ஆசியா என்று கூறப் பட்டிருக்கும் பகுதி பிற்காலத்தில் ஆசியா மைனர் (சின்ன ஆசியா) என்றும், தற்காலத்தில் துருக்கி என்றும் அழைக்கப்படுகிறது.

லவோதிக்கேயா என்ற நகரம் துருக்கியில் லைக்கஸ் என்ற நதிக்கரையில் இருந்தது. என்றாலும் அந்நகருக்கு எப்பொழுதும் குடி தண்ணீர் கஷ்டம். இந்நகரம் அப்பகுதியில் ஒரு செல்வம் மிக்க நகர மாக அநேக வங்கிகளை நடத்திக் கொண்டிருந்த நகரமாயும், விலை யுயர்ந்த கறுப்புத் துணிகளையும், விலையுயர்ந்த ஆட்டு மயிர் கம்பளங் களை உற்பத்தி செய்கிற நகரமாகவும், ஒரு மருத்துவ நகரமாகவும், விசேஷமாக கண் மை தயாரிக்கும் நகரமாகவும் விளங்கியது.

கி.பி. 60/61ஆம் ஆண்டில் ஒரு பெரிய பூமி அதிர்ச்சி உண்டாகி நகரமே நாசமாகியது. அதைத் திரும்ப எடுப்பித்துக் கட்ட அப்பொழு திருந்த ரோம அரசாங்கம் பண உதவி செய்ய முன் வந்தது. ஆனால் அந்நகர மக்கள் தங்களுக்குப் பிற உதவி தேவை இல்லை என்று கூறி, தங்கள் பணத்திலேயே நகரத்தை எடுப்பித்துக்கட்டினர்.

பரிசுத்த பவுல் கி.பி. 64ஆம் ஆண்டு கொலோசெயருக்கு எழுதிய நிருபத்தில் லவோதிக்கேயாவிலுள்ள சபையையும் குறிப்பிடுகிறார் (கொலோசேயர் 2:1; 4:13;4:15–16). ஆகவே லவோதிக்கேயாவில் ஒரு நல்ல கிறிஸ்தவ சபை பரிசுத்த பவுலின் காலத்தில் செயல்பட்டு வந்திருக்கிறது. இச்சபையைப் பற்றி இயேசு கிறிஸ்து யோவான் அப்போஸ்தலன் மூலம் கி.பி. 96ஆம் ஆண்டில் கூறியிருப்பதைப் பார்ப்போம் :–

**முன்னுரைப்பு :– வெளிப்படுத்தின விசேஷம் 3 : 14–19 (கி.பி. 96)**

14)"லவோதிக்கேயா சபையின் தூதனுக்கு நீ எழுதவேண் டியது என்னவெனில்:உண்மையும் சத்தியமுமுள்ள சாட்சியும், தேவனு டைய சிருஷ்டிக்கு ஆதியுமாயிருக்கிற ஆமென் என்பவர் சொல்லுகிற தாவது ;

15) உன் கிரியைகளை அறிந்திருக்கிறேன்; நீ குளிருமல்ல அனலுமல்ல; நீ குளிராயாவது அனலாயாவது இருந்தால் நலமாயிருக்கும்.

16) இப்படி நீ குளிருமின்றி அனலுமின்றி வெதுவெதுப்பாயிருக்கிறபடியினால் உன்னை என் வாயினின்று வாந்தி பண்ணிப் போடுவேன்".

18) "நான்: நீ ஐசுவரியவானாகும்படிக்கு நெருப்பிலே புடமிடப்பட்ட பொன்னையும், உன் நிர்வாணமாகிய அவலட்சணம் தோன்றாதபடிக்கு நீ உடுத்திக் கொள்வதற்கு வெண் வஸ்திரங்களையும் என்னிடத்திலே வாங்கிக் கொள்ளவும், நீ பார்வையடையும்படிக்கு உன் கண்களுக்குக் கலிக்கம் போடவும் வேண்டுமென்று உனக்கு ஆலோசனை சொல்கிறேன்".

19) "நான் நேசிக்கிறவர்களெவர்களோ அவர்களைக் கடிந்து கொண்டு சிட்சிக்கிறேன். ஆகையால் நீ ஜாக்கிரதையாயிருந்து, மனந்திரும்பு".

**நிறைவேறுதல் :-**

லவோதிக்கேயா நகருக்கு 5 அல்லது 6 மைல் தூரத்தில் சுடு நீருற்றுகள் இருந்தன அந்நீர் அருவிகளாக லவோதிக்கேயா நகருக் கருகில் வருவதற்குள் அவைகளின் சூடு குறைந்து வெதுவெதுப்பான நிலையில் இருக்கும். அந்நீர் சூடாயிருக்கும் போது குடித்தாலும் கஷ்டமாயிருக்காது; குளிர்ச்சியானபின் குடித்தாலும் கஷ்டமாயிருக் காது; ஆனால் வெதுவெதுப்பாயிருக்கும் போது குடித்தால் குமட்டிக் கொண்டு வாந்தி வரும். இதை உதாரணமாக வைத்து இயேசு கிறிஸ்து லவோதிக்கேயா சபையை எச்சரிப்பது மட்டுமல்ல, ஆலோசனையும் கூறி, "ஜாக்கிரதையாயிருந்து மனந்திரும்பு" என்று கூறியிருக்கிறார்.

ஆதி திருச்சபைகளின் தலைவர்கள் (மேய்ப்பர்கள்) கண்காணி (Bishop) என்று அழைக்கப்பட்டனர். துருக்கியிலிருந்த ஏழு சபைகளுக்கும் (வெளி. 2–3) ஏழு கண்காணிகளிருந்தனர். காலம் செல்லச் செல்ல அநேக சபைகள் உருவாகியிருக்கலாம். ரோம இராயன் கான்ஸ்டன்டைன் காலம் முதல் கிறிஸ்தவ மதம் அரசாங்க மதமாக பிரகடனப்படுத்தப்பட்டபடியால் கிறிஸ்தவ மதம் ரோமரால் ஆளப்பட்ட பகுதிகளிலெல்லாம் அதிவிரைவில் பரவியது. ஆகவே துருக்கியிலும் அநேக சபைகள் உண்டாயிருக்க வேண்டும். அக்

காலங்களில் லவோதிக்கேயாவின் போராயர் பிரதம பேராயராக சுற்றியுள்ள அநேக சபைகளை மேற்பார்ப்பவராக நியமிக்கப்பட்டார்.

முஸ்லிம்கள் அப்பிராந்தியத்தைப் பிடித்த பொழுதும் கிறிஸ்தவ சபைகள் இயங்கின. என்றாலும் நாளாக ஆக கிறிஸ்தவ சபை உலகப் பிரகாரமான காரியங்களில் அதிகக் கவனம் செலுத்தி சடங்காச்சாரங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து பெயர் கிறிஸ்தவ சபையாக மாறி ஆண்டவருடைய ஆலோசனையையும் அசட்டை செய்தபடியால் ஆண்டவர் கூறிய பிரகாரம் குளிருமின்றி அனலுமின்றி வெதுவெதுப்பாய்ப் போனபடியால் அவர் வாக்கின்படியே லவோதிக்கேயா சபையை வாந்தி பண்ணிப் போட்டார்.

12 ஆம் நூற்றாண்டில் ஏற்பட்ட ஒரு பெரிய பூமி அதிர்ச்சியில் லவோதிக்கேயா நகரமே அழிந்து போயிற்று; அதோடு கூட அங்கிருந்த திருச்சபையும் அழிந்தது.

இவ்விதமாக யோவான் அப்போஸ்தலன் மூலம் லவோதிக்கேயா சபையைப் பற்றி இயேசு கிறிஸ்து கூறிய முன்னறிவிப்பு நிறைவேறியிருக்கிறது.

# யேமன் நாட்டு யூதர்

பாரம்பரியப்படி யூதர்கள் 3000 ஆண்டுகளுக்கு முன்னரே, அதாவது சாலொமோன் அரசனின் காலத்திலேயே யேமன் நாட்டில் போய்க் குடியேறினர் என்று கூறப்படுகின்றது. சாலொமோன் அரசனின் காலத்தில் இந்தியாவிலிருந்தும் இன்னும் மற்ற நாடுகளி லிருந்தும் கப்பல்கள் மூலம் கொண்டுவரப்பட்ட வாசனை திரவியங் கள் மற்றும் பல அரிய பொருட்கள் தென் அரேபியாவிலிருந்து தரை மார்க்கமாக ஒட்டகங்கள் மூலம் சேபா நாட்டின் வழியாய்க் கொண்டு வரப்பட்டன. சாலொமோன் அரசன் தன் படை வீரரை அரேபியாவின் தென் முனையான யேமன் நாட்டில் குடியேற்றி அச்சரக்குகள் பத்திர மாகத் தன் நாட்டிற்குக் கொண்டு வரப்பட ஒழுங்கு செய்து வைத் திருந்ததாகவும் கூறப்படுகின்றது.

பாபிலோனியாவிலிருந்தும் (தற்காலஇராக்), பெரிசியாவி லிருந்தும் (தற்கால ஈரான்) சாபா, கூஷ் (எத்தியோப்பியாவிற்கு சமீபத்திலிருந்த நாடுகள்) முதலிய நாடுகளுக்கு சரக்குகளைக் கொண்டு போன யூத வியாபாரிகள் யேமன் நாட்டு வழியாகப் போய் வந்த படியால் நாளடைவில் யேமன் நாட்டில் நிலையாகக் குடி யேறியிருக்கக் கூடும் என்றும் கருதப்படுகிறது.

யேமானிய யூதர் தனித்து இருந்தாலும் தங்களுடைய யூதக் கலாச்சாரத்தையும் யூத சமயத் தொடர்பான காரியங்களையும் விட்டு விடாமல் கடைப்பிடித்து வந்தனர். அது மட்டுமல்ல பாபிலோனியா விலும் எகிப்திலும் இருந்த யூதக் கலைக்கழகங்களுக்கு நிதி உதவி செய்து வந்தனர்.

16ஆம் நூற்றாண்டில் (அதாவது கி.பி. 1500 ஆம் ஆண்டு முதல்) துருக்கி ஓட்டமானியர் யேமன் நாட்டைக் கைப்பற்றியது முதல் அங்கிருந்த யூதர் கொடுமைப்படுத்தப்பட்டது மட்டுமின்றி அவர்கள் பல வகையிலும் இம்சிக்கப்பட்டு, தங்கள் செல்வத்தையெல்லாம் இழ்ந்து வறியர் ஆக்கப்பட்டனர்.

யேமன் நாட்டு யூதர் இஸ்ரேல் நாட்டுக்கு முதன் முதலில் கி.பி. 1881 ஆம் ஆண்டு குடி பெயர்ந்து வந்து சேர்ந்தனர். 1919ஆம் ஆண்டிற்குள் 4000 யேமன் நாட்டு யூதர் இஸ்ரவேல் நாட்டுக்கு வந்து சேர்ந்தனர். பலஸ்தீனா பிரிட்டிஷ் ஆதிக்கத்திலிருந்த ஆண்டுகளில்

(அதாவது 1917 முதல் 1948 வரை) 15,000 யேமன் நாட்டு யூதர் இஸ்ரவேல் நாட்டுக்குள் வந்து சேர்ந்தனர். இஸ்ரேல் நாடு பிரகடனப் படுத்தப்பட்ட பின், 1949–1950ஆம் ஆண்டுகளில் "மந்திரக் கம்பள செயல்பாடு" (Operation Magic Carpet) என்ற ஏற்பாட்டின்படி யேமன் நாட்டில் இரண்டாந்தரக் குடிமக்களாகக் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்த 48,000 யூதரை இஸ்ரேல் நாடு ஆகாய மார்க்கமாகத் தன் சொந்தச் செலவிலே இஸ்ரேல் நாட்டிற்குக் கொண்டு வந்து குடியேற்றியது. இதன் மூலம் ஏசாயா தீர்க்கதரிசியால் முன்னறி விக்கப்பட்ட கீழ்கண்ட முன்னறிவிப்பு நிறைவேறியது.

**முன்னுரைப்பு :– ஏசாயா 60 : 8 (கி.மு. 698)**

"மேகத்தைப் போலவும், தங்கள் பலகணித்துவாரங்களுக்குத் தீவிரிக்கிறது. புறக்களைப் போலவும் பறந்து வருகிற இவர்கள் யார்?"

யேமன் நாட்டை விட்டுப் புறப்பட்ட யூதர் தங்களுடைய சொற்ப உடமைகளைக் கூட தங்களுடன் எடுத்துச் செல்ல அனுமதிக்கப் படவில்லை. இஸ்ரேல் நாட்டில் வந்து குடியேறிய பின்னும் ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாக தங்கள் பழக்கத்திலிருந்த பழக்க வழக்கங் களையும், உடை, சாப்பாட்டுக் கலாச்சாரங்களையும் மாற்றிக் கொள்ளாமலே ஜீவித்து வருகின்றனர். இப்பொழுது (1998ஆம் ஆண்டு) யேமன் நாட்டில் ஒரு யூதன் கூட இல்லை என்று கூறப் படுகிறது. ஆண்டவரின் முன்னுரைப்புப்படி எல்லா யூதரும் அந்நாட்டி லிருந்து இஸ்ரேல் நாட்டிற்கு வந்து சேர்ந்து விட்டனர். ஆண்டவரின் நாமத்துக்கே மகிமை.

(Source : News from Israel Sept.Oct. '93)

# இந்தியாவும் இஸ்ரேல் நாடும்

கணிசமான இந்தியர்கள் அரபு நாடுகளில் போய் ஜீவனம் நடத்தி வருகிறார்கள். அவர்களுடைய வாழ்வைக் கருத்தில் கொண்டும், அரபு நாடுகளின் நில எண்ணெய் நம் நாட்டிற்கு வேண்டிய தின் அவசியத்தைக் கருத்தில் கொண்டும், இந்தியா 1992ஆம் ஆண்டு வரை இஸ்ரேல் நாட்டுடன் நெருக்கமான தொடர்பு வைத்துக் கொள்ளவில்லை. இஸ்ரவேல் நாட்டின் பிரதிநிதி (Consulate) அலுவலகம் மட்டும் மும்பாயில் இயங்கிக் கொண்டிருந்தது.

நமது பாராளுமன்றத்தில் பலஸ்தீனிய–இஸ்ரேலிய விவகாரத்தைப் பற்றிப் பலர் இஸ்ரவேல் நாட்டுடன் நெருங்கிய உறவு கொள்ளக்கூடாது என்று கூறியபொழுது அதற்குப் பதிலுரையாக அப்பொழுது நமது அயல்நாட்டுக் காரியதரிசியாகப் பதவி வகித்த திரு. ஜே. என். தீக்ஷித் (J.N. Dixit) அவர்கள் கீழ் கண்டபடி பதிலுரைத்தார் :–

"I have a simple question. Who should be more interested in creating a Palestinian State ? (!) It should be the Palestinians. (2) The Arab countries which are geographically more proximate and are the same people in terms of ethnicity and nationality. If they themselves are talking to Israel for a via media, why should we follow a separate path? Does it serve any particular interest?

"What have the Arabs given us, if I may ask? Did they vote for us in the Kashmir issue? Were they supportive of us when we had the East pakistan crisis ?"

( Source : The Week, 9-2-1992 ).

**தாராள மொழிபெயர்ப்பு :–**

"நான் ஒரு சிறு கேள்வியைக் கேட்கட்டும். ஒரு பலஸ்தீனிய நாட்டை உருவாக்குவதற்கு யாருக்கு அக்கரை வேண்டும்?

(1) பலஸ்தீனியர்களுக்கு அவ்வாசை இருக்க வேண்டும்.

(2) இனத்திலும், நாட்டிலும், பூகோளரீதியிலும் சுற்றியுள்ள அரபு

நாடுகளுக்கு அவ்வாசை இருக்க வேண்டுமல்லவா? இவ்விருசாரா ருமே இஸ்ரேல் நாட்டோடு ஒரு நடுநிலைப் பாதையைக் கடைப் பிடிக்கும்போது நாம் ஏன் ஒரு தனி வழியை நாடவேண்டும்?

"அரபுக்கள் நமக்கு என்ன செய்திருக்கிறார்கள்? காஷ்மீர் விவகாரத்தில் ஐ.நா. சபையில் நமக்கு சாதகமாக வாக்களித் தார்களா? அல்லது நமக்குக் கிழக்குப் பாகிஸ்தான் விவகாரம் ஏற் பட்டபொழுது நமக்கு ஆதரவாயிருந்தார்களா?

**(ஆதாரம் : த வீக். 9–2–92)**

1992ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் இஸ்ரேல் நாட்டுடன் அரசாங்கத் தூதர் அளவில் ராஜீய உறவு வைத்துக் கொள்ளத் தீர்மானிக்கப்பட்டது.

1992ஆம் ஆண்டு பெப்ருவரி மாதம் முதல் இரண்டு நாடு களுக்குமிடையே அரசாங்கத் தூதர் அளவில் ராஜீய உறவு வைத்துக் கொள்ளப்பட்டது. இதன் அடிப்படையில் இஸ்ரேல் நாட்டின் வெளியுறவு மந்திரி, ஷிமோன் பெரெஸ் தலைமையில் ஒரு தூதுக்குழு 1993ஆம் ஆண்டு மே மாதம் இந்தியாவிற்கு விஜயம் செய்து நமது ஜனாதிபதியையும், பிரதம மந்திரியையும், இன்னும் சம்மந்தப்பட்ட துறைகளின் மந்திரிகளையும், செயலாளர்களையும் சந்தித்து, விவாதித்து, இறுதியாகக் கீழ்கண்ட துறைகளில் ஒத்துழைக்க உடன்பாடுகளில் கையெழுத்திட்டனர் :–

1) பொருளாதார கூட்டுறவில் ஒத்துழைப்பு.

2) விஞ்ஞானத்திலும், தொழில் வளர்ச்சியிலும் ஒத்துழைப்பு.

3) நாகரீக பண்பாட்டு உடன்பாடு.

4) சுற்றுலா உடன்பாடு.

5) வெளியுறவு ஒத்துழைப்பு.

6) இரு நாட்டு விஞ்ஞான ஆராய்ச்சி பொருளாதார நிதி ஒதுக்கீடு.

7) கூட்டு வர்த்தக ஆலோசனைக் குழு அமைப்பதைப் பற்றிய உடன்பாடு.

8) விவசாயத் துறையில் இஸ்ரேல், ராஜஸ்தானிலும் குஜராத்தி லும் உள்ள வறண்ட நிலப்பரப்பில் எப்படி விவசாயம் செய்வது

என்பதைப் பற்றித் தன்னுடைய நீர்ப்பாசான முறையையும், அனு பவத்தையும் இந்திய விவசாய ஆராய்ச்சியாளர்களுடன் பகிர்ந்து கொள்ள இசைவு.

இந்த உடன்பாட்டின்படி இப்பொழுது இந்தியாவும் இஸ்ரேலும் அரசாங்கத் தூதர்களைப் பரிமாரிக் கொண்டன. டெல்லியில் இஸ் ரேலிய அரசாங்கத் தூதரின் அலுவலகம் செயல்பட்டு வருகிறது. அரசாங்கத் தூதருக்கு உதவியாக மும்பாயில் இஸ்ரேலிய அயல் நாட்டுப் பிரதிநிதியின் அலுவலகமும் செயல்பட்டு வருகிறது.

காலக்கிரமத்தில் இரு நாடுகளுக்குமிடையே நல்ல ஐக்கியமும், பல துறைகளில் ஒத்துழைப்பும் ஏற்படும் என்று தெரிகிறது.

# இந்திய யூதர்

யூதர் முதன் முதல் எப்பொழுது இந்தியாவில் வந்து குடியேறினார்கள் என்பதற்கு எழுத்து வடிவத்தில் ஆதாரபூர்வமான சரித்திரம் இதுவரை ஒன்றும் கிடைக்கவில்லை. இந்தியாவில் பல பல காலங்களில் வந்து குடியேறிய யூதர் ஆறு வித்தியாசமான இந்திய கலாச்சாரங்களின் மத்தியில் குடியிருந்தது / குடியிருப்பது தெரிய வருகிறது. அவர்கள் குடியேறிய பிரதேசங்களின் மொழிகளை நாளாவட்டத்தில் ஏற்றுக் கொண்டபடியால் தங்கள் தாய் மொழியாகிய எபிரேய மொழியை மறந்தவர்களாகக் காணப்பட்டனர். கொச்சி சமஸ்தானத்தில் குடியேறியவர்கள் மலையாள மொழியையும், மகாராஷ்டிர மாநிலத்தில் குடியேறியவர்கள் மராட்டி மொழியையும், அஸ்ஸாம், மிஜோராம் பிரதேசத்தில் குடிபுகுந்தவர்கள் அந்தந்த பிரதேச மொழிகளையும் பேசி வந்தனர். இந்த மாறுதல் ஏற்படுவதற்கு சில ஆயிரம் ஆண்டுகளாகியிருக்க வேண்டும். என்றாலும் அவர்கள் தங்கள் யூத பண்பாட்டையும், கலாச்சாரத்தையும், மதக் கோட்பாடுகளையும் கைவிடாமல் பின்பற்றி வந்தபடியால் ஆயிரமாயிரம் ஆண்டுகளுக்குப் பின்னும் வைதீக யூத ரபிமார் அவர்கள் வாழ்க்கை முறை, மதக் கோட்பாடுகளை அனுசரிக்கும் முறை, யூத புனித நாட்களையும், ஒய்வு நாளையும் அனுசரிக்கும் முறை, தீட்டு, சாப்பாட்டில் யூத முறையைக் கடைப்பிடித்தல் முதலியவைகளைக் கவனித்து கொண்டு அவர்கள் சிதறடிக்கப்பட்ட அல்லது சிதறிப் போன யூதர் தான் என்று ஏற்றுக் கொண்டிருக்கின்றனர். இப்படி ஏற்றுக் கொள்ளப்பட்டவர்களில் அநேகர் கி.பி. 1948ஆம் ஆண்டு பிரகடனப்படுத்தப்பட்ட இஸ்ரேல் நாட்டில் குடியேறியுமிருக்கின்றனர்.

இந்தியாவில் குடியேறிய ஆறு வகையான யூதரைப் பற்றிக் கீழே காண்போம் :–

**1) கொச்சின் யூதர்.**

கேரள மாநிலம், கொச்சின் நகரத்தில், மட்டாஞ்சேரி என்ற பகுதியில் வசிக்கும் யூதர். இவர்கள் இப்பகுதிக்கு அல்லது தென் இந்தியாவின் மேற்குக் கரைப் பகுதிக்கு அல்லது மலபார் பகுதிக்கு எப்பொழுது வந்து சேர்ந்தார்கள் என்பது திட்டமாகத் தெரிய வில்லை. ஆனால் கீழ் கண்ட அபிப்பிராயங்கள் சரித்திர ஆசிரியர்களால் கூறப்படுகின்றன :–

முதலாவது கூற்று, சாலமோன் அரசனின் காலத்திலேயே, அதாவது கி.மு. 971 முதல் கி.மு. 931ஆம் ஆண்டுகளில் இந்தியா வுக்கும் இஸ்ரேல் நாட்டுக்கும் வர்த்தகம் நடைபெற்றுக் கொண்டி ருந்தது. இந்தியாவிலிருந்து மயில், குரங்கு, வாசனை திரவியங்கள் முதலியவை இஸ்ரவேல் நாட்டிற்குக் கொண்டு போகப்பட்டன. அக்காலத்தில் யூதர் குடும்பத்துடன் இங்கு வந்து தங்கி, சாலமோன் அரசுக்கு வேண்டிய பண்டங்களைச் சவதரித்து யூத வர்த்தகர் மூலமாக அனுப்பிக் கொண்டிருந்தனர். இதற்கு ஆதாரமாக சில தமிழ் வார்த்தைகளே எபிரேய மொழியிலும் வழங்கலாயிற்று. மயிலுக் குத் தமிழில் தோகை என்ற பெயரும் உண்டு; இதை எபிரேய மொழி யில் துகி என்று அழைத்தனர். இப்படி அநேக தமிழ் வார்த்தைகள் எபிரேய மொழிக்கு மருவிப் போயிருக்கின்றனவென்று மொழி ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர்.

இரண்டாவது கூற்றுப்படி கி.மு. 722ஆம் ஆண்டு அசீரிய அரசன் சல்மனாசார் இஸ்ரவேல் நாட்டின் வடக்கு பத்துக் கோத் திரத்தில் அநேகரை சிறைப்பிடித்துக் கொண்டு போய் அசீரியாவில் குடியேற்றினான். சில காலத்துக்குப் பின் அவர்கள் விடுதலை செய்யப்பட்டிருக்க வேண்டும்; ஆனால் அவர்கள் அதன்பின் என்ன வானார்கள் என்பது தெரியவில்லை. அவர்கள் "காணாமற் போன பத்துக் கோத்திரத்தார்" என்று அழைக்கப்படுகிறார்கள். அவர்களில் ஒரு சாரார் கப்பல்களில் மலபார் பகுதியில் வந்திறங்கி கிராங்கனூரில் (தற்காலப் பெயர் கொடுங்கலூர்) குடியேறியிருக்க வேண்டும் என்று கருதுகின்றனர்.

மூன்றாவது கூற்றுப்படி கி.மு. 586ஆம் ஆண்டு நேபுகாத் நேச்சார் யூதா, பென்னியமீன் ஆகிய இரண்டு கோத்திரத்தாரை பாபிலோனுக்குச் சிறை பிடித்துக் கொண்டு போனான். 70 ஆண்டு களுக்குப் பின் பெர்சிய அரசன் கோரேசினால் விடுதலை செய்யப் பட்டனர். அவர்களில் பலர் யூதேயாவுக்குத் திரும்பிப் போயினர்; பலர் பாபிலோனிலேயே தங்கி விட்டனர். அவர்களில் சிலர் கப்பல்கள் மூலமாய் மலபார் பகுதியில் வந்திறங்கி இங்கு குடியேறியிருக்க வேண்டும்.

நான்காவதாக, கி.பி 70ஆம் ஆண்டு ரோம தளபதி தீத்து வெஸ்பேஸியனால் எருசலேம் தேவாலயம் அழிக்கப்பட்டு, லட்சக் கணக்கான யூதர் கொலை செய்யப்பட்டும், அடிமைகளாக விற்கப் பட்டும், அநேகர் நாட்டை விட்டுத் துரத்தப்பட்டும் போயினர்.

அச்சமயத்தில் தோராயமாக 10,000 யூதர் மலபார், கொச்சின் கடற்கரை ஊர்களில் வந்து தஞ்சம் புகுந்து குடியேறினர். இக்கூற்றின்படி கிராங்கனூர் (கொடுங்கலூர்), பண்டாரினி, எலிமலா, கள்ளிக்கோட்டை, காஞ்சரக்கரா, குய்லான் முதலிய நகரங்களிலும் அவைகளின் சுற்றுப்புறங்களிலும் யூதக் குடியேற்றங்கள் ஏற்பட்டன.

**ஜோசப் ரபான்** (Joseph Rabban)

கி.பி. நான்காம் நூற்றாண்டில் தென் இந்தியாவின் மேற்குக் கரைப் பகுதியில் பம்பாய் நகரைச் சுற்றிய பகுதியில் பெனி–இஸ்ரேல் (Bene Israel) (இஸ்ரவேலின் மக்கள்) என்ற யூதரும், மலபார் பகுதியில் பெருமளவில் யூதரும் குடியிருந்தனர்.

இவர்களில், மலபார் பகுதியில் வாழ்ந்த யூதரில் ஜோசப் ரபான் (Joseph Rabban) என்ற யூத பிரமுகர் அப்பொழுது மலபாரை ஆண்டு வந்த ஜாமொரின் என்ற பட்டம் வகித்த மலபார் சக்கரவர்த்தி ஸ்ரீ பாஸ்கர ரவி வர்மா என்பவரின் நன்மதிப்பைப் பெற்றார்.அவருடைய சேவையைப் பாராட்டி ஜாமொரின் (Zamorin) ஸ்ரீ பாஸ்கர ரவி வர்மா கிராங்கனூரையும் (கொடுங்கலூரையும்) அதைச் சுற்றியிருந்த அஞ்சுவண்ணம் (Anjuvannam) என்ற பகுதிக்கு அவரை கி.பி. 379ஆம் ஆண்டு (இந்த ஆண்டைப் பற்றி பல சரித்திர ஆசிரியர்கள் வேறுபட்ட கருத்துள்ளவர்களாக இருக்கின்றனர்) சிற்றரசராக நியமித்தார். இதை உறுதிப்படுத்த இரண்டு செப்புத் தகடுகளில் சாசனம் எழுதியும் கொடுத்தார். அதன்படி ஜோசப் ரபானும் (Joseph Rabban) அவருடைய சந்ததியாரும், பூமியும், சந்திரனும் இருக்குமட்டும், தலைமுறை தலைமுறையாய் ராஜ மரியாதையுடன், பரிவாரங்களுடன் யானையின் மேல் பவனி வரவும், தன் அதிகாரத்துக்கு உட்பட்ட பாகத்தில் வரி வசூலித்துக் கொள்ளவும், அவர்கள் ஒருவருக்கும் கப்பம் கட்டாமலிருக்கவும், இன்னும் பல சலுகைகள் அளிக்கப்பட்டிருந்தது. ஆகவே கி.பி. நான்காம் நூற்றாண்டு முதல் கி.பி. பதினைந்தாம் நூற்றாண்டு வரை கிராங்கனூரில் ஒரு சிறு யூத இராஜ்யம் செயல்பட்டு வந்தது. அதைப் பற்றி 14ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த யூத ரபியும், புலவரும், பல நாடுகளைச் சுற்றிப் பார்த்து வந்தவருமான ரபி நிஸ்ஸிம் (Rabbi Nissim) என்பவர் கீழ்கண்ட ஒரு பாடலைப் பாடியிருக்கிறார் :–

I travelled from Spain

I had heard of the City of Shingly

I longed to see an Israel King

Him, I saw with my own eyes.

இப்பாடலின் தாராள மொழி பெயர்ப்பு :–

நான் ஸ்பெய்ன் நாட்டிலிருந்து பிரயாணப்பட்டேன்.

ஷிங்ளி (Shingly)* என்ற நகரைப் பற்றிக் கேள்விப் பட்டேன்.

ஒரு இஸ்ரேலிய அரசரைக் காண ஏங்கி இருந்தேன்.

அவரை என் கண்ணாரக் கண்டேன்.

*ஷிங்ளி – கிராங்கனூர் ( அதாவது தற்கால கொடுங் கலூருக்கு ) முன்காலப் பெயர்.

இக்காலத்தில், அதாவது ஜோசப் ரபான் காலத்தில், மலபார் பகுதியில் 80,000 யூதர் வசித்து வந்ததாக சில சரித்திர வல்லுனர்கள் கூறியிருக்கின்றனர்.

கி.பி. 1565ஆம் ஆண்டு மலபாரில் வசித்த யூதர் மேலை நாட்டு டச்சுக்காரருக்குச் சாதகமாகச் செயல்பட்டார்களென்று கூறி போர்ச்சுகீசியர் அஞ்சுவண்ணம் குடியிருப்புக்களை தீக்கிரையாக்கி நாசப்படுத்தினர். யூதர் பல பக்கம் சிதறி ஓடினர்.

டேவிட் ரஹாபி (DAVID RAHABI)

ரஹாபி குடும்பத்தினர் சீரியாவிலிருக்கும் அலெப்போ (ALEPPO) நகரிலிருந்து கொச்சி நகருக்கு கி.பி. 1646ஆம் ஆண்டு குடி பெயர்ந்து வந்தனர். வெகு சீக்கிரத்தில் டேவிட் ரஹாபி பிரபல வர்த்தகராகவும், மேற்கு நாடுகளின் கிழக்கிந்திய நிறுவனங் களுக்கும் கொச்சி மகா ராஜாவுக்கும், அரசாங்கத்துக்கும் இடை தரகராகவும் செயல்பட்டார். அவருடைய வீடு கொச்சியில் யூத நகரத்தில் மலபார் சிற்றரசர்களும், கனவான்களும், பிற நாட்டுத் தூதர்களும் சந்திக்கும் இடமாயுமிருந்தது. ஆகையால் கொச்சி சமஸ்தானத்தில் அவருக்குத் தனி மதிப்பு இருந்தது.

கி.பி. 1690ஆம் ஆண்டு கொச்சி மகா ராஜா வாரிசில்லாமல் மரணமடைந்தார். ஆகவே பெரும்படப்பு (Perumpadappu) என்ற குடும்பத்துக்கும் வேலத்து (VELLAT) என்ற குடும்பத்துக்கும்

இடையே யார் வாரிசு என்று தாவா ஏற்பட்டது. வேலத்து குடும்பத்தார் பெரும்படப்பு குடும்பத்தாரை நாட்டை விட்டுத் துரத்தினர்; ஆனால் பெரும்படப்பு குடும்பத்தார் தான் நெருங்கிய வாரிசுதாரர். அந்த வாரிசுதாரரும் அவருடைய தாயாரும் டேவிட் ரகாபியை அணுகி உதவி கேட்டனர். டேவிட் ரகாபி டச்சு நாட்டு கவர்னரோடு தனக்கிருந்த செல்வாக்கைப் பயன்படுத்தி வேலத்து குடும்பத்தாரை தோற்கடித்து அனுப்பிவிட்டு பெரும்படப்பு வாரிசுதாரரை ஆட்சியில் அமர்த்தினர். அதுமுதல் இந்நாள் வரையில் கொச்சி ராஜாக்கள் ரகாபி குடும்பத்தாருக்கு அதிக மரியாதை கொடுத்து நடந்து வருகின்றனர்.

எசேக்கியேல் ரஹாபி (EZECHIEL RAHABI)

இவர் டேவிட் ரஹாபியின் மகன் கி.பி. 1694ஆம் ஆண்டு பிறந்தவர். தன் தகப்பனாரைப் போல வர்த்தக சமுதாயத்தினரிடையேயும், அரசியல்வாதிகளிடையேயும், அயல் நாட்டு வர்த்தகரிடையேயும் செல்வாக்குடையவராயிருந்தார். டச்சுக்காரர், ஆங்கிலேயர், பிரஞ்சுக்காரர், போர்ச்சுக்கீசியர், டேனிஷ்காரர் முதலிய மேல் நாட்டு வர்த்தக பெருமக்களும் இந்திய முஸ்லிம்கள், பார்சிக்கள், இந்துக்கள், கிறிஸ்தவர்கள் முதலியவர்களும் அவருடன் அதிக தொடர்பு கொண்டிருந்தனர். உதாரணமாக புனித தோமாவின் சபையைச் சேர்ந்த கிறிஸ்தவர்கள் தங்களுக்கு ஒரு தகுதியான பேராயர் வேண்டுமென்று எசேக்கியேல் ரஹாபியை அணுகியபொழுது அவர் 1747ஆம் ஆண்டு மொசப்பத்தேமியாவிலுள்ள பஸ்ரா (BASRA) நகரிலிருந்து ஒரு தகுதியான பேராயரைக் கொண்டு வர ஒழுங்கு செய்தார்.

உலகம் முழுவதிலுமுள்ள யூதர்களுடன் ஓரளவுக்குத் தொடர்பு கொண்டிருந்தார். ஹாலந்து நாட்டிலிருந்து எபிரேய வேதாகமங்களும், தால்முட்களும், இதர யூத சமய புத்தகங்களையும் வரவழைத்துக் கொடுத்ததுமல்லாமல் கொச்சி யூதருக்காக ஹாலந்து நாட்டிலிருந்து யூத ஜெப புத்தகங்களை அச்சடித்துக் கொண்டுவந்து வினியோகித்தார். பல இடங்களில் யூத ஜெப ஆலயங்கள் கட்டவும், பழுது பார்க்கவும் வேண்டிய திரவியத்தைக் கொடுத்து உதவினார்.

கி.பி. 1766ஆம் ஆண்டு ஹைதர் அலி மேற்குக் கரை நோக்கிப் படை எடுத்து வந்தபோது எசேக்கியேல் ரஹாபி தன் மூன்று மகன்களிடம், அக்காலத்தில் அதிக அரியதாயும், மதிப்பு மிக்கதாயும்

கருதப்பட்ட வெடியுப்பும் வெள்ளைச் சீனியும் விலையுயர்ந்த மாணிக் கக் கற்களையும் ஹைதர் அலிக்குப் பரிசாக அனுப்பினார். அதோடு கொச்சி மகா ராஜா 2,00,000 ரூபாயும், எட்டு யானைகளையும் பரிசாக அனுப்பினார். இவைகளைப் பெற்றுக் கொண்ட ஹைதர் அலி கொச்சி சமஸ்தானத்தை விட்டு சந்தோஷமாகத் திரும்பிப் போனார். இவ்விதமாக எசேக்கியேல் ரஹாபி தான் வாழ்ந்த நாட்டைத் தன் சொந்த நாடாகக் கருதி செயல்பட்டு வந்தார்.

கி.பி. 1768ஆம் ஆண்டு எசேக்கியல் ரஹாபி ஹாலந்து நாட்டின் தலைநகர் அம்ஸ்டர்டாமிலிருந்த ஒரு பிரபல வர்த்தகருக்கு மலபார் யூதரின் சரித்திரத்தைப் பற்றி எழுதிய கடிதம் இன்றும் பாதுகாத்து வைக்கப்பட்டிருக்கிறது. அதைப் போல 1787ஆம் ஆண்டு அமெரிக்காவில் நியூயார்க் நகரிலிருந்த சாலமோன் சைமன் (Solomon Simon) என்ற யூதருக்கு எழுதிய கடிதமும் பாதுகாத்து வைக்கப்பட்டிருக்கிறது.

**ஆதாரம் :**


1) KERALA AND HER JEWS - A paper read by Mr. S.S. KODER before the Kerala History Convention on 18-5-1955.
2) Castes and Tribes of Southern India by Edgar Thurston, Vol. II.
3) Studies of Indian Jewish Identity by Nathan Katz.


யூதர் முதலாவது மலபார் பகுதியில் வந்து குடியேறியது முதல் மலபார், கொச்சி இந்து அரசர்களால் ஒருவிதமான பாரபட்சம் இல்லாதபடிக்குக் கௌரவமாகவே நடத்தப்பட்டனர். போர்ச்சுக்கீசியரால் மட்டும் கி.பி. 1565ஆம் ஆண்டு முதல் கொஞ்சம் பாடு அனுபவித்தனர். ஆனால் கி.பி. 1795ஆம் ஆண்டு முதல், ஆங்கிலேயர் இப்பகுதிகளை ஆளத் துவங்கியது முதல், சமாதானமாகவே வாழ்ந்து வந்தனர்.

கி.பி. 1948ஆம் ஆண்டு இஸ்ரேல் நாடு பிரகடனப்படுத்தப் பட்ட பின், மலபார், கொச்சின் பகுதிகளில் வசித்து வந்த யூதரும், இன்னும் உலகத்தில் அநேக நாடுகளில் வசித்து வந்த யூதரும் ஏசியா தீர்க்கதரிசியினால் உரைக்கப்பட்ட கீழ்கண்ட தீர்க்கதரிசனம் நிறைவேறத்தக்கதாக தங்கள் முதாதையருக்கு ஆண்டவர் வாக்குத் தத்தம் பண்ணிய நாட்டில் போய்ச் சேர உந்தப்பட்டு குடிபெயர்ந்து இஸ்ரேல் நாட்டில் போய்க் குடியேறினர் :-

**முன்னுரைப்பு :–**

**ஓசியா 1 : 11 (கி.மு. 785)**

"அப்பொழுது யூதா புத்திரரும் இஸ்ரவேல் புத்திரரும் ஏகமாய்க் கூட்டப்பட்டு, தங்களுக்கு ஒரே அதிபதியை ஏற்படுத்தி, தேசத்திலிருந்து புறப்பட்டு வருவார்கள்".

ஒரு வேளை மலபார் பகுதியில் வந்து குடியேறியவர்கள் காணாமற்போன பத்துக் கோத்திரத்தைச் சேர்ந்தவர்களாக இருக்கலாம். அதைப் போல மகாராஷ்ட்ரா மாநிலத்தில் குடியேறிய பெனி இஸ்ரயேல் என்ற கூட்டத்தாரும் கூட காணமற்போன பத்துக் கோத்திரத்தைச் சேர்ந்த இஸ்ரவேலராய் இருக்கலாம். கொச்சியில் குடியேறியவர்கள் யூதா கோத்திரத்தைச் சேர்ந்த யூதர். ஆக இந்த இரு கூட்டத்தாரும் இஸ்ரேல் என்ற இராஜ்யம் ஸ்தாபிக்கப்பட்ட பின் தாங்கள் தற்காலீகமாகக் குடியிருந்த பகுதிகளிலிருந்து புறப்பட்டு, ஒரே ஜனாதிபதி, ஒரே பிரதம மந்திரி, ஒரே பாராளுமன்றத்துக்குக் கீழ் இஸ்ரயேல் என்ற நாட்டில் யூதரென்ற ஒரே பெயரோடு போய்க் குடியேறி ஓசியாவின் தீர்க்கதரிசனத்தை நிறைவேற்றினார்கள்.

## கொச்சி/மலபாரில் வாழ்ந்த யூதரும் நீலகிரியில் வாழும் தொதுவர், படகரும்.

நீலகிரியில் வாழும் தொதுவர்கள், படகர்கள் ஆகியோரின் மூதாதையருக்கு கொச்சி/மலபாரிலிருந்த யூதர்களோடு தொடர்பு இருந்திருக்கலாம் என்று ஒரு சமயம் நம்பப்பட்டது (P.78, The Folk Songs of Southern India, 1871, C.E. Gover, Higginbothams Ltd., Madras, Kazhagam Reprint, 1959)

படகர்கள் இன்றளவும் பின்பற்றி வருகிற "கரு உறருசுவது" (போக்குக்கன்று விடுதல்) என்கிற சடங்குக்கும், லேவியராகமம் 16 : 20–22ஆம் வசனங்களில் குறிப்பிடப்படும் போக்காடு (Scapegoat) நியமனத்துக்கும் உள்ள ஒற்றுமை வியக்கத்தக்கது.

2) **பெனி இஸ்ரயேல்** (Bene Israel) **(இஸ்ரவேலின் மக்கள்)** என்று அழைக்கப்படும் பம்பாயிலும் மகாராஷ்ட்ரா மாநிலத்திலும் குடியேறிய யூதர். மகாராஷ்ட்ரா மாநிலத்தில் கொலாபா மாவட்டத்திலுள்ள கிராமங்களில் இவர்கள் கிறிஸ்துவுக்கு முன் ஏதோ ஒரு காலத்தில் வந்து குடியேறியிருக்கிறார்கள். சில சரித்திர ஆசிரியர்கள், இவர்கள் அசீரியாவுக்குக் கொண்டு போகப்பட்ட சிறைக்

கைதிகளின் சந்ததியார்; காணாமற்போன பத்துக் கோத்திரத்தைச் சேர்ந்தவர்கள் என்று கூறுகின்றனர். இவர்கள் வந்து குடியேறி மகாராஷ்ட்ரா மாநிலத்தில் எண்ணெய் வித்துக்களை ஆட்டி எண்ணெய் எடுத்து விற்றும், தச்சு வேலை செய்தும், சிறு வியாபாரம் செய்தும் ஜீவித்தனர். தலைமுறை தத்துவமாக ஆயிரமாயிரம் ஆண்டுகள் இக்கிராமங்களில் இந்துகளின் மத்தியில் வசித்து வந்தபடியால் சில இந்திய பழக்கவழக்கங்களை ஏற்றுக் கொண்டனர். அதோடு மராட்டிய மொழியே அவர்களுடைய தாய் மொழியாகிவிட்டது. எபிரேய மொழி அவர்களின் சமயத் தொடர்பான மொழியாக மட்டும், அவர்கள் ரபிமார் உபயோகிக்கும் மொழியாகிவிட்டது. என்றாலும் அவர்களுடைய யூத கலாச்சாரத்தை மட்டும் வைராக்கியமாகக் கடைப்பிடித்தவர்களாக இருந்தனர்.

பிரிட்டிஷ் கிழக்கிந்திய கம்பெனி கி.பி. 1750ஆம் ஆண்டு தங்கள் தலைமைக் காரியாலயத்தை சூரத்திலிருந்து சிறு தீவாக இருந்த பம்பாய்க்கு மாற்றியது. அது முதல் கிராமப் புறங்களில் வசித்த பெனி இஸ்ரேலிய யூதர் சிறுகச் சிறுக இக்கடற்கரை நகரத்தில் வந்து வசிக்கத் துவங்கினர். கிழக்கிந்திய கம்பெனியின் இராணுவத்திலும் பெனி இஸ்ரேலிய பிரிவு ஒன்று ஏற்படுத்தப்பட்டு அதில் அநேக யூத வாலிபர் சேர்ந்து இராணுவத்தில் பெரிய பதவிகளுக்கும் உயர்த்தப்பட்டனர்.

பெனி இஸ்ரேலிய யூதர் தங்களுடைய யூதப் பெயர்களுடன் அடையாளத்திற்காகத் தாங்கள் வசிக்கம் கிராமங்களின் பெயரையும் சேர்த்து வைத்துக் கொண்டனர். கொலாபா மாவட்டத்தில் அநேக ஊர்களின் பெயர்கள் ''கார்'' என்று முடியும்; உதாரணமாக, வார்கர்கார் என்ற கிராமத்தில் வசிக்கும் பெஞ்சமின் ஜேக்கப் என்பவர் தன் பெயரோடு சேர்த்து பெஞ்சமின் ஜேக்கப் வார்கர்கார் என்று அழைக்கப்படுவார்.

கி.பி. 1836ஆம் ஆண்டு வில்ஸன் (Wilson) என்ற ஸ்காட்லாந்தைச் சேர்ந்த மிஷனெரி எடுத்த மக்கள் தொகை கணக்கின்படி கொலாபா மாவட்டத்திலும் பம்பாய் நகரிலும் 8,000 பெனி இஸ்ரேலிய யூதர் குடியிருந்ததாகத் தெரிகிறது.

பம்பாய் வளர்ச்சியடைய அடைய பெனி இஸ்ரேலியர் அதிக அளவில் பம்பாயில் வந்து குடியேறி படித்துப் பட்டம் பெற்று, அரசாங்க அலுவலகங்களிலும், வங்கிகளிலும், கல்லூரிகளிலும், மற்ற வர்த்தக

நிறுவனங்களிலும் உயர்ந்த நிலைகளை அடைந்தனர். எசேக்கியேல் ஜோசப் ராஜ்புர்க்கார் (Ezekiel Joseph Rajpurkar) என்பவர் 1871ஆம் ஆண்டு பம்பாய் பல்கலைக் கழகத்தில் எபிரேய மொழி தேர்வாளராகவும், 1876 ஆம் ஆண்டு கலையியலுக்குத் தேர்வாளரா கவும், 1879ஆம் ஆண்டு பல்கலைக் கழகத்தின் ஆதரவு பெற்ற பெருந்தகையராகவும் நியமிக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டார்.

1875ஆம் ஆண்டு பம்பாயில் பெனி இஸ்ரேலிய யூதருக்காக எபிரேய மொழியையும் கற்றுத் தர தனியாக அவர்களாலேயே ஒரு நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டு நடத்தப்பட்டு வந்தது.

கி.பி. 1838ஆம் ஆண்டு ஷெலோமோ சாலேம் ஷுராபி (Shelomo Salem Shurrabi) என்பவர் (இவருடைய மூதாதையர் யேமன் நாட்டில் குடியேறிய யூதர்) கப்பல் சேதத்தில் தப்பி அலிபாக் (Alibag) என்ற மகாராஷ்ட்ரா கடற்கரையில் கரையேறினார். அவருடைய வாழ்நாளில் பெனி இஸ்ரேலிய யூதருக்காக பம்பாயில் ஒன்றும், ரெவ்டாண்டா (Revdanda) என்ற ஊரில் ஒன்றும், அலிபாகில் (Alibag) ஒன்றும், பன்வேல் (panvel) என்ற இடத்தில் ஒன்றுமாக நான்கு யூத ஜெப ஆலயங்களைக் கட்டிக் கொடுத்தார். கொலாபா மாவட்டத்திலும் தாலி–கோஸ்லே (Tale-Ghosale) என்ற கிராமத்தில் 1849ஆம் ஆண்டும், பென் (pen) என்ற கிராமத்தில் 1863ஆம் ஆண்டும், பொய்நாட் (poynad) என்ற கிராமத்தில் 1866ஆம் ஆண்டும்,பொர்லேய் (Borlai) என்ற கிராமத்தில் 1869 ஆம் ஆண்டும் ஆம்பெட்பூர் (Ambedpur) என்ற கிராமத்தில் 1874ஆம் ஆண்டும், அஷ்டமி (Ashtami) என்ற கிராமத்தில் 1882ஆம் ஆண்டும், மசாலா (Mhsala) என்ற கிராமத்தில் 1886ஆம் ஆண்டும், போஸ்ட் கொர்டே (post Chorde) என்ற கிராமத்தில் 1892ஆம் ஆண்டும், நந்த்கவோன் (Nandgaon) என்ற கிராமத்தில் 1896ஆம் ஆண்டும் யூத ஜெப ஆலயங்கள் கட்டப்பட்டன. இன்னும் கோசாலே விர்ஜோலி (Ghosale Virjoli), முரூட் (Murud), சிரீவர்தன் (Shriwardhan) என்ற கிராமங்களிலும் யூத ஜெப ஆலயங்கள் கட்டப்பட்டிருந்தன; ஆனால் அவைகள் கட்டப்பட்ட ஆண்டுகள் தெரியவில்லை.

இப்பிராந்தியத்தில் யூத மதத்தைச் சார்ந்தவர்களும், முஸ்லிம் களும், இந்துக்களும் அதிக ஒற்றுமையாக ஜீவித்து வந்தனர். இவ்விடங்களில் யூதருக்குத் தனிப்பட்ட கல்லறை இடங்களில்லாதபடியால் யூதர்கள் முஸ்லிம்களின் கல்லறைகளில் அடக்கம் பண்ணப்பட்டார்கள்.

பெனி இஸ்ரேலரின் ஜனத்தொகை கி.பி. 1836ஆம் ஆண்டு 8,000 என்று கணிக்கப்பட்டிருந்தது. கி.பி. 1951ஆம் ஆண்டு இந்திய அரசாங்க ஜனக் கணக்குப்படி 25,000 ஆக இருந்தது. ஆனால் கி.பி. 1948ஆம் ஆண்டு இஸ்ரேல் நாடு பிரகடனப் படுத்தப்பட்ட பின் அதிகப்படியான பெனி இஸ்ரேலிய யூதர் இஸ்ரேல் நாட்டிற்குக் குடி பெயர்ந்து போய்விட்டனர். என்றாலும் கி.பி. 1995ஆம் ஆண்டு தோராய மதிப்பின்படி இன்னும் பம்பாயிலும், மற்ற மகாராஷ்ட்ரா பகுதியிலும் 5,000 பேர் இருப்பதாகத் தெரிகிறது. இஸ்ரேல் நாட்டில் இந்தியாவிலிருந்து போய்க் குடியேறிய பெனி இஸ்ரேலியரின் எண்ணிக்கை 45,000 என்று கணக்கிடப்பட்டிருக்கிறது.

### 3) முகலாய சக்கரவர்த்திகளின் அரச சபையில் பணிபுரிந்த யூதர்கள்.

பாரசீக நாட்டிற்கும் இந்தியாவிற்கும் முகலாயர்களின் காலத்தில் அதிக வர்த்தகத் தொடர்பு இருந்தபடியால் அவர்களுக்கு மொழிபெயர்ப்பாளர்கள் அதிகமாகத் தேவைப்பட்டனர். யூதர்களில் அநேகர் இரு மொழிகளிலும் வல்லுனர்களாயிருந்தபடியால் முகலாய சக்கரவர்த்திகளின் அரசரவைகளில் அநேக யூதர்கள் செல்வாக் குடையவர்களாக அமர்ந்திருந்தனர்.

### 4) பாக்தாத் யூதர்

சீரியாவிலிருந்தும், இராக் நாட்டிலிருந்தும் வந்த அரபு மொழி பேசும் யூதர். இவர்கள் வர்த்தகர்களும், செல்வாக்கு படைத்தவர் களுமாக இருந்தனர். இவர்கள் பம்பாய், கல்கத்தா, ரங்கூன் முதலிய நகரங்களில் குடியேறி தங்கள் வர்த்தகத்தை மேற்கே லண்டன் மா நகரத்திலிருந்து கிழக்கே சீனாவில் ஷாங்ஹேய் நகரம் வரை நடத்தி வந்தனர்.

மும்பாயில் பாக்தாதிய யூதரில் பிரபலமானவர்கள் டேவிட் சசூன் (David Sassoon) குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். இவர்கள் பஞ்சு ஏற்றுமதியிலிருந்து, நூல், நெசவுத் தொழிலில் ஈடுபட்டு மும்பாயிலும், பூனாவிலும் அநேக துணி நெய்யும் மில்களை ஆரம்பித்து நடத்தி பெரும் செல்வந்தர்களாகவும், மதிப்பிற்குரியவர் களாகவும், பரோபகாரிகளாகவும் விளங்கினர்.

டேவிட் சசூனின் எட்டு ஆண் மக்களில் ஏழு பேர் இங்கிலாந் தில் போய் குடியேறினர். கடைசி மகன் இந்திய மில்களையும் மற்ற

வர்த்தகத்தையும் கவனித்து வந்தார். இவர்கள் மில்களிலும், வர்த்தக ஸ்தாபனங்களிலும், இவர்கள் ஆரம்பித்த பாங்க் ஆப் இந்தியா (Bank of India) வங்கியிலும் பெரும்பாலான பெனி இஸ்ரேலிய யூதர் ஊழியர்களாக நியமிக்கப்பட்டனர். பாக்தாதிய யூதருக்கும், பெனி இஸ்ரேலிய யூதருக்கும் பெண் எடுப்பது அல்லது கொடுப்பதில் உறவு என்பதே கிடையாது.

**கல்கத்தாவில் யூதர்கள்**

பத்தொன்பதாம் நூற்றாண்டின் துவக்கத்தில் ஷாலோம் ஒவாத்யா ஹ கோஹன் (Shalom Ovadya HaCohen) என்ற யூதன் வட சீரியா நாட்டிலுள்ள அலெப்போ நகரிலிருந்து கல்கத்தா நகரையடைந்தார். அவர் தன்னுடைய வர்த்தகத்தை விஸ்தரித்து, அயோத்தியின் நவாபுக்கு (Nawab of Oudh) விலையுயர்ந்த மாணிக்கக் கற்கள், நகைகள், அரேபியக் குதிரைகள், பன்னீர் முதலிய அரிய பொருட்களை வரவழைத்துக் கொடுப்பவராக செயல்பட்டார். ஷாலோம் ஒவாத்யாவும் அவருக்குப் பின்னால் அவருடைய மருமகனும் கல்கத்தாவிலிருந்த யூதருக்கு சமுகத் தலைவர்களா கவும், மதத் தலைவர்களாகவும் செயல்பட்டு வந்தனர். அச்சமயத்தில் கல்கத்தாவில் வந்து குடியேறிய பாக்தாதிய யூதர் சீனாவோடு அபின் வியாபாரம் செய்து பெரும் பொருளீட்டினர்.

டேவிட் எஸ்றா (David Ezra) (1871–1947) என்பவர் பிரிட்டிஷ் அரசாங்கத்தால் சர் (Sir) என்ற கௌரவ பட்டம் அளிக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டார். அவரோடு கூட இ. மேயர் (E. Meyer) என்ற யூதனும் சேர்ந்து கல்கத்தாவில் பெயர் பெற்ற வர்த்தகர்களாக பெரும் செல்வந்தர்களாகி, பின்னர் 20ஆம் நூற்றாண்டின் துவக்கத்தில் இங்கிலாந்தில் போய்க் குடியேறினர்.

**கல்கத்தாவின் யூத ஜனக் கணக்கு கீழ்கண்டவாறு :**

| ஆண்டு. | யூதரின் எண்ணிக்கை. |
|---|---|
| 1816 | 50 |
| 1822–23 | 100 |
| 1837 | 300 |
| 1841 | 636 |
| 1866 | 681 |
| 1876 | 952 |
| 1881 | 982 |

| | |
|---|---|
| 1891 | 1387 |
| 1901 | 1919 |
| 1911 | 1920 |
| 1921 | 1820 |
| 1931 | 1830 |
| 1951 | 1945 |
| 1961 | 1191 |

1948ஆம் ஆண்டு இஸ்ரேல் நாடு பிரகடனப்படுத்தப்பட்ட பின் கல்கத்தாவில் வசித்த யூதரில் அநேகர் இஸ்ரேல் நாட்டுக்குக் குடிபெயர்ந்தனர். 1996ஆம் ஆண்டு கணக்குப்படி கல்கத்தாவில் வசித்த யூதர் 250 பேர் மட்டுமே.

முதலாம் உலக மகா யுத்தத்திற்கு முன் பி.என் எலையாஸ் (B.N. Elias) என்ற யூதன் கல்கத்தாவில் ஒரு சணல் ஆலையை நிறுவினார். அதன் பின் ஒரு பெரிய புகழ்பெற்ற சிகரெட் கம்பெனியும், ஒரு பிரசித்தி பெற்ற தங்கும் விடுதியும், இன்னும் பல சொத்து பரிமாறும் நிறுவனங்களும் அவரால் நிறுவப்பட்டன. பின்னர் யூதரும் உள்நாட்டவரும் சேர்ந்து பங்கு மார்க்கெட்டும், எலும்பு ஆலை (Bone Mill) களும் இன்னும் பல நிறுவனங்களும் ஆரம்பித்தனர்.

பாங்க் ஆப் இந்திய (Bank of India) வை ஆரம்பித்த டேவிட் சசூனின் உறவினர் சர் சசூன் ஜே. டேவிட் (Sir Sassoon J. David) என்பவர் ( 1849–1926 ) சிலருடைய ஒத்துழைப்போடு மத்திய பாங்க் ஆப் இந்தியா (Central Bank of India) வை ஸ்தாபித்தார்.

கல்கத்தாவிலிருந்த இப் பண முதலைகள் 1940ஆம் ஆண்டு வரை எருசலேமிலிருந்த யூத பல்கலைக் கழகத்திற்கு வேண்டிய பண உதவி செய்து வந்தனர்.

**5) மதம் மாறிய இந்தியர்கள்**

சில இந்து குடும்பத்தைச் சேர்ந்த இந்தியர்கள் யூதர்களாக மதம் மாறி தங்கள் அந்தஸ்தை உயர்த்திக் கொண்டனர் என்றும் தெரிய வருகிறது. உதாரணமாக :

(1) பத்தொன்பதாம் நூற்றாண்டில் கல்கத்தாவில் அபிஜித் குகா (Abhijit Guha) என்ற ஒரு பெயர் பெற்ற வழக்கறிஞர் இருந்தார். அவர் யூத மார்க்கத்தைத் தழுவி தன் இரண்டு பெண் மக்களையும் யூத மார்க்கத்தில் வளர்த்தார்.அவர்களில் ஒருவர்

ஹன்னா (Hannah) என்பவர் டெல்லியில் ஒரு பெயர் பெற்ற மருத்துவர், டாக்டர் அருண் சென் (Dr. Arun Sen) என்பவரை மணம் முடித்து திருமதி ஹன்னா சென் (Hanna Sen) ஆகி, லேடி இர்வின் காலேஜ் ஆரம்பித்து அதன் முதல்வரானார் (Principal of Lady Irwin College) இவ்வம்மையார் கடைசி வரை பெண்கள் முன்னேற்றத் திற்கும் யூத சமுதாயத்திற்கும் பாடுபட்டு வந்தார்.

(2) இவர்களைப் போல வங்காளத்தில் பெரிய மிராசுதாரர்களாக இருந்த பெய்க்பரா ராஜ் (Paikpara raj) என்ற குடும்பத்தினர் யூத மதத்தைத் தழுவி யூதர்களாக லண்டன் மாநகரில் போய்க் குடியேறினர்.

லெப்டனென்ட் ஜெனரல் ஜே.எப்.ஆர். ஜேக்கப்ஸ் (Lt. Gen. J.F.R. Jacobs) இந்திய இராணுவத்தில் பெரிய பதவி வகித்து, பங்ளாதேஷ் விடுதலைப் போரில் இந்தியாவிற்குப் பெருமை தேடித் தந்தார்.

சுலோச்சனா (ரூபி மேயர்ஸ்) (Sulochana) (Ruby Meyers) என்ற நடிகையும், நதீரா (Nadeera) என்ற நடிகையும் யூதப் பெண்மணிகள். இந்திய திரைப்பட நடிகைகளாக பெரும் பெயர் பெற்றனர்.

இந்தியா சுதந்திரம் பெற்ற பின் சிறந்த தேசீய சேவைக்காக பத்ம ஸ்ரீ விருது வழங்கப்படுவது நமக்குத் தெரியும். இந்தியாவின் முழு ஜனத்தொகையோடு ஒப்பிடும்போது யூதருடைய ஜனத் தொகை மிக மிக சொற்பம். அப்படியிருந்தும் நான்கு யூதர்கள் இந்த விருதைப் பெற்றிருக்கின்றனர் என்பதைக் காணும்போது சமுதாயத்திற்கு அவர்கள் எவ்வளவு தன்னலமற்ற சேவையைச் செய்திருக்கிறார்கள் என்பது விளங்குகிறது. இந்திய அரசாங்கம் அவர்களுடைய தன்னல மற்ற சேவையை மதித்து பத்ம ஸ்ரீ விருதை அவர்களுக்கு வழங்கி அவர்களைக் கௌரவுத்திருக்கிறது. அவர்களின் விபரம் :–

(1) டாக்டர் செல்வி ஜெரூஷா ஜிராட் (Dr. Miss Jerusha Jhirad)

டாக்டர் செல்வி ஜெரூஷா ஜிராட் பெண்கள் மருத்துவத்தில் உலகப் புகழ் பெற்றவர். இவருடைய தன்னலமற்ற சேவையைப் பாராட்டி 1966ஆம் ஆண்டு இந்திய அரசாங்கம் பத்ம ஸ்ரீ விருதை இவருக்கு வழங்கியது.

(2) திரு டேவிட் ஆபிரகாம் (Mr. David Abraham)

யூதரான இவர் பிரக்கியாதி பெற்ற திரைப்பட நடிகரும் விளையாட்டு வீரருமாவார். இந்திய அரசாங்கம் இவருக்கு 1969ஆம் ஆண்டு பத்ம ஸ்ரீ பட்டம் கொடுத்து இவரைக் கௌரவித்தது.

(3) திரு எஸ்றா மிர் (Mr. Ezra Mir)

யூதரான இவர் பிரசித்தி பெற்ற திரைப்பட இயக்குனர். இவர் இயக்கிய திரைப் படங்களின் தரத்தை உணர்ந்த இந்திய அரசாங்கம் இவருக்கு 1970ஆம் ஆண்டு பத்ம ஸ்ரீ பட்டம் வழங்கி இவரை கௌரவித்தது.

(4) எசேக்கியேல் நிஸிம் (Mr. Ezekial Nissim)

யூதரான இவர் மும்பாய் பல்கலை கழகத்தில் அமெரிக்க இலக்கியத்தில் விரிவுரையாளராகப் பணியாற்றினார்.

இவருடைய தன்னலமற்ற சேவையைப் பாராட்டி இந்திய அரசாங்கம் இவருக்கு பத்ம ஸ்ரீ பட்டம் வழங்கி இவரைக் கௌரவித்தது.

**உவால்டிமர் மொர்தகாய் ஹாஃப்கீன்** (Waldemar Mordecai Haffkine)

1860ஆம் ஆண்டு மொர்தகாய் ஹாஃப்கீன் இரஷ்யாவிலுள்ள ஒடேசா நகரில் ஒரு எளிய யூத குடும்பத்தில் பிறந்தார். 1884ஆம் ஆண்டு விஞ்ஞானத்தில் அறிவர் பட்டம் பெற்றார். அவர் கிறிஸ்தவராக மாறினால் அக்கல்லூரியிலேயே வேலை கொடுப்பதாகக் கூறினர். ஆனால் அவர் மறுத்துவிட்டு பாரிஸ் நகருக்குச் சென்று ஒரு சிறு வேலையை ஒப்புக் கொண்டு ஓய்வு நேரங்களில் தனது ஆராய்ச்சிகளை நடத்தி வந்தார். 1892ஆம் ஆண்டு காலரா நோய் ஐரோப்பா கண்டம் முழுவதும் பரவியது; அச்சமயம் ஹாஃப்கீன் தன் ஆராய்ச்சியின் மூலம் அந்நோய்க்கு தடுப்பு ஊசி மருந்து கண்டு பிடித்து நோயை ஒழித்துக் கட்டினார்.

1893ஆம் ஆண்டு இந்தியாவில் காலரா நோய் பரவியபொழுது அப்பொழுது ராஜ பிரதிநிதியாய்ப் பதவி வகித்த டஃப்ரின் பிரபு (Lord Dufferin - Viceroy in India) ஹாஃப்கினை இந்தியாவிற்கு வரும்படி வருந்தி அழைத்தார். 1893ஆம் ஆண்டு கல்கத்தா நகரை அடைந்து இரண்டு இந்திய மருத்துவர்களோடும் சில சிப்பந்திகளோடும் ஒரு சிறு ஆய்வுக்கூடம் அமைத்து காலரா நோய் பரவிய இடங்களுக்கெல்லாம் சென்று ஊசி மருந்து உபயோகித்து நோயைக்

கட்டுப்படுத்தினார். அவர் சம்பளமில்லாமல் இலவசமாகவே இவ்வூழியத்தைச் செய்தார்.

1896ஆம் ஆண்டு பம்பாயில் பிளேக் (Bubonic Plague) வந்து ஜனங்கள் நகரை விட்டு ஓட்டம் பிடித்தனர். இந்திய அரசாங்கம் ஹாஃப்கீனை பம்பாய் நகருக்குப் போய் உதவுமாறு கேட்டுக் கொண்டது. அங்கு போய் ஒரு சிறு ஆய்வுக் கூடத்தை அமைத்து மூன்று மாதங்களில் பிளேக் நோயைக் கட்டுப்படுத்த ஊசி மருந்தைக் கண்டுபிடித்து நோயையும் கட்டுப்படுத்தினார். ஜெர்மெனி, சீனா, பிரான்ஸ், இரஷ்யா முதலிய நாடுகளிலிருந்து அவ்வரசாங்கங்கள் தங்கள் விஞ்ஞானிகளை பம்பாய்க்கு அனுப்பி இம்மருந்தின் செய்முறைகளைக் கற்று வரும்படி அனுப்பின. அம்மையம் "பிளேக் ஆராய்ச்சி ஆய்வுக்கூடம்" (Plage Research Laboratory) என்ற பெயரில் இயங்கியது.

ஹாஃப்கீனுடைய அரிய சேவையைப் பாராட்டி விக்டோரியா மகா இராணியார் அவருக்கு ஸி.ஐ.இ. (C.I.E. Companion of the Order of the Indian Empire) என்ற பட்டத்தை அளித்து கௌரவித்தார். 1902ஆம் ஆண்டு பஞ்சாபில் பிளேக் ஆரம்பித்த பொழுது அங்கு போய் தன் ஊழியத்தைச் செய்து முடித்தார். 1907ஆம் ஆண்டு கல்கத்தாவுக்குத் திரும்பி வந்து, 1915ஆம் ஆண்டு ஓய்வு பெற்று சுவிட்சர்லாந்தில் லாசேன் நகரில் 1930ஆம் ஆண்டு மரித்தார்.

அவர் கலியாணம் செய்து கொள்ளவில்லை; தன் ஜீவியம் முழுவதும் தொண்டு செய்வதிலேயே செலவு செய்தார். தான் இறக்குமுன் 1929ஆம் ஆண்டு தன் சம்பாத்தியத்தை தன் ஆராய்ச்சி நிறுவனத்திற்கும், கிழக்கு ஐரோப்பாவிலுள்ள வாலிப யூதர்களுடைய மதக் கல்விக்காகவும் தானம் செய்தார்.

1925ஆம் ஆண்டு அவர் ஆரம்பித்த "பிளேக் ஆராய்ச்சி ஆய்வுக்கூடம்" (Plague Research Laboratory) அவரை கௌரவிக்கும் வகையில் "ஹாஃப்கீன் ஸ்தாபனம்" (Haffkine Institute) என்று பெயரிடப்பட்டது. 1964ஆம் ஆண்டு இந்திய அரசாங்கம் அவரை கௌரவிக்கும் வகையில் அவர் பிறந்த 104 ஆவது வருட விழாவன்று அவர் படம் போட்ட தபால் தலையை வெளியிட்டது.

(Source : Shalom India-Israel Centre Bulletin Feb.94)

இந்தியாவில் மூன்றாவது பெரிய நகரமான மும்பையில் மூன்று யூதர்கள் பல காலங்களில் மாநகர் முதல்வர்களாக (Mayors) பதவி வகித்திருக்கின்றனர். இவர்கள் பொது மக்கள் மத்தியில் நன் மதிப்புப் பெற்றும், பொது ஜனங்களின் வாழ்வில் அக்கரைகாட்டி நடந்து கொண்டதினிமித்தம் இப்பெரிய பதவிக்குத் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கின்றனர் :-

1) சர் சசூன் ஜே. டேவிட் (Sir Sassoon J. David)

2) திரு மேயர் நிஸிம் (Mr. Meyer Nissim)

3) டாக்டர் இ. மோஸஸ் (Dr. E. Moses)

கல்கத்தா நகரில் சர் டேவிட் எஸ்றா (Sir David Ezra) என்ற யூதன் நகரில் ஷெரிப் (Sheriff) என்ற பதவியை வகித்து, (அதாவது சட்ட நடவடிக்கை எடுக்க உரிமை பெற்ற ஒரு பொறுப்புள்ள பொது நல அதிகாரி) இந்திய நாட்டில் யூதருக்குப் பெருமை தேடித் தந்திருக் கிறார்.

இந்திய ராணுவத்தில் யூத பிரிவு ஒன்று செயல்பட்டுக் கொண்டிருந்திருக்கிறது. ராணுவத்தில் சில யூதர் பெரிய பதவி களையும் வகித்திருக்கின்றனர். உதாரணமாக பங்ளாதேஷ் விடுதலைப் போராட்ட சமயத்தில் இந்திய ராணுவத்தின் கிழக்குப் பகுதிக்குத் (Eastern Command of the Indian Army) தளபதியாக லெப்டனஸ்ட் ஜெனரல் ஜே.எப்.ஆர். ஜேக்கப் (Lieutenant General J.F.R. Jacob) பதவி வகித்திருக்கின்றார்.

லெப்டனென்ட் ஜெனரல் ஜே.எப்.ஆர். ஜேக்கப் பட்டாளத்தி லிருந்து ஓய்வு பெற்றார். என்றாலும் அவருடைய கடமை உணர்ச்சி, யூத குலத்தவனாயிருந்தும் இந்தியாவின் மேலுள்ள தேசப்பற்று, பொறுப்புணர்ச்சி, ஜனங்களை அடக்கி ஆளும் திறமை, சடுதியில் சரியான முடிவெடுக்கும் சக்தி, புத்திக் கூர்மை, முதலியவைகளைக் கருத்தில் கொண்டு, 1998ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் இந்தியாவை ஆளப் பதவியேற்ற பாரதீய ஜனதாகூட்டணி அரசு புதிதாக மாநிலங்களுக்கு ஆளுணர்களை நியமித்தபொழுது ஓய்வு பெற்ற லெப்டினென்ட் ஜெனரல் ஜே.எப்.ஆர். ஜேக்கப் (Lt. General J.F.R. Jacob) அவர்களை கோவா யூனியன் பிரதேசத்தின் ஆளுனராக நியமித்தது.

**(ஆதாரம் – ஹிந்து நாளிதழ். 18.04.1998)**

இந்திய நாட்டில் இப்பொழுது நிலவி வரும் போட்டிகளின் மத்தியில் ஒரு ஆளுனர் பொறுப்பை ஒரு யூதனுக்கு இந்திய அரசு வழங்கியிருக்கிறதென்றால், இக்காலத்திலும் ஆண்டவர் செப்பனியா 3:19ஆம் வசனத்தில் கொடுத்த வாக்குத்தத்தத்தை நிறைவேற்றிக் கொண்டு வருகிறார் என்பது புலனாகிறது.

இந்திய ராணுவம் ஒரு யூதனுக்கு ராணுவத்தில் இரண்டாவது உன்னத பதவியை (முதல் உன்னத பதவி ஜெனரல்) அளித்திருக்கிற தென்றால் அந்த அதிகாரியின் கடமை உணர்ச்சியை இந்திய அரசாங்கம் எவ்வளவு மதித்திருக்கிறது என்பது புலனாகிறது.

**பர்மாவில் யூதர்கள்.**

முதன் முதல் சாலமோன் காபிரியோல் (Solomon Gabriol) என்ற பெனி–இஸ்ரேலிய யூதன் இந்தியாவிலிருந்து போய் அலாங்பயா (Alaungpaya) என்ற பர்மிய அரசனின் படையில் கி.பி. 1752–60 வரை பொறுப்பு வகித்தாகத் தெரிகிறது. ஆனால் பாக் தாதிய யூதர் பிரிட்டன் பர்மாவை ஆட்சி செய்த காலத்தில் ரங்கூன், சிங்கப்பூர், பினாங்கு, ஷாங்ஹேய், ஹாங்காங் முதலிய நகரங்களுக் குப் போய் அபின் வியாபாரம் செய்ததாகத் தெரிகிறது.

கி.பி. 1840ஆம் ஆண்டு ஐரோப்பாவிலிருந்து இரண்டு யூதர் – ருமேனியாவிலிருந்து கோல்ட்பர்க் (Goldberg) என்பவரும், கலீஸியா (Galicia) விலிருந்து ஷ்லொமோ ரீன்மான் (Shlomo Reinman) என்பவரும் பர்மாவுக்கு வந்து பிரிட்டிஷ் படைகளுக்கு தேக்கு மரம் வெட்டி வினியோகித்தனர். பர்மா தேக்கு மரத்திற்குப் பேர்போன நாடு என்பது நமக்குத் தெரியும்.

இதற்குப் பின் பாக்தாதி யூதர் வந்து ரங்கூன், (Rangoon), மான்டலே (Mandalay), மோல்மீன் (Moulmein), பஸ்ஸீன் (Bassein), மெய்மயோ (Maymyo), டுங்கூ (Toungoo) முதலிய நகரங்களில் வியாபார மையங்களை ஏற்படுத்தினார்கள். கி.பி. 1885ஆம் ஆண்டுக்குள் இராக், சீரியா, எகிப்து, மகாராஷ்ட்ரா, கொச்சின் முதலிய இடங்களிலிருந்து யூதர் பர்மாவுக்கு வந்து சேர்ந்தனர். கி.பி. 1853ஆம் ஆண்டு ரங்கூனில் யூத ஜெப ஆலயம் கட்ட இடமும், கல்லறைக்கு இடமும் பிரிட்டிஷ் அரசாங்கத்தால் ஒதுக்கப்பட்டது. அவ்வாண்டே ஆலயம் கட்டப்பட்டது. 1907ஆம் ஆண்டு மான்டலே நகரில் ஒரு ஜெப ஆலயமும், யூத கல்லரைத் தோட்டமும் அமைக்கப்பட்டது. பஸ்ஸீன் நகரிலும், மோல்மீன்

நகரிலும் ஜெப வீடுகள் அமைக்கப்பட்டதோடு 1932ஆம் ஆண்டு ரங்கூனில் இரண்டாவது ஜெப ஆலயம் கட்டப்பட்டது.

இரண்டாம் உலக மகாயுத்தம் ஆரம்பமான சமயம் பர்மாவில் 2500 யூதரும், அதில் 2000 பேர் ரங்கூனிலும் வசித்து வந்தனர். பர்மாவை ஜப்பானியர் தாக்கியபொழுது அநேகர் படகுகள் மூலமாகவும், தரை மார்க்கமாகவும் இந்தியாவுக்குள் நுழைந்தனர். தாங்கள் அருமையாகச் சேகரித்து வைத்திருந்த 42 தோரா சுருள்களையும், 142 பேழை அலங்கார மூடிகளையும் 1955ஆம் ஆண்டு இஸ்ரேல் நாட்டுக்கு அனுப்பி வைத்தனர். கி.பி. 1956ஆம் ஆண்டு பர்மீய முஸ்லிம்கள் அங்குள்ள யூதர்களுக்கு விரோதமாக ஆர்ப்பாட்டம் நடத்தினர். அதன் பின் 1962ஆம் ஆண்டு பர்மா சுதந்திரம் பெற்று கம்யூனிஸ்டுகள் உடைமைகளை தேசீய மயமாக்கிய பொழுது யூதர்கள் பெரு நஷ்டமடைந்து நாட்டை விட்டு வெளியேறினர். 1967ஆம் ஆண்டு ஆறு நாள் யுத்தத்தில் எகிப்தும் அரபு நாடுகளும் படு தோல்வியடைந்தபோதும் முஸ்லிம்கள் ஆர்ப்பாட்டம் பண்ணி ரங்கூன் யூத ஜெப ஆலயத்தை நாசப்படுத்தினர்.

கி.பி. 1886ஆம் ஆண்டு பர்மா, பிரிட்டிஷ் அரசாங்கத்தால் இந்தியாவோடு சேர்க்கப்பட்டது. அதுமுதல் பர்மாவிலிருந்த பாக்தாதிய யூதர் செல்வாக்குடன் வாழ்ந்தனர். எல்லிஸ் சேஃபர் (Ellis Sofaer) என்ற யூத குடும்பம் செல்வாக்குடன் வாழ்ந்தனர். அவர்களுடைய ரங்கூனில் கட்டப்பட்ட புது மாளிகையை பர்மாவின் பிரிட்டிஷ் கவர்னர் ஜெனரல் (British Governor-General) தங்கச் சாவியால் திறந்து வைத்தார். அக்காலத்தில் யூதரின் செல்வாக்கு அதிகமாயிருந்தது என்பதற்கு உதாரணம் ரங்கூன் நகராட்சித் தலைவர் (Mayor of Rangoon) ஒரு யூதன். அதைப் போல பஸ்ஸீன் (Bassein) நகராட்சி தலைவரும் (Mayor of Bassein) ஒரு யூதன். ரங்கூனில் ஒரு முக்கிய வீதியின் பெயர் ஜூடா எசேக்கியேல் (Judah Ezekiel) என்பவரின் ஞாபகார்த்த மாகப் பெயரிடப்பட்டது. சாலமோன் என்ற யூத குடும்பத்தாரும் எல்லிஸ் சோஃபர் குடும்பத்தாரும் பரோபகாரிகளாக ரங்கூன் நகரத்தை அழகுபடுத்த தங்கள் திரவியத்தை நன்கு செலவு செய்தனர். இவ்விதமாக இந்தியாவின் ஒரு பாகமாயிருந்த பர்மாவிலும் யூதர், பர்மா சுதந்திர நாடாகும் வரை, செல்வாக்குடன் வாழ்ந்தனர்.

5) இரண்டாம் உலக மகா யுத்தத்தின் போது ஜெர்மெனியில் ஹிட்லர் யூதரை படுகொலை செய்த பொழுது, ஜெர்மெனி, இரஷ்யா,

இன்னும் இதர ஐரோப்பிய நாடுகளிலிருந்து இந்தியாவுக்குள் தஞ்சம் புகுந்தவர்கள். இவர்களின் எண்ணிக்கை தெரியவில்லை. ஆனால் யுத்தம் முடிந்து இஸ்ரேல் நாடு பிரகடனப் படுத்தப்பட்ட பொழுது அநேகமாக யாவரும் இஸ்ரேல் நாட்டில் போய்க் குடியேறிவிட்டனர்.

6) **மணிப்பூர், மிஜோராம், அஸ்ஸாம், சிட்டகாங் மலைப் பிரதேசங்களில் வசிக்கும் சின்–குக்கி மலைவாசிகள்.** இவர்கள் தங்களை மனாசே கோத்திரத்தாரின் சந்ததியார் என்று கூறுகின்றனர். அசீரிய மன்னன் ஐந்தாம் சல்மனாசார் (Shalmaneser V) இஸ்ரவேலரின் பத்துக் கோத்திரத்தாரில் பலரை சிறை பிடித்துக் கொண்டு போய் கோசான் நதியோரமான ஆலாகிலும், ஆபோரிலும் மேதியரின் பட்டணங்களிலும் குடியேற்றினான் (2 இராஜாக்கள் 18: 11). அவர்களில் மனாசே கோத்திரத்தைச் சேர்ந்தவர்கள் (பெனி–மனாசே, அதாவது மனாசேயின் புத்திரர் என்று தங்களை அழைத்துக் கொள்பவர்கள்) சீனாவிலுள்ள சிச்சுவான் (Sichuan) மாகாணத்திலுள்ள ஷின்லங் (Shinlung) பிரதேசத்தில் குடியேறியதாகவும், அங்கிருந்து பர்மா பகுதிக்குள் குடிபெயர்ந்து அப்படியே மணிப்பூர், மிஜோராம், அஸ்ஸாம், சிட்டகாங் மலைப்பகுதிகளில் காட்டு வாசிகளாக ஆயிரக்கணக்கான ஆண்டுகள் வசித்து வருவதாகவும் கூறுகின்றனர்.

(**ஆதாரம் :** Studies of India Jewish Identity by Nathan Katz - Page 161.)

இவர்களைப் பற்றி வேறொரு வரலாறு கீழ்கண்டவாறு கூறுகிறது :–

கி.பி. 1795ஆம் ஆண்டு பிரிட்டிஷ் அரசாங்க அதிகாரி ஒருவர் ஒரு பர்மீய வழிகாட்டியோடு பர்மாவின் உள்பகுதியிலுள்ள காரன் (Karen) என்ற இனத்தவரிடம் போனார். அச் ஜனங்கள் இந்த வெள்ளையனைப் பார்த்தவுடன் அதிக அன்போடு வரவேற்று உபசரித்து அந்த பர்மீய மொழிபெயர்ப்பாளர் மூலம் நீங்கள் தான் நாங்கள் இழந்து போன புத்தகத்தைக் கொண்டு வந்திருக்கிறீர்களா என்று கேட்டார்களாம். அப்பொழுது இந்த ஆங்கிலேயன் அவர்களிடம் "என்ன புத்தகம்?, யார் எழுதிய புத்தகம்? என்று கேட்டபொழுது; அப்புத்தகத்தை எழுதியது சர்வ வல்லமையுள்ள, எல்லாக் கடவுள்களுக்கும் மேலான கடவுளாகிய எஃவா (Yhwa) என்றார்களாம். இன்னும் அவர்கள் ஒரு வெள்ளைக்காரர் நாங்கள்

இழந்து போன எஃவாவின் புத்தகத்தை எங்களுக்குக் கொடுப்ப தோடு எங்களுடைய அடிமைத்தனத்திலிருந்தும் விடுதலையாக்கு வார் என்றார்களாம்.

ஆனால் அந்த வெள்ளையனான அரசாங்க அதிகாரி கிறிஸ்துவைப் பற்றியும், பரிசுத்த வேதாகமத்தைப் பற்றியும் ஒன்றும் அறியாதவனாதலால், தனக்கு அக்கடவுளைப் பற்றி ஒன்றும் தெரியாது என்று கூறிவிட்டுப் போய்விட்டானாம். அந்த காட்டு வாசிகளான காரன் மக்கள் அதிகம் மனம் தளர்ந்து போயிருக் கையில், அவர்களில் மூத்தவர் ஒருவர் எஃவாவின் வார்த்தை ஒருபோதும் பொய்யாகாது, பொறுத்திருந்து பார்ப்போம் என்று தைரியம் கூறினாராம்.

கி.பி. 1816ஆம் ஆண்டு ஒரு முஸ்லிம் வழிப்போக்கன் அந்தக் காரன் மக்களின் கிராமம் வழியாய்ப் போகையில், அவரைக் கூப்பிட்டு தங்களுடைய எஃவாவின் புத்தகத்தைக் குறித்து வினவினராம். ஆனால் அந்த முஸ்லிம் பெரியவர், தனக்கு எஃவாவின் புத்தகத் தைப் பற்றி ஒன்றும் தெரியாது, என்றாலும் என்னிடம் ஒரு புத்தகம் உள்ளது, அதை உங்களுக்குத் தருகிறேன் என்று ஒரு புத்தகத்தைக் கொடுத்துவிட்டுப் போனாராம். அப்புத்தகத்தை காரன் ஜாதித் தலைவர் மெல்லிய துணியில் சுற்றி, ஒரு கூடைக்குள் பத்திரப்படுத்தி வைத்து அப்புத்தகத்துக்குச் சகல மரியாதையும் கொடுத்து வந்தனர்.

காரன் ஜாதியார் ஏதேன் தோட்டத்தைப் பற்றியும், முதல் சோதனை, மனிதன் பாவியானது முதலியவைகளை அறிந்து வைத்திருந்தனர். பத்துக் கட்டளைகளில் சிலவற்றையும் அறிந் திருந்தனர். அவர்களின் பாட்டுகளில் ஒன்று :–

ஆதியில் உலகத்தைப் படைத்தவர் யார்?

யஃவா ஆதியில் உலகத்தைப் படைத்தார்

யஃவா எல்லாவற்றையும் உண்டு பண்ணினார்.

யஃவா கண்டுபிடிக்கப்பட முடியாதவர்.

Who created the world in the beginning?

Y'wa created the world in the beginning:

Y'wa apointed everything.

Y'wa is unsearchable.

விக்கிரகங்களை அல்லது பூசாரிகளை வணங்காதீர்கள்;

உங்கள் தகப்பனையும் தாயையும் கனம் பண்ணுங்கள்,

யஃவாவை நேசியுங்கள்; அவருடைய பெயரைக்கூட உச்சரிக்காமல் அவருக்கு மரியாதை செலுத்துங்கள்

பொல்லாங்காவைகளைச் செய்யாதிருங்கள்

யஃவாவை நோக்கி ஜெபம் பண்ணுங்கள்

யஃவா ஒருவரே நம்மை இரட்சிக்க வல்லவர்.

இது யஃவா அவர்களுக்குக் கொடுத்த கட்டளை என்று நம்பினர்.

கி.பி. 1817ஆம் ஆண்டு அடோனிராம் ஜட்சன் (Adoniram Judson) என்ற மிஷனெரி பர்மாவுக்கு வந்து, ரங்கூன் நகரில் தமது ஊழியத்தை ஆரம்பித்தார். பின்னர் பர்மிய மொழியில் பரிசுத்த வேதாகமத்தை மொழி பெயர்க்கத் துவங்கினார். காரன் மக்கள் தங்கள் கடவுளைப் பற்றிய பாடல்களைப் பாடிக் கொண்டு ஜட்சனின் வீட்டைக் கடந்து போவதுண்டு; ஆனால் ஜட்சனுக்கு அப்பாடல்களின் அர்த்தம் தெரியாது. ஒரு நாள் கோ தா–பையு (Ko Thah-byu) என்ற ஒரு காரன் ஜட்சனிடம் வந்து வேலை கேட்டான். முன்னே இவன் திருட்டிலும், கொலையிலும் ஈடுபட்டான். ஒரு நாள் கோ தா–பையுக்கு ஜட்சன் கடவுளைப் பற்றிக் கூறிக் கொண்டே வந்தார். அவன் இயேசுவை ஏற்றுக் கொண்டு மனந்திரும்பி திருமுழுக்குப் பெற்றான். அப்பொழுது அவன் காரன் ஜாதியார் காணமற் போட்ட புத்தகத்தைப் பற்றி ஜட்சனை வினாவினான். அவருடைய பதில் அவனுக்குத் திருப்திகரமாயிருந்தது. இதற்குள் வேறு மிஷனெரி களும் பர்மாவுக்கு வந்து சேர்ந்தனர். அவர்களோடு கோ தா–பையுவும் சுவிசேஷ ஊழியத்திற்குப் போனான். ஒரு நாள், பன்னிரண்டு ஆண்டுகளுக்கு முன் ஒரு முஸ்லிம் பெரியவர் ஒரு புத்தகத்தைக் கொடுத்த கிராமத்துக்கு வந்தார்கள். கோ தா–பை கூட்டிக் கொண்டு வந்த மிஷனெரியின் பெயர் ஜியார்ஜ் போர்டுமான் (George Boardman). அந்த முஸ்லிம் பெரியவர் கொடுத்துப் போன புத்தகம் ஜெபபுத்தகமும் சங்கீதங்களும் சேர்ந்த புத்தகம். அப்புத்தகத்தைக் கும்பிடக் கூடாது என்று வலியுறுத்தி யஃவாவையும் இயேசு கிறிஸ்துவையும் பற்றி அச்ஜனங்களுக்கு விளக்கிக் கூறினர்.

கி.பி. 1858ஆம் ஆண்டுக்குள் ஆயிரக்கணக்கான காரன்

மக்கள் இயேசுவை ஏற்றுக் கொண்டார்கள். அவர்களே தங்கள் மிஷனெரிகளை அனுப்பி வட பர்மாவிலிருந்த கச்சின் (Kachin) மக்களுக்கு சுவிசேஷத்தை அறிவித்தனர். கச்சின் மக்களும் தங்களுடைய முன்னோர் யஃவாவின் புத்தகத்தைத் தொலைத்தவர்கள் என்று ஒப்புக் கொண்டனர். இவர்கள் மூலமாய் பர்மாவின் மற்ற இனத்தவருக்கும், தென் சீனா, இந்தியாவின் கிழக்கு மாகாணங்களிலிருந்த மலை வாழ் மக்களுக்கும் வெகுவாய் சுவிசேஷம் பரவியது. ஆகவே காணாமற் போன பத்துக் கோத்திரத்தாரின் சந்ததியிலிருந்து ஒரு பகுதியினர் இந்தியாவிலும் பர்மாவிலும் மணிப்பூர், மிஜோராம் மாநிலங்களில் கிறிஸ்தவர்களாகவும் இருக்கின்றனர்.

(**ஆதாரம் :** Maranatha Alert - I am Coming Soon - Page 33)

மிஜோராம் மாநிலத்திலும், மணிப்பூர் மாநிலத்திலும் இப்பொழுது (1996) 10,00,000 பேர் தாங்கள் மனாசே கோத்திரத்தைச் சேர்ந்தவர்கள் என்று கூறுகிறார்கள். இவர்கள் மனாசேயின் கடவுளாகிய ஏலோயீமைத்தான் வணங்குவதாகவும், ஏழாம் நாளை ஓய்வு நாளாக ஆசரிப்பதாகவும், மற்ற எல்லா யூத சடங்காச்சாரங்களையும் கைக் கொண்டு வருவதாகவும் கூறப்படுகிறது. இவர்களில் அநேகர் தாங்கள் இஸ்ரேல் நாட்டில் போய்க் குடியேற விருப்பப்படுவதாகத் தெரிகிறது. ஆனால் யூத ரபிகள் இவர்கள் தங்களுடைய வம்ச வரலாற்றை நிரூபிக்கும் வரைக்கும் அவர்களை யூதர்கள் என்று ஒப்புக் கொள்ள முடியாது என்று கூறுகின்றனர். என்றாலும் மிஜோராம் மாநிலத்திலிருந்து முதலாவது 41 பேரையும், இரண்டாவதாக 85 பேரையும் கொண்டு போய் அவர்களுக்கு வைதீக யூத முறைமைகளைக் கற்றுத் தந்து அதன் பின் யூதக் குடியுரிமை கொடுக்கப்பட்டது. மூன்றாவதாக 1994 ஏப்பிரல் மாதம் 120–130 பேரை அழைத்துச் செல்லப் போவதாக செய்திகள் வந்தன.

**(ஆதாரம் : உறிந்து நாளிதழ் 23–3–1994)**

**காஷ்மீர் யூதர்**

காஷ்மீரிலுள்ள சில ஜனங்களின் ஊர் பெயர்கள், மனிதரின் பெயர்கள், மொழி, நடையுடை பாவனைகளெல்லாம் அதிகமாக யூத ஜனங்களுடைய பெயர்கள், பழக்க வழக்கங்களையொத்தே இருக்கின்றனவென்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். உதாரணமாக :–

| காஷ்மீர் மனிதரின் பெயர் | வேதாகம பெயர் | வேதாகம ஆதாரம் |
|---|---|---|
| ஆமால் Amal | ஆமால் Amal | 1 நாளாகமம் 7 : 35 |
| ஆசேரியா Asheria | ஆசேர் Asher | ஆதியாகமம் 30 : 13 |
| அத்தாயி Attai | அத்தாயி Attai | 1 நாளாகமம் 12 : 11 |
| பால் Bal | பாகால் Baal | 1 நாளாகமம் 5 : 5 |
| பாலா Bala | பாலா Balah | யோசுவா 19 : 3 |
| பேரா Bera | பேரா Beerah | 1 நாளாகமம் 5 : 6 |
| காபா Gabba | காபா Gaba | யோசுவா 18 : 24 |
| காதி Gaddi | காதி Gaddi | எண்ணாகமம் 13 :11 |
| கானி Gani | கூனி Guni | 1 நாளாகமம் 7 : 13 |
| கோமர் Gomer | கோமர் Gomer | ஆதியாகமம் 10 : 2 |

இப்படியே அடுக்கிக்கொண்டே போகலாம்; ஆனால் இத்துடன் நிறுத்திக் கொள்கிறேன்.

(Source : Jesus Lived in India by Holger Kersten - Page 66)

இதைப் போல வேதாகம ஊர் பெயர்களும் காஷ் மீரின் சில ஊர் பெயர்களும் ஒத்திருக்கின்றன.

இப்பொழுது பாகிஸ்தானுக்குப் போய்விட்ட டாக்சில்லா மாவட்டத்திலுள்ள சிர்க்காப் (Sirkap near Taxila in Pakistan) என்ற ஊரில் இயேசு கிறிஸ்துவின் காலத்தில் யூதர்கள் பேசிவந்த மொழியாகிய அரமாயிக் (Aramaic) மொழியில் ஒரு கல்வெட்டு கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது. இதை வைத்துப்பார்க்கப் போனால் இப்பிரதேச மக்களுக்கும் யூதருக்கும் நெருங்கிய சம்மந்தம் இருந் திருக்கிறது. நாளாவட்டத்தில் ஜாதி கலப்பினால் கலாச்சாரம், மொழி, முதலியன மாறியிருக்கிறது.

இந்தியாவில் யூதர்கள் மிக மிகச் சிறுபான்மையினராக இருந்தாலும், இங்கு அவர்கள் இந்நாட்டைத் தங்கள் சொந்த நாடாகக் கருதி அதன் மேம்பாட்டுக்குத் தங்கள் உழைப்பையும், செல்வத்தையும், தங்கள் ஞானத்தையும் செலவு செய்திருக்கிறார்கள் என்று அறிகிறோம். இந்நாட்டின் தேசீயமயமாக்கப்பட்ட வங்கிகளில் இரண்டு (பாங்க் ஆப் இந்தியா; சென்ட்ல் பாங்க் ஆப் இந்தியா) இந்த யூதர்களால் நிறுவப்பட்டவை. நம் நாட்டின் பாதுகாப்பிற்கு ஒரு யூதன் சேனைத் தலைவனாகப் பணியுரிந்திருக்கிறார்.

பர்மா (தற்போதைய மயன்மார்) 19ஆம் நூற்றாண்டு முதல் இந்தியாவின் ஒரு பாகமாக இயங்கி வந்திருந்தபடியாலும், இப் பொழுது மிஜோராம், மணிப்பூர் முதலிய ராஜ்யங்களில் வசிக்கும் மனாசே கோத்திரத்தைச் சேர்ந்த, (காணாமற் போன பத்துக் கோத்திரத்தைச் சேர்ந்த) சில யூதர் சீனா, பர்மா, வழியாக இந்திய எல்லைக்குள் புகுந்திருந்தபடியாலும், வரலாற்றைப் புரிந்து கொள்ளும் படியாக பர்மீய யூதரையும் இப்பகுதியில் சேர்த்துள்ளோம்.

இவைகளைக் கண்ணோக்கும்போது மீகா 5:7இல் கொடுக் கப்பட்ட வாக்குத்தத்தம் எவ்வளவு உண்மையாக இருக்கிறது:-

**முன்னுரைப்பு :- மீகா 5 : 7 (கி.மு. 710)**

"யாக்கோபிலே மீதியானவர்கள் கர்த்தராலே வருகிற பனியைப் போலவும், மனுஷருக்குக் காத்திராமலும், மனுப்புத்திர ருக்குத் தாமதியாமலும், பூண்டுகள் மேல் வருகிற மழைகளைப் போலவும், அநேக ஜனங்களின் நடுவிலே இருப்பார்கள்".

கர்த்தருடைய வார்த்தைகள் எவ்வளவு தெளிவாகவும்,

உண்மையாவும் இருக்கின்றன. அவருக்கே சகல கனமும், மகிமையும், துதியும் உண்டாவதாக.

இவ்வதிகாரத்தில் இந்தியாவிலிருந்த/இருக்கிற யூதரைப் பற்றி மட்டும் பார்த்தோம். மேலே கூறிய வசனத்திலே அவர்கள் "அநேக ஜனங்களின் நடுவிலே இருப்பார்கள்" என்றும், அவர்கள் "பனியைப் போல" கண்ணுக்குத் தெரியாமல் உலகம் முழுவதும் பரவி இருப்பார்களென்றும், "பூண்டுகளின் மேல் வருகிற மழைகளைப் போலவும்" ஆசீர்வாதமாயிருப்பார்களென்றும், இன்னும் செப்பனியா 3 : 19, 20ஆம் வசனங்களில் கூறப் பட்டிருக்கிறபடி :–

**முன்னுரைப்பு :–**

**செப்பனியா 3 : 19,20**

19) "இதோ அக்காலத்திலே உன்னச் சிறுமைப்படுத்தின யாவரையும் தண்டிப்பேன்; நொண்டியானவனை இரட்சித்து, தள்ளுண்டவனைச் சேர்த்துக் கொள்ளுவேன்.


20)"அக்காலத்திலே உங்களைக் கூட்டிக் கொண்டு வருவேன்; அக்காலத்திலே உங்களைச் சேர்த்துக் கொள்ளுவேன்; உங்கள் கண்கள் காண நான் உங்கள் சிறையிருப்பைத் திருப்பும் போது, பூமியி லுள்ள சகல ஜனங்களுக்குள்ளும் நான் உங்களை கீர்த்தியும் புகழ்ச்சியுமாக வைப் பேன்" என்றும் கர்த்தர் வாக்குத்தத்தம் பண்ணியிருக்கிறார்.

ஆண்டவர் யூதருக்குக் கூறிய இந்த ஆசீர்வாங்கள் அவர்கள் சிதறிக் கிடந்த நாடுகளிலும், அவர்கள் கூட்டிச் சேர்க்கப்பட்டுக் கொண்டிருக்கும் இப்போதும் எப்படி வார்த்தைக்கு வார்த்தை நிறைவேறியிருக்கிறது/நிறைவேறிக் கொண்டிருக்கிறது என்பதை இனி வெளிவரும் "இஸ்ரவேல் – பாகம் 5, 6" என்ற புத்தகங்களில் மூலம் விளங்கிக் கொள்ள ஆண்டவர் கிருபை செய்வாராக. ஆமென்; அல்லேலூயா.

நேபுகாத்நேச்சாரின் கனவு - தானியேல் 2.

தானியேலுக்குக் கிடைத்த தரிசனம் - " 7.

எழுபது வாரங்கள் - தானியேல் 9.



# அரேபிய இஸ்ரேலிய வம்ச வரலாறு

## நோவா

### காம்

1) கூஷ் ( எத்தியோப்பியர் )
2) மிஸ்ராயீம் ( எகிப்தியர் )
3) பூத் ( லிபியர் )
4) கானான் ( ஆசிய, ஆப்பிரிக்க ஜாதியார் )

( ஆதியாகமம் 10: 6 – 20 )

### சேம்

1) ஏலாம் ( திராவிடரின் மூலக் குழு எனக் கருதப்படுபவர் )
2) ஆசூர்
4 லூத்
5) ஆராம்
3) அர்பக்சாத்

சாலா

ஏபேர்

### யாப்பேத்து

1) கோமர் (கெல்ட்டுகள்)
2) மாகோகு (இரஷ்யா)
3) மேசேக்கு (ஸ்லாவியர்)
4) மாதாய் (இரேனியர், ஆரியர்)
5) யாவான் (கிரேக்கர், மே. ஐரோப்பியர்)
6) தூபால் (ஸித்தியர்கள், சக வம்சத்தினர்
7) தீராஸ் (ஜெர்மானியர்)

( ஆதியாகமம் 10 : 2 )

---

ஏபேர் →

பேலேகு

ரெகூ

நாகோர்

தேராகு

ஆபிரகாம், நாகோர், ஆரான்

யொக்தான்

1) அல்மோதாத்
2) சாலேப்
3) அசர்மாவேத்
4) யேராக்
5) அதோராம்
6) ஊசால்
7) திக்லா
8) ஒபால்
9) அபிமாவேல்
10) சேபா
11) ஒப்பீர்
12) ஆவிலா
13) யோபாப்

( அரபியர் ) ( ஆதியாகமம் 10:26 – 29 )

---

ஆபிரகாம் →

( ஆகார் மூலம் ) இஸ்மவேல்

1) நெபாயோத்
2) கேதார்
3) அத்பியேல்
4) மிப்சாம்
5) மிஷ்மா
6) தூமா
7) மாசா
8) ஆதார்
9) தேமா
10) யெத்தூர்
11) நாபீஸ்
12) கேத்மா

( ஆதி. 25 : 12 – 15 )
( ஆதி. 21 : 18 )
( ஆதி. 17 : 20 )

**( அரபியர் )**

( சாராள் மூலம் ) ஈசாக்கு

ஏசா

ஏசாவுக்கு மனைவிகள்

1) ஆதாள்
2) அகோலிபாமாள்
3) பஸ்மாத்

இச்சந்ததியில் ( 14 பிரபுக்கள் )
( ஆதியாகமம் 36 )

**( அரபியர்)**

யாக்கோபு

1) ரூபன்
2) சிமியோன்
3) லேவி
4) யூதா
5) செபுலோன்
6) இசக்கார்
7) யோசேப்பு
8) பென்னியமீன்
9) தாண்
10) நப்தலி
11) காத்
12) ஆசேர்

( ஆதியாகமம் 29 – 30 )

**( யூதர் அல்லது இஸ்ரவேலர்)**


( கேத்தூராள் மூலம் )

1) சிம்ரான்
2) யக்ஷான்
3) மேதான்
4) மீதியான்
5) இஸ்பாக்
6) சூவாகு

( ஆதியாகமம் 25 : 2 )

**( அரபியர் )**

21 அரபிய முஸ்லிம் நாடுகள்.




1. லிபனோன்
2. சீரியா
3. யோர்தான்
4. இராக்
5. குவைத்
6. பஉற்ரீன்
7. கத்தார்
8. ஐக்கிய அரபு எமிரேட்ஸ்
9. ஓமன்
10. தென் யேமன்
11. வட யேமன்
12. சவூதி அரேபியா
13. சோமாலியா
14. ஜிபுதி
15. சூடான்
16. எகிப்து
17. லிபியா
18. டூனிஉரியா
19. அல்ஜீரியா
20. மொராக்கோ
21. மாரிடானியா
22. நாட்டுக்காகப் போராடிக்கொண்டிருக்கும் பலஸ்தீனிய விடுதலை இயக்கம்.

■ இஸ்ரேல் நாடு


LEBANON
Security Zone
WEST BANK
GAZA STRIP
ISRAEL